ஜக்கியின்

மறுபக்கம்

குற்றச்சாட்டுகளும் – ஆவணங்களும்



க. அருணபாரதி

ஈஷாவின் மறுபக்கம்

குற்றச்சாட்டுகளும் ஆவணங்களும்

அறிக்கை தயாரிப்பு

க. அருணபாரதி,

தலைமைச் செயற்குழு உறுப்பினர்.

தமிழ்த்தேசியப் பேரியக்கம்

வெளியீடு

தமிழ்த்தேசியப் பேரியக்கம்

ஈஷாவின் மறுபக்கம்

குற்றச்சாட்டுகளும் ஆவணங்களும்

அறிக்கை தயாரிப்பு

க. அருணபாரதி,

தலைமைச் செயற்குழு உறுப்பினர், தமிழ்த்தேசியப் பேரியக்கம்.

கைப்பேசி : 98419 49462, மின்னஞ்சல் : tkannotam@gmail.com

பதிப்பு - **பிப்ரவரி 2022**

வெளியீடு தமிழ்த்தேசியப் பேரியக்கம்

விற்பனை உரிமை

பன்மை வெளி

21, முதல் தெரு, முதல் பிரிவு, கலைஞர் கருணாநிதி நகர்,
சென்னை - 600 078. தொலைப்பேசி : 044 - 2474 2911
கைப்பேசி : 94439 18095, 98408 48594

இணையம் : www.panmaiveli.com ◆ மின்னஞ்சல் : panmaiveli@gmail.com
முகநூல் : fb.com/panmaivel ◆ சுட்டுரை : twitter.com/panmaiveli

பக்கம் : **248**, விலை : ரூ. **250/-**

பதிப்புரை

பொருளியலில் பெருங்குழுமங்கள் கோலோச்சுகிற இந்தக் காலத்தில், சில சாமியார்களே பெருங் குழுமங்களாக வடிவெடுப்பது, அத்தோடு இணைந்த ஒரு போக்குதான்!

உலக வேட்டைமயம் மேல் நடுத்தர வர்க்கத்தினராக ஒரு பிரிவினரை உருவாக்கி இருக்கிறது. அவர்கள், கைநிறைய ஊதியமும் நிச்சயமற்ற எதிர்காலமும் இணைந்தவர்களாக வாழ்கிறார்கள். வரம்பற்ற வேலை நேரம், நிறைவேற்ற வேண்டிய குறி இலக்கு, கழுத்தறுக்கும் போட்டி என எந்நேரமும் மன அழுத்தத்திலேயே வைக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் குடும்பம், நட்பு என்கிற சமூக வாழ்க்கையை இழந்துவிட்ட உதிரிகளாக வாழ்கிறார்கள்.

இந்த மனப் பதட்டத்திற்கு வடிகாலாக – போலியான மாற்று வழி சொல்வதாக இந்த சாமியார்களின் வாக்குகளும், வழிபாடுகளும் இவர்களுக்குத் தெரிகின்றன. உதிரிகளாகிவிட்ட இவர்கள் இன்னொரு வகையில் ஒரு சமூகமாக உணர்வதற்கும், இந்த சாமியார்களின் "பக்தர்" கூட்டத்தில் இணைவது வாய்ப்பை வழங்குகிறது. இவர்கள் ஊடகங்களிலும், உயர் அதிகாரத்திலும் இருப்பதனால் இந்தப் பெருங்குழும சாமியார்களுக்கு விரிவான பரப்புரை வெளிச்சம் கிடைக்கிறது. கணக்கிலடங்காத சொத்துகளும் சேர்கின்றன. இதன் வளர்ச்சிப் போக்கில், அரசின் உச்சநிலை அதிகார மையத்தோடு இந்த சாமியார்கள் நெருக்கமாகி விடுகிறார்கள். அவர்களது பணத்தேவைகளுக்கும் இவர்கள் பயன்படுகிறார்கள். இதன் போக்கில், பெருங்குழுமங்கள் – உச்சமட்ட அதிகார வர்க்கம் ஆகியவற்றுக்கிடையிலான ஒட்டுண்ணி உறவில் பெருங்குழும சாமியார்களும் இணைய முடிகிறது.

"ஆசையை சுருக்கு, அறத்தைப் பெருக்கு!" என்ற தமிழர் மரபின் வள்ளுவரும், வள்ளலாரும் இந்த புதிய நடுத்தர வர்க்கத்தினருக்கு ஏற்பாக இல்லை! அவர்களது நுகர்வுவாதத்தோடு இணங்கிப் போகிற இந்தப் பெருங்குழும சாமியார்கள் அவர்களுக்கு ஏற்பாக இருக்கின்றனர்.

இதன்பிறகு, இந்த சாமியார்கள் செய்கிற எந்த சமூக விரோதச் செயல்களும் ஆட்சியாளர்களின் துணையோடு அமுக்கப்படுகின்றன. இந்த வகையான பெருங்குழும சாமியார்களில் ஒருவர் தான் – ஜக்கி வாசுதேவ்!

அவரது ஈஷா மையத்தில் நிறுவப்பட்டிருக்கிற தியானலிங்கம் கோயிலும், ஆதியோகி சிலையும் சைவநெறிக்குப் புறம்பானவை. ஆன்மிக நெறிகளுக்கும் பொருந்தாதவை!. அவருடைய ஈஷா மையத்தின் மிகப்பெரும் பகுதி பழங்குடி மக்களின் நிலங்களையும், யானைகள் வாழிடத்தையும் வழித்தடத்தையும் ஆக்கிரமித்துக் கட்டப்பட்டவை. எவ்வளவு சட்டமீறல்களிலும், மர்ம நடவடிக்கைகளிலும் ஜக்கி வாசுதேவ் ஈடுபட்டு வந்தபோதிலும், அவருக்கு இருக்கிற அதிகார உறவு அவரைப் பாதுகாத்து வருகிறது.

ஆயினும், சைவநெறியாளர்களும் பழங்குடியினர் உரிமையில் அக்கறையுள்ளவர்களும் சுற்றுச்சூழல் ஆர்வலர்களும் இந்த அநீதிக்கு எதிராக தொடர்ந்து போராடி வருகிறார்கள். இந்தப் போராட்டத்திற்கு துணை செய்யும் கருத்தாயுதமாக வலுவான ஆதாரங்களின் ஆவணத் தொகுப்பாக "***ஈஷாவின் மறுபக்கம்***" என்ற இந்த நூல் வெளியாகிறது.

பொறியாளர் க. அருணபாரதி, தோழர்கள் பலரின் துணையோடு இந்த அரிய ஆவணத்தொகுப்பை உருவாக்கியிருக்கிறார். இதனை வெளியிடுவதில் பன்மைவெளி வெளியீட்டகம் பெருமை கொள்கிறது!

இணையத்தில் வெளிவந்த தங்கள் கட்டுரைகளை இந்நூலில் இணைத்து வெளியிட ஒப்புக் கொண்ட எழுத்தாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கும், நேர்காணல்கள் வழங்கி இந்நூலுக்கு வலு சேர்த்தோருக்கும், இந்நூலை வெளிக்கொணர பாடுபட்ட பன்மைவெளி வெளியீட்டகப் பொறுப்பாளர் தோழர் வெற்றித்தமிழன், சிறப்பான அட்டைப்படம் வடிவமைத்துத் தந்த பாவலர் கவிபாஸ்கர் உள்ளிட்ட இந்நூலின் உருவாக்கத்தில் துணை செய்த அனைவருக்கும் நம் நன்றியும் பாராட்டும்!

– கி. வெங்கட்ராமன்

பன்மைவெளி வெளியீட்டகம்.



காட்டுவெளியில் கடும் பயணம்!

பெ. மணியரசன்

தலைவர் – தமிழ்த்தேசியப் பேரியக்கம்.

ஒருங்கிணைப்பாளர் – தெய்வத் தமிழ்ப் பேரவை.

எல்லாம் வணிகமயம் ஆகிவிட்ட காலம் இது! வணிகமயத்தின் அடுத்த வளர்ச்சி, பெருங்குழும வேட்டைமயம்! பொருளியல் துறையில் தொடங்கிய பெருங்குழும வேட்டை, அறிவியல், விளையாட்டு, அரசியல், ஆன்மிகம் என பல துறைகளிலும் தனது ஆக்டோபஸ் வாய்களைப் பிளந்து கொண்டு, பார்ப்பதையெல்லாம் விழுங்கி நகர்கிறது.

ஒட்டுமொத்த இந்தியத் துணைக் கண்டத்திலும், தமிழ்நாட்டிலும் உழவுத் தொழிலைத் தவிர மற்றெல்லாத் துறையிலும் பெருங்குழும வேட்டை கோலோச்சிக் கொண்டுள்ளது. வேளாண்மையில் சிறிய நடுத்தர உற்பத்தியாளர்களை ஒழித்து, பெருங்குழும வேட்டைக்காரர்களைப் புகுத்திட இந்திய அரசும், அதை எதிர்த்து உழவர்களும் ஓயாமல் மோதிக் கொள்வதைப் பார்த்து வருகிறோம்.

ஆனால், ஆன்மிகத்தில் பெருங்குழும வேட்டைக்கு எந்தத் தங்குதடையும் இல்லை. அதன் நெடுஞ்சாலை சுங்கச்சாவடி இன்றி திறந்து கிடக்கிறது. ஆண்டவனின் "அவதாரங்கள்" என்ற ஒப்பனை, பெருங்குழுமச் சாமியார்களுக்கு பெருங் கவசங்கள்! அத்துடன் அரசியல், அரசில் கோலோச்சும் அதிகாரப் பெருங் குழுமங்கள் தங்களுக்கான ஆதரவு வெகுமக்கள் மந்தைகளைக் கவர்வதற்கும், தங்களின் அரசியல் கள்ள வாணிக இருப்புகளைப் பதுக்குவதற்கும் ஆன்மிகப் பெருங்குழுமங்கள் வாய்ப்பானவை என்று கருதுகின்றன.

ஆன்மிகக் கள்ள வாணிகத்தை, அரசியலார் ஆதரிப்பதும் – அரசியலார் கள்ள வாணிகத்தை, ஆன்மிகப் பெருங்குழுமங்கள் ஆதரிப்பதும் உடன் பிறப்பு உதவிகள்!

எல்லாப் பெருங்குழும வேட்டைகளுக்கும் வாய்ப்பளிப்பது – வாசல் திறப்பது வெகுமக்களின் மனவியல் பலவீனமே! மக்களிடையே உள்ள "மந்தை" மனப்பான்மையே!

தமிழ்நாட்டில் மிகப்பெரிய ஆன்மிகப் பெருங்குழும வேட்டை நிறுவனம் சக்கி வாசுதேவின் "ஈஷா யோகா மையம்"!

"இருக்கும் இடம்தேடி என் பசிக்கே அன்னம்
உருக்கமுடன் கொண்டு வந்தால் உண்பேன்
பெருக்க அழைத்தாலும் போகேன்"

என்ற நம் பட்டினத்தாரைப் போலவோ,

"வெட்டவெளி தன்னை மெய்யென்றிருப் பார்க்குப்
பட்டயம் ஏதுக்கடி – குதம்பாய்
பட்டயம் ஏதுக்கடி "

என்ற நம் சித்தர்களைப் போலவோ

"வேத ஆகமங்கள் என்று வீண்வாதம் ஆடுகின்றீர்
வேத ஆகமங்களின் விளைவு அறியீர்!
சூதாகச் சொன்ன அலால் உண்மைநிலை
தோன்ற உரைக்கவில்லை"

என்று கூறி, சமரச சுத்த சன்மார்க்க மன்றங்களை நிறுவி, சமூகச் சமநிலைக்குப் பாடுபட்ட நம் வள்ளல் பெருமானைப் போலவோ

ஆசையைத் துறந்த ஆன்மிகர் அல்லர் சக்கி! அனைத்திற்கும் ஆசைப்படுபவர்; மக்களையும் அனைத்திற்கும் ஆசைப்படு என்று வழிகாட்டியவர்!

சக்கியின் மையத்தில் சிறப்பு நாட்களில் நுழைவுக் கட்டணம் இலட்சக்கணக்கில்! சிவராத்திரி அன்று முதல் வகுப்பு நுழைவுக்கு 5 இலட்சம் ரூபாய்! இரண்டாம் வகுப்பிற்கு 50,000 ரூபாய்; மூன்றாம் வகுப்பிற்கு ரூ. 5000 ரூபாய் நுழைவுக் கட்டணம்!

சக்கி மீது கொலை வழக்குண்டு; பிள்ளை கடத்தல் குற்றச்சாட்டுண்டு; யானை உள்ளிட்ட காட்டு விலங்கினங்களின் வாழ்விடங்களை - வலசை வழிகளைப் பறித்தவர் என்ற குற்றச்சாட்டுகள் உண்டு!

தமிழ்நாடு அரசின் வனத்துறை அதிகாரியே காட்டு விலங்குகளின் வழித்தடத்தை - வாழ்விடத்தைப் பறித்துள்ளார் சக்கி என்று 17.8.2012 நாளிட்ட கடிதத்தில் அன்றைய கோவை மாவட்ட வன அலுவலர் மேலதிகாரிகளுக்குப் புகார் அனுப்பியுள்ளார்.

உழவர்களின் காட்டு நிலங்களை மிரட்டி வாங்கியுள்ளார் என்ற குற்றச்சாட்டுகள் உண்டு; இக்குற்றச்சாட்டுகள் மீதெல்லாம் தமிழ்நாட்டு ஆட்சியாளர்கள் நடவடிக்கை எடுக்காதது தவறு என்று இந்தியத் தலைமைக் கணக்காயர் அலுவலகம் தனது ஆண்டறிக்கையில் கண்டித்துள்ளது. ((Report of the Comptroller and Auditor General of India on Economic Sector for the year ended March 2017 (Government of Tamil Nadu - Report No. 7 of the year 2017) Page 32, Para 2.8.5.1).

தமிழ்த்தேசியப் பேரியக்கத்தின் தலைமைச் செயற்குழு உறுப்பினர் தோழர் க. அருணபாரதி அவர்கள், இவை போன்ற அறிக்கைகளை மட்டுமின்றி, பிள்ளைகளை இழந்தோர், நிலத்தை இழந்தோர் முதலியவர்களை நேர்கண்டு விசாரித்தும், காட்சிப்படுத்தியும் உண்மைச் செய்திகளைத் தொகுத்துள்ளார். அதுமட்டுமின்றி, சக்கி வாசுதேவின் ஆக்கிரமிப்புகளை அத்துமீறல்களை நேரில் கள ஆய்வும் செய்துள்ளார்.

வடநாட்டு சமற்கிருத வேதப் புனைவுகளை நமது தாய்தமிழ்ச் சிவநெறியை மறைக்கும் வகையில் தியானலிங்கம், ஆதியோகி படிமங்களை எழுப்பியுள்ளார் என்ற உண்மைகளையும் வெளியிட்டுள்ளார் தோழர் அருணபாரதி.

அப்பகுதி மக்களும் சக்கியால் பாதிக்கப்பட்டவர்களும் ஈஷா யோகா மையத்தை இந்து சமய அறநிலையத்துறையில் சேர்த்து, சக்கியின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோருவதை நேரில் பதிவு செய்துள்ளார். அவற்றின் தொகுப்புதான் "***ஈஷாவின் மறுபக்கம்***" என்ற இந்நூல்!

எமது தெய்வத் தமிழ்ப் பேரவையும் சக்கியின் ஈஷா மையத்தை அரசுடைமை ஆக்க வேண்டும் என்று தொடர்ந்து கோரி வருகிறது.

பேராபத்திற்கும் பெரும் நெருக்கடிகளுக்கும் இடையே, கர்நாடகத்தைச் சேர்ந்த சக்கியின் சட்டவிரோத - தமிழர் ஆன்மிகப் பகைச் செயல்களை கண்டறியக் கடுமையாக் களப்பணி செய்த தோழர் அருணபாரதிக்கும், அவருக்குத் துணை செய்த அத்தனை நல் உள்ளங்களுக்கும் பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூலைப் படியுங்கள்; உண்மைகளை அறியுங்கள்!

பெ. மணியரசன்,
ஒருங்கிணைப்பாளர்,
தெய்வத் தமிழ்ப் பேரவை.

04.01.2022,
சென்னை - 78

நன்றி

தெய்வத் தமிழ்ப் பேரவை

தகவல்கள் வழங்கியோர்

திரு. **மோகன்ராஜ்,** சமூக ஆர்வலர் - கோவை

பேராசிரியர் **காமராஜ்,**
NERD தன்னார்வத் தொண்டு நிறுவனம், வடவள்ளி, கோவை

திரு. **சிவா,** சமூக ஆர்வலர், கோவை

வழக்கறிஞர் **கலையரசன்**, கோவை

திருமதி. **முத்தம்மாள்,** வெள்ளியங்கிரி மலைவாழ் பழங்குடி மக்கள் சங்கம்

திரு. **செந்தில்,** முன்னாள் ஈஷா மைய ஊழியர்

திரு. **சவுக்கு சங்கர்,** ஊடகவியலாளர், சென்னை

வழக்கறிஞர் **வெற்றிச்செல்வன்,** பூவுலகின் நண்பர்கள், சென்னை

ஊடகவியலாளர் **கவின்மலர்**, சென்னை

மற்றும்
அச்சு மற்றும் காட்சி ஊடக நிறுவனங்கள்.

கள ஆய்வின்போது உதவியோர்
திரு. **மா. கோபாலகிருஷ்ணன்,** சித்த மருத்துவ ஆராய்ச்சியாளர், கணுவாய்.
தோழர் **அ. ஆனந்தன்,** பொருளாளர், தமிழ்த்தேசியப் பேரியக்கம்.
தோழர் **வெ. இளங்கோவன்,** ஈரோடு செயலாளர், தமிழ்த்தேசியப் பேரியக்கம்
தோழர் **விளவை இராசேந்திரன்,** கோவை த.தே.பே. செயலாளர்
மற்றும் தமிழ்த்தேசியப் பேரியக்கத் தோழர்கள்

உள்ளடக்கம்

1 தெய்வத் தமிழ்ப் பேரவையின் முதல் கண்டனக் குரல்

● "தமிழ்நாட்டுக் கோயில்களைக் கைப்பற்ற சக்கி வாசுதேவ் சதி!" எனத் தலைப்பிட்ட கண்டன அறிக்கையை தெய்வத் தமிழ்ப் பேரவையின் ஒருங்கிணைப்பாளரும், தமிழ்த்தேசியப் பேரியக்கத் தலைவருமான ஐயா பெ. மணியரசன் அவர்கள் 04.04.2021 அன்று வெளியிட்டார்.

● அவ்வறிக்கையில் ஈஷா மையத்தின் நிறுவனர் சக்கி வாசுதேவ் தமிழ்நாட்டுக் கோயில்களைக் கைப்பற்ற சதி புரிவதாகக் குற்றம்சாட்டியிருந்தார். அவ்வறிக்கையின் முழு வடிவம் வருமாறு:

தெய்வத் தமிழ்ப் பேரவை

நாள் : 04.04.2021

தமிழ்நாட்டுக் கோயில்களைக் கைப்பற்ற
சக்கி வாசுதேவ் சதி!

<u>தெய்வத் தமிழ்ப் பேரவை ஒருங்கிணைப்பாளர் பெ. மணியரசன் கண்டனம்!</u>

ஆன்மிகப் பெருங்குழும அதிபரான சக்கி வாசுதேவ், அண்மைக் காலமாகத் தமிழர்களின் ஆன்மிக மரபுகளிலும், தமிழ்நாட்டு உரிமைகளிலும் தலையிட்டு தமிழர்களுக்கு எதிராகச் செயல்டுவது அதிகரித்து விட்டது.

கடந்த 2019ஆம் ஆண்டு முதல், "காவிரி அழைக்கிறது" என்ற பெயரில், கர்நாடகத்திலிருந்து காவிரி நீரைத் தமிழர்கள் எதிர்பார்க்கத் தேவை இல்லை; கரையோரங்களில் மரங்கள் வளர்த்தால் மழை பொழிந்து, காவிரியில் வெள்ளம் பெருகும் என்று கூறி, தமிழ்நாட்டு மக்களின் மனத்தை மடைமாற்றும் திட்டத்தைத் தொடங்கிச் செயல்படுத்தி வருகிறார். தமிழர்கள் தங்களின் சட்டப்படியான, வரலாற்று உரிமையான காவிரி நீரைக் கர்நாடகத்திடம் எதிர்பார்க்க வேண்டாம்; அதற்கு ஈடாக மழையை வரவழைத்துக் கொள்ளுங்கள் என்று மடைமாற்றும் சூழ்ச்சித் திட்டம் இது!

கர்நாடகத்தின் தலைக்காவிரியிலிருந்து தமிழ்நாட்டின் திருவாரூர் மாவட்டம் வரையிலான இத்திட்டத்தில் பெரும் ஊழல் நடந்துவிட்டது என்று கர்நாடகத்தில் ஊடகங்களும், தன்னார்வலர்களும் அம்பலப்படுத்தி - இப்போது இந்த ஊழல் பற்றிக் கர்நாடக உயர் நீதிமன்றத்தில் வழக்கு நடந்து வருகிறது. இந்தத் திட்டத்தில் சக்கி வாசுதேவின் ஈஷா நிறுவனத்துடன் கர்நாடக அரசும் இணைந்துள்ளது என்பதுபோல், பொய்த் தோற்றத்தை உருவாக்கி, 10,626 கோடி ரூபாயை சக்கி வசூலித்து விட்டார். இது சட்டவிரோத வழிகளில் செய்யப்பட்ட வசூல் என்பதுதான் வழக்கின் சாரம். கர்நாடக உயர் நீதிமன்றம் தானே முன்வந்து இவ்வழக்கை எடுத்து விசாரித்து வருகிறது (The Wire, 24.02.2021).

ஆனால், தமிழ்நாட்டில் தாங்கள் பால்குடித்த தாயின் மார்பை அறுப்பதுபோல், காவிரியில் கர்நாடகத்திடமிருந்து பெற வேண்டிய தண்ணீர் உரிமையை நம்மையே கைவிடச் செய்யும் சக்கியின் சூழ்ச்சித் திட்டத்தை அறியாமல் நடிகர்களே "காவிரி அழைக்கிறது" திட்டத்தில் கன்றுகள் நட்டார்கள். அமைச்சர்கள் பல இடங்களில் அதில் கலந்து கொண்டார்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக சென்னையில் சக்கியின் "காவிரி அழைக்கிறது" குழுவை வரவேற்று தமிழ்நாடு ஆளுநர் பன்வாரிலால் புரோகித் அவர்களும், முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி அவர்களும் வாழ்த்தி மகிழ்ந்தார்கள் (ஈஷா யோகா இணையதளம் - 15.09.2019).

இப்போது சக்கி வாசுதேவ் தமிழர்களின் கோயில்களின் மேலாண்மையில் இருந்து, தமிழ்நாட்டு சிவநெறி, திருமால் நெறி, திருமுருகன் நெறி, குலதெய்வக் கோயில்கள் உள்ளிட்ட அனைத்துக்

150, சமீன்தார் குடியிருப்பு, புது ஆற்றுச்சாலை, தஞ்சாவூர் - 1 | மின்னஞ்சல்: tamizhdesiyam@gmail.com
கைப்பேசி : 94439 18095 | *கட்செவி*: 98419 49462

தமிழ்நாட்டுக் கோயில்களைக் கைப்பற்ற சக்கி வாசுதேவ் சதி!

தெய்வத் தமிழ்ப் பேரவை ஒருங்கிணைப்பாளர் பெ. மணியரசன் கண்டனம்!

04.04.2021

ஆன்மிகப் பெருங்குழும அதிபரான சக்கி வாசுதேவ், அண்மைக் காலமாகத் தமிழர்களின் ஆன்மிக மரபுகளிலும், தமிழ்நாட்டு உரிமைகளிலும் தலையிட்டு தமிழர்களுக்கு எதிராகச் செயல்டுவது அதிகரித்து விட்டது.

கடந்த 2019ஆம் ஆண்டு முதல், "காவிரி அழைக்கிறது" என்ற பெயரில், கர்நாடகத் திலிருந்து காவிரி நீரைத் தமிழர்கள் எதிர்பார்க்கத் தேவை இல்லை; கரையோரங்களில் மரங்கள் வளர்த்தால் மழை பொழிந்து, காவிரியில் வெள்ளம் பெருகும் என்று கூறி, தமிழ்நாட்டு மக்களின் மனத்தை மடைமாற்றும் திட்டத்தைத் தொடங்கிச் செயல்படுத்தி வருகிறார். தமிழர்கள் தங்களின் சட்டப்படியான, வரலாற்று உரிமையான காவிரி நீரைக் கர்நாடகத்திடம் எதிர்பார்க்க வேண்டாம்; அதற்கு ஈடாக மழையை வரவழைத்துக் கொள்ளுங்கள் என்று மடைமாற்றும் சூழ்ச்சித் திட்டம் இது!

கர்நாடகத்தின் தலைக்காவிரியிலிருந்து தமிழ்நாட்டின் திருவாரூர் மாவட்டம் வரையிலான இத்திட்டத்தில் பெரும் ஊழல் நடந்துவிட்டது என்று கர்நாடகத்தில் ஊடகங்களும், தன்னார்வலர்களும் அம்பலப்படுத்தி - இப்போது இந்த ஊழல் பற்றிக் கர்நாடக உயர் நீதிமன்றத்தில் வழக்கு நடந்து வருகிறது. இந்தத் திட்டத்தில் சக்கி வாசுதேவின் ஈஷா நிறுவனத்துடன் கர்நாடக அரசும் இணைந்துள்ளது என்பதுபோல், பொய்த் தோற்றத்தை உருவாக்கி, 10,626 கோடி ரூபாயை சக்கி வசூலித்து விட்டார்; இது சட்டவிரோத வழிகளில் செய்யப்பட்ட வசூல் என்பதுதான் வழக்கின் சாரம். கர்நாடக உயர் நீதிமன்றம் தானே முன்வந்து இவ்வழக்கை எடுத்து விசாரித்து வருகிறது (*The Wire, 24.02.2021*).

ஆனால், தமிழ்நாட்டில் தாங்கள் பால்குடித்த தாயின் மார்பை அறுப்பதுபோல், காவிரியில் கர்நாடகத்திடமிருநது பெற வேண்டிய தண்ணீர் உரிமையை நம்மையே கைவிடச் செய்யும் சக்கியின் சூழ்ச்சித் திட்டத்தை அறியாமல் நம் மக்களே "காவிரி அழைக்கிறது" திட்டத்தில் கன்றுகள் நட்டார்கள். அமைச்சர்கள் பல இடங்களில் அதில் கலந்து கொண்டார்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக சென்னையில் சக்கியின் "காவிரி அழைக்கிறது" குழுவை வரவேற்று தமிழ்நாடு ஆளுநர் பன்வாரிலால் புரோகித் அவர்களும், முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி அவர்களும் வானளாவப் புகழ்ந்தார்கள் (*ஈஷா யோகா இணையதளம் - 15.09.2019*).

இப்போது சக்கி வாசுதேவ் தமிழர்களின் கோயில்களின் கைவைத்துள்ளார். தமிழ்நாட்டு சிவநெறி, திருமால் நெறி, திருமுருகன் நெறி, குலதெய்வக் கோயில்கள் உள்ளிட்ட அனைத்துக் கோயில்களின் உரிமைகளைப் பறித்துத் தமிழ்நாடு அரசு அடிமைப்படுத்தி வைத்திருக்கிறது என்று சக்கி வாசுதேவ் கூறுகிறார்.

தமிழ்நாடு அரசின் அடிமைத் தளைகளை அறுத்தெறிந்து, அவற்றை விடுதலை செய்வதற்காக, "***இந்துக் கோயில்கள் அடிமை நிறுத்து***" என்ற தலைப்பில் போராட்டம் தொடங்கி உள்ளார். கடந்த 27.03.2021 அன்று தமிழ்நாடு முழுவதும் உள்ள மிக முக்கியமான கோயில்களின் முன் சக்கி வாசுதேவ் அமைப்பினர் ஆண்கள், பெண்களைத் திரட்டி "அடிமை நிறுத்து" முழக்கமிட்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

சக்கி வாசுதேவ் தமிழ்நாட்டைச் சேர்ந்த இந்து அல்லர். அவர் கர்நாடகத்தைச் சேர்ந்தவர் என்கிறார்கள். கர்நாடகமோ, அல்லது வேறு மாநிலமோ - எதுவாக இருந்தாலும் அவர் தமிழர் மரபைச் சேர்ந்த சிவநெறியாளரோ அல்லது திருமால் நெறியாளரோ அல்லர். தமிழர் ஆன்மிகத்தில் தலையிட அவர்க்கு உரிமை இல்லை!

மேலும், சக்கி வாசுதேவ் நமது தமிழர் ஆன்மிக மரபின் ஒழுக்கங்களைக் கடைபிடிப்பவர் அல்லர். எடுத்துக்காட்டாக, சில ஆண்டுகளுக்கு முன், தமிழ்க் கடவுளான சிவபெருமான் சிலையை நம் தமிழர் மரபுக்கு முரணாக வடிவமைத்து சிவபெருமானுக்குரிய தமிழ்ப்பெயர் எதையும் சூட்டாமல் "ஆதியோகி" என்று அச்சிலைக்குப் பெயர் சூட்டி, ஒரு கட்டடத் திறப்பு விழா போல், தலைமை அமைச்சர் நரேந்திர மோடியைத் திறக்க செய்தார். "தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!" என்று மாணிக்கவாசகர் போற்றிய மந்திரம் நமக்கு இருக்கிறது!

ஏற்கெனவே இவர் மீது, தமிழ்நாட்டு மலைக்காடுகளை அழித்தவர், சட்டத்திற்குப் புறம்பாக அவற்றை ஆக்கிரமித்தவர் என்று குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. இவர் இப்போது நம் மரபுமிக்கத் தமிழ்நாட்டுப் பெருங்கோயில்களைக் கைப்பற்று வதற்காக, தமிழ்நாடு அரசின் இந்து அறநிலையத்துறையைக் கலைத்துவிடச் சொல்கிறார். இது தொடர்பாக, தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி அவர்களுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும் எழுதியுள்ள கடிதம் ஏடுகளில் வந்துள்ளது.

நாளேடுகளில் *03.04.2021* அன்று வந்துள்ள அக்கடிதத்தில், "இந்து சமுதாயத்தினர், தங்களது புனிதமான வழிபாட்டுத் தலத்தைத் தாங்களே பேணிப் பராமரித்து நிர்வகிக்க அவர்களுக்குள்ள சனநாயக உரிமையை அரசு வழங்க வேண்டும் என்று ஒருங்கிணைந்த குரல் எழுப்பி இருக்கிறார்கள்", "... கோயில்கள் விடுவிக்கப்பட்டு பக்தர்களின் கரங்களில் ஒப்படைக்கப்பட்டு, முழு ஆற்றலுடன் இயங்கச் செய்ய வேண்டும்" என்றெல்லாம் கூறி இருக்கிறார். .

கிறித்துவம், இசுலாம் இரண்டிலும் வெகுசில உட்பிரிவுகள் இருப்பினும் அவற்றில் உலகளாவியத் தலைமைகளும், கட்டுக் கோப்பான வட்டாரத் தலைமைகளும் இருக்கின்றன. அவற்றிற்கான சமய நிர்வாகக் கட்டமைப்புகளை அவர்களும் வைத்திருக்கிறார்கள். இந்து சமயத்தில் அப்படிப்பட்ட நிர்வாகக் கட்டமைப்புகள் - அனைத்திந்திய அளவிலும் இல்லை, வட்டார அளவிலும் இல்லை! காரணம் என்ன? அம்மதங்களில் ஒற்றைக் கடவுள் - ஒற்றை புனித நூல் - ஒற்றை வழிபாட்டு முறை என்பன உலகு தழுவிய அளவில் இருக்கின்றன. அவர்களில் வர்ணாசிரம - சாதிப் பிரிவுகள் பிறப்பு அடிப்படையில் இல்லை எனவே அம்மதங்கள் பல நாடுகளில் இருக்கின்றன.

தமிழர் சமயங்களில் சாதிப் பிறப்பை ஞாயப்படுத்தி கூறவில்லை என்றாலும், ஆரிய ஆன்மிக ஆக்கிரமிப்புக்குள்ளாகியதால், தமிழ் இந்துக்களிடையேயும் சாதிகள் வேரூன்றிவிட்டன. (இந்து மதம் என்பது ஆங்கிலேயர் வைத்த பெயர்; ஆரியர் வைத்த பெயரன்று).

உலகு தழுவிய - நாடு தழுவிய - வட்டாரம் அல்லது ஊர் தழுவிய ஒற்றை நிர்வாகக் கட்டமைப்பு கிறித்துவர்களுக்கும், இசுலாமியர்களுக்கும் இருக்கிறது. அவ்வாறான நிர்வாகக் கட்டமைப்பு இந்து மதத்தில் இல்லை. புதிதாக உருவாக்கவும் முடியாது. தெய்வப் பன்மை - வழிபாட்டுப் பன்மை - ஆன்மிகப் பன்மை முதலியவைதாம் இந்து மதத்தின் தனிச்சிறப்பு! இப்பின்னணியில் தமிழ்நாட்டு இந்துக் கோயில்களை நிர்வகிக்க சற்றொப்ப நூறாண்டுகளுக்கு முன்பே மாநில அரசு அறநிலையத் துறையை உருவாக்கியது.

திருவாவடுதுறை, தருமபுரம் போன்ற பல ஆதினங்கள் தமிழ்நாட்டில் உள்ளன. அவற்றின் நிர்வாகத்தின் கீழ் பல கோயில்கள் இருக்கின்றன. அதுவேறு செய்தி.

ஒற்றை சமய நிர்வாகக் கட்டமைப்பு இல்லாத இந்து சமயக் கோயில்களை எந்த பக்தர்களிடம் ஒப்படைப்பது - அதற்கான அளவுகோல் என்ன - அதற்கான நிர்வாக வடிவம் என்ன?

இந்த இடத்தில்தான் சக்கி வாசுதேவின் சூழ்ச்சித் திட்டம் இடம் பிடிக்கிறது. தமிழ்நாடு அரசு, இந்து அறநிலைய ஆட்சித்துறையைக் கலைத்துவிட்டு, கோயில்களைவிட்டு ஒதுங்கிக் கொள்ள வேண்டும். அந்த நிலையில் ஏற்கெனவே கோயில்களில் செல்வாக்கு செலுத்திக் கொண்டிருக்கும் பிராமணர்கள், மிகப்பெரும் எண்ணிக்கையில் உறுப்பினர்களைக் கொண்ட சக்கி வாசுதேவின் ஈஷா மையம் போன்ற ஆன்மிகப் பெருங்குழுமங்கள் அவரவர் வசதிக்கும் வாய்ப்பிற்கும் ஏற்ப கோயில்களைக் கைப்பற்றிக் கொள்ளலாம் என்பது அவரது திட்டம்!

தமிழ்நாடு பா.ச.க.வினர் கோயில்களைக் கைப்பற்றும் கோரிக்கைகளைத் தொடர்ந்து எழுப்பி வருகிறார்கள். அவர்களில் எச். இராசா போன்றவர்கள் மிகத் தீவிரமாகக் கோயில்களைக் கைப்பற்றும் கோரிக்கையை எழுப்பி வருகிறார்கள். நடப்பு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் (2021) அறிக்கையிலும் பா.ச.க. இந்து அறநிலையத்துறையைக் கலைக்கும் திட்டத்தை முன்வைத்துள்ளது.

சக்கி வாசுதேவ் வெளிமாநிலத்தவர் என்பதையும் பா.ச.க.வின் வெளி மாநிலத்தவர்க்கும் தமிழ்நாட்டுக் கோயிலைக் கைப்பற்றும் உரிமை உண்டு என்பதையும் நுட்பமாக உணர்த்தும் வகையில், அவர் முதலமைச்சர்க்கும், எதிர்கட்சித் தலைவர்க்கும் எழுதியுள்ள கடிதத்தில் ஒரு செய்தியைக் கூறுகிறார்.

"இம்மாநில மக்கள் மட்டுமல்ல, இந்தச் சீர்திருத்தத்திற்காகக் காத்திருக்கும் நம் சமூகத்தைச் சேர்ந்த ஆன்மிகத் தலைவர்களும், இன்னபிறரும் துடிப்பாக ஆதரவு திரட்டி இந்த ஒரு நோக்கத்திற்காக உறுதியுடன் உழைத்துக் கொண்டிருக்கிறார்கள்".

ஆர்.எஸ்.எஸ்., வி.எச்.பி., பா.ச.க. போன்ற பல அனைத்திந்திய அமைப்புகளும் தமிழ்நாட்டுக் கோயில்களைக் கைப்பற்றும் வேலையில் ஈடுபட்டுள்ளன என்பதைக் குறிப்பாக உணர்த்திவிட்டார் சக்கி!

சக்கி வாசுதேவ் கோருவதுபோல், நம் தமிழ்நாட்டுக் கோயில்கள் அவர்கள் கைக்குப் போய்விட்டால் என்னவாகும்? தில்லை நடராசர் கோயில் தீட்சிதர்களிடம் சிக்கி என்ன பாடுபடுகிறதோ, அக்கொடுமைகள்தாம் அனைத்துக் கோயில்களிலும் அரங்கேறும்!

சிதம்பரத்தில் கருவறைக்கு வெளியே சிற்றம்பலத்தில் நின்று தேவாரம் பாடிய பெரியவர் ஆறுமுகசாமியைத் தீட்சிதர்கள், அடித்துக் காயப்படுத்தி, இங்கு தேவாரம் பாடாதே என்று விரட்டினார்கள்; தில்லை நடராசர் கோயில் நிதி வரவு செலவு எதற்கும் அரசுத் தணிக்கை இல்லை. தீட்சிதர்களின் அராசகம்தான் அங்கு "விதிமுறைகள்"! இந்த அராசகங்கள் மற்ற கோயில்களுக்கும் விரிவடைய வேண்டுமா? கூடாது!

தமிழ்நாட்டில் இந்து அறநிலையத்துறையின் கீழ் உள்ள கோயில்கள் கவனிப்பாரின்றி, மிகமிக அவலநிலையில் இருப்பதாக - மிகைப்படுத்திக் கூறுகிறார் சக்கி வாசுதேவ்! இந்து அறநிலையத் துறையில் இருந்தாலும் அக்கோயில்களில் மரபுரிமைப்படி நிகழும் பூசைக்கு உரியவர்கள் அக்கோயில் நிர்வாகத்தில் பங்களிப்பு செய்கிறார்கள். பல கோயில்கள் சிறப்பாக செழிப்பாக உள்ளன. வழிபாட்டிற்கு வரும் மக்கள் எண்ணிக்கையும் பெருகி வருகிறது.

சில கோயில்கள் அரசின் கவனிப்பின்றி போதிய வருவாயின்றி இருந்தால், அவற்றைச் சரி செய்ய அரசிடம் கோரிக்கை வைக்கலாம். அதற்காக கவன ஈர்ப்பு இயக்கங்கள்

நடத்தலாம். அதேபோல் கோயில் நிர்வாகங்கள் சிலவற்றில் ஊழல் நடந்தால் அவற்றின் மீது நடவடிக்கை கோரி மக்கள் போராடலாம்.

அவ்வாறான அறவழிப்பாதைகளைக் கைவிட்டு, சில அவலங்களைச் சுட்டிக்காட்டி "நம் கோயில்களைக் கைப்பற்றிக் கொள்ளும் சக்கி வாசுதேவ் மற்றும் ஆரியத்துவாவாதிகளின் சூழ்ச்சிக்குப் பலியாகி நம் இந்து அறநிலையத்துறையைக் கலைக்கும் அவர்களின் திட்டத்தைத் தமிழ்நாடு அரசோ, அரசியல் கட்சிகளோ ஏற்கக் கூடாது என்று தெய்வத் தமிழ்ப் பேரவை சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

(பெ. மணியரசன்)
ஒருங்கிணைப்பாளர்,
தெய்வத் தமிழ்ப் பேரவை

'அறநிலையத் துறையைக் கலைக்கும் திட்டத்தை அரசு ஏற்கக் கூடாது'

தஞ்சாவூர், ஏப். 5: இந்து சமய அறநிலையத் துறையைக் கலைக்கும் திட்டத்தைத் தமிழக அரசு ஏற்கக் கூடாது என தெய்வத் தமிழ்ப் பேரவை வலியுறுத்தி உள்ளது.

இதுகுறித்து அப்பேரவையின் பெ. மணியரசன் தெரிவித்திருப்பது: தமிழ்நாடு அரசின் அடிமைத் தளைகளை அறுத்தெறிந்து அவற்றை விடுதலை செய்வதற்காக, இந்துக் கோயில்கள் அடிமை நிறுத்து என்ற தலைப்பில் போராட்டம் தொடக்கி உள்ளார் ஜக்கி வாசுதேவ். தமிழ்நாடு முழுவதும் உள்ள மிக முக்கியமான கோயில்களின் முன் மார்ச் 27 ஆம் தேதி ஜக்கி வாசுதேவ் அமைப்பினர் ஆண்கள், பெண்களைத் திரட்டி அடிமை நிறுத்து முழக்கமிட்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

தமிழ்நாடு பாஜகவினர் கோயில்களைக் கைப்பற்றும் கோரிக்கையைத் தொடர்ந்து எழுப்பி வருகின்றனர். அவர்களில் எச். ராஜா போன்றவர்கள் மிகத் தீவிரமாகக் கோயில்களைக் கைப்பற்றும் கோரிக்கையை எழுப்பி வருகிறார்கள். தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் அறிக்கையிலும் பாஜக இந்து அறநிலையத் துறையைக் கலைக்கும் திட்டத்தை முன்வைத்துள்ளது.

தமிழ்நாட்டில் இந்து சமய அறநிலையத் துறையின் கீழ் உள்ள கோயில்கள் கவனிப்பாரின்றி மிகமிக அவல நிலையில் இருப்பதாக மிகைப்படுத்திக் கூறுகிறார் ஜக்கி வாசுதேவ். இந்து அறநிலையத் துறையில் இருந்தாலும் அக்கோயில்களில் பாரம்பரியப்படி [illegible] அக்கோயில் நிர்வாகத்தில் பங்களிப்பு செய்கின்றனர். பல கோயில்கள் சிறப்பாகவும் செழிப்பாகவும் உள்ளன. வழிபாட்டுக்கு வரும் மக்கள் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது.

சில கோயில்கள் அரசின் கவனிப்பின்றி போதிய வருவாயின்றி இருந்தால் அவற்றைச் சரிசெய்ய அரசிடம் கோரிக்கை வைக்கலாம். அதற்காக கவனஈர்ப்பு இயக்கங்கள் நடத்தலாம். அதேபோல், கோயில் நிர்வாகங்கள் சிலவற்றில் ஊழல் நடந்தால் அவற்றின் மீது நடவடிக்கை கோரி மக்கள் போராடலாம்.

அவ்வாறான அறவழிப்பாதைகளைக் கைவிட்டு, சில அவலங்களைச் சுட்டிக்காட்டி 'நம் கோயில்களைக் கைப்பற்றிக் கொள்ளும் ஜக்கி வாசுதேவின் சூழ்ச்சிக்குப் பலியாகி நம் இந்து அறநிலையத் துறையைக் கலைக்கும் அவர்களின் திட்டத்தைத் தமிழ்நாடு அரசோ, அரசியல் கட்சிகளோ ஏற்கக் கூடாது.

*நன்றி : **தினமணி,** 05.04.2021*

தெய்வத் தமிழ்ப் பேரவையின் சென்னை செய்தியாளர் சந்திப்பு



● ஐயா பெ. மணியரசன் அவர்களின் 04.04.2021 நாளிட்ட அறிக்கைக்குப் பிறகு தெய்வத் தமிழ்ப் பேரவையின் அவசர செயற்குழுக் கூட்டம் 13.04.2021 காலை சென்னை சேப்பாக்கம் நிருபர்கள் சங்கத்தில் நடைபெற்றது. அதன்பின் ஊடகவியலாளர் சந்திப்பும் நடைபெற்றது.

● தெய்வத் தமிழ்ப் பேரவை ஒருங்கிணைப்பாளர் ஐயா **பெ. மணியரசன்** அவர்கள் தலைமையில் நடைபெற்ற இச்சந்திப்பில்,

- ஐயா **சித்தர் மூங்கிலடியார்** (பதினெண்சித்தர் கருவூறார் சித்தர் பீடம்),
- ஐயா **குச்சனூர் கிழார்** (வடகுரு மடாதிபதி, இராசயோக சித்தர் பீடம், குச்சனூர், தேனி),
- திருவாட்டி. **சத்தியபாமா** (நிறுவனர் - சத்தியபாமா அறக்கட்டளை),
- வழக்கறிஞர் **ச. செந்தில்நாதன்** (சென்னை உயர் நீதிமன்றம்),
- ஐயா **மோகனசுந்தரம் சுவாமிகள்** (திருவில்லிப்புத்தூர் தெய்வத்தமிழ் ஆன்மீகர்),
- ஐயா **இறைநெறி இமயவன்** (தெய்வத்தமிழ்க் கூடல், குடந்தை),
- திருவாட்டி. **கலையரசி நடராசன்** (தலைவர், சைவத் தமிழ்ப் பேரவை, ஆவடி),
- வழக்கறிஞர் **கரூர் தமிழ் இராசேந்திரன்** (கரூர் சித்தர் ஆன்மிகக் கூட்டமைப்பு),
- திரு. **ஆசீவக சுடரொளி** (ஆசீவகம் - சமய நிறுவனம்),
- திரு. **பொன்னுச்சாமி அடிகளார்** (தேனி மாவட்டம்),
- திரு. **கி. வெங்கட்ராமன்** (தமிழ்த்தேசியப் பேரியக்கம்),
- திரு. **அரங்கநாதன்** (அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர் சங்கம்),
- முனைவர் **வே. சுப்பிரமணிய சிவா** (வள்ளலார் ஆய்வாளர்)

உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

● கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தீர்மானம் - 1

கோவை மாவட்டத்தில் செயல்பட்டு வரும் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த ஜக்கி வாசுதேவ் அவர்களின் ஈஷா அறக்கட்டளையும், அவ்வளாகத்தில் உள்ள இதர வழிபாட்டு அமைப்புகளும் ஆன்மிகத்தில் தமிழர் மரபுக்குரிய சிவநெறி - திருமால்நெறி ஆகியவற்றிற்கு முரணான வகையில் செயல்பட்டு வருகின்றன. ஜக்கி வாசுதேவ் சட்டவிரோதமாக நமது மலைத் தொடர்களை ஆக்கிரமித்துவிட்டார் என்ற புகார்களும் இருக்கின்றன. ஈஷா மைய வளாகத்தில் நிறுவப்பட்டு வழிபாடு நடக்கும் தியான லிங்கம் கோயில் மற்றும் ஆதியோகி என்ற பெயரில் நிறுவப்பட்டுள்ள சிவன் சிலை ஆகியவை இந்து மற்றும் சைவ நெறிகளுக்கும், ஆகம விதிகளுக்கும் புறம்பான வகையில் அமைந்திருக்கின்றன.

இந்திய அரசின் தலைமைத் தணிக்கை அதிகாரியின் அறிக்கை (Report of the Comptroller and Auditor General of India on Economic Sector for the year ended March 2017 (Government of Tamil Nadu - Report No. 7 of the year 2017) Page 32, Para 2.8.5.1), ஆதியோகி சிலையும், அதையொட்டி நிறுவப்பட்ட பல்வேறு கட்டடங்களும் சட்டத்திற்குப் புறம்பான கட்டுமானங்கள் என்பதை தமிழ்நாடு அரசே ஏற்றுக் கொண்டிருப்பதைச் சுட்டிக்காட்டி, அதன் மீது தமிழ்நாடு அரசு உரிய நடவடிக்கை எடுக்காததைக் கண்டித்தது. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் ஈஷா மையத்தில் தொடர்ந்து சுற்றுச்சூழல் சட்டங்கள் மீறப்படுவதைச் சுட்டிக்காட்டி, அவற்றை நிறுத்திக்கொள்ளுமாறு வலியுறுத்தி மே 2017லேயே அறிவிப்பாணை அளித்திருக்கிறது.

தமிழ்நாடு அரசு, ஈஷா மையத்தில் ஆதியோகி சிலையை ஒட்டியுள்ள 109 ஏக்கர் பரப்பளவில் சட்டவிரோதக் கட்டுமானங்கள் இருப்பதாகவும், அவற்றை இடித்துவிட்டு, அந்த நிலங்களை உரிய மலைவாழ் பழங்குடி மக்களிடம் திரும்ப அளித்துவிட வேண்டும் எனவும் ஆணையிட்டது. அவற்றை ஜக்கி வாசுதேவின் ஈஷா நிறுவனம் கிஞ்சித்தும் மதிக்கவில்லை என்பதை சென்னை உயர் நீதிமன்றத்திலேயே தமிழ்நாடு அரசு கூறியிருக்கிறது. இவை தவிர, ஈஷா அறக்கட்டளை நிறுவனர் ஜக்கி வாசுதேவ் "காவிரி கூக்குரல்" (Cauvery Calling) என்ற பெயரால் நிதித் திரட்டியதில் மோசடி நடந்திருப்பதாக கர்நாடக உயர் நீதிமன்றத்தில் வழக்கு நடந்து வருகிறது (Writ Petition No 43414/2019 (GM-PIL)).

இவ்வாறு பலவாறான சமய நெறி மீறல்களும், சட்டமீறல்களும் நடத்திவரும் ஈஷா மையம் அறக்கட்டளையை தமிழ்நாடு அரசு ஏற்று இந்து சமய அறநிலையத்துறை சட்ட விதி 3-இன் கீழ், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர வேண்டும் என்று தெய்வத் தமிழ்ப் பேரவை தமிழ்நாடு அரசைக் கேட்டுக்கொள்கிறது.





தீர்மானம் - 2
இந்து அறநிலைத்துறையைக் கலைக்கும் ஜக்கி வாசுதேவின் முயற்சிக்குக் கண்டனம்!

ஜக்கி வாசுதேவும் வேறு சில ஆதிக்க சக்திகளும் தமிழ்நாட்டு இந்துக் கோயில்களைக் கைப்பற்றிக்கொள்ளும் உள் நோக்கத்துடன், இந்து சமய அறநிலையத்துறையைக் கலைக்கக் கோரி வருகின்றனர். கடந்த சில நாட்களுக்கு முன் கோயில் நிர்வாகங்களிடம் அனுமதி பெறாமல், அத்துமீறி (Trespass) திருக்கோயில்களின் சன்னிதானங்களுக்கு முன்பாக ஆண்கள் - பெண்களை ஆர்ப்பாட்டம் நடத்தச் செய்துள்ளார் ஜக்கி வாசுதேவ். இது சட்டவிரோதச் செயல்! ஜக்கி வாசுதேவ் மீது இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

சற்றொப்ப நூறாண்டுகளாக இந்து அறநிலையத்துறை தமிழ்நாடு அரசின் கீழ் செயல்பட்டு வருகிறது. இந்து மதத்தின் தனித்தன்மையும் சிறப்புத்தன்மையும் அதன் பன்மைத்தன்மை ஆகும். பல்வேறு தெய்வங்கள், பல்வேறு புனித நூல்கள் கொண்ட நம்முடைய மதத்தின் நிர்வாகத்தை ஏதோவொரு தனியார் குழுவிடம் ஒப்படைக்க முடியாது. திருக்கோயில்கள் பெரும்பாலும் பழங்காலத்தில் அரசர்களால் எழுப்பப்பட்டவை. எனவே, இக்கோயில்களை நிர்வாகம் செய்ய தமிழ்நாடு அரசின் இந்து அறநிலைய ஆட்சித்துறை மிகமிகத் தேவை.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை நிர்வாகத்தில் குறைபாடுகள் இருந்தால், அவற்றை சரி செய்ய முயல வேண்டுமே தவிர, அறநிலையத் துறையையே கலைத்துவிட வேண்டும் என்பது வர்ணாசிரம ஆதிக்க சக்திகளின் சூழ்ச்சித் திட்டமாகும்.


எனவே, தமிழ்நாட்டு இந்து மக்கள் அனைவரும் இச்சூழ்ச்சியைப் புரிந்துகொண்டு, ஜக்கி வாசுதேவ் முன்மொழிந்து காஞ்சி சங்கராச்சாரியார் விஜயேந்திர சரசுவதி வழிமொழிந்துள்ள தமிழ்நாடு அரசின் இந்து அறநிலையத்துறையைக் கலைக்கும் திட்டத்தை முறியடிக்க வேண்டுமென்று தெய்வத் தமிழ்ப் பேரவை கனிவுடன் கேட்டுக்கொள்கிறது.

தீர்மானம் - 3
தமிழ்நாட்டுக் கோயில்கள் அனைத்திலும் அன்றாட பூசைகள் தமிழிலேயே நடத்தப்பட வேண்டும்!


தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் விதிகள் தமிழ்நாட்டுக் கோயில்களில் குடமுழுக்கு நிகழ்ச்சிகள் மட்டுமின்றி, அன்றாடப் பூசைகளும், வழிபாடுகளும் தமிழ்வழியில் நடைபெற வேண்டும் என்று ஆணை பிறப்பித்திருந்தாலும், அதற்குரிய மந்திர நூல்களை அச்சிட்டு வெளியிட்டிருந்தாலும் பெரும்பாலான கோயில்களில் அன்றாட பூசைகள் தமிழ் வழியில் நடத்தப்படுவதில்லை. இந்த விதிமீறல் தொடரக் கூடாது எனத் தமிழ்நாடு அரசைத் தெய்வத் தமிழ்ப் பேரவை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

சமற்கிருதத்தில் பூசை நடத்த வேண்டுமெனக் கோருவோரைத் தவிர, இயல்பாக நடக்கும் அனைத்துப் பூசை மற்றும் வழிபாட்டு நடவடிக்கைகள் அனைத்திலும் தமிழ்த் திருமுறைகளையும், மந்திரங்களையும் மட்டுமே பயன்படுத்துவதை இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை நடைமுறை வழக்கமாக்கிட உறுதி செய்ய வேண்டும் என தெய்வத் தமிழ்ப் பேரவை தமிழ்நாடு அரசை கேட்டுக் கொள்கிறது.


மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, தெய்வத் தமிழ்ப் பேரவை சார்பில் ஆன்மிகர்கள் - அடியார்கள் - தமிழ் உணர்வாளர்கள் பங்கேற்புடன் - தஞ்சையில் வரும் 08.05.2021 - சனிக்கிழமை நாளன்று காலை 8 மணியிலிருந்து மாலை 6 மணி வரை - கோவிட்-19 விதிமுறைகளைப் பின்பற்றி, ஒருநாள் வேண்டுகோள் உண்ணாப் போராட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.



தஞ்சைப் பெருவுடையார் திருக்கோயில்
தமிழ்க் குடமுழுக்கு விழா (05.02.2020)




தஞ்சைப் பெருவுடையார் திருக்கோயில் தமிழ்க் குடமுழுக்குக்கு வந்த பக்தர்களிடம் தமிழ் மந்திர நூல்களை வழங்கும் விழிப்புணர்வுப் பரப்புரையைத் தொடங்கி வைத்த தமிழ்த்தேசியப் பேரியக்கப் பொதுச்செயலாளர் தோழர் **கி. வெங்கட்ராமன்** அவர்கள்..



தஞ்சைப் பெருவுடையார் திருக்கோயில்
தமிழ்க் குடமுழுக்கு விழாவில்
ஐயா **பெ. மணியரசன்** அவர்கள்..

● சென்னையில் தெய்வத் தமிழ்ப் பேரவை சார்பில் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பைத் தொடர்ந்து, ஈஷாவின் முறைகேடுகள் குறித்து ஊடகங்களில் பெருமளவு விவாதிக்கப் பட்டது.



ஈஷாவை அரசுடைமையாக்கு... ஜக்கிக்கு எதிராக தமிழக பக்தர்கள்!

ஜக்கி வாசுதேவ்

பல ஏக்கரில் வளைத்துக் கட்டப்பட்ட ஈஷா யோக மையம். நடுவில் ஆதியோகி சிலை

ஜக்கியின் ஈஷா யோக மையம் கடந்த சிவராத்திரியின்போது பக்தர்களின் கையில், 'கோயில் அடிமை நிறுத்து' என குறிப்பமான வாசகம் அடங்கிய அட்டையைக் கொடுத்து, இந்து அறநிலையத் துறையிடமிருந்து கோயில்களை விடுவித்து இந்துக்களிடம் ஒப்படைக்கும் போராட்டத்தை முன்னெடுத்தது. இப்போதும் இந்து கோயில்கள் இந்துமத அதிகாரிகள், இந்து அறங்காவலர்கள் நிர்வாகத்திலேதான் உள்ளது. இதற்கு எதிராக ஜக்கி பேசும்போது, ...ள்ளை முன்னாலேதானே ...டுக்க வேண்டும். ...தற்கு எதிர்வினை ...க, 'தெய்வத் தமிழ்ப் பேரவை' ...ஜக்கியின் ஈஷா

6

மராட்டிய மாநிலம் நாலச்சோப்ராவில் 2 தனியார் ஆஸ்பத்திரிகளில் ஆக்சிஜன் பற்றாக்குறையால் 10 கொரோனா நோயாளிகள் பலி

அறக்கட்டளையை, தமிழக அரசின் உடைமையாக்கக் கோரி ஒரு இயக்கத்தை முன்னெடுத்துள்ளது.

'ஜக்கியின் ஈஷா யோகா மையத்தை ஏன் அரசுடைமையாக்க வேண்டும்? அதற்கு தெய்வத் தமிழ்ப் பேரவை சொல்லும் காரணங்கள் என்ன?'

'தெய்வத் தமிழ்ப் பேரவை' ஒருங்கிணைப்பாளர் பெ.மணியரசன் நம்மிடம் பேசும்போது...

''கோவை மாவட்டத்தில் செயல்பட்டு வரும் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த ஜக்கி வாசுதேவின் ஈஷா அறக்கட்டளையும், அவ்வளாகத்தில் உள்ள இதர வழிபாட்டு அமைப்புகளும் ஆன்மிகத்தில் தமிழர் மரபுக்குரிய சிவநெறி -திருமால்நெறி ஆகியவற்றிற்கு முரணான வகையில் செயல்பட்டு வருகின்றன. ஜக்கி வாசுதேவ் சட்டவிரோதமாக நமது மலைகளை ஆக்கிரமித்துவிட்டார் என்ற புகார்களும் இருக்கின்றன.

ஈஷா மைய வளாகத்தில் நிறுவப்பட்டு வழிபாடு நடக்கும் தியான லிங்கம் கோயில் மற்றும் ஆதியோகி என்ற பெயரில் நிறுவப்பட்டுள்ள சிவன் சிலை ஆகியவை இந்து மற்றும் சைவ நெறிகளுக்கும், ஆகம விதிகளுக்கும் புறம்பான வகையில் அமைந்திருக்கின்றன.

இந்திய அரசின் தலைமைத் தணிக்கை அதிகாரியின் அறிக்கை (**Report of the Comptroller and Auditor General of India on Economic Sector for the year ended March 2017 (Government of TamilNadu, Report No. 7 of the year 2017) Page 32, Para 2.8.5.1, http://2.8.5.1/**), ஆதியோகி சிலையும், அதையொட்டி நிறுவப்பட்ட பல்வேறு கட்டடங்களும் சட்டத்திற்குப் புறம்பான கட்டுமானங்கள் என்பதை தமிழ்நாடு அரசே ஏற்றுக் கொண்டிருப்பதைச் சுட்டிக்காட்டி, அதன் மீது தமிழ்நாடு அரசு உரிய நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டது. இனி வரும் புதிய அரசுகளாவது நடவடிக்கை எடுத்து நிலமீட்பு செய்யவேண்டும்.

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், ஈஷா மையத்தில் தொடர்ந்து சுற்றுச்சூழல் சட்டங்கள் மீறப்படுவதைச் சுட்டிக்காட்டி, அவற்றை நிறுத்திக்கொள்ளுமாறு வலியுறுத்தி மே 2017-லேயே அறிவிப்பாணை அளித்திருக்கிறது. இதற்கும் நடவடிக்கை இல்லை. காரணம் நடுவண் அரசு.

தமிழ்நாடு அரசு, ஈஷா மையத்தில் ஆதியோகி சிலையை ஒட்டியுள்ள 109 ஏக்கர் பரப்பளவில் சட்ட விரோதக் கட்டுமானங்கள் இருப்பதாகவும், அவற்றை இடித்துவிட்டு, அந்த நிலங்களை உரிய மலைவாழ் பழங்குடி மக்களிடம் திரும்ப அளித்துவிட வேண்டும் என்வும் ஆணையிட்டது. அவற்றை ஜக்கி வாசுதேவின் ஈஷா நிறுவனம் சற்றும் மதிக்கவில்லை என்பதை சென்னை உயர் நீதிமன்றத்திலேயே தமிழ்நாடு அரசு கூறியிருக்கிறது. இவை தவிர, ஈஷா அறக்கட்டளை நிறுவனர் ஜக்கி வாசுதேவ், காவிரி கூக்குரல் (**Cauvery Calling**) என்ற பெயரால் நிதி திரட்டியதில் மோசடி நடந்திருப்பதாக கர்நாடக உயர் நீதிமன்றத்தில் வழக்கு நடந்து வருகிறது (**Writ Petition No 43414/2019, tel:434142019 (GM-PIL)**).

இவ்வாறு பலவாறான சமய நெறிமீறல்களும், சட்டமீறல்களும் நடத்திவரும் ஈஷா மையம் அறக்கட்டளையை தமிழ்நாடு அரசு ஏற்று, இந்து சமய அறநிலையத் துறை சட்ட விதி 3-ன் கீழ் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரவேண்டும்.

மேலும், ஜக்கி வாசுதேவும் வேறு சில ஆதிக்க சக்திகளும் தமிழ்நாட்டு இந்துக் கோயில்களைக் கைப்பற்றிக்கொள்ளும் உள்நோக்கத்துடன், இந்து சமய அறநிலையத் துறையைக் கலைக்கக் கோரி வருகின்றனர். கடந்த சில நாட்களுக்குமுன் கோயில் நிர்வாகங்களிடம் அனுமதி பெறாமல், அத்துமீறி (**Trespass**) திருக்கோயில்களின் சன்னிதானங்களுக்கு முன்பாக ஆண்கள் -பெண்களை ஆர்ப்பாட்டம் நடத்தச் செய்துள்ளார் ஜக்கி வாசுதேவ். இது சட்டவிரோதச் செயல்.

ஜக்கி வாசுதேவ் மீது இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்'' என்றார்.

மேலும் தமிழகக் கோயில் ஏன் இந்து சமய அறநிலையத் துறையின்கீழே தொடரவேண்டுமென்




பதையும் அவர் விவரித்தார்.

''நூறாண்டுகளாக இந்து அறநிலையத்துறை, தமிழ்நாடு அரசின் கீழ் செயல்பட்டு வருகிறது.



பெ.மணியரசன்

7



வனப்பகுதியில் பிரம்மாண்ட யோகா மையம்

இந்து மதத்தின் தனித்தன்மையும் சிறப்புத்தன்மையும் அதன் பன்மைத்தன்மை ஆகும். பல்வேறு தெய்வங்கள், பல்வேறு புனித நூல்கள் கொண்ட நம்முடைய மதத்தின் நிர்வாகத்தை ஏதோவொரு தனியார் குழுவிடம் ஒப்படைக்க முடியாது. திருக்கோயில்கள் பெரும்பாலும் பழங்காலத்தில் அரசர்களால் எழுப்பப்பட்டவை. எனவே, இக்கோயில்களை நிர்வாகம் செய்ய தமிழ்நாடு அரசின் இந்து அறநிலைய ஆட்சித்துறை மிக மிகத் தேவை.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை நிர்வாகத்தில் குறைபாடுகள் இருந்தால், அவற்றை சரி செய்ய முயல வேண்டுமே தவிர, அறநிலையத் துறையையே கலைத்துவிட வேண்டும் என்பது வர்ணாசிரம ஆதிக்க சக்திகளின் சூழ்ச்சித் திட்டமாகும். எனவே, தமிழ்நாட்டு இந்து மக்கள் அனைவரும் இச்சூழ்ச்சியைப் புரிந்துகொண்டு, ஜக்கி வாசுதேவ் முன்மொழிந்து காஞ்சி சங்கராச்சாரியார் விஜயேந்திர சரசுவதி வழிமொழிந்துள்ள தமிழ்நாடு அரசின் இந்து அறநிலையத் துறையைக் கலைக்கும் திட்டத்தை முறியடிக்க வேண்டும்" என வலியுறுத்தினார்.

அத்துடன், 'தமிழ்நாட்டுக் கோயில்கள் அனைத்திலும் அன்றாட பூசைகள் தமிழிலேயே நடத்தப்பட வேண்டும்' என்பதற்கும் அழுத்தம் தந்தார்.

"தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் விதிகள் தமிழ்நாட்டுக் கோயில்களில் குடமுழுக்கு நிகழ்ச்சிகள் மட்டுமின்றி, அன்றாடப் பூசைகளும், வழிபாடுகளும் தமிழ்வழியில் நடைபெறவேண்டும் என்று ஆணை பிறப்பித்திருந்தாலும், அதற்குரிய மந்திர நூல்களை அச்சிட்டு வெளியிட்டிருந்தாலும், பெரும்பாலான கோயில்களில் அன்றாட பூசைகள் தமிழ் வழியில் நடததப்படுவதில்லை. இந்த விதிமீறல் தொடரக் கூடாது எனத் தமிழ்நாடு அரசைத் தெய்வத் தமிழ்ப் பேரவை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது. சமஸ்கிருதத்தில் பூசை நடத்த வேண்டுமெனக் கோருவோரைத் தவிர, இயல்பாக நடக்கும் அனைத்துப் பூசை மற்றும் வழிபாட்டு நடவடிக்கைகள் அனைத்திலும் தமிழ்த் திருமுறைகளையும், மந்திரங்களையும் மட்டுமே பயன்படுத்துவதை இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை நடைமுறை வழக்கமாக்கிட உறுதி செய்ய வேண்டும் எனத் தெய்வத் தமிழ்ப் பேரவை தமிழ்நாடு அரசை கேட்டுக்கொள்கிறது.

மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, தெய்வத் தமிழ்ப் பேரவை சார்பில், ஆன்மிகர்கள் -அடியார்கள் -தமிழ் உணர்வாளர்கள் பங்கேற்புடன் -தஞ்சையில் வரும் 08.05.2021 -சனிக்கிழமை நாளன்று காலை 8 மணியிலிருந்து மாலை 6 மணி வரை -கோவிட்-19 விதிமுறைகளைப் பின்பற்றி, ஒருநாள் வேண்டுகோள் உண்ணாப் போராட்டம் நடைபெறும்" என்றார்.

'தமிழ்த்தேசியம் பேசிக்கொண்டிருந்த நீங்கள் ஆன்மிகம் பக்கம் திசை திரும்பியுள்ளதாகவும் ஜக்கி வாசுதேவை எதிர்ப்பதாகவும் குற்றச்சாட்டுகள் எழுகிறதே?' எனக் கேள்வியெழுப்பியபோது...

"தமிழ்த் தேசியத்தில் இதுவும் ஒன்றுதான். தமிழர்களின் உரிமைகள், உணர்வுகள், உடமைகளுக்கு எதிராக யார் வந்தாலும் எதிர்த்துநின்று போராடி வெற்றி பெறுவோம். தஞ்சை பெருவுடையார் கோயில் குடமுழுக்கு தமிழில் நடத்தவேண்டும் என்று போராடி, சட்டப் போராட்டம் நடத்தி, நீதிமன்ற தீர்ப்பு வாங்கி தமிழில் குடமுழுக்கு நடத்த வைத்தோம். சமீபத்தில் விராலிமலை சுப்பிரமணியர் கோயில் குடமுழுக்கையும் தமிழில் நடத்த வைத்தோம். இது எங்கள் உரிமை. எங்களைத் தூற்றுவோர் தூற்றட்டும். உரிமையை வென்றெடுப்போம்.

தமிழ்நாட்டில் அமையப் போகும் புதிய அரசு, ஜக்கி போன்றவர்களுக்கும், நடுவண் அரசுக்கும் அடிமைப்பட்டு அடங்கிவிடாமல் நிமிர்ப்பு செய்ய வேண்டும்" என்றார்.

இக்கருத்துக்களை வலியுறுத்தி ஏப்ரல் 13, 2021 அன்று சென்னை சேப்பாக்கம் பத்திரிகையாளர் சங்கத்தில் செயற்குழுக் கூட்டமும், பின் பத்திரிகையாளர் சந்திப்பும் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சித்தர் மூங்கிலடியார், குச்சனூர் கிழார், சத்தியபாமா, வழக்கறிஞர் ச.செந்தில்நாதன், மோகனசுந்தரம் சுவாமிகள், இறைநெறி இமயவன், கலையரசி நடராசன், வழக்கறிஞர் கரூர் தமிழ் இராசேந்திரன், ஆசீவக சுடரொளி, பொன்னுச்சாமி அடிகளார், கி.வெங்கட்ராமன், அரங்கநாதன், முனைவர் வே.சுப்பிரமணிய சிவா உள்ளிட்ட பல ஆன்மிகவாதிகள், தமிழ் உணர்வாளர்கள் பங்கேற்றனர்.

ஈஷாவை அரசுடைமையாக்க தமிழக பக்தர்களின் குரல் வலிமை பெறுகிறது.

-இரா.பகத்சிங்

படம்: ஸ்டாலின்

● தெய்வத் தமிழ்ப் பேரவையின் கண்டனக் குரலைத் தொடர்ந்து, 14.04.2021 அன்று ஈஷா மையம் சார்பில் இச்செய்தியாளர் சந்திப்பில் பேசப்பட்ட கருத்துகளுக்கு மறுப்புத் தெரிவித்து அறிக்கை வெளியிடப்பட்டு, தங்கள் மீதான குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரங்கள் இல்லை எனக் கூறினர்.

isha.sadhguru.org/in/ta/blog/article/kovilgalai-kakka-kural-kudukkum-sadhgurukku-ethiraga-avathuru-parpuvargalukku-isha-kandanam

Sadhguru Exclusive Login | Sign Up

isha Sadhguru Wisdom Yoga & Meditation Events Centers Health Outreach Volunteer Donate Shop

Home / Blog / Article / தமிழக கோவில்களை காக்க குரல் கொடுக்கும் சத்குருவுக்கு எதிராக அவதூறு பரப்புவர்களுக்கு ஈஷா கண்டனம்

Also in English

தமிழக கோவில்களை காக்க குரல் கொடுக்கும் சத்குருவுக்கு எதிராக அவதூறு பரப்புவர்களுக்கு ஈஷா கண்டனம்


மக்கள் இயக்கத்தை தடம்புரள செய்ய உள்நோக்கத்துடன் எடுக்கப்படும் முயற்சிகளை புறந்தள்ளி, ஈஷா யோக மையம், ஜனநாயக முறையில் தேர்தெடுக்கப்படும் அரசுடன் இணைந்து செயல்பட்டு தமிழக கோவில்களை பக்தர்களிடம் ஒப்படைக்கவும், அதன் பெருஞ்சிறப்பை மீட்டெடுக்கவும் தீர்வுகாணும்.

isha.sadhguru.org/in/ta/blog/article/kovilgalai-kakka-kural-kudukkum-sadhgurukku-ethiraga-avathuru-parpuvargalukku-isha-kandanam

இந்நிலையில் சென்னையில் சிலர் நேற்று (ஏப்ரல் 13) நடத்திய செய்தியாளர் சந்திப்பு, சத்குரு மற்றும் ஈஷா யோக மையம் மீது அடிப்படை ஆதாரமில்லாத குற்றச்சாட்டுகளை கூறுவதன் மூலம் இந்த இயக்கத்தையும் தமிழ் மக்களின் உணர்வுகளையும் இழிவுபடுத்த முனையும் அறிவீனமான முயற்சி. தேர்தலுக்கு முன்பே ஜனநாயக முறையில் தமிழ் மக்கள் தங்கள் வாழ்வோடு ஒன்றிணைந்த கோவில்களை விடுவிக்க கோரிய இயக்கத்தை சிறுமைப்படுத்தும் இந்த முயற்சியை நாங்கள் கண்டிக்கிறோம்.

தமிழகத்தில் 30 ஆண்டுகளுக்கு மேலாக சத்குருவும், ஈஷா யோக மையமும் செய்த பெரும் களப்பணிகளின் விளைவாக தமிழர்கள் சத்குருவை போற்றுதலுக்குரியவராக பார்க்கின்றனர். ஈஷா யோக மையத்தின் செயல்களை முடக்க பல்வேறு மதவாத, தேசவிரோத அமைப்புகள் தொடர்ச்சியாக செய்த சதிகள் தன்னார்வ தொண்டர்களின் ஓய்வறியா தன்னலமில்லா முயற்சியால் வெற்றி பெறவில்லை.

சொற்பநேர நீர்குமிழிகளாய் உருவாகியுள்ள இந்த குழுக்கள், அறநிலையத்துறை, கோவில்களின் பரிதாப நிலையை பற்றி நீதிமன்றத்தில் தெரிவித்த போது ஒன்றும் பேசாமல் இருந்துவிட்டு, இப்போது தமிழர்களுக்கு கோவிலை யார் நிர்வகிக்க வேண்டும் என்று போதனை தர தேவையில்லை. மக்கள் இயக்கத்தை தடம்புரள வைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு வெளிப்படும் வெற்று கூச்சல்களுக்கு செவி சாய்க்காமல், ஈஷா யோக மையம் ஜனநாயக முறையில் தேர்தெடுக்கப்படும் அரசுடன்


isha.sadhguru.org/in/ta/blog/article/kovilgalai kakka kural kudukkum sadhgurukku ethiraga avathuru parpuvargalukku isha kandanam

4. ஈஷாவிற்கு எதிரான அடிப்படை ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள்:

ஈஷாவிற்கு எதிராக பல்வேறு அடிப்படை ஆதாரமற்ற போலி குற்றச்சாட்டுகளை கூறியிருக்கிறார்கள். இவை அனைத்தும் நீதிமன்றத்தில் பொய் என்று நிரூபிக்கபட்டுவிட்டது. மேலும் ஈஷா இணையதளத்தில் இதற்கு தெளிவான பதில்கள் ஆதாரத்துடன் கொடுக்கப்பட்டுள்ளது. ஆதாரமின்றி பழி சுமத்துவதற்கு முன் அதை படித்து புரிந்து கொள்ள வேண்டும்.

நேற்றுவரை இந்துமதத்தை எதிர்த்தவர்களும், நாத்திகவாதிகளும், கோவில்கள் மீது அக்கறை இல்லாதவர்களும் ஒரேநாளில் பக்தர்களாக மாறி இந்த ஆன்மீக இயக்கத்தை தொடங்கி இன்று இந்த பத்திரிக்கையாளர் சந்திப்பை நடத்தியுள்ளனர். இவர்களின் பின்னணியை சற்றே ஆராய்ந்தால், அனைவருக்கும் இவர்கள் நோக்கம் வெளிப்படையாக தெரியும்.

தொடர்ந்து அழிந்து வரும் நமது கோயில்களுக்காக ஒருங்கிணையாதவர்கள் இன்று தமிழக மக்கள் தங்கள் கோவில்களை மீட்க ஒருங்கிணையும் பொழுது அதை எதிர்க்கிறார்கள் எனில் இவர்களின் நோக்கம் என்ன? இவர்களை பின்னின்று

● *தெய்வத் தமிழ்ப் பேரவையின் கண்டனக் குரலைத் தொடர்ந்து, 14.04.2021 அன்று ஈஷா மையம் சார்பில் இச்செய்தியாளர் சந்திப்பில் பேசப்பட்ட கருத்துகளுக்கு மறுப்புத் தெரிவித்து அறிக்கை வெளியிடப்பட்டு, தங்கள் மீதான குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரங்கள் இல்லை எனக் கூறினர்.*

● *தங்கள் மீதான குற்றச்சாட்டுகளை "அடிப்படை ஆதாரமற்ற போலிக் குற்றச்சாட்டுகள்" என்று கூறிய ஈஷா மையம், குற்றச்சாட்டுகளை முன்வைத்த தெய்வத் தமிழ்ப் பேரவையினரை "நேற்றுவரை இந்துமதத்தை எதிர்த்தவர்களும், நாத்திகவாதிகளும், கோவில்கள் மீது அக்கறை இல்லாதவர்களும் ஒரே நாளில் பக்தர்களாக மாறி இந்த ஆன்மிக இயக்கத்தைத் தொடங்கியவர்கள்" என்று அவதூறாகக் கூறியது.*

● *ஈஷாவை அரசுடைமையாக்க வேண்டுமெனக் கோரிக்கை வைத்துள்ள தெய்வத் தமிழ்ப் பேரவை - "நேற்றுவரை இந்துமதத்தை எதிர்த்தவர்களும், நாத்திகவாதிகளும், கோவில்கள் மீது அக்கறை இல்லாதவர்களும் சேர்ந்து ஒரே நாளில்" திடீரென்று தொடங்கிய அமைப்பல்ல என்பதை தமிழ்நாட்டு அரசியலை உற்று நோக்கும் யாராலும் உணர்ந்து கொள்ள முடியும்.*

தெய்வத் தமிழ்ப் பேரவை – திடீர் அமைப்பா?

● *கடந்த 2020ஆம் ஆண்டு - பிப்ரவரி 5 அன்று, தமிழ்ப் பேரரசன் இராசராசன் எழுப்பிய தஞ்சைப் பெருவுடையார் கோயிலுக்கு நடைபெறவிருந்த குடமுழக்கு தமிழில் நடைபெற வேண்டுமென தமிழ்த்தேசியப் பேரியக்கத் தலைவர் ஐயா பெ. மணியரசன் அவர்களை ஒருங்கிணைப்பாளராகக் கொண்ட "தஞ்சைப் பெரிய கோயில் உரிமை மீட்புக் குழு" வழியாக முயற்சிகள் எடுக்கப்பட்டன.*

● *இதற்காக மாவட்ட ஆட்சியரிடம் நேரில் கோரிக்கை (18.12.2021), தமிழ்வழி இறைச் செயல்பாட்டாளர்களின் கலந்தாய்வுக் கூட்டம் (28.12.2021), தமிழ்க் குடமுழுக்கு கோரும் சிறப்பு மாநாடு (22.01.2021), நீதிமன்றத்தில் வழக்கு என அடுத்தடுத்த முயற்சிகள் காரணமாக தஞ்சைப் பெரிய கோயில் குடமுழுக்கில் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு தமிழ் கோபுரம் ஏறியது!*

● *தஞ்சைப் பெரிய கோயில் உரிமை மீட்புக் குழுவின் இப்பணி, தமிழ்நாடெங்கும் தமிழின உணர்வாளர்களை எழுச்சி கொள்ளச் செய்தது!*



தஞ்சை பெரிய கோயில் கும்பாபிஷேகத்தை

தமிழில் நடத்த அரசு உத்தரவிட வேண்டும்


உரிமை மீட்புக்குழு மாநாட்டில் தீர்மானம்


[illegible]





● இவ்வெழுச்சியை தமிழ்நாடெங்கும் கொண்டு சென்று, தமிழர்கள் எழுப்பிய இந்துத் திருக்கோயில்களில் தமிழில் அன்றாட அர்ச்சனையும், கருவறை பூசையும், குடமுழுக்கு உள்ளிட்ட திருவிழாக்களை நடத்தவும், அனைத்துச் சாதித் தமிழர்களும் கருவறைப் பூசை உள்ளிட்ட இறைவழிபாட்டுச் சடங்குகளில் ஈடுபட வேண்டுமென்ற தமிழர் சமத்துவத்தை நிலைநாட்டவும் தொடர்ந்து பாடுபட முடிவெடுக்கப்பட்டது.





தஞ்சைப் பெருவுடையார் திருக்கோயிலில் தமிழில் குடமுழுக்கு (05.02.2020)



விராலிமலை கோயிலில் தமிழில் கும்பாபிஷேகம்

தெய்வீக தமிழ் பேரவை வலியுறுத்தல்

விராலிமலை, பிப்.22-

விராலிமலைசுப்பிரமணிய சுவாமி கோயிலில் வரும் 25ம் தேதி கும்பாபி ஷேகம் நடக்கிறது.

யாகசாலை பணிகள் நடந்து வருகின்றன. இந்நிலையில் தெய்வீக தமிழ் பேரவை சார்பில் சத்திய பாமா, கும்பகோ ணம் இறை நெறி இமயவன், ஸ்ரீவில்லிபுத்தூர் மோகனசுந் தரம் உள்ளிட்டோர் கோயிலில் சுவாமி தரிசனம் செய்து விட்டு பணிகளை பார்வையிட்டனர்.

பின்னர் நிருபர்களிடம் அவர்கள் கூறுகையில், ஐகோர்ட் தீர்ப்பின் படி மூல வர் கருவறை, மூலவர் விமா னம், யாகசாலை இந்த மூன்றி லும் 50 சதவீதம் தமிழ், 50 சதவீதம் வடமொழி என்ற முறையில் கும்பாபிஷே கம் நடத்தப்பட வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்துள்ளது. ஆனால், இந்த கோயில் அறிக் கையில் சிவாச்சாரியார்கள் 8 பேர், ஒரு ஓதுவார் என்று கொடுத்துள்ளனர்.

யாகசாலையில் கலசங் கள் வைத்திருக்கின்ற வேதி கையில் தமிழில் வழிபாடு ஏற்றப்படவேண்டும். அது போல் வேதிகைக்கு கீழே உள்ள குண்டத்தில் வேள்வி யானது தமிழில் ஏற்றப்பட வேண்டும். 4 கால பூஜை நடக் கிறது என்றால் இரண்டு முறை தமிழிலும், 2 முறை வடமொழியிலும் நடக்க வேண்டும்.

சில ஆண்டுகளுக்கு முன்பு அர்ச்சனை தமிழில் செய்யலாம் என்று தமிழக அரசு அறிவித்தது. இவற்றை யெல்லாம் இந்து சமய அறநி லையத்துறை நடைமுறை படுத்தவேண்டும் என்றனர்.

நன்றி – ***தினமலர்,*** 22.02.2020

- கரூர் பசுபதீசுவரர் திருக்கோயில், விராலிமலை சுப்பிரமணியர் திருக்கோயில் குடமுழுக்குகளில் தஞ்சைப் பெருவுடையார் குடமுழுக்கு குறித்த சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளையின் தீர்ப்பை முன்வைத்து தமிழில் குடமுழுக்கு வேண்டுமெனக் கோரிப் போராடி, அதில் வெற்றியும் பெற்றனர்.

- இவ்வெற்றியை தமிழ்நாடு முழுவதும் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல தமிழர் இறையியல் செயல்பாட்டாளர்களுக்கான கலந்தாய்வுக் கூட்டம் திருச்சியில் 14.02.2021 அன்று நடைபெற்றது.



திருச்சி
தமிழர் இறையியல்
சந்திப்பு (14.02.2021)




குச்சனூரில் கலந்தாய்வுக் கூட்டம் 21.03.2021



- இரண்டாவது கூட்டம், தேனி மாவட்டம் - குச்சனூரில் *21.03.2021* அன்று நடைபெற்றது. இக்கூட்டங்களில் **"தெய்வத் தமிழ்ப் பேரவை"** என்ற தமிழர் ஆன்மிக அமைப்பின் வழியே பல்வேறு தமிழர் இறைவழிபாட்டுச் செயல்பாட்டாளர்களும் இணைந்து செயல்படுவது என முடிவெடுக்கப்பட்டது.

- இவ்வமைப்பின் ஒருங்கிணைப்பாளராக தமிழ்த்தேசியப் பேரியக்கத்தின் தலைவர் ஐயா பெ. மணியரசன் அவர்களும், செயற்குழு உறுப்பினர்களாக பல்வேறு தமிழர் ஆன்மிக அமைப்புத் தலைவர்கள் *16* பேரும் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

- இவ்வமைப்பின் சார்பில் தொடர்ந்து தமிழ்நாட்டின் பல்வேறு திருக்கோயில்களில் தமிழ்க் குடமுழுக்கு கோரிக்கைக்காகவும், தமிழ் வழிபாட்டுக்காகவும் முன்னெடுப்புகள் நடைபெற்று வருகின்றன.



● *சென்னையில் 13.04.2021 அன்று நடைபெற்ற தெய்வத் தமிழ்ப் பேரவையின் செய்தியாளர் சந்திப்பைத் தொடர்ந்து, சிதம்பரத்தில் 18.04.2021 அன்று நடைபெற்ற தமிழ்த்தேசியப் பேரியக்கத்தின் பொதுக்குழுக் கூட்டத்தில் ஈஷாவை அரசுடைமையாக்க வேண்டுமென தமிழ்நாடு அரசை வலியுறுத்தி, ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.*



ஈஷா மையத்தை அரசே ஏற்று நடத்த வேண்டும்

● தமிழ்த் தேசியப் பேரியக்கத் தலைவர் மணியரசன் பேட்டி

■ கடலூர்

ஜக்கி வாசுதேவின் ஈஷா மையத்தை தமிழக அரசே ஏற்று நடத்த வேண்டும் என தமிழ்த் தேசியப் பேரியக்கத் தலைவர் மணியரசன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியப் பேரியக்கத்தின் மாநில பொதுக்குழு கூட்டம் நேற்று சிதம்பரத்தில் நடைபெற்றது. தமிழ்த் தேசியப் பேரியக்கத் தலைவர் மணியரசன் தலைமை தாங்கினார். பொதுச்செயலாளர் வெங்கட்ராமன் முன்னிலை வகித்தார். தமிழ்த் தேசியப் பேரியக்கத் தலைவர் மணியரசனை தாக்க திட்டமிடும் நபர்களை கைது செய்ய வேண்டும். இந்து அறநிலையத்துறையைக் கலைத்திடக் கோரும் ஜக்கி வாசுதேவின் கோரிக்கையை மறுத்து தமிழக அரசு அறிக்கை வெளியிட வலியுறுத்தியும் மே 8-ம் தேதி தஞ்சையில் தெய்வத் தமிழ்ப் பேரவை சார்பில் உண்ணாவிரத போராட்டம் நடத்துவது என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

▼ **ஜக்கி வாசுதேவின் கோரிக்கையை அரசு மறுத்து அறிக்கை வெளியிட வேண்டும். தமிழ்நாடு கோயில்களில் தமிழ்வழியில் பூஜையும் குடமுழுக்கும் நடத்த வேண்டும்.**

பின்னர் தமிழ்த் தேசியப் பேரியக்கத் தலைவர் மணியரசன் செய்தியாளர்களிடம் கூறியது:

வெள்ளியங்கிரி பகுதியில் கட்டப்பட்டுள்ள ஈஷா மையத்தை அரசு கையகப்படுத்த வேண்டும். ஜக்கி வாசுதேவ் ஆதரவாளர்களுக்கு கோயிலுக்குள் ஆர்ப்பாட்டம் நடத்த அனுமதி அளித்தது தவறான முன்னுதாரணமாகும். இதற்கு மூலகாரணமாக விளங்கும் ஜக்கி வாசுதேவ் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஜக்கி வாசுதேவின் கோரிக்கையை அரசு மறுத்து அறிக்கை வெளியிட வேண்டும். தமிழ்நாடு கோயில்களில் தமிழ்வழியில் பூஜையும் குடமுழுக்கும் நடத்த வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி மே 8-ம் தேதி தஞ்சையில் தெய்வத் தமிழ்ப் பேரவை சார்பில் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறுகிறது என்று தெரிவித்தார்.



நன்றி : தமிழ் இந்து, 19.04.2021

● *குற்றச்சாட்டுகளை முன்வைத்ததோடு நிற்காமல், ஈஷாவை அரசுடைமையாக்கக் கோரியும், தமிழ் அர்ச்சனை கோரியும் தமிழ்நாடெங்கும் போராட்டங்களை முன்னெடுத்தது தெய்வத் தமிழ்ப் பேரவை!*

தமிழ்வழிக் கருவறைப் பூசைக்கு சட்டமியற்று ஈஷாவை அரசுடைமையாக்கு!

தமிழ்நாடெங்கும் தெய்வத் தமிழ்ப் பேரவை

பேரெழுச்சியுடன் நடத்திய முழக்கப் போராட்டம்!





தமிழ்வழிக் கருவறைப் பூசைக்குத் தமிழ்நாடு அரசு தனிச் சட்டம் இயற்ற வேண்டும், போலிச் சாமியார் ஜக்கியின் ஈஷா யோகா மையத்தை தமிழ்நாடு அரசு அரசுடை மையாக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து, 03.07.2021 அன்று - தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் "தெய்வத் தமிழ்ப் பேரவை" சார்பில் முன்னெடுக்கப்பட்ட கோரிக்கை முழக்கப் போராட்டம் பேரெழுச்சியுடன் நடைபெற்றது.

தமிழ்நாட்டில் இந்து சமய அறநிலையத் துறைக்கு சொந்தமான திருக்கோயில்களில் வழிபாட்டு மொழி தமிழாக இல்லை. எனவே கருவறை மந்திரம், அர்ச்சனை, வேள்விச் சாலை, கோயில் கலச குடமுழுக்கு ஆகியவை தமிழ் மந்திரங்களிலேயே நடைபெற வேண்டும். மாவட்டங்கள் தோறும் அர்ச்சகர் பயிற்சி பள்ளிகள் திறவப்பட வேண்டும், அர்ச்சகர் பயிற்சி முடித்துவிட்டு காத்துக் கொண்டிருக்கும் அனைத்து சாதி அர்ச்சகர் களுக்கும் பணிகள் வழங்கப்பட வேண்டும், சுற்றுச்சூழலை அழித்து நாசமாக்கி - தமிழர் ஆன்மிகத்திற்கும் எதிராகச் செயல்படும் ஜக்கி வாசுதேவின் ஈசா மையத்தை அரசுடைமையாக்க வேண்டும், அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில் பூசகர்களுக்கும், அர்ச்சகர்களுக்கும் கொரோனா கால நிவாரண நிதி வழங்கப்படுவதைப் போல் அறநிலையத்துறைக்கு வெளியிலுள்ள திருக்கோயில் பூசகர்களுக்கும் நிதியுதவி வழங்க வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து இப்போராட்டம் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியின் பல்வேறு பகுதிகளில் எழுச்சியுடன் நடைபெற்றது.

தஞ்சாவூர்

தஞ்சையில் பனகல் மாளிகை அருகில், தெய்வத் தமிழ்ப் பேரவை ஒருங்கிணைப்பாளர் ஐயா பெ. மணியரசன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற போராட்டத்தில், நூற்றுக்கும் மேற்பட்ட ஆன்மிக அன்பர்களும், தமிழின உணர்வாளர்களும் எழுச்சியுடன் பங்கேற்றனர். தமிழ்த்தேசியப் பேரியக்கத் தஞ்சை மாவட்டச் செயலாளர் தோழர் நா. வைகறை முன்னிலை வகித்தார்.


தோழர் அரங்க. குணசேகரன் (தமிழக மக்கள் புரட்சிக் கழகம்), திரு. க.கா.இரா. இலெனின் (பேரறிவிற்கு எதிரான பேரியக்கம்), முத்தையா, தமிழ்ச்செல்வி (சுறம்பக்குடி வள்ளலார் மன்றம்), இராசமாணிக்கம் (தஞ்சை வள்ளலார் மன்றம்), திருப்பூந்துருத்தி உறுதிமொழி கோவிந்தராசன், தமிழ்த்தேசியப் பேரியக்கத் தலைமைச் செயற்குழு உறுப்பினர் பழ. இராசேந்திரன், த. மணிமொழியன் (காவிரி உரிமை மீட்புக் குழு), க. ஜெகதீசன் (தமிழக விவசாயிகள் சங்கம்), துரை. இரமேசு, விசிறி சாமியார் முருகன், திரு. இரவி (வணிகர் சங்கப் பேரவை), வாசு (தமிழ்நாடு வணிகர் சங்கப் பேரவை), வி.சி.முருகையன் (தமிழக மக்கள் புரட்சிக் கழகம்), இரவிச்சந்திரன் (வேளாண் சங்கம்) உள்ளிட்ட பல்வேறு அமைப்பினர் பங்கேற்றனர்.

சென்னை

சென்னை அசோக் நகர் உதயம் திரையரங்கம் எதிரில் தெய்வத் தமிழ்ப் பேரவை சார்பில் நடைபெற்ற போராட்டத்திற்கு, தமிழ்த்தேசியப் பேரியக்கப் பொதுச் செயலாளர் ஐயா. கி.வெங்கட்ராமன் தலைமை தாங்கினார். தெய்வத் தமிழ்ப் பேரவை செயற்குழு உறுப்பினர் "செந்தமிழ் ஆகம அந்தணர்" திரு. சிவ.













வடிவேலன் அவர்கள் செந்தமிழில் திருமுறைப் பாடல்களைப் பாடி போராட்டத்தைத் தொடங்கி வைத்தார். ஆவடி - தமிழ்ச்சைவப் பேரவைத் தலைவர் திருவாட்டி. கலையரசி நடராசன் அம்மையார், தமிழ் உரிமைக் கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர் புலவர் இரத்தினவேலவன், தமிழ்க் கலை இலக்கியப் பேரவைத் தலைவர் பாவலர் கவிபாஸ்கர், தமிழ்த்தேசியப் பேரியக்கப் பொதுக்குழு தோழர்கள் பழ.நல். ஆறுமுகம், இரா. இளங்குமரன், வெற்றித்தமிழன், திருவள்ளூர் கிளைச் செயலாளர் தோழர் செயப்பிரகாசு, நடுவண் கிளைச்செயலாளர் தோழர் மு. வடிவேலன், பல்லாவரம் கிளைச் செயலாளர் தோழர் மு. கவியரசன், தென் சென்னை கிளைச் செயலாளர் தோழர் மு.வெ. இரமேசு, வட சென்னை கிளைச் செயலாளர்.தோழர் செந்தில், தியாகராய நகர் கிளைச் செயலாளர் வழக்கறிஞர் வெற்றிச்செல்வன், ஆவடிக் கிளைச் செயலாளர் தோழர். சுப்பிரமணியன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

புதுச்சேரி

பேசுவதைக் கேட்டால், மடியில் இருக்கும் பிள்ளை நழுவி விழுந்து விடும். அப்படி ஒரு மீட்டிங்கில் கலந்து கொண்டபோது, வந்து பேசிய நபர்களின் பேச்சைக் கேட்க நேர்ந்தது. முதலில் வந்த நபர் "நேத்து வரைக்கும் நான் சைக்கிளில் வந்து கொண்டிருந்தேன்ஞ் இன்னைக்கு என் கிட்ட இருக்கறது ஒரு ஃபோர்ட் ஐகான் கார் தேங்க் யூ வீகேன்ஞ்" என்றார். அடுத்து வந்த நபர் "எனக்கு வீடு கட்டுவது பல ஆண்டு கனவாக இருந்ததுஞ் எப்போது வீ கேனில் சேர்ந்தேனோ, மறுமாதமே வீட்டுக்கு அட்வான்ஸ் கொடுத்து விட்டு., வீட்டுக் கடன் வாங்கி விட்டேன். இது வீகேன் எனக்கு தொடர்ந்து சம்பாதித்துக் கொடுக்கும் என்ற நம்பிக்கையே" என்றார். இது போல வரிசையாக வந்தவர்கள் புளுகிக் கொண்டே இருந்தார்கள். கூட்டத்துக்கு வந்து, இந்த பொய்களைப் பார்த்துக் கொண்டிருந்த பல ஆடுகள், வெட்டுவதற்கு தங்கள் தலையைக் கொடுக்கும்.

இந்த ஆன்மீகத் தொழிலில் பாபா ராம்தேவ், ஜக்கி வாசுதேவ், நித்யானந்தா, ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர், மாதா போன்றவர்களுக்கு ஏர்டெல் உரிமையாளர் சுனில் மிட்டல், ரிலையன்ஸின் அனில் மற்றும் முகேஷ் அம்பானி போன்றவர்கள் என்றால், மற்ற சிறு சிறு சாமியார்களுக்கு .ஊறுகாய் பொட்டலம் தயாரிக்கும் சிறு தொழில் அதிபர்கள். யாகவா முனிவர், சிவசங்கர் பாபா போன்றவர்கள், ரவிசங்கர் மகரிஷியிடமிருந்து பிரிந்து வந்து, “வாழும் கலை” என்ற அமைப்பை தொடங்குகிறார். வாழும் கலை என்பதாகப்பட்டது, மனித குலம் தோன்றியதிலிருந்தே யாருக்கும் வாழத் தெரியவில்லை, எப்படி வாழுவது என்று சொல்லிக் கொடுக்கிறேன் என்று அவர் தனது பிசினெஸை விரிவாக்கிக் கொண்டுள்ளார். பாபா ராம்தேவ் யோகா பயிற்சி மையம் மற்றும் ஆயுர்வேத மருந்துகள் மற்றும் மருத்துவமனைகளை நடத்தி அவரது கம்பெனியையும் சிறப்பாக நடத்தி வருகிறார். அமிர்தானந்த மயி சாமியாரின் சிறப்பு கட்டிப்பிடி வைத்தியம். அவரது வியாபாரமும் கடல் கடந்து பிரபலமாகி சிறப்பாக நடைபெற்று வருகிறது.

பெரும் தொழில் அதிபர்கள் வரிசையில் உள்ள நித்யானந்தா மற்ற சாமியார்களை விட, வசீகரமான பேச்சும், மொழி நடையும் உள்ளவர். ஆனால் துரதிருஷ்ட வசமாக வீடியோ கேமரா தொழில்நுட்பத்தின் வீச்சை அறிந்து கொள்ளாமல் போனதால், பட்டாபட்டியோடு சிக்கினார். அதன் பிறகு அவர் என்னென்னவோ முயற்சிகள் செய்தும் இழந்த செல்வாக்கை மீட்டெடுக்க முடியவில்லை. தமிழகத்தைப் பொறுத்தவரை, இப்படிப்பட்ட ஆன்மீக வியாபாரிகளுக்கு களம் அமைத்துக் கொடுத்து, தமிழக மக்களிடையே இந்த ஆன்மீக வியாபாரத்தைப் பிரபலமாக்கி, திருபாய் அம்பானிக்கு ராஜீவ் காந்தி போல, பின்புலமாக இருந்து இயக்கியது தமிழகத்தின் முன்னணி வாரப்பத்திரிக்கைகளான ஆனந்த விகடன் மற்றும் குமுதம்.



இந்தப் போக்கை தொடங்கி வைத்த முதல் ஊடகம், ஆனந்த விகடேனே! சுவாமி சுகபோதானந்தா என்பவர் எழுதிய மனசே ரிலாக்ஸ் ப்ளீஸ். இந்தத் தொடர் மிகப் பெரும் வரவேற்பைப் பெற்று, புத்தகமாக வெளிவந்த ஒரு சில மாதங்களிலேயே விற்றுத் தீர்ந்தது. இந்த தொடரின் வெற்றி குமுதத்தையும் யோசிக்க வைத்தது. ஒரு காலத்தில் ஜெய காந்தன், சுஜாதா, பிரபஞ்சன் போன்றோரின் தொடர்கதைகளை விளம்பரப்படுத்தி தங்கள் வியாபாரத்தை பெருக்கிக் கொண்ட விகடன் மற்றும் குமுதம் இதழ்கள், தொடர்கதை களுக்கு வரவேற்பு குறைந்ததை உணர்ந்து ஆன்மீகத் தொடர்களில் கவனம் செலுத்தத் தொடங்கின. விகடனுக்குப் போட்டியாக குமுதம் தன் பங்குக்கு நித்யானந்தாவை வைத்து, “கதவைத் திற காற்று வரட்டும்” என்ற

தொடரைத் தொடங்கினார்கள். நித்யானந்தாவின் சுவையான மொழி நடை காரணமாக இத்தொடர் பெரும் வரவேற்பைப் பெற்றது. குமுதம் அதிபர் ஜவஹர் பழனியப்பனோடு நெருக்கமான நித்யானந்தாவுக்காக குமுதம் தன் கதவுகளைத் திறந்தது. இந்தத் தொடர் நித்யானந்தாவை, அண்ணாமலை ரஜினிகாந்த் போன்ற வளர்ச்சியடைய வைத்தது.

நித்யானந்தாவின் தொடர் அடைந்த வளர்ச்சியைக் கண்டதும் விகடன் அடுத்து என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருந்தபோதுதான், கோயம்பத்தூரில், லிங்கம் ஒன்றை நிறுவி வசூல் செய்து கொண்டிருந்த ஜெகதீஷாக இருந்து, பின்னாளில் ஜக்கி வாசுதேவாக மாறிய ஜக்கி விகடனை அணுகுகிறார். விகடனுக்கும் இந்த ஏற்பாடு வசதியாகவே இருக்கிறது. குமுதத்துக்கு போட்டியாக இத்தொடரைத் தொடங்குகிறது விகடன்!

நித்யானந்தாவைப் போலவோ, ஓஷோ போலவோ, ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி போலவோ, விரிவான அறிவும், வாக்கு சாதுர்யமும், மொழி நடையும் இல்லாதவர் ஜக்கி. இதனால் மற்றவர்களைப் போல, ஜக்கி இத்தொடரை எழுதாமல், ஜக்கியின் பொன்மொழிகளை தொகுத்து தொடராக வெளியிடப்பட்டது. இத்தொடரை தொகுத்தது, சுபா என்ற இரட்டை எழுத்தாளர்கள். இந்தத் தொடருக்காக, ஜக்கி பல கோடி ரூபாய் மதிப்புள்ள விளம்பரங்களை, விகடன் நிறுவனத்தின் பல்வேறு பத்திரிக்கைகளுக்கு தந்ததாகத் தெரிகிறது.

மற்ற ஆன்மீக வியாபாரிகளோடு ஒப்பிடுகையில் தன்னிடம் உள்ள குறையான வசீகரமான பேச்சு இல்லாததை வேறு வகையில் சரி செய்தார் ஜக்கி. ஆசையே துன்பத்திற்கு காரணம் என்று சொன்ன உலகின் மூத்த தத்துவ ஞானிக்கு நேர் முரணாக "அத்தனைக்கும் ஆசைப்படு" என்ற வாதத்தை முன்வைத்தார். வழக்கமான ஆன்மீக குருக்கள் ஒரு நீண்ட அங்கியைப் போட்டுக் கொண்டு அருள் வாக்கு கொடுப்பதைப் பார்த்து பழக்கப்பட்ட மக்களுக்கு, ஜீன்ஸ் பேண்டும், கூலிங் கிளாஸும் அணிந்து ஹம்மர் காரிலும், ஹோண்டா பைக்கிலும் வலம் வந்து கொண்டு, தத்துவமும் அருள்வாக்கும் அளிக்கும் சாமியாரைப் பார்க்க வித்தியாசமாக இருந்தது.


இந்தத் தொடர் ஜெகதீஷ் என்கிற ஜக்கி வாசுதவ் என்கிற நபரை சத்குருவாக மாற்றியது. ஜெயா ப்ளஸ் தொலைக்காட்சியில் அதிருஷ்டக் கல் விற்கும் நபர் எப்படி பின்னாளில் கோடீஸ்வரராகிறாரோ அதே போல, ஜக்கியும் கோடீஸ்வர சாமியாராக பணக்காரர்கள் க்ளப்பில் இடம்பிடித்தார். ஜக்கி எவ்வளவு பெரிய அப்பாடக்கர் என்பதை அவர்களே விளக்குகிறார்கள் பாருங்கள்.



"யோகியும் நம் காலத்தின் ஆழ்ந்த மெய்யறி வாளருமான சத்குரு அவர்கள் தொலைநோக்குடைய மனிதநேயரும் முதன்மையான ஆன்மீகத் தலைவரும் ஆவார். உள்ளார்ந்த அனுபவம் மற்றும் ஞானம் இவற்றில் ஊன்றி நிற்பது போல சாதாரண அன்றாட வாழ்வுசார் விஷயங்களிலும் ஈடுபாடு உடையவரான சத்குரு, அனைத்து மக்களதுமான உடல் மன ஆன்மீக நலத்துக்காக இடையறாது உழைப்பவர். சுயம் பற்றியதான ஆழ்ந்த ஞானத்திலிருந்து அவர் அடைந்த வாழ்வியல் இயங்கு முறைகள் குறித்த அறிவு, வாழ்வின் நுட்பமான பரிமாணங்களை ஆய்வதில் அவருக்கு வழிகாட்டுவதாயுள்ளது.

நீலநிற ஜீன்ஸ் பேண்ட் அணிந்திருக்கையில் எப்படி வசதியாக உணர்வாரோ, அப்படியே இடுப்பில் வெறும் துணியைக் கட்டியிருப்பினும் உணரக் கூடியவர். பிரம்மாண்ட

இமயமலையில் வெறுங்காலில் நடப்பது, நெடுஞ்சாலையில் பி.எம்.டபிள்யூ மோட்டார் சைக்கிளில் விரைவது என ஒருவர் சந்திக்கக்கூடிய மிக வித்தியாசமான மெய்யறிவாளர் சத்குரு அவர்கள். வெற்று வழக்கங்கள் சடங்குகள் இவற்றிலிருந்து பெரிதும் விலகி நிற்கும் சுய மாற்றத்துக்கான சத்குரு அவர்களின் அறிவியல் செயல் முறைகள் நேரடியானவை, சக்தி மிக்கவை. எந்தக் குறிப்பிட்ட பாரம்பரியத்தையும் சார்ந்திராமல் சமகால வாழ்வுக்கு உகந்தவற்றை யோக முறைகளிலிருந்து பெற்று ஒருங்கிணைத்து வழங்குகிறார் சத்குரு அவர்கள்.



உலகின் முக்கியமானவையாக விளங்கும் சர்வதேச மன்றங்கள் சிலவற்றில் உரை யாற்றுவதை வழக்கமாகக் கொண்டுள்ளார் சத்குரு. 2007ம் ஆண்டு உலகப் பொரு ளாதார மன்றத்தின் நான்கு குழுக்களில் பங்குபெற்று அரசியல் விஷயங்கள், பொருளாதார முன்னேற்றம் முதல் கல்வி, சுற்றுச்சூழல் வரை பல பிரச்சினைகள் குறித்துப் பேசினார். 2006ல் உலகப் பொருளாதார மாநாடு, ஸ்வீடனில் நடந்த தால்பெர்க் மாநாடு, ஆஸ்திரேலியாவில் நடந்த தலைவர்களுக்கான மாநாடு ஆகியவற்றில் உரையாற்றினார். ஐக்கிய நாடுகள் சபையின் புத்தாயிரத்தாண்டு அமைதிக்குழு மற்றும் உலக சமாதான அமைப்பு இவற்றிலும் பிரதிநிதியாக இருந்து செயல்பட்டிருக்கிறார்.

சத்குரு அவர்களின் தொலைநோக்கும் நவீன சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகள் மீதான புரிதலும் பிபிசி, ப்ளூம்பெர்க், சிஎன்பிசி, சிஎன்என் மற்றும் நியூஸ்வீக் இன்டர்நேஷனல் ஆகிய தொலைக்காட்சிகளில் அவரது நேர்காணல்கள் வெளியாகக் காரணமாக அமைந்திருக்கின்றன. அவரது சிந்தனைகள் இந்தியாவின் முன்னணி தேசிய நாளேடுகளில் தொடர்ந்து வெளியிடப்பட்டு வருகின்றன. 'சத்சங்கங்கள்' எனப்படும் அவரது கூட்டு தியானங்களுக்கு 3,00,000க்கும் குறையாமல் மக்கள் பங்கேற்கும் அளவுக்கு பிரபலமானவராக சத்குரு விளங்குகிறார். பழமையிலிருந்து மிகப் புதுமை வரையிலான விஷயங்களின் ஊடே தடையற்றுப் பயணிக்கும் சத்குரு அவர்கள் அறிந்தவற்றுக்கும் அறியாதவற்றுக்குமிடையே பாலமாக நின்று, தம்மைச் சந்திப்பவர்கள் வாழ்வின் ஆழ்ந்த பரிமாணங்களை ஆய்ந்தறியவும் அனுபவிக்கவும் உதவுகிறார்."

சத்குருவைப் பற்றிய இந்த அறிமுக உரையைப் படிப்பவர்களுக்கு, இவர் கடவுளின் அவதாரம் என்றே தோன்றும். ஆனால் இந்த சத்குரு, ஒரு கைதேர்ந்த அரசியல்வாதி. கருணாநிதியையே விஞ்சும் அளவுக்கான ஒரு சிறந்த அரசியல்வாதி. ???

ஆனந்த விகடன் தொடருக்குப் பிறகு, இவரின் மதிப்பு தங்கத்தை விட பல மடங்கு கூடுகிறது. ஆனந்த விகடன் போன்ற இதழ்களுக்கு சமூகத்தில் இருக்கும் மதிப்பும் மரியாதையும், ஜக்கிவாசுதேவின் ஆன்மிக வியாபாரத்தை, பல மடங்கு உயர்த்தின. இவ்வாறு வளர்ந்த அந்த வியாபாரத்தின் ஒரு பகுதிதான் இந்தியா முழுக்க, குறிப்பாக தமிழகமெங்கும் நடத்தப்படும் ஈஷா யோகா தியான வகுப்புகள். கடந்த மாதம் இப்படியான ஒரு தியான வகுப்புக்கு நண்பரின் வற்புறுத்துதலால் செல்ல நேர்ந்தது.

இவர்கள் சொல்லித் தரும் யோகா பயிற்சிகள், உண்மையிலேயே உடலுக்கு நன்மை பயப்பவை. ஆனால் வெறும் யோகப்பயிற்சிகளை மட்டும் சொல்லித்தந்தால், ஜக்கியின் சாம்ராஜ்யம் இப்படி விரிவடைந்திருக்காது. முதல் இரண்டு நாட்கள் பயிற்சியைச் சொல்லித் தந்து விட்டு, மூன்றாம் நாள் முக்கிய யோகப்பயிற்சி செய்வதற்கான பூஜை என்று

தொடங்குவார்கள். அந்த பூஜையின் போது, ஜக்கி வாசுதேவின் பெரிய படத்தை வைத்து, அரை மணி நேரம் பூஜை செய்வார்கள். இந்த இடத்திலிருந்துதான் தொடங்குகிறது மூளைச்சலவை!

இதற்குப் பிறகு, உருத்திராட்ச மாலை அணிவதால் ஏற்படும் பயன்கள் என்னென்ன என்று சொல்லி விட்டு, இந்த உருத்திராட்ச மாலைகள் வெளியில் கிடைக்காது என்று சொல்லுவார்கள். வகுப்பு முடிந்ததும் பார்த்தால் 1000 ரூபாய் முதல் 1500 ரூபாய் வரை விலையிருக்கும் உருத்திராட்ச மாலைகள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கும். அதற்கு அடுத்தபடியாக வகுப்பு முடிந்ததும் சத்துமாவுக் கஞ்சி தயாரித்து அருந்துவதற்கு தருவார்கள். தரும்போதே, இந்த சத்துமாவு ஈஷா மையத்தால் தயாரிக்கப்பட்டு விற்பனைக்கு உள்ளது என்று கூறுவார்கள். நான்கு நாட்கள் வகுப்பு முடித்தவர்கள் உங்களின் அனுபவங்களைக் கூறுங்கள் என்று பேசச் சொல்லுவார்கள். ஏற்கனவே வீ கேன் நிறுவனத்தின் மல்டி லெவல் மார்க்கெடிங் நடந்தது அல்லவாஞ் அதே போல வகுப்பில் வந்தவர்களும் பேசுவார்கள். நான்கு நாட்கள் யோகா பயிற்சி செய்து முடித்ததும், எனக்கு உலகமே புதிதாக தெரிகிறதுஞ்.. அனைவர் மீதும் அன்பு செலுத்துகிறேன்.. சிகரெட் பிடிப்பதை குறைத்திருக்கிறேன்ஞ். மனைவியோடு சண்டை போடுவதில்லை என்று கூறுவார்கள். அப்படியெல்லாம் எதுவும் நமக்குத் தோன்றாவிட்டாலும், இத்தனை பேர் சொல்லும்போது, நமக்கு எதுவும் தோன்றவில்லை என்று எப்படி சொல்லுவது என்று யோசித்துக் கொண்டு, நாமும் "எனக்கு நான்கு நாட்களாகஞ் உலகமே பளிச்சென்று நன்றாக தெரிகிறது.." என்று ஏதாவது உளறி விட்டு வருவோம்.

தற்போது இந்த பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டவர்கள், இதற்கான அடுத்த கட்ட பயிற்சியில் கலந்து கொள்ளுங்கள். அதற்காக பதிவு செய்பவர்கள் பெயரை கொடுக்கலாம் என்று கூறுவார்கள். ஈஷா மையம், பல்வேறு ஏழைகளுக்கு நலத்திட்ட உதவிகளைச் செய்கிறது என்று கூறுவார்கள். இலவச ஆம்புலன்ஸ் சேவைகள், இலவச மருத்துவமனைகள் போன்றவற்றை சத்குரு செய்து வருகிறார் என்பார்கள். இதற்கான நன்கொடைகளை நீங்கள் வழங்கினால், மேலும் பல்வேறு ஏழைகள் பயன்பெறுவார்கள், அவர்களுக்கு சத்குருவால் மேலும் பல சேவைகளைச் செய்ய முடியும் என்று கூறுவார்கள்ஞ். யோகா வகுப்புக்கு வந்த அடிமைகளுக்குத்தான் உலகமே புதிதாகத் தெரிகிறதேஞ் முதலில் தங்களை வாலண்டியராகப் பதிவு செய்து விட்டு, ஒரு பராரிக் குழந்தையை சத்குரு கட்டிப்பிடிக்கும் வீடியோவை பார்த்து விட்டு அந்தக் குழந்தைக்கு சத்குரு மூலமாக உதவலாம் என்று உடனே செக் எழுதித் தருவார்கள். வகுப்பின் இறுதியில், நீங்கள் வாலண்டியராக சேர வேண்டும், இந்த யோகப்பயிற்சியின் பலன்களை உலகெங்கும் எடுத்துச் செல்ல சத்குருவுக்கு உதவுங்கள், என்று மூளைக்குள் அடிமைத்தனத்தையும், போதையையும் விதைப்பார்கள். இந்த போதைக்கு அடிமையானவர்களின் வாழ்வு அதோகதிதான்..

ஏழைக் குழந்தைகளுக்காக உங்களின் ஒரு நாள் உணவை தியாகம் செய்யுங்கள் என்று கூறுகிறார் சத்குரு. நீங்கள் ஒரு நாள் உணவைத் தியாகம் செய்வதால் வரும் தொகையை அப்படியே ஈஷா மையத்துக்கு நன்கொடையாக வழங்கினீர்கள் என்றால், அதனால் மேலும் பல ஏழைகளுக்கு சத்குரு உதவுவார் என்று அதே வகுப்பின் இறுதியில் உங்களுக்கு ஓதப்படும்.

உங்களை ஒரு நாள் உணவைத் தியாகம் செய்து நன்கொடை தாருங்கள் என்று வற்புறுத்தும் சத்குரு வைத்திருக்கும் ஹம்மர் வாகனத்தின் விலை என்ன தெரியுமா ? 40 லட்சம். ??? சத்குரு சொந்தமாக வைத்திருக்கும் R22 வகை ஹெலிகாப்டரின் விலை என்ன தெரியுமா ? 14 கோடி. இந்த ஹெலிகாப்டருக்கான தேவை என்ன என்பதை சத்குருவே விளக்குகிறார்.

"தென்னிந்தியாவில் ஈஷா யோகா பல மடங்கு வளர்ந்து விட்டது. கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் 20 மடங்கு வளர்ந்துள்ளது. இதனால் ஏற்பட்டுள்ள மிகப் பெரிய சிக்கல் எனது நேரக்குறைபாடு. நேரக்குறைபாடு பெரிய சிக்கலாகி விட்டது. இதை நான் ஆராய்ந்தபோது நான் சாலை வழியாக பயணிப்பதில்தான் அதிக நேரத்தை செலவிடுகிறேன் என்பதை உணர்ந்தேன்.

இன்று ஈஷாவுக்கு கிடைத்திருக்கும் வரவேற்பில், இந்தியாவில் உள்ள அனைத்துக் கதவுகளையும் நமக்காக திறந்திருக்கிறது. ஒரு ஊருக்கு நான் வருகிறேன் என்றால் அதற்காக என்ன வேண்டுமானாலும் செய்யத் தயாராக இருக்கிறார்கள். ஆனந்த அலை நிகழ்ச்சியின் போது சென்னையில் மட்டும் ஒரு லட்சம் பேர் கூடினார்கள். மற்ற ஊர்களில் தலா 30 ஆயிரம் பேர் கூடினார்கள். நான் அவ்வாறு கூடியவர்களுக்கு ஒரு சவால் விட்டேன். ஈஷாவின் இன்னர் இன்ஜினியரிங் நிகழ்ச்சிக்கு 10 ஆயிரம் பேரை எந்த ஊரில் பதிவு செய்கிறீர்களோ, அந்த ஊருக்கு நானே நேரில் வருவேன். சிறிய ஊர்களில் 5 ஆயிரம் பேரை பதிவு செய்யுங்கள் என்று கூறினேன். இவர்களுக்குள் போட்டி உருவானது. ஒருவர் நான் 5 ஆயிரம் பதிவு செய்தேன் என்றார். மற்றொருவர் நான் 8 ஆயிரம் பேரை பதிவு செய்துள்ளேன் அதனால் எனது ஊருக்குத்தான் வர வேண்டும் என்றார்.

இப்படி பல ஊர்களிலும் என்னை வரவைப்பதற்கு கடுமையான முயற்சி நடப்பதால் ஒரு முடிவுக்கு வந்தேன். அடுத்த ஆறு ஆண்டுகளுக்குள் ஈஷா பயிற்சி எடுக்காத நபரே தமிழ்நாட்டில் இருக்கக் கூடாது என்ற முடிவுக்கு வந்தேன். அதனால் ஹெலிகாப்டர் ஓட்டக் கற்றுக் கொள்வது என்று முடிவு செய்தேன்" என்று கூறுகிறார் ஜக்கி. இந்த ஹெலிகாப்டரை மெயின்டெயின் செய்ய ஆண்டுதோறும் தேவைப்படும் தொகை 15 லட்சம்.

சரிஞ் சத்குரு எப்படிப்பட்ட நபர் என்பதை புரிந்திருப்பீர்கள். ஏமாந்தவனிடம் ஏமாற்றிப் பிழைப்பது உலகில் பலர் ஈடுபடும் மோசடிச் செயல்தான். சத்குருவும், தன்னிடம் ஏமாறுபவர்களிடம் வசூல் செய்து சம்பாதிக்கிறார். இது ஏமாற்றுபவனுக்கும், ஏமாறுபவனுக்குமான பிரச்சினை. இதைக் கூட மன்னித்து விடலாம்ஞ். ஆனால், இயற்கையை அழிக்கும் சத்குருவை எப்படி மன்னிப்பது ? சத்குரு எப்படி இயற்கையை அழிக்கிறார் என்பதைப் பார்க்கும் முன்ஞ் சத்குரு நாட்டில் பசுமையை வளர்ப்பதற்கு என்னென்ன செய்திருக்கிறார் என்பதைப் பார்ப்போம்.

"இயற்கையைப் பாதுகாப்பதில் பொறுப்புணர்வோடு நடந்து கொள்ள வேண்டிய, அதைப் பற்றி குழந்தைகளுக்கு எடுத்துச் சொல்ல வேண்டிய பெரியவர்களுக்கே எடுத்துக் காட்டாக விளங்குகிறார்கள் இளவரசனைப் போன்ற பள்ளி செல்லும் பல சிறார்கள். இதைச் சாத்தியப்படுத்தியிருக்கிறது ஈஷா பசுமைக் கரங்கள் திட்டத்தின் செயல்திட்டமான பசுமைப் பள்ளி இயக்கம்.


சத்குரு அவர்களின் வழிகாட்டுதலோடு துவங்கப்பட்டிருக்கும் இந்த பசுமைப் பள்ளி இயக்கம், பள்ளிக் குழந்தைகளுக்கு சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவர்களை மரக்கன்றுகளை உற்பத்தி செய்வது மற்றும் மரம் நடுவது போன்ற பணிகளில் ஈடுபடுத்தும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டது." இதற்கு அடுத்த பகுதிதான் சிறப்பு.

"மரம் வளர்ப்பதற்கு எனக்கு அதற்குப் போதுமான நேரம் இல்லையே, அதற்கான சரியான சூழ்நிலை இல்லையே" என்று நினைப் பவர்கள் ஈஷா பசுமைக் கரங்கள் திட்டம் மூலமாக உங்கள் விருப் பத்தை நிறைவேற்றிக் கொள்ள முடி யும். மேலும் விவரங்களுக்கு : ஈஷா பசுமைக் கரங்கள் திட்டம் -http:// www.giveisha.org/pgh"



50 ரூபாய் செலுத்தினீர்கள் என்றால், உங்கள் பெயரில் ஒரு மரக்கன்று நடப்படுமாம். அதன் மூலம் பசுமையை வளர்க்கிறார் களாம். இப்படி சத்குரு நடத்திய இந்த பசுமை இயக்கம் மூலமாக ஒரே நாளில் பல லட்சம்

மரக்கன்றுகளை நட்டதற்காக, மத்திய அரசின் இந்திரா காந்தி விருது சத்குருவுக்கு வழங்கப்பட்டது.




இப்படியெல்லாம் சத்குரு இயற்கை ஆர்வலாக இருக்கிறாரே என்று மனமகிழ்ச்சி அடைந்திருப்பீர்கள். அவசரப்படாதீர்கள். மீதம் உள்ள கட்டுரையைப் படித்தால், சத்குரு, கோட்டா சீனிவாசராவ் நடிக்கும் கேரக்டர்களில் உள்ளதைவிட மிக மோச மான வில்லன் என்பது புரியும்.

தொண்ணூறுகளின் தொடக்கத்தில், கோவை, தொண்டாமுதூர் பஞ்சாயத்தில் உள்ள இக்கரை பொலுவாம்பட்டி கிராமத்தில் தனது ஆசிரமத்தை தொடங்கு கிறார் ஜக்கி. அந்த கிராமம் ஒரு அடர்ந்த வனப்பகுதி. வனப்பகுதிக்கு மிக மிக அருகாமையில் அமைந்துள்ள அந்த கிராமத்தில் விவசாயம் சிறப்பாக நடைபெற்று வருகிறது. அந்த இடத்தில் தன் கடையை விரித்த ஜக்கி, மெல்ல மெல்ல, அவ்விடத்தில் இருந்த விவசாய நிலங்களை விலைக்கு வாங்குகிறார். இப்படி வாங்கிய நிலத்தில் 26.11.1999 அன்று தியான லிங்கம் என்ற ஒரு லிங்கத்தை நிறுவுகிறார்.

தொடக்கத்தில் தான் ஒரு ஆன்மீக குருவாக உருவாகுவோம் என்பதை அறியாத ஜக்கி லிங்க சிலையை வைத்து, அதன் மூலம் வசூல் வேட்டையில் இறங்கலாம் என்ற அடிப்படையிலேயே தொடங்குகிறார்.

இந்த லிங்க விவகாரத்திலும் ஜக்கி தான் ஒரு மோடிப் பேர்விழி என்பதை வெளிப் படுத்துகிறார். ஈஷா மையத்தின் இணைய தளத்தில் இப்படி இருக்கிறது



ventilators are placed on the top of the lintel beams with stone slabs arranged in the shape of the triangle. These triangular stone ventilators at the base of the Dome provide light and ventilation. The central opening is covered by a [illegible] Linga-shaped copper dome, which [illegible] direct light and acts as a ventilator at the top. The copper Linga above the dome vents out hot air from the dome so that the cool air passes in through the vault and ventilators.

Below the lintel beam, twenty-eight energy cubicles called the 'aura cells' are embedded in the inner wall. Each 'aura cell' is approximately 4' x 4' and provides an intimate space for a person to sit and meditate facing the Dhyanalinga.

Since it was the first time ever that such a large structure was being raised without any form-work, ring-beams, steel or concrete, each aspect of the building had to be worked out afresh, researching and experimenting to derive a safe, viable and feasible methodology for each of the aspects. This often amounted to an interesting blend of ancient and locally available material and techniques.

Burnt bricks were placed in the elliptical shaped dome in positions determined precisely by modern mathematics and verified by computer calculations; granite slabs from traditional quarries went through modern gang saws for precise fitting. For the eighteen months it took to complete the temple from the foundation, the usually quiet and serene surroundings had been transformed into, among other things, a brick kiln and a granite quarry. For the eight weeks it took to construct the dome as such, it resembled a large anthill - hundreds of people going up and down, gradually accomplishing a mission much larger in size and importance than themselves.

[illegible] Throughout the duration of the construction, a steady stream of dedicated volunteers participated in the construction in large numbers, taking time off from their work and family to participate in the making of this offering.

The entire structure is a vision of Sadhguru Jaggi Vasudev. The entire design was conceived by Sadhguru and executed by Bhramhachari engineers with the help of about 300 local unskilled labourers.

அதாவது, தியானலிங்கத்தின் மொத்த உருவாக்கமும் ஜக்கி வாசுதேவின் எண் ணத்தில் உதித்தவை. மொத்த வடிவத்தையும் சத்குரு உருவாக்கினார். பிரம்மச்சாரி பொறியாளர்களின் உதவியோடும், அப்பகுதி மக்களில் 300 வேலையாட்களின் துணையோடும் அந்தத் திட்டத்தை செயல்படுத்தினார் ஜக்கி என்று கூறுகிறது ஈஷா.

ஆனால் இந்த லிங்க கோயிலுக்கான வரைபடம், திட்டம், செயல்படுத்துதல், கட்டுமானம் என்று அனைத்தையும் செய்தது, பாண்டிச்சேரியில் உள்ள ஆரோவில் எர்த் இன்ஸ்ட் டிடியூட். இணைப்பு இப்படி ஒரு சாதாரண கட்டுமான வேலைகளில் கூட, பொய்யுரைக்கும் சத்குருவின் உண்மை முகத்தை புரிந்து கொள்ளுங்கள்.

ஜக்கி வாசுதேவ் பேசுகையில், தன்னை கடவுள் நம்பிக்கை இல்லாதவராகக் காட்டிக் கொள்வார். கடவுளைப் பற்றிக் குறிப்பிடுகையில், "உங்கள் கடவுள்" இப்படிச் சொல்லுகிறார் என்றுதான் குறிப்பிடுவார். ஆனால் அவர் கட்டியது லிங்கம். லிங்கம் என்றால் என்ன என்பது விபரமறிந்தவர்களுக்குப் புரியும். அது சிவபெருமானின் சின்னம். லிங்க சிலையைக் கட்டி விட்டு, அது மதம் சார்ந்ததல்ல என்று கூறுவது ஜக்கியின் மற்றொரு மோசடி. தற்போது தஞ்சை சிவன் கோயிலில் இருப்பது போலவே வாசலில் ஒரு நந்தி சிலையும் அமைக்கப்பட்டுள்ளது.

மலைத்தளப் பாதுகாப்புக் குழு (Hill Area Conservation Authority) என்று ஒரு குழுவை தமிழக அரசு 1990ம் ஆண்டு உருவாக்குகிறது. இந்தக் குழுவில் வனத்துறை அதிகாரிகள், பஞ்சாயத்து அதிகாரிகள், மாவட்ட ஆட்சியர்கள் என்று பல்வேறு துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் உறுப்பினர்களாக இருப்பார்கள். மலை மற்றும் மலை சார்ந்த பகுதிகள் என்று அறிவிக்கப்பட்ட கிராமங்களில் எவ்விதமான கட்டுமானம் செய்வதாக இருந்தாலும், இந்தக் குழுவின் அனுமதி பெறாமல் செய்ய முடியாது. இந்தக் குழுவின் அனுமதி பெறுவதும் எளிதான காரியம் அல்ல. ஒரு சிறிய கட்டிடம் கட்டுவதாக இருந்தால் கூட, இந்தக் குழுவிடம் விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டும். அந்தக் குழுவின் உறுப்பினராக உள்ள, மாவட்ட ஆட்சியர், கட்டிடம் கட்டப்படும் பகுதியை நேரில் ஆய்வு செய்து அறிக்கை அளிக்க வேண்டும். வனத்துறை அதிகாரியும் இதே போல நேரில் ஆய்வு செய்து அறிக்கை அளிக்க வேண்டும். அந்த கிராமம் அமைந்துள்ள பஞ்சாயத்து அமைப்பின் கூட்டத்தில் இதற்கு அனுமதி அளிக்கும் தீர்மானம் இயற்றப்பட வேண்டும். இப்படி அதிகாரிகள் அளிக்கும் அறிக்கைகள், மலைத்தளப் பாதுகாப்புக் குழுவின் கூட்டத்தில் வைக்கப்பட்டு, ஒப்புதல் வழங்கப்படும். இதற்குப் பிறகே கட்டுமானப் பணிகளையே தொடங்க வேண்டும்.

1994ல் தன் மோசடி வேலைகளைத் தொடங்கிய ஜக்கி வாசுதேவ், எந்த அனுமதியும் பெறாமல், தனது கட்டுமானப் பணிகளைத் தொடங்குகிறார். பணம் சேரச் சேர, அந்த லிங்கக் கோயிலைச் சுற்றி, பல்வேறு கட்டிடங்களை எழுப்புகிறார். அப்போது இருந்த வனத்துறை அதிகாரிகளோ, மற்ற அதிகாரிகளோ எவ்விதமான கேள்வியும் எழுப்பவில்லை.

நாளாக நாளாக சத்குருவின் அரசியல் தொடர்புகள் வளர்ந்து கொண்டே போகிறது. 2006ல் திமுக ஆட்சி வந்ததும், சத்குருவுக்கு சுக்கிர திசை. திமுகவின் முக்கியக் கூட்டணிக் கட்சித் தலைவரான தொல் திருமாவளவன், சத்குருவின் யோகா வகுப்பில் சேர்கிறார். ஒரு கைதேர்ந்த பிசினெஸ் மேனான சத்குரு, திருமாவளவன் சத்குருவின் புகழைப் பாடுவதை வீடியோவாக தொகுத்து விஜய் டிவியில் வெளியிடுகிறார். ஆனந்த விகடன் தொடர் சத்குருவின் வளர்ச்சிக்கு உதவியது போலவே, இந்த விஜய் டிவி நிகழ்ச்சியும் சத்குருவுக்கு பெரிய அளவில் கை கொடுக்கிறது.

இந்தச் சூழலில்தான், நக்கீரன் காமராஜ் சத்குருவிடம் யோகா பயிற்சி எடுக்கிறார். சத்குருவிடம் யோகா பயிற்சி எடுத்த காமராஜ், ஏறக்குறைய சத்குருவின் அடிமையாகவே மாறிப்போகிறார். சத்குருவையும் கருணாநிதியையும் சந்திக்க வைக்கிறார் காமராஜ். அப்படி



சத்குருவும் கருணாநிதியும் சந்தித்ததின் உடனடி விளைவு, அத்தனை நாள் காட்டுப்பகுதிக்குள் ஒற்றையடிப் பாதையாக இருந்த சாலை, தார்ச் சாலையாக மாறுகிறது. ஜக்கியின் ஆசிரமத்துக்கு தார்ச்சாலை அமைக்கப்படுகிறது. வாகன நட மாட்டத்துக்கு தடை இருந்த வனப் பகுதிக்குள், சர்வ சாதாரணமாக கார்கள் நுழைகின்றன. எவ்விதமான வாகனம் நுழைவதாக இருந்தாலும், கட்டணம் செலுத்திய பின்னரே வனப்பகுதிக்குள் நுழைய வேண்டும் என்று இருந்த விதி கருணாநிதியால் விலக்கப்படுகிறது.

அதற்கென வெளியிடப்பட்ட அரசாணையில் இப்படிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

"எனவே வனச்சாலைகளைப் பயன்படுத்த உரிமக் கட்டணம் வசூலிப்பதை ரத்து செய்தால் அவை களைப் பெரும்பாலும் பயன்படுத்துகின்ற விவசாயி கள், பழங்குடி சமூகத்தினர், வனங்களில் வாழ்பவர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் போன்றவர்களுக்கு பெருமளவில் நன்மை பயக்கும் என்பதால் வனச்சாலைகளை உபயோகிக்க வாகன உரிமையாளர்களிடமிருந்து உரிமக் கட்டணம் வசூலிப்பதை உடனடியாக ரத்து செய்யலாம் என்று முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது."

ஜக்கிக்காக வெளியிடப்பட்ட இந்த அரசாணையால், தமிழகம் முழுக்க அரசுக்கு வரவேண்டிய வருமானம் ரத்து செய்யப்பட்டுள்ளது.

2008ல் கருணாநிதியின் தொடர்பு கிடைத்த பிறகு ஜக்கி தனது சாம்ராஜ்யத்தை பல மடங்கு விரிவுபடுத்துகிறார். அது வரை, யோசித்துக் கட்டப்பட்டுக் கொண்டிருந்த கட்டிடங்கள், எவ்விதமான தயக்கமும் இன்றி, சகட்டுமேனிக்கு கட்டப்படுகின்றன.

வனத்துறையினரின் ஆய்வறிக்கையின் படி, 1994 முதல் 2005 வரையிலான 9 ஆண்டு காலத்தில் கட்டப்பட்ட கட்டிடங்களின் மொத்த பரப்பளவு 37424.32 சதுர மீட்டர். 2006 முதல் 2011 வரையிலான 5 ஆண்டுகளில் கட்டப்பட்ட கட்டிடங்களின் மொத்த பரப்பளவு 55944.82.

கருணாநிதி ஆட்சியில் காமராஜ் இருந்த திமிரில், தெனாவட்டாக இருந்த ஜக்கிக்கு, 2011ல் ஜெயலலிதா ஆட்சிக்கு வந்ததும் கிலி பிடிக்கிறது. அதுவும், ஜெயலலிதா வந்ததும், யானைகளுக்கான சிறப்பு முகாம்கள் நடத்தியதையும், ஜெயலலிதாவுக்கு விலங்குகள் மீதான பாசத்தையும் தெரிந்த ஜக்கி வாசுதேவுக்கு, இனியும் அனுமதி பெறாமல் கட்டிடம் கட்டினால், தனது ஆன்மீக வியாபாரத்துக்கு சிக்கல் என்பதால், 06.07.2011 ஜூலை அன்று வனத்துறையிடம் கட்டிடம் கட்ட அனுமதி வேண்டி விண்ணப்பிக்கிறார்.

ஈஷா மையத்தின் கடிதத்தில், "நிலையில் உள்ள கட்டிடங்களுக்கும், உத்தேசிக்கப்பட்ட கட்டிடங்களும் முறையாக அனுமதி பெற, நகர ஊரமைப்புத் துறை மூலம் மலையிடப் பாதுகாப்புக் குழு கூட்ட நிகழ்வுக்கு சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. எனவே துறை சார்ந்த தடை யின்மை சான்றிதழ் வழங்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம். மேலும் வழங்கப்படும் நிபந்தனைகளையும் செயல்படுத்த உள்ளோம் என இதன் மூலம் உறுதி அளிக்கிறோம்"

ஈஷா மையத்தின் விண்ணப்பத்தை ஆய்வு செய்த, வனச்சரக அலுவலர் 19.01.2012 அன்று அறிக்கை அளிக்கிறார். அவர் தனது அறிக்கையில், "ஈஷா அறக்கட்டளை அமைந்துள்ள புலங்கள் சாடிவயலிலிருந்து தாணிக்கண்டிக்கு யானைகள் செல்லும் முக்கியமான வழித்தடத்தில் அமைந்துள்ளது. இதனால் யானைகள் செம்மேடு நரசீபுரம் வரையிலான பகுதியில் அடிக்கடி காட்டை விட்டு வெளியே வந்து விளை நிலங்களை சேதப்படுத்தி வருகிறது.

மேற்படி நிலங்களில் ஏற்கனவே அமைக்கப்பட்ட கட்டிடங்களில் அமைந்துள்ள யோகா மையத்தில் லட்சக்கணக்கான மக்கள் வனச்சாலையைப் பயன்படுத்தி வந்து செல்வதால், வனத்திற்கும், வன விலங்குகளுக்கும் பெரிய அளவில் பாதிப்பு ஏற்பட்டு வருகிறது. மேலும் நூற்றுக்கணக்கான பணியாட்கள், கனரக வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் ஆகியவற்றை பயன்படுத்தி புதிய புதிய கட்டிட பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதால், இதன் மூலம் வனத்திற்கும் வன உயிரினங்களுக்கும் மற்றும் யானை வழித்தடத்திற்கும் பெரிய அளவில் பாதிப்பு ஏற்பட்டு வருகிறது." என்று கூறி, இதனால் ஈஷா மையத்திற்கு அனுமதி வழங்கக் கூடாது என்று எழுதுகிறார்.

அறிக்கை அளித்ததோடு அல்லாமல், உடனடியாக பிப்ரவரி 2012ல், கட்டுமானப் பணிகளை உடனே நிறுத்துமாறு ஈஷா மையத்திற்கு அறிவிப்பு அளிக்கிறார். ஒரு அரசாங்கத்தையே நடத்தி வரும் ஜக்கி வாசுதேவ் இதற்கெல்லாம் மசிவாரா என்னஞ் போங்கடா என்று தனது கட்டுமானப் பணிகளை நிறுத்தாமல் தொடர்கிறார்.

ஆகஸ்ட் 2012ல், திருநாவுக்கரசு என்ற மாவட்ட வன அலுவலர், விரிவான ஆய்வறிக்கையை, வனத்துறைத் தலைவருக்கு அனுப்புகிறார். அவர் தனது அறிக்கையில் "வறட்சியாக காணப்படும் கோடை மாதங்களான மார்ச் அல்லது ஏப்ரல் மாதத்தில் ஈஷா யோகா மையத்தில் நடைபெறும் மகாசிவராத்திரி திருவிழாவுக்கு ஆண்டுதோறும் சுமார் 2 லட்சத்திற்கும் மேல் வருகை புரியும் பக்தர்கள் பயன்படுத்தும் வாகனத்தின் இரைச்சல், திருவிழாவிற்கு பயன்படுத்தும் ஒளி / ஒலி அமைப்பினால் ஈஷா யோகா மையத்திற்கு அருகாமையில் உள்ள போலாம்பட்டி ப்ளாக் 2 ஒதுக்கு வனத்தினுள் வாழும் யானைகளின் இயல்பு வாழ்க்கைக்கு அதிக இடையூறு ஏற்பட்டு யானைகள் வனத்தை விட்டு வெளியேறி அதிக எண்ணிக்கையில் வரும் பக்தர்கள் கூட்டத்தை தாக்கத் தொடங்கினால் யானைகளினால் ஏற்படும் பெரிய சேதத்தை குறைந்த எண்ணிக்கையில் உள்ள வனப்பணியாளர்களால் தடுப்பது என்பது இயலாத காரியமாகும். மேலும் மேற்படி புலங்களில் இருந்து சுமார் 65 கிலோ மீட்டர் தொலைவில் ஆனைமலை புலிகள் காப்பகம் அமைந்துள்ளது" இதனால் ஈஷா மையத்திற்கு அனுமதி அளிக்கக் கூடாது என்று அறிக்கை அளிக்கிறார்.

நவம்பர் 2012ல் நகரமைப்புத் துறை, ஈஷா மையத்திற்கு உடனடியாக கட்டுமானப் பணிகளை நிறுத்துமாறு நோட்டீஸ் அனுப்புகிறது. அந்த நோட்டீஸுக்கு பதிலும் இல்லை, கட்டுமானப் பணிகளும் நிறுத்தப்படவில்லை. இதனால், சட்டவிரோதக் கட்டிடங்களை இடிக்க ஆணையிடும், மற்றொரு நோட்டீஸ் டிசம்பர் 2012ல் அனுப்பப்படுகிறது. ஆனால், நோட்டீஸுக்கு பதில் சொல்லாத ஈஷா மையம், கட்டிடம் கட்ட அனுமதி வேண்டி அளிக்கப்பட்ட விண்ணப்பத்தை திரும்பப் பெற்றுக் கொள்கிறார்கள். எந்த அளவுக்கு திமிரும், இறுமாப்பும் இருந்தால், அனுமதி கேட்டு அளித்த விண்ணப்பத்தைக் கூட திரும்பப் பெறுவார்கள் ? உலக சமாதானம் பேசும் ஜக்கியின் யோக்கியதையைப் பார்த்தீர்களா ?

ஈஷா மையத்திற்கு சிறுவாணி ஆற்றின் ஊற்று அருகிலேயே வனப்பகுதி வழியாக நாள் ஒன்றுக்கு 5000 லிட்டர் தண்ணீர் எடுக்கப்படுகிறது. கட்டிட அனுமதி பெறாமல் உங்களால் தண்ணீர் இணைப்பு பெற முடியுமா ? கோவையில் மொத்த மின்வெட்டின் நேரம் 6 மணி நேரம். ஆனால் ஈஷா மையத்திற்கு 24 மணிநேரமும் தடையில்லாத மின்சாரம் வழங்கப் படுகிறது. இணைப்பு.

கடந்த வாரம் ஈஷா மையத்திற்கு சென்று என்னதான் நடக்கிறது என்று ஆய்வு மேற்கொண்டபோது, கண்ட காட்சிகள் கண்களில் கண்ணீரை வரவைத்தன தோழர்களேஞ். எந்த விதமான சட்ட விதிகளையும் மதிக்காமல், கனரக இயந்திரங்களின் உதவியோடு 24 மணி நேரமும் கட்டுமானப் பணிகள் நடந்து கொண்டுள்ளன.

ஈஷா மையத்தின் எல்லைகள் அனைத்தும் மின்வேலி போட்டு தடுக்கப்பட்டுள்ளன. ஈஷா மையத்தின் பின்புறம், தாணிக்கண்டி என்கிற மலைவாழ் இனத்தவர் வாழும் பகுதி உள்ளது. அந்த தாணிக்கண்டி கிராமம், அடர்ந்த காட்டின் நடுவே அமைந்துள்ள பகுதி. தாணிக்கண்டி மலைவாழ் மக்கள், காட்டை தங்கள் தெய்வமாகப் பார்க்கிறார்கள். அந்த விலங்குகளும்,

விதி மீறி கட்டப்பட்டுள்ள கட்டிடங்களின் பட்டியல்

Details of S. No. & area — Annexure - 1 - Page - 1

SF Nos.	Area in Ac.	SF Nos.	Area in Ac.
4	4.04	52/2B	4.22
5	2.84	53/2C	0.37
48/1	0.09	53/1A	1.37
48/2	3.71	53/1D	3.17
49	7.00	54/1	8.51
50/1	0.03	54/2	5.5
50/2A	0.17	55/1A	10.46
50/2B	0.07	55/1B	3.79
50/2C	0.11	56	2.41
50/2D	1.61	57	3.5
50/3A	0.05	58/2A	0.64
50/3B	0.01	58/2B	0.54
50/3C	0.05	58/3	0.84
50/3D	1.19	59	8.99
50/4A	0.01	77/1	6.06
50/4B	0.26	78/1	1.53
51/1	2.51	78/2A	0.79
51/2A	0.81	78/2B	9.41
51/2B	0.29	78/3	0.53
51/3	0.22	84	2.81
51/4A	0.07	85/1	8.66
51/4B	0.02	85/2	0.17
52/1A	1.52	86/1	0.16
52/1B	0.16	86/2	21.66
52/1C	0.01	101/1C	1.00
52/2A	3.93	Total area	107.385

Abstract


Area details	In Sq. ft.	In Sq.m.
Total Site Area	4648107.00	431867.14
Total Ground Floor Area	809146.00	75169.66
Total Parking Area	411682.00	38245.25
Open Space Area	3482779.00	320262.81
Total Driveway Area	379605.00	35265.90

Superintendent

மரங்களும் அவர்களின் தோழனாக இதுநாள் வரை இருந்து வந்தன. இன்று அவர்களின் வீடுகள் அமைந்துள்ள இடத்தில் இருந்த வனம் மொட்டையடிக்கப்பட்டு பொட்டல் காடாக காட்சியளிக்கிறது. ஈஷா மையத்திற்கு வெளியே வனப்பகுதியில் இருந்த இந்த மரங்கள், ஈஷா மையத்தினரால் வெட்டப்பட்டுள்ளன.

இந்த மரங்கள் 200 வருடங்களுக்கு மேற்பட்ட பழமையான மரங்கள். வெட்டப்பட்ட மரங்களில் சந்தனமும் அடக்கம்ஞ். 200 வருடக் காட்டை அழித்து விட்டு, பசுமை இயக்கம் நடத்தும் இந்த மோசடிப் பேர்வழியை எப்படி மன்னிப்பது.. ?

இது மட்டுமல்ல தோழர்களேஞ். ஈஷா மையம் அதிக அளவிலான கட்டுமானப்பணிகளை கட்டத் தொடங்கிய பிறகு, 2006 முதல் 2011 வரையிலான காலத்தில் மட்டும் 50 யானைகள் இறந்திருக்கின்றன. ஈஷா மையத்தின் வளர்சசியாலும், அது ஏற்படுத்தும் சுற்றுச் சூழல் மாசாலும், நிலப்பகுதிக்குள் நுழைந்த யானைகள் 2006 முதல் 2012 வரையிலான காலத்தில் மிதித்துக் கொன்ற மனிதர்களின் எண்ணிக்கை மட்டும் 57.



நெஞ்சு கொதிக்கிறதா இல்லையா...? ஈஷா மையத்திற்கு அருகே, பல ஆண்டுகள் பழமையான புளிய மரம் ஒன்று உள்ளது. அந்த புளியமரத்தை யானைக்கட்டி புளியமரம் என்று அழைக்கிறார்கள். ஜக்கி வாசுதேவின் ஆசிரமத்திற்கு வரும் வெளிநாட்டினர் மற்றும் உள்ளூர் பக்தர்களிடம் ஜக்கி, அந்த புளியமரம் தான் வைத்தது என்றும், அதற்கு சிறப்பு சக்தி உள்ளது என்றும் கூறுகிறார். இதை நம்பிய வெளிநாட்டினர் பலர், அந்த புளியமரத்துக்கு வந்து, மரத்தை நக்கிப் பார்க்கின்றனர்.

இந்த புளிய மரம், பல ஆண்டுகளுக்கு முன் அந்தப் பகுதியில் குடியிருந்த தம்பிய கவுண்டர் என்பவரால் வளர்க்கப்பட்டது. அந்த புளிய மரத்தில் ஒரு யானைக் குட்டியை கட்டி வளர்த்து வந்தார் தம்பியக் கவுண்டர். அவருக்குப் பின் அவர் மகன் நஞ்சப்ப கவுண்டர் அந்த யானையை வளர்க்கிறார். அவருக்குப் பின் அவருடைய மகன் சண்முக சுந்தரம் அந்த யானையை பராமரிக்க முடியாமல், பழனி கோவிலுக்கு தானமாகத் தருகிறார். இதை

வைத்துத்தான் அந்த புளிய மரத்துக்கு யானைக் கட்டி புளிய மரம் என்ற பெயர் வந்ததுஞ் ஜக்கி எப்படிப் பட்ட புளுகு மூட்டை என்பது இப்போது புரிகிறதா ?



காட்டை மொட்டையடித்ததையும், யானைகளின் இறப்பையும் கேட்டதும் மனதில் தோன்றியது என்ன தெரியுமா ? ஜக்கி வாசு தேவை அதே யானைகட்டி புளியமரத்தில் ஜட்டியோடு ஒரு வாரத்திற்கு கட்டி வைக்க வேண்டும். அந்தப் பகுதியில் காட்டுப் பன்றி களின் நடமாட்டம் அதிகம். என்ன நடக்கும் என்பதை சொல்ல வேண்டியதில்லை.


ஈஷாவின் கட்டுமானப் பணிகளை புகைப்படம் எடுத்துக் கொண்டிருந்தபோது, ஒரு நபர் வாகனத்தில் பின்தொடர்ந்தபடியே இருந்தார். அவர் செக்யூரிட்டியிடம் சென்று சொன்னதும், செக்யூரிட்டி “சார்.. இங்கே புகைப்படம் எடுக்கக் கூடாது என்றார்ஞ் அவர் சொன்னதை காதிலேயே வாங்காமல் புகைப்படம் எடுத்துக் கொண்டிருந்ததும் அவர் சென்று ஒரு சாமியாரை அழைத்து வந்தார்.

சாமியார், “அண்ணா.. இங்க போட்டோ எடுக்கக் கூடாது அண்ணா” என்றார்ஞ் “ரோட்டிலிருந்து போட்டோ எடுக்க எனக்கு உரிமை இருக்கிறது அண்ணா” என்றதும், அண்ணாவையெல்லாம் விட்டு விட்டார்ஞ் “யாருங்க நீங்க எங்கேர்ந்து வர்றீங்க“ என்றார்ஞ். அதெல்லாம் உன்னிடம் சொல்ல முடியாதுஞ் உங்கள் இடத்திற்குள் வந்தால் கேள்வி கேளுங்கள்.. இது சாலைஞ் என்றதும்.. “நீ இந்த எடத்த விட்டு எப்படிப் போறன்னு பாக்கறேன்“ என்றார்.

கேமராவில் மெமரி கார்டை எடுத்து ஒளித்து வைத்து விட்டு, அவர் சொன்ன இடத்திலேயே 15 நிமிடம் காத்திருந்த போதும் யாரும் அடிக்க வரவில்லை. வந்து அடித்தால், இதை வைத்து புகார் கொடுத்து, எப்ஐஆர் போட்டு, ஒரு சாமியாரையாவது உள்ளே வைக்கலாம் என்றால் எதிரில் சென்று நின்று கொண்டு, நம்மை போட்டோ எடுக்கிறார்கள்ஞ். 15 நிமிடம் கழித்தும் யாருமே அடிக்க வரவில்லை என்பதால், அங்கிருந்து கிளம்ப நேர்ந்தது.

அந்தப் பகுதியைச் சேர்ந்த சுப்பையா என்பவர், 2001ம் ஆண்டு ஈஷா மையத்துக்கு தனது நிலத்தை ஒரு ஏக்கர் 2.5 லட்சம் என்ற விலைக்கு விற்கிறார். அவ்வாறு அவர் விற்பனை செய்கையில், அந்த நிலத்துக்கு செல்ல பாதையே இல்லாமல் இருக்கிறது.

இதனால் அந்த நிலப்பத்திரத்திலேயே கூடுதலாக ஒரு 25 அடி நிலத்தை பாதைக்காக பயன்படுத்திக் கொள்ள அனுமதிப்பதாக கூறுகிறார். இது இப்படியே எவ்வித பிரச்சினையும் இல்லாமல் போய்க் கொண்டு இருக்கிறது.




நிலத்தை விற்பனை செய்த சுப்பையா

இந்த பாதைக்கு அருகே, ஒருவர் அசைவ ஹோட்டல் நடத்திக் கொண்டிருக்கிறார். அந்த ஹோட்டல் இருக்கும் இடத்தை தங்களிடம் கொடுக்குமாறு ஈஷா நிர்வாகத் தினர் தொடர்ந்து வற்புறுத்து கின்றனர். ஹோட்டல் உரிமையாளர் கொடுக்க மறுக்கிறார். அந்த ஹோட்டலுக்கு அருகே செல்லும் ஈஷாவுக்கு சொந்தமான பாதை யில், ஆசிரமத்தில் உள்ள கழிவு நீரை

அகற்றும் குழாய்க்கு சம்ப் அமைக்கிறார்கள். அந்த சம்ப்பை திறந்து வைக்கிறார்கள். கழிவு நீர் சம்ப்பை திறந்து வைத்தால் ஹோட்டலில் யாராவது சாப்பிட முடியுமா? ஹோட்டல் உரிமையாளரே சம்ப்பை மூடி மீண்டும் ஹோட்டல் நடத்துகிறார். இதையடுத்து, அந்த ஹோட்டலில் கஞ்சா விற்பனை செய்யப்படுவதாக, காவல் நிலையத்தில் புகார் கொடுக்கின்றனர் ஈஷா நிறுவனத்தினர். காவல்துறை ஹோட்டலை தலைகீழாக புரட்டிப் போடுகிறது. ஹோட்டல் உரிமையாளர், இனி காலம் தள்ள முடியாது என்று விற்க முடிவு செய்கிறார். அவரை விற்க விடாமல், அந்த ஓட்டலை கொங்குப் பேரவை நடத்தி வருகிறது.

அடைக்கப்பட்ட பாதை



கொங்கு பேரவை பிடிவாதமாக நடத்தியதும், பாதைக்காக கொடுத்த 25அடி நிலத்தை மடக்கி ஒரே நாளில் வேலி போடுகிறார்கள் ஈஷா நிறுவனத்தினர். வேலி போடும் அன்று, ஆசிரமத்திலிருந்து 150 பேர்களை அழைத்து வந்து வேலி போட்டு முடிக்கின்றனர்.

20 ஆண்டுகளுக்கும் மேலாக இத்தனை அட்டூழியங்கள் செய்து வருகிறார்களேஞ் இவர்களை ஏன் யாருமே தட்டிக் கேட்பதில்லை என்று அப்பகுதி மக்களிடம் கேட்டபோது, பத்திரிக்கையாளர்கள், அதிகாரிகள் என்று யார் வந்தாலும், அவர்களுக்கு கணிசமான தொகையைக் கொடுத்து வாயை அடைப்பதுதான் ஈஷா மையத்தின் வழக்கம் என்று கூறுகிறார்கள்.



ஈஷா மடத்துக்கு எதிராக தொடர்ந்து போராடி வரும் கார்த்திகேயன்

ஒரு சாதாரண சாமியார், இப்படி எந்தச் சட்டத்தையும் மதிக்காமல், ரவுடித்தனம் செய்து கொண்டு, ஒரு ஊரையே வளைத்துப் போட்டு அட்டூழியம் செய்து கொண்டிருக்கிறானேஞ் ஏன் அமைதியாக இருக்கிறீர்கள் என்று கேட்டால், சார்ஞ் அரசாங்கமே சாமியார் கையிலதான் சார் இருக்கு... இப்போ பாருங்க அரசாங்கம் கட்டிடம் கட்டாதேன்னு நோட்டீஸ் கொடுத்துருக்குஞ் ஆனா சாமியார் கட்டிடம் கட்டுவதோடு இல்லாமல், சிவாரத்திரி விழா வேறு கொண்டாடுகிறார்ஞ் இந்த விழாவுக்கு 4 லட்சம் மக்கள் வருவார்கள்.. குறைந்தது 1 லட்சம் வாகனங்கள் வனப்பகுதிக்குள் வரும்ஞ் இது அரசாங்கத்துக்கு தெரியாதா ? அரசாங்கமே சாமியார் கைக்குள்ள இருக்கும்போது நாங்க என்ன சார் பண்ண முடியும் என்றனர்.

மீண்டும் சென்னைக்கு திரும்பியதிலிருந்து நிம்மதியாகத் தூங்க முடியவில்லை. மீண்டும் மீண்டும் மொட்டையாக்கப்பட்ட அந்த வனப்பகுதியும், தாணிக்கண்டி பழங்குடி மக்களும், இறந்த யானைகளும், தொண்டையில் சிக்கிய மீன் முள்ளாக உறுத்திக் கொண்டே இருந்தனர்.

சட்டவிரோதமாகக் கட்டப்பட்ட அனைத்துக் கட்டிடங்களையும், இடிக்க வேண்டும், மகா சிவராத்திரி விழாவைத் தடை செய்ய வேண்டும் என்று பூவுலகின் நண்பர்கள் அமைப்பின் தோழர் வெற்றிச் செல்வன் சென்னை உயர்நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கு வெள்ளியன்று தலைமை நீதிபதி அகர்வால் மற்றும் நீதிபதி பால் வசந்த குமார் முன்பு விசாரணைக்கு வந்தது. உடனடியாக வழக்கை விசாரணைக்கு ஏற்ற நீதிபதிகள், தமிழக

அரசு மற்றும் ஈஷா மையம் 2 வாரத்திற்குள் பதில் மனு அளிக்க வேண்டும் என்று உத்தரவிட்டனர். மகாசிவராத்திரி விழாவுக்கு இடைக்காலத் தடை கேட்டதற்கு, இறுதி நேரத்தில் வந்திருப்பதால், தடை விதிக்க முடியாது என்று கூறினர். நீங்கள் இது குறித்து கலெக்டரை ஏன் அணுகவில்லை என்றார் நீதிபதி பால் வசந்தகுமார்.

உடனே வழக்கறிஞர் ராதாகிருஷ்ணன் வெகுண்டெழுந்தார். நாங்கள் இறுதி நேரத்தில் வந்திருக்கிறோம் என்பது உண்மைதான். எங்களுக்கு இப்போதுதான் தகவல் தெரிந்தது, தெரிந்த உடனேயே நீதிமன்றத்தை அணுகி விட்டோம். நாங்கள் ஏன் கலெக்டரிடம் மனு கொடுக்க வேண்டும்.. ? இது பொதுநல வழக்குஞ் இந்த விதிமீறல்களை நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு வந்திருக்கிறோம்.

இறுதி நேரத்தில் வந்திருக்கிறோம் என்பதாலேயே சுற்றுச் சூழலை பாதிக்கும் இந்த விழாவை தங்கு தடையின்றி நடத்த அனுமதிக்க முடியுமா ? இவ்விழாவில் கடந்த ஆண்டு 2 லட்சம் பேர் பங்கெடுத்தனர். இந்த ஆண்டு 4 லட்சம் பேர் வருவார்கள் என்று எதிர்ப்பார்க்கப் படுகிறது.


லட்சக்கணக்கான வாகனங்கள் வனப்பகுதிக்குள் நுழையும்ஞ் மாலை 5.40 முதல் விடிய விடிய, ஒலிபெருக்கியைப் பயன்படுத்தி பஜனைகள் நடைபெறப் போகிறதுஞ் பல வாட்டுகள் சக்தி கொண்ட ஒளி விளக்குகள் பயன்படுத்தப்படப் போகின்றனஞ் இதனால் காட்டு விலங்குகள் எத்தகைய பாதிப்புக்கு உள்ளாகும் என்பதை நீதிமன்றம் கவனத்தில் கொள்ள வேண்டாமா ? சுற்றுச் சூழலைப் பாதுகாப்பது ஒவ்வொரு குடிமகனின் கடமை என்று அரசியல் அமைப்புச் சட்டம் சொல்கிறது. குடிமகனுக்கே அந்தக் கடமை இருக்கையில் நீதிமன்றம் என்ன விதிவிலக்கா ? நாங்கள் வெளிப்படையாக நாத்தீகர்கள் என்று அறிவித்தவர்கள். இந்த வழக்கை தொடர்ந்த மனுதாரர் வெற்றிச் செல்வனும் நாத்தீகரேஞ் எங்களுக்கு யார் இந்த ஜக்கி என்பதைப் பற்றிக் கவலையில்லைஞ். எங்களது ஒரே கவலை சுற்றுச் சூழல் மட்டுமேஞ் வனவிலங்குகளின் நலன் மட்டுமே" என்று கடும் அழுத்தத்தோடு தன் வாதத்தை வைத்தார்...


நீதிபதிகளுக்கு ராதாகிருஷ்ணனின் வாதம், ஜக்கியால் பாதிக்கப்பட்ட யானையின் பிளிறலைப் போல இருந்திருக்க வேண்டும். மனுதாரர், கலெக்டர் மற்றும் காவல் கண்காணிப்பாளரிடம் இது குறித்து மனு கொடுக்கலாம். அந்த மனுவைப் பெற்ற அவர்கள், மனுதாரரின் கோரிக்கைக்கு இணங்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டார்.

நீதிமன்ற உத்தரவை குறிப்பிட்டு, மகாசிவராத்திரி விழாவால் சுற்றுச் சூழலுக்கு ஏற்படும் பாதிப்பை தடுக்க, எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் என்ன என்பதை வலியுறுத்தி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர், மாவட்ட ஆட்சியர், மற்றும் மாவட்ட வன அலுவலர் ஆகியோருக்கு பேக்ஸ் மற்றும் பதிவு அஞ்சல் மூலம் கடிதம் அனுப்பப்பட்டது. ஞாயிறன்று, நடைபெறும் விழாவை வீடியோ எடுக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது. வெள்ளிக்கிழமை நீதிமன்ற உத்தரவையடுத்து பதறிய ஈஷா நிர்வாகம், கோவை பதிப்பின் அனைத்து செய்தித்தாள்களிலும், ஈஷா மையம் இயற்கைக்காக செய்த அத்தனை சேவைகளையும் விளம்பரப்படுத்தியிருந்தது. இந்த விளம்பரங்கள், ஈஷாவின் சாம்ராஜ்யம் ஆட்டம் காணத் தொடங்கியிருப்பதன் முதல் அறிகுறி. விழிப்புணர்வு அடைந்து, எதுவுமே தன்னை பாதிக்காத மோனநிலையில் இருக்கும் ஜெகதீஷ் என்கிற ஜக்கி வாசுதேவ் என்கிற சத்குரு சஞ்சலம் அடைந்துள்ளார் என்பதன் அறிகுறி இது. இந்த வழக்கு குறித்து செய்தி வந்ததும், தனது உயர்மட்டத் தொடர்புகள் அனைத்தையும் பயன்படுத்தத் தொடங்கியுள்ளார் ஜக்கி. எப்படியாவது இந்த வழக்கை முடித்து ஆசிரமத்தை காப்பாற்ற வேண்டும் என்ற கவலை அவருக்கு ஏற்பட்டுள்ளது. இதுவே நமது பெரிய வெற்றிஞ்.

அந்த வனத்தை மீட்டு விலங்குகளிடமும், பழங்குடியின மக்களிடமும் ஒப்படைக்கும் வரை தொடர்ந்து அயராது போராடுவோம் தோழர்களே.. இந்த போலிச் சாமியார்களின் முகத்திரையைக் கிழிப்போம்.

அத்தனைக்கும் ஆசைப்படாதே ஜக்கிஞ். உனது ஆசையே உனக்கு வரப்போகும் துன்பத்துக்குக் காரணம்.






எந்தக் கேள்வியும் கேட்காமல் கருணாநிதியால்
ஊமையாக்கப்பட்ட வனத்துறை செக்போஸ்ட்








ஈஷா மைய சுற்றுச் சுவர்

ஈஷா மையத்துக்காக
வனப்பகுதியில்
உருவாக்கப்பட்ட
தார்ச்சாலை





300 வருடங்களாக
வாழும் தாணிக்கண்டி
மலைவாழ் மக்களின்
கிராமத்துக்கு செல்லும்
சாலை போன்ற ஒன்று




பின் தொடர்ந்து
வந்து மிரட்டிய சாமியார்









தங்கு தடையின்றி
நடைபெறும்
கட்டுமானப் பணிகள்
















மகாசிவராத்திரி
விழாவுக்காக
அமைக்கப்பட்டு வரும்
மேடை




மேடைக்கு 50 அடி
தொலைவில்
தொடங்கும் வனப்பகுதி




எந்தக் கேள்வியும் கேட்காமல்
கருணாநிதியால்
ஊமையாக்கப்பட்ட
வனத்துறை செக்போஸ்ட்






கள்ளத்தனமாக எடுக்கப்படும் தண்ணீருக்கான தொட்டி




மொட்டையடிக்கப்பட்ட வனம்






ஒரு வருடத்துக்கு
முன் அடர்ந்த
காடாக இருந்த இடம்













தாணிக்கண்டி
பழங்குடியின
குழந்தைகள்

அந்தப் பழங்குடியின
மக்களை வைத்தே
மலை மேலிருந்து
ஈஷா மையத்திற்கு
எப்படி குடிநீர் இணைப்பு
வழங்கப்பட்டது என்பதை
விளக்கும் தாணிக்கண்டி
கிராமப் பழங்குடி




தாணிக்கண்டி
பழங்குடியின
கோயில்




நமது வாகன
எண்ணை குறித்து
மிரட்டும் செக்யூரிட்டி






ஈஷா மையத்தினரால்
அமைக்கப்பட்டுள்ள
மின்வேலி



ஈஷா மையத்தினர்
அமைத்துக் கொண்டுள்ள
பாலம்



மலையிலிருந்த
திருட்டுத்தனமாக எடுத்து
வரப்படும் குடிநீர் இணைப்பு

யானைகள் பாதையில் மனிதர்கள் அட்டகாசம்

இந்தியா டுடே - கவின்மலர் - Monday, July 01, 2013

கோவை மாவட்டத்தின் மேற்குத் தொடர்ச்சி மலைக்கு அருகே சில்லென்ற காற்று வீசிக்கொண்டிருந்தது. மேகங்கள் தலைக்கு மேலே பயணித்துக்கொண்டிருந்தன. தென்மேற்குப் பருவக்காற்று இதமாக வீசிக்கொண்டிருந்தது. ஆனால் மேற்குத் தொடர்ச்சி மலைகளுக்கு அருகேயுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களோ இவற்றை ரசிக்க முடியாத அளவுக்கு பீதியில் இருக்கிறார்கள்.

இப்போதெல்லாம் காட்டு யானைகள் ஊருக்குள் புகுந்து வயல்வெளிகளை அழித்ததாக அடிக்கடி செய்திகள் வருகின்றன. மனிதர்களும் கொல்லப்படுகிறார்கள் என்பது மிகவும் துயரமான விஷயம். ஆனால் ஊடகங்கள் எப்போதுமே 'யானைகள் அட்டகாசம்' என்றே செய்திகளை வெளியிடுகின்றன. ஆனால் உண்மை என்னவெனில் யானைகள் தங்கள் இடங்களையும், தங்கள் வழித்தடங்களையும்தான் பயன்படுத்துகின்றன. மனிதர்களாகிய நாம்தான் நகரமயமாதல் என்கிற பெயரிலும், கட்டடங்கள் என்கிற பெயரிலும் பொக்கிஷமாக பாதுகாக்கப்படவேண்டிய காடுஅக்ளை அழித்துக்கொண்டிருக்கிறோம். அதனால் காட்டு விலங்குகள் தங்கள் வாழிடத்தையும் பாதையையும் இழந்து வேறு வழியின்றி ஊருக்குள் வருகின்றன.

கோவை மாவட்டத்தின் யானைகள் வழித்தடத்தில்தான் அனைத்து மத நிறுவனங்களும், ஆன்மீக குருக்களின் மடங்களும், கல்வி நிறுவனங்களும், ரியல் எஸ்டேட் நிலங்களும் உள்ளன. சின்னாம்பதி மலைகிராமத்தை நோக்கி என் பயணம் தொடங்கியது. சின்னாம்பதிக்கு அருகில் மாவுத்தம்பதியில் ஹிமாலயா டெவலப்பர்ஸ் என்கிற ரியல் எஸ்டேட் ஏஜென்சி பெரிய அளவிலான இடத்தை மலைச்சரிவுக்கு மிக அருகே வளைத்துப் போட்டிருக்கிறது. மலைகளை அடுத்துள்ள காட்டுப்பகுதி ரிசர்வ்ட் ஃபாரஸ்ட் எனப்படும் காப்புக் காட்டுப்பகுதியாக வரையறுக்கப்பட்டுள்ளது. காட்டுப்பகுதி தொடங்குவதைக் குறிக்கும் எல்லைக்கல் ஒன்று நடப்பட்டிருக்கும். எல்லையில் இருந்து 150 மீட்டர்கள் வரை Buffer Zone இடைதாங்குமண்டலம் என்றழைக்கப்படுகிறது. இந்தப் பகுதியில் எந்த கட்டடமும் கட்டப்படக்கூடாது. இப்பகுதியில் எந்த மாற்றமும் செய்யப்படக்கூடாது என்பது விதி. ஆனால் ஹிமாலயா டெவலப்பர்ஸ் நிறுவனம் விதிகளை மீறி 150 மீட்டர் இடைவெளி விடாமல் தனது வேலியை காப்புக்காட்டு எல்லைக்கு அருகிலேயே போட்டுள்ளது. சுற்றுச்சுவர் மற்றும் வேலிகளால் வழக்கமான பாதை மறுக்கப்படும் யானைகள் தடுமாறுகின்றன. குழப்பமடைந்து ஊருக்குள் வருவதால் விரும்பத்தகாத விளைவுகள் ஏற்படுகின்றன.

யானைகள் வழித்தடம் என்பது என்ன? யானைகள் ஒரே இடத்தில் தங்குவதில்லை. அவை நகர்ந்துகொண்டே இருப்பவை. உணவுக்காகவும், தண்ணீருக்காகவும் ஒவ்வொரு இடமாக நகரும் யானைகள் வழக்கமாக ஒரே வழியையே பின்பற்றுகின்றன. ஒரு யானையை இந்த ஆண்டு ஒரிடத்தில் பார்த்தால் அடுத்த ஆண்டும் அதே யானையை அதே இடத்தில் பார்க்கலாம். அந்த அளவுக்கு யானைகள் துல்லியமாக தனது வழித்தடத்தைப் பேணுவதுண்டு. ஆகவே யானைகள் பயன்படுத்தும் பாதைகளும், அவற்றை ஒட்டிய பகுதிகளும் யானைகள் வழித்தடம் என்று அழைக்கப்படுகின்றன.

சின்னாம்பதிக்கு அருகில் உள்ள கிராமம் மொடமாத்திக்காடு. அங்கே மே 21 அன்று பாலசுப்பிரமணியம் என்கிற விவசாயி ஒருவர் யானை தாக்கியதில் உயிரழந்தார். அவருடைய வீட்டுக்குச் சென்றபோது மொத்த குடும்பமும் நடந்ததை விவரித்தனர். 500 குடும்பங்கள் இந்த ஊரில் வாழ்கின்றனர். இப்போது அத்தனை குடும்பங்களும் அச்சத்தில் உள்ளன.

ஒவ்வொரு வீட்டிலும் ஒரு சக்தி வாய்ந்த டார்ச் லைட் உள்ளது. அதன் விலை 3,500 ரூபாய். யானைகள் இரவில் வரும்போது அந்த டார்ச்சை அதன் முகத்துக்கு நேரே அடித்தால் யானைகள் பின்வாங்கிவிடுவதுண்டு. ஆனால் பாலசுப்பிரமணியத்தின் தாய் ராமாத்தாள் "நாங்க இங்கே 40 வருஷமா இருக்கோம். இப்போ யானைங்க எல்லாம் பேட்டரி போட்டா (டார்ச் அடித்தால்) திரும்பிப் போறதில்ல..எதுத்துக்கிட்டு வருது. எங்களுக்கு இது புரியலை. இப்போ கொஞ்ச காலமாத்தான் இந்த யானைங்க இப்படி ஆளை அடிக்குதுங்க" என்கிறார். அருகில் உள்ள முருகம்பதி பழங்குடி கிராம மக்கள்தான் இவர்களைக் காப்பாற்ற வருகிறார்கள்.

விவசாயக் குடும்பம் ஒவ்வொன்றிலும் ஒவ்வொருவர் இரவுநேரத்தில் வயலை காவல் காக்கின்றனர். யானைகள் வந்துவிட்டால் உடனே வனத்துறைக்கு தகவல் தருகின்றனர். தீயணைப்புப் படைபோல , வனத்துறையில் யானை விரட்டும் படை ஒன்று உள்ளது. மாலை வேளைகளிலும் இரவு நேரங்களிலும் இவர்களது செல்போன்கள் அடித்தபடியே உள்ளன. யானைகளை காட்டுக்குள் மீண்டும் விரட்டுவதற்காகச் செல்வதற்கென்றே ஒரு விசேஷ வாகனத்தை வைத்திருக்கிறது வனத்துறை. ஒவ்வொரு மாலையில் இந்தப் படை பட்டாசுகளுடனும் விசேஷ டார்ச் லைட்டுகளுடனும் தயாராய் காத்திருக்கிறது. இந்த டார்ச் லைட்டுகள் ஒரு கி.மீ. தொலைவுக்கு ஒளிதரக் கூடியவை. யானை விரட்டும் படையுடன் காடுகளைச் சுற்றிய ஓரிரவில் அவர்களுடைய பணியின் சிரமம் விளங்கியது. ஒரு கிராமத்திலிருந்து அழைப்பு வருகிறது. உடனே படை அங்கே விரைந்துசென்று தேடுதல் வேட்டையைத் தொடங்குகிறது. யானைகள் கூட்டமாகவோ தனியாகவோ வருவதுண்டு. யானையைக் கண்டவுடன் வாகனத்திலிருந்து பட்டாசுகளை வெடித்து, டார்ச் லைட்டை பயன்படுத்திய யானைகளை மீண்டும் காட்டுக்குள் அனுப்புகின்றனர். யானைகளும் அவர்களுக்குக் கட்டுப்படுகின்றன. சில யானைகள் இவர்களைத் துரத்துவதும் உண்டு. உயிருக்கு உத்திரவாதம் இல்லாத நிலைதான் இந்தப் படையில் உள்ளவர்களுக்கு. இதற்கென்றே விசேஷப் பயிற்சி பெற்ற படை இது. ஓரிடத்தில் பணியில் இருக்கும்போதே திடீரென்று இன்னொரு பகுதியில் இருந்து அழைப்பு வருகிறது. உடனே அங்கே விரைகிறது படை. இப்படியே இரவு முழுதும் கழிகிறது. மதுக்கரைக்கு அருகே கேரளாவுக்குச் செல்லும் சாலையில் மாலை மற்றும் இரவுகளில் சாவகாசமாக வாகனத்தை நிறுத்திவிட்டு சாலையோரங்களில் செல்போனில் பேசிக்கொண்டிருந்த பயணிகளை எச்சரித்து உடனே புறப்படச் சொல்கிறார்கள். இந்தச் சாலை தற்போது யானைகள் அடிக்கடி குறுக்கிடும் சாலையாகிவிட்டது. சாலையைக் கடந்து எதிர்புறம் உள்ள சுந்தராபுரத்துக்குச் செல்கின்றன யானைகள். அவை திரும்பும் வரை சாலையில் போக்குவரத்து நிறுத்தப்பட்டு அவ்வபோது நெரிசல் ஏற்படுவது இங்கே சகஜமாகி விட்டது. ஒருமுறை வடவள்ளி பேருந்து நிலையத்துக்கே வந்து சென்றன யானைகள்.

வனத்துறை அளிக்கும் தகவல்படி "350 -400 யானைகள் சீசன் என்று அழைக்கப்படும் அக்டோபரிலிருந்து மார்ச் மாதம் வரை கோவைப் பகுதியில் இருக்கும். மற்ற நேரங்களில் ஏறத்தாழ 80 யானைகள் இருக்கலாம்"

ஈஷா யோகா நிறுவனம் போன்ற ஆன்மிக நிறுவனங்கள் மின்வேலியை அமைத்திருப்பதால், அவற்றைத் தொடும் யானைகள் இறந்துபோகின்றன அல்லது ஆத்திரமடைந்து எதிர்படும் மனிதர்களைத் தாக்குவதால் மனித உயிர்களும் பலியாகின்றன. பூண்டியில், வெள்ளயங்கிரி மலை அருகில் ஆன்மீக குரு என்று அழைக்கப்படும் ஜக்கி வாசுதேவின் ஈஷா யோகா மையம் உள்ளது.இங்கே மின்வேலி அமைக்கப்பட்டிருக்கிறது. மனிதர்களோ, விலங்குகளோ அவற்றைத் தொட நேர்ந்தால்? மேலும் நீலியாறு என்கிற எப்போதும் வற்றாத ஓடை ஈஷா மையத்தி பின்புறம் ஓடுகிறது. இதன் நீர் முழுவதையும் ஈஷா மையம் அருகிலேயே ஒரு கிணற்றைத் தோண்டி உறிஞ்சிவிடுகிறது. ஹாக்கா (Hill Area Conservation Authority - HACA) என்றழைக்கப்படும் மலைத்தள பாதுகாப்புக் குழுவிடம் மலையடிவாரப் பகுதிகளில் ஏதேனும் கட்டடங்கள் கட்டவேண்டுமென்றால் அனுமதி பெறவேண்டும். மலைகளுக்கும் காடுகளுக்கும் மிக அருகே இருக்கும் ஒரு சில கிராமங்கள் இக்குழுவின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. கோவையின் உள்ளூர் திட்டக் குழுமம் (Town and Country Planning) ஈஷா

மையத்துக்கு அனுமதி பெறாமல் கட்டப்படும் கட்டடங்களின் கட்டுமானப் பணிகளை நிறுத்துமாறு உத்தரவிட்டு 5.11.2012 அன்று நோட்டீஸ் அனுப்பியது. அந்த நோட்டீஸில் ''2.11.2012 அன்று பணிகள் நடைபெறும் இடத்தைப் ஆராய்ந்தபின்னர், 60 கட்டட பிளாக்குகள் கட்டப்பட்டுள்ளன என்றும், 34 பிளாக்குகள் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்றும் கண்டறியப்பட்டது. இவற்றுக்கெல்லாம் அனுமதி பெறப்படவில்லை. ஆகவே பணிகளை நிறுத்துமாறும், இந்த நோட்டீஸ் பெற்ற 3 நாட்களுக்குள் அனுமதி கோரி விண்ணப்பிக்கவேண்டும். தவறும்பட்சத்தில் Town and Country Planning Act 1971 பிரிவு 56 & 57 படி தக்க நடவடிக்கை எடுக்கப்படும்'' என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

வனத்துறையும் 8.2.12 தேதியிட்ட தனது கடிதத்தில் ''ஏற்கனவே கட்டப்பட்ட கட்டிடங்களுக்கு அரசு அனுமதி பெறாத நிலையில் பெரிய அளவிலான புதிய கட்டிடங்களை கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு வருவது தெரிய வருகிறது. அரசு ஆணைக்கு எதிராக தற்போது நடைபெற்று வரும் எல்லாவித கட்டிடப் பணிகளையும் உடனடியாக நிறுத்தவும் ஹாக்கா சட்டத்தின்படி உரிய அனுமதி பெற்று பின்பாக கட்டிடப்பணிகளை தொடரவும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது'' என்று குறிப்பிட்டிருக்கிறது.

வனச்சரக அலுவலர் எம்.எஸ். பார்த்திபன் 19.01.12 அன்று மாவட்ட வன அலுவலருக்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்.

1. சாடிவயலுக்கும் தாணிக்கண்டிக்கும் இடையேயான யானைகள் வழித்தடத்தில் ஈஷா மையம் அமைந்துள்ளது.

2. ஈஷா மையம் இங்கே அமைக்கபப்ட்டபின், லட்சக்கணக்கான மக்கள் இங்கு வந்துபோகிறார்கள். காட்டுப் பாதையை அவர்கள் பயன்படுத்துவதால், காட்டு விலங்குகளும் காடுகளும் பாதிக்கப்படுகின்றன. அத்துடன், நூற்றுக்கணக்கான பணியாட்களும், கனரக வாகனங்களும், எந்திரங்களும் கட்டுமானப் பணிகளுக்காக பயன்படுத்தப்படுவதால், காட்டு விலங்குகளுக்கும், யானைகள் வழித்தடமும் பெருமளவில் பாதிக்கப்படுகின்றன.

3. இயற்கையான் காட்டு மரங்கள் அழிக்கப்பட்டு, ஈஷா மையத்தின் மரங்கள் மட்டுமே வளர்க்கப்படுகின்றன.

4. மின்வேலி அமைக்கப்பட்டிருப்பதால், யானைகள் வருகையில் பாதை குழம்பி வயல்களுக்குள் புகுந்துவிடுகின்றன. இதனால் பயிர்கள் நாசமாகின்றன. உடமைகளுக்கும் மனித உயிர்களுக்கும் இழப்புகள் ஏற்படுகின்றன.

மலைப் பகுதிகளில் ரிசர்வ்ட் ஃபாரஸ்டுகள் என்று அழைக்கப்படும் காப்புக்காடுகளின் எல்லையில் ஒரு கல் நடப்பட்டிருக்கும். அந்த எல்லைக் கோட்டில் இருந்து 150 மீட்டர் buffer zone என்றழைக்கப்படும் இடைதாங்கு மண்டலம் என்றழைக்கப்படுகிறது. இந்த மண்டலத்தில் எந்த கட்டுமானப் பணிகளும் நடைபெறக்கூடாது என்பது விதிமுறை. ஆனால் ஈஷா மையம் ஏறத்தாழ 30 கட்டடங்களை இந்த இடைதாங்கு மண்டலத்தில் கட்டியிருக்கிறது.

''1994 -2011 வரை கட்டப்பட்ட 32,855.80 மீட்ட்டர் கட்டிடங்களுக்கு மட்டும் ஊராட்சியின் அனுமதி பெற்றுள்ளதாக ஈஷா அறக்கட்டளையினரால் தகவல் அளிக்கப்பட்டிருக்கிறது. தற்போது ஈஷா மையத்தின் பரப்பளவு 4,27,700 சதுர மீட்டர். காப்புக் காட்டின் எல்லையில் இருந்து 1.70 மீட்டரில் தொடங்கி, 473 மீட்டர்கள் வரை கட்டிடங்கள் உள்ளன. இவை யானைகள் வழித்தடத்தில் அமைந்துள்ளன என்பதால் மனித - விலங்கு முரண்பாடு ஏற்படுகிறது. ஆண்டுதோறும் நடைபெறும் மகாசிவராத்திரி விழாவுக்கு சுமார் 2 லட்சம் பேர் வருவதால், வாகனத்தின் இரைச்சல், திருவிழாவுக்கு பயன்படுத்துக்கும் ஒளி/ஒலி அமைப்பினால் அருகில் உள்ள போலாம்பட்டி பிளாக் -2 ஒதுக்கு வனத்தினும் வாழும் யானைகளின் இயல்பு வாழ்க்கைக்கு அதிக இடையூறு ஏற்பட்டு யானைகள் வனத்தைவிட்டு வெளியேறி பக்தர்களை தாக்கத் தொடங்கினால், அந்த பெரிய சேதத்தை குறைந்த எண்ணிக்கையிலுள்ள வனப்பணியாளர்களால் தடுப்பது என்பது இயலாத

காரியமாகும்'' என்று கோவை மாவட்ட வன் அலுவலர் ஹாக்காவுக்கு எழுதிய 17.08.2012 தேதியிட்ட கடிதத்தில் தெரிவிக்கிறார்.

ஆனால் ஈஷா பணிகளை முடித்துவிட்டு 2012 டிசம்பரில் கட்டடத்தைத் திறந்துவிட்டது. இந்தியா டுடேவிடம் ஈஷா மையத்தின் செய்தித் தொடர்பாளர் ''நாங்கள் 6 துறைகளில் இருந்து அனுமதி பெறவேண்டும். 5 துறைகளில் பெற்றுவிட்டோம். ஒரு துறையில் மட்டுமே அனுமதி பெறவில்லை. பொறாமை கொண்டவர்கள் எங்களைக் குறித்து தவறான பிரசாரம் செய்கிறார்கள்'' என்றார்.

போலுவாம்பட்டி பஞ்சாயத்துத் தலைவர் சதானந்தம் ''அவர்கள்பாட்டுக்கு கட்டிடங்களாகக் கட்டுகிறார்கள். இதை எதிர்த்து ஒரு தீர்மானத்தை பஞ்சாயத்து சார்பில் கொண்டு வரலாம் என்று முயன்றால் அன்றைக்கு உறுப்பினர்கள் வருவதில்லை. உறுப்பினர்கள் இல்லாமல் எப்படி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றமுடியும். ஈஷா எப்படியோ அவர்களை சரிக்கட்டி விடுகிறது. எங்கள் அமைப்பு சிறிய அமைப்பு. ஈஷா மையத்தை எதிர்க்கும் அளவுக்கு சக்தி கிடையாது. அவர்களுக்கு பெரிய அளவில் தொடர்புகள் உண்டு. என்ன செய்வது? எதுவும் இயலவில்லை.'' என்கிறார்

பூவுலகின் நண்பர்கள் அமைப்பு சென்னை உயர் நீதிமன்றத்தின் மீது ஒரு பொதுநல வழக்கு தொடர்ந்துள்ளது. ''அனுமதி பெறாமல் கட்டப்பட்ட சட்டவிரோத கட்டங்களை உடனடியாக இந்திய அரசையும், தமிழக அரசையும் வலியுறுத்தி இந்த வழக்கை தொடர்ந்துள்ளோம். தமிழ்நாடு முழுதும் மின்வெட்டில் இருளில் தவிக்கையில் ஈஷா மையத்துக்கு மட்டும் 24 மணிநேர தடையில்லா மின்சாரம் ஏன் எனக்கேட்டு தமிழ்நாடு மின்சார வாரியத்துக்கு கேள்வி எழுப்பியுள்ளோம்'' என்கிறார் பூவுலகின் நண்பர்கள் அமைப்பைச் சேர்ந்த வழக்கறிஞர் வெற்றிச் செல்வன்.

ஈஷா மையத்துக்கு மிக அருகில் உள்ள தாணிக்கண்டி கிராமத்தில் அண்மையில் யானை தாக்கியதில் உயிரழந்த ஒருவரின் மனைவி செல்வியை சந்தித்தபோது, ''அவர் போனபின்னாடி எனக்கு எதுவுமே இல்ல. ஒரு நாள் முழுக்க அவர் வீடு திரும்பலை. மக வீட்டுல தங்கிட்டாருன்னு நினைச்சேன். காலைல 6 மணிக்கு யானை அடிச்சு செத்துட்டாருன்னு சேதி வருது. இங்க ரொம்ப காலமா இருக்கோம். ஆனா இப்பத்தான் கொஞ்ச நாளா இந்த மாதிரி அதிகம் நடக்குது'' என்று கண்ணீருடன் கூறினார்.

ஈஷா மட்டுமல்ல, அம்ருதானந்தமாயி நிறுவனமும் தன் பங்குக்கு சூழலைக் குலைக்கிறது. அவர்கள் கட்டிடங்கள் கட்ட அனுமதி பெற்றிருக்கிறார்கள். ஆனால் அப்படி அனுமதி பெறுகையில் ஹாக்கா தெளிவாகவே காடுப்பகுதியை ஒட்டிய 150 மீட்டர் இடைதாங்கு மண்டலத்தில் எந்த கட்டுமானமும் கூடாது என்று விதிமுறை விதித்தும் அதை மீறி பிரம்மாண்டமான நீர்த் தொட்டி ஒன்றைக் கட்டியிருக்கிறது அம்ருதா நிறுவனம். அம்ருதா பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவர்களின் தேவை பூர்த்திசெய்ய இந்த நீர்த்தொட்டி பயன்படுகிறது. காட்டுப் பகுதி எல்லைக்கல்லுக்கு ஒரு மீட்டர் கூட இடைவெளியில்லாமல் சூரிய சக்தியில் இயங்கும் மின்வேலி அமைக்கப்பட்டிருக்கிறது. இதுவும் யானைகள் வழித்தடம் என்பதால் போனால் போகிறதென்று யானைகளுக்கென ஒரு நீர்த்தொட்டியைக் கட்டியிருக்கிறது இந்நிறுவனம். ஒரு யானை ஒரு நாளைக்கு 200 மீட்டர் நீர் குடிக்கும். ஆனால் இந்த நீர்த்தொட்டியில் உள்ள நீரோ பழங்காலத்தில் நிரப்பப்பட்டதுபோல் காட்சியளித்தது. புழுக்களும் பாசியுமாக இருக்கும் அந்தத் தண்ணீர் ஒரே ஒரு யானையின் நீர்த்தேவையைக் கூட பூர்த்தி செய்யாது. வனத்துறை 19.4.2013 தேதியில் இடைதாங்கு மண்டலத்தை பராமரிக்காதது குறித்து நோட்டீஸ் அனுப்பியுள்ளது. ஆனால் எந்த மாற்றமும் நிகழவில்லை. அம்ருதா நிறுவனத்தினரிடம் தொடர்புகொண்டபோது, உயர் அதிகாரிகள் தொடர்புகொள்வார்கள் என்கிற பதில் கிடைத்தது. ஆனால் அவர்கள் ஒருபோதும் தொடர்புகொள்ளவில்லை.

நிறுவனத்துக்கு வடக்குப் பகுதியிலும் அம்ருதா தற்போது காட்டை அழித்து தற்போது அந்த இடம் சமவெளியாய் மரங்களற்று காட்சியளிக்கிறது. இதற்கு சற்று தூரத்தில் உள்ள

ஒரு பெரும்பகுதி நிலத்தின் சொந்தக்காரரர் யாரென்று தெரியவில்லை. ஆனால் மரங்கள் முற்றிலும் அழிக்கப்பட்டு நிலத்தை சமப்படுத்தும் வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. ஆனால் இந்தப் பகுதி வழக்கமாக யானைகள் கீழிறங்கி வரும் இடம். ''இந்த வழி தடைபட்டா, யானைங்க குழம்பி நேரடியா டவுனுக்குள்ள வந்துடும். கொஞ்ச நாளைக்கு முன்னால கூட ஒரு நேவி ஆபீசரையும், ஒரு வயசான பாட்டியையும் யானை கொன்னுடுச்சு. அதனால் எல்லோரும் பயத்தில் இருக்காங்க'' என்கிறார் ஒரு வனத்துறையைச் சேர்ந்த ஒரு யானை கண்காணிப்பாளர்.

ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் நடக்கும் ரேகிண்டோ நிறுவனம் பேரூர், செட்டிப்பாளையம், மதுக்கரை மற்றும் தீத்திப்பாளையம் ஆகிய பகுதிகளை உள்ளடக்கி கோவை ஹில்ஸ் கோல்ஃப் மற்றும் கண்ட்ரி கிளப், ஒருங்கிணைந்த டவுன்ஷிப், ஐ.டி. சிறப்புப் பொருளாதார மண்டலம் என்கிற பெயரில் திட்டம் தீட்டி பணிகளை மேற்கொண்டு வருகிறது. இந்த ஆயிரம் ஏக்கரில் சில ஹாக்காவின் கட்டுப்பாடிலும், சில இடங்கள் கட்டுப்பாட்டில் இல்லாமலும் இருக்கின்றன. ஆனால் ரேகிண்டோ பெறவேண்டிய இடங்களுக்கும் கூட அனுமதி பெறவில்லை. ஒரு பெரும் பகுதி மலைச் சரிவு கோல்ஃப் மைதானமாக மாற்றப்பட்டுவிட்டது. இது ஒரு முக்கியமான யானைகள் வழித்தடம். ஆகவேதான் வனத்துறையே யானைகளுக் கென்று ஒரு நீர்த்தொட்டியை இங்கே வைத்திருக்கிறது. மாவட்ட ஆட்சியர் அளித்த கள ஆய்வறிக்கையில் ''இந்தப் பகுதி தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் அதிகமுள்ள பகுதி. சிறுகுன்றுகளுக்கு மிக அருகில் உள்லது. போலுவாம்பட்டி காப்புக் காடுகளும் அருகில் உள்ளன. யானைகள் இவ்வழியாக அடிக்கடி வந்துசெல்லும். மனித நடமாட்டம் இப்பகுதியில் பாதுகாப்பில்லை. அத்துடன் இப்பகுதி நொய்யல் ஆற்றின் நீர்ப்பிடிப்புப் பகுதி. அத்துடன் நிலத்தடி நீர் குறைந்துபோவதற்கும் சாத்தியம் உள்ளது. ஏற்கனவே விவசாயிகள் நீரின்றி சிரமத்தில் உள்ளனர். இது ஓடைப் பகுதி என்பதால் வருவாய்த் துறையும் விண்ணப்பத்தை நிராகரித்துள்லது. எனவே புவியியல் சமநிலையைப் பேணவும், விவசாயிகள் நலன் கருதியும், நீரை பாதுகாக்கவும், யானைகளை பாதுகாக்கவும் இந்தத் திட்டத்தை நிராகரிக்க வேண்டும்'' என்று தெரிவித்திருக்கிறார். ஆனால் ரேகிண்டோ நிறுவனமோ இந்தியா டுடேவிடம் ''வனத்துறை, சுரங்கம் மற்றும் பொறியியல் துறை, வேளாண் துறை ஆகியவற்றிடம் அனுமதி பெற்றுவிட்டோம்'' என்கிறது.

அதிர்ச்சியான வகையில் கட்டப்பட்டிருப்பது இண்டஸ் பொறியியல் கல்லூரிதான். இக்கல்லூரி ஆலந்துறைக்கு அருகில் உள்ள கலியமங்கலத்தில் உல்ளது. சரியாக மலைச்சரிவு முடியும் இடத்தில் கல்லூரியின் சுற்றுச்சுவர் தொடங்குகிறது. வனத்துறை எச்சரிக்கையை அடுத்து சுற்றுச்சுவரின் ஒரு பகுதி இடிக்கப்பட்டுள்ளது. இங்கே காப்புக்காட்டின் எல்லைக் கல் இருக்குமிடமே கல்லூரி வளாகத்தின் உட்பகுதியில்தான் என்பது அதிர்ச்சியான செய்தி. ஒருவேளை இடைதாங்கு மண்டலம் பராமரிக்கவில்லை என்கிற அடுத்த குற்றச்சாட்டை முன்வைத்தால் கல்லூரியின் பெரும்பகுதி இருக்காது.

மத்துவராயபுரத்தில் உள்ள சின்மயா சர்வதேச உறைவிட பள்ளியின் பின்பகுதிக்கு யானைகள் அன்றாடம் வந்துசென்று பாதையை உருவாக்கியுள்ள காட்டுப் பகுதியில் சென்றால்தான் காட்டுப் பகுதியில் எல்லைக் கல்லை காண முடியும். அந்தக் கல்லில் இருந்து ஒன்றிரண்டு மீட்டர் இடைவெளியில் சுற்றுச்சுவர் துவங்குவது 150 மீட்டர் இடைதாங்கு மண்டலம் பராமரிக்கப்படவில்லை என்பதைக் காட்டுகிறது. பஞ்சாயத்துத் தலைவரான குணா ''இந்தச் சுற்றுச்சுவர் கட்டியது கூட பஞ்சாயத்துக்கு தெரியாது. வனத்துறைக்கு இதுகுறித்து புகார் கடிதம் எழுதியிருக்கிறோம்'' என்கிறார்.

சின்மயாவுக்கு அருகிலேயே உள்ளது காருண்யா பல்கலைக்கழகம். இடை தாங்கு மண்டலம் சரியாகவே பரமமரிக்கப்படுகிறது. ஆனால் சூழலியல் ஆர்வலரும் ஆர்.டி.ஐ. செயற்பாட்டாளருமான சிவா கூறுகையில் ''இங்கே 7,500 மாணவர்கள் படிக்கிறார்கள். அடர்ந்த வனப்பகுதியை பாழக்க இது ஒன்றே போதும். கல்லூரி விடுதி இங்கேதான் உள்ளது. எல்லா கழிவுகளும் குப்பைகளும் மலைக்கு மிக அருகில் கொட்டப்படுகின்றன. இப்பல்கலைக்கழகம் ஒரு சட்டக்கல்லூரியை நிர்மாணிக்க இருக்கிறது. அது இடை தாங்கு

மண்டலத்தில்தான் வர இருக்கிறது'' என்கிறார். காருண்யா பல்கலைக்கழக தலைமைப் பொறியாளர் சுதாகர் '' நாங்கள் தவறிழைத்துவிடக் கூடாது என்பதில் கவனமாக இருக்கிறோம். ஆகவே ஒவ்வொரு அடியையும் பார்த்துதான் வைக்கிறோம். யாரும் எங்களை குறை சொல்லிவிடக் கூடாது. கழிவுகளுக்கு வேறு வழி கண்டுபிடித்து விட்டோம். தினமும் சாடிவயலில் உள்ள இரண்டு யானைகளுக்கான தீவனத்தை நாங்கள் தான் எங்கள் செலவில் அளிக்கிறோம். இப்போது சட்டக்கல்லூரி வருவது குறித்த அறிவிப்புப் பலகை மட்டுமே வைத்திருக்கிறோம். நீங்கள் கேட்டுவிட்டதால் அதையும் நாளைக்கே எடுத்துவிடுகிறோம். உண்மையில் கல்லூரியை எங்கே கட்டுவது என்று இன்னமும் நாங்கள் முடிவு செய்யவில்லை'' என்றார்.

தொண்டாமுத்தூருக்கு அருகேயுள்ள அட்டுக்கல்லில் பெரும்பகுதி வேலியிடப்பட்டிருக்கும் ஒரு பகுதியை சீல் வைத்துள்ளது மாவட்ட நிர்வாகம். ''பெரிய பெரிய பாறைகள் சிறு கற்களாக நொறுக்கப்பட்டு ஏறத்தாழ 13 லாரி அளவுக்கான லோடு கொட்டி வைக்கபப்டுள்ளது. காப்புக்காடுகள் அருகில் உள்ளன. ஹாக்காவிடம் அனுமதி பெறபபடவில்லை. எனவே இப்பகுதி சீல் வைக்கப்படுகிறது என்கிறது மாவட்ட ஆட்சியரின் ஆணை.பாறைகளை உடைப்பது மட்டுமல்ல, மணற்கொள்ளையும் அருகில் உள்ள சிறிய ஓடைகளில் நடக்கிற்து. இது புவியியல் சமத்தன்மையை பாதிபப்துடன் காட்டு விலங்குளின் நீர்த்தேவைக்கும் பாதிப்பு உண்டாகிறது.

அடுத்து மேட்டுப்பாளையம் பகுதி. ஊட்டி பிரதான சாலையில் உள்ள புகழ்பெற்ற பிளாக் தண்டர் தீம் பார்க்கில் மறுபுறத்தில் இடைதாங்கு மண்டலம் பராமரிக்கப்படாமல் எல்லைக்கல்லில் இருந்து சில மீட்டர் தொலைவில் சுற்றுச்சுவர் இருக்கிறது. பல கட்டடங்களுக்கு அனுமதியும் பெறவில்லை. தீம் பார்க்குக்கு அருகிலேயே உள்ள சச்சிதானந்த ஜோதி உறைவிடப் பள்ளிக்குச் செல்ல ஒரு பழங்குடி கிராமத்தைக் கடந்துதான் செல்ல வேண்டும். புகழ்பெற்ற ஊட்டி-மேட்டுப்பாளையம் ரயில் பாதைக்கு வெகு அருகே இருக்கும் இப்பள்ளியிலும் இதே கதைதான். இடைதாங்கு மண்டலத்தில் பல கட்டிடங்கள் கட்டப்பட்டு இருக்கின்றன. இங்கும் மின்வேலி அமைக்கப்பட்டிருக்கிறது. யானைகள் இந்த ரயில்பாதையில் செல்வதை அடிக்கடி காணலாம் என்கிறார்கள் இப்பகுதி மக்கள்.

ஆனைக்கட்டி சுற்றுலா தளத்துக்கு அருகில் உள்ள தோலாம்பாளையத்தில் சிவா டெவலபர்ஸ் மலைச்சரிவுக்கு மிக அருகே நீச்சல்குளம், கிளப் ஹவுஸ், ஸ்பா செண்டர் போன்றவற்றை கட்டி சுற்றிலும் வேலி போட்டிருக்கிறது. எல்லைக்கல்லில் இருந்து இங்கும் ஒரு மீட்டர் தொலைவிலேயே வேலி போடப்பட்டிருந்தது என்பதை சொல்லவும் வேண்டுமா? ஊள்ளூர் திட்டக்குழுமம் 18.02.2013 அன்று அளித்த நோட்டீஸில்,''இந்த இடத்திற்கு முறையான அனுமதி பெறவில்லை. ஆகவே இந்நிலத்தை முன்பு கட்டுமானப் பணிகளுக்கு முன்பு இருந்ததுபோன்ற நிலைக்கு 30 நாளைக்குள் மாற்ற வேண்டும்'' என்று உத்தரவிட்டது. ஆனால் சிவா டெவலபர்ஸ் நீதிமன்றத்துக்குச் சென்று இதற்கு தடையுத்தரவு பெற்று வழக்கு நிலுவையில் உள்ளது.

மாவட்ட ஆட்சியர் கருணாகரனை தொடர்புகொண்டபோது ''நிர்வாகம் அத்துமீறுபவர்களுக்கு நோட்டீஸ்களை அனுப்பியுள்ளது. சட்டப்படி மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்கும்'' என்றார்.

வனத்துறை உயர் அதிகாரி ஒருவர் ''அனுமதி கோரி யாரவாது விண்ணபப்பித்தால் ஹாக்கா எங்கள் கருத்தைக் கேட்கும். திட்டம் வரவுள்ள இடம் யானைகள் வழித்தடத்தில் அமைந்திருந்தால், அதை நிராகரிக்கச் சொல்லி அறிக்கை அனுப்புவோம். அதையும் மீறி கட்டுமானப் பணிகள் நடந்தால், நாங்கள் எச்சரிக்கை நோட்டீஸ் வழங்குவோம். அவ்வளவுதான் எங்களுக்கு அதிகாரம் உள்ளது. ஆகவேதான் நிறுவனங்கள் எங்களை மதிப்பதில்லை. பணிகளை நிறுத்தச் சொல்லி உத்தரவிடுவோம். ஆனால் சீல் வைப்பது, இடிப்பது போன்ற அதிகாரங்கள் எங்களுக்குக் கிடையாது. நாங்கள் சொல்லிக்கொண்டே இருக்கிறோம். அவர்கள் செய்த்கொண்டே இருக்கிறார்கள்.'' என்று ஆதங்கப்பட்டார்.

List of Institutions violated the rules by not getting NOC for constructions
(Got through RTI dated 22.01.2013)

1.	Karunya University, Coimbatore – 641 114	Got for one part
2	Evangeline Matriculation Higher Secondary School, Coimbatore - 641114	Did not get NOC
3	Karunya International Residential School, Coimbatore - 641114	Did not get NOC
4	Chinmaya International Residential School, Coimbatore – 641114	Did not get NOC
5	Isha Yoga Center, Velliangiril Foothills, Coimbatore - 641114	Did not get NOC
6	Isha Home School, Velliangiri Foothills, Coimbatore	Did not get NOC
7	Isha Vidhya Matriculation School, Sandegoundenpalayam, Coimbatore – 641 109	Did not get NOC
8	Tamara Resorts, Perumal Kovil pathy, Coimbatore - 641101	Did not get NOC
9	Guruvayurappan Institute of Management, Navakkarai, Coimbatore – 641105	Did not get NOC
10	SAN International Business School, Mavvuthampathy, Coimbatore – 641105	Applied
11	AVC – Saranya, Arya Vaidya Pharmacy, Mavuthampathy, Navakarai, Coimbatore – 641105	Did not get NOC
12	Sri Venkateswara College of Computer Applications and Management, Ettimadai, Coimbatore – 641105	Did not get NOC
13	Kovail Hills Golf and Country Club, Integrated Feeder Township, IT SEZ, by RAKINDO developers Pvt. Ltd, Perur Chettipalayam village	Did not get NOC
14	V.L.B. Janaki ammal college of Engineering and Technology, Kovaipudur, Coimbatore – 641 042	Did not get NOC
15	V.L.B. Janakiammal Polytechnic College, Kovaipudur, Coimbatore – 641 102	Did not get NOC
16	Satchidanda Jothi Nikethan, Kallar, Mettupalayam – 641 305	Refused NOC
17	Black Thunder Theme park private Limited, Odanthurai Village, Mettuppalayam – 641 305	Did not get NOC
18	Avinashilingam University For Women, thadagam post, Coimbatore – 641 108	Applied
19	Kari Kubel Instititue for Development Education, Mangarai, Coimbatore – 641 108	Did not get NOC
20	Ayurveda Hospital & Arya Vaidya Pharmacy Training, Mangarai, Coimbatore – 641 017	Did not get NOC

DTCP எனப்படும் உள்ளூர் திட்டக்குழுமத்துக்குத்தான் கட்டிடங்களை சீல் செய்யவும், இடிக்கவும் அதிகாரம் உண்டு. அதன் இயக்குநர் சபாபதி "சின்மயா பள்ளி இருக்குமிடம் ஹாக்காவுக்குக் கீழ் வருவதால் உள்ளூர் பஞ்சாயத்தில் பெற்ற அனுமதி பெற்றிருந்தாலும் ஹாக்காவிடமும் பெறவேண்டும் என்று கூறிவிட்டோம். ஆனால் சின்மயா நீதிமன்றத்துக்கு சென்றிருக்கிறது. அதற்கு நாங்கள் பதிலும் அளித்துவிட்டோம். ஈஷாவும், இண்டஸ் கல்லூரி குறித்தும் புகார்களையும் அனைத்து விவரங்களையும் சென்னையில் உள்ள எங்கள் ஆணையருக்கு அனுப்பிவிட்டு முடிவுக்காகக் காத்திருக்கிறோம். தாமரா ரிசார்ஸ் இந்த மாத எல்லை வரை நேரம் கேட்டிருக்கிறார்கள்" என்றார்.

உள்ளூர் திட்டக்குழுமத்தின் ஆணையர் ஏ.கார்த்திக் "அனுமதி பெறாத கட்டிடங்கள் குறித்து எங்களுக்கு எந்த புகார் வந்தாலும் நாங்கள் நிச்சயமாக நடவடிக்கை எடுப்போம்" என்றார்.

அப்போதைய மாநில வனத்துறை அமைச்சர் பச்சைமால் "எல்லாமே பட்டா நிலங்களாகத் தெரிகின்றன. பொதுவாக பட்டா நிலங்கள் யானைகள் வழித்தடத்தில் வராது. ஒருவேளை யானைகள் அங்கே சென்றிருக்கலாம். 20 கோடி ரூபாய் ஒதுக்கு அகழிகள் அமைத்து யானைகள் ஊருக்குள் வராமல் தடுக்கும் பணிகள் நடந்துவருகின்றன" என்றார்.

ஆண்டுதோறும் கோயில்யானைகளுக்கு முதுமலையில் முகாம் நடத்தும் தமிழக அரசுக்கு காட்டு யானைகள் மீது மட்டும் அக்கறையில்லையா என்று சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் வினவுகிறார்கள். ஆன்மிகத்தைவிட, கல்வியை விட உயிர்வாழ்தல் மிகவும் முக்கியம். காட்டுக்குள் இருக்கவேண்டிய யானைகளை பழக்கி கோயில் யானைகளாக்கி ஊருக்குள் வாழும் யானைகளுக்கு ஆண்டுக்கு ஒரு வாரம் மட்டும் காட்டை கண்ணில் காட்டுவதும், காட்டு யானைகள் தங்கள் நிலப்பகுதியை இழந்து ஊருக்குள் வருவதும் இங்கு மட்டுமே சாத்தியமாகக் கூடிய விநோதங்கள்.

கோவையின் ரம்மியமான குளிர்க்காற்றுடன் கூடிய இதமான வானிலையை அனுபவித்துக் கொண்டாடுவதற்காக ஆன்மிக நிறுவனங்களும், கல்வி நிறுவனங்களும், ரியல் எஸ்டேட் காரர்களும் குவிந்ததில் மூச்சு திணறுவது கோவையின் சூழல் மட்டுமல்ல. இயற்கையான காடுகளும் விலங்குகளும் மனிதர்களும்தான்.



முட்டாள் அரசு

சவுக்கு சங்கர் - சவுக்கு இணையம் - 13/09/2013

Source : https://www.savukkuonline.com/series/stupid-Source: government/

அகமதாபாத்திலிருந்து 35 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள மோட்டேரா என்ற சிறு நகரத்தில்தான் 42 ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு மனிதர் வந்து இறங்கினார். அப்போது அவருக்குக் கிடைத்த அரசியல் தொடர்புகளால் 10 ஏக்கர் நிலம் அவருக்குக் கிடைத்தது. இன்றைய பாகிஸ்தானில் 1941ம் ஆண்டு பிறந்த ஆசாராம் ஹர்பலானி என்ற அந்த நபர்தான் இன்று ஆசாராம் பாபு என்று அழைக்கப்படுகிறார்.

டெல்லியில் ஓடும் பேருந்தில் ஒரு பெண் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்ட போது, பெண் ஒத்துழைக்காமல் எப்படி அந்த வன்முறை நிகழ்ந்திருக்க முடியும்; அந்தப் பெண் தன் மீது வன்முறையைப் புகுத்தியவர்களிடம், கெஞ்சியிருக்க வேண்டும் என்று தத்துவத்தை உதிர்த்தவர்தான் இந்த ஆசாராம்.



இன்று உலகெங்கும் 400 ஆசிரமங்களை வைத்துள்ள ஆசாராம் ஒரு 16 வயதுப் பெண்ணை பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கியதாக கைது செய்யப்பட்டுள்ளார். இது வெளியுலகுக்கு பரவலாக தெரிந்த விஷயம். வெளியில் தெரியாத ஒரு சர்ச்சை 2008ம் ஆண்டு முதல் இந்த ஆசிரமத்தைச் சுற்றி வருகிறது. அபிஷேக் வகேலா மற்றும் தீபேஷ் வகேலா என்ற இரு சிறுவர்கள், பால கேந்திரா என்ற ஆசிரமத்தினுள் இயங்கும் பள்ளியில் சேர்க்கப்பட்டனர். சேர்ந்த சில நாட்களில் இரு சிறுவர்களும் மொட்டையடிக்கப் பட்டு நெற்றியில் நாமத்தோடு இருப்பதை அந்தச் சிறுவர்களின் பெற்றோர் பார்க்கின்றனர்.

ஒரு சில மாதங்களில் இரண்டு சிறுவர்களும் வீட்டுக்கு வந்தார்களா என்று ஆசிரமத்திலிருந்து பெற்றோருக்கு கேட்டு போன் வந்தது. பதறிப்போன பெற்றோர்கள் ஆசிரமத்தில் சென்று தேடுகின்றனர். பல இடங்களில் தேடியும் சிறுவர்கள் கிடைக்காமல் பெற்றோர்கள் அலைகின்றனர். அப்போது, ஆசிரமத்தின் நிர்வாகியான பங்கஜ் சக்சேனா, அரச மரத்தை 11 முறை சுற்றி வந்து, கடவுளிடம் வேண்டினால் சிறுவர்கள் கிடைத்து விடுவார்கள் என்று கூறுகிறார். அந்த அப்பாவிப் பெற்றோர்கள் அதையும் செய்கிறார்கள். அப்போதும் குழந்தைகள் கிடைக்காததால், பெற்றோர்கள் காவல் நிலையத்தில் புகார் அளிக்க முயல்கின்றனர். பெற்றோர்களை தடுத்த ஆசிரம நிர்வாகம், அங்கே போகக்கூடாது என்று மிரட்டுகின்றனர்.

இறுதியாக வேறு வழியில்லாமல் ஆசிரமத்தினரின் மிரட்டலையும் மீறி, பெற்றோர்கள் சந்கேடா காவல் நிலையத்தில் புகார் அளிக்கச் சென்றால், அங்கே ஆசிரமத்தைச் சேர்ந்த விகாஸ் கேம்ச்சா மற்றும் அஜய் ஷா ஆகியோர் காவல்நிலையத்தில் காத்திருக்கின்றனர். இவர்களுக்கு முன்பாக காவல்நிலையத்தில் உள்ளவர்களிடத்தில் பேசி விட்டு, புகார் எதுவும் கொடுத்தாலும், காவல்துறை பதிவு செய்யாது என்று தெரிவித்து விடுகின்றனர். காவல் துறையும் அதே போல புகாரை வாங்க மறுக்கின்றனர்.

இதையடுத்து, ஆசாராம் அந்தப் பெற்றோர்களிடம் ஒரு செய்தியை அனுப்புகிறார். ஒரு சாலையின் சந்திப்புக்குச் சென்று, அந்த கற்களை எடுத்து, ஏழு கற்களை எடுத்து, அந்த கற்களையும், அந்தக் குழந்தைகளின் உடைகளையும் கொதி நீரில் போட்டு, குழந்தைகள்

தங்கும் அறையில் அந்த துணிகளை காய வைத்தால், நான்கு மணி நேரத்தில் குழந்தைகள் வந்து சேர்வார்கள் என்று கூறுகிறார். இதையெல்லாம் செய்தும் குழந்தைகள் திரும்பவில்லை.

ஆனால் மறுநாள், ஆசிரமத்தை ஒட்டிய ஒரு நதியோரம் இரண்டு குழந்தைகளின் உடலும் கண்டெடுக்கப்படுகிறது. சிறுவன் தீபேஷின் உடலில் வலது கை இல்லை. நெஞ்சுக் கூட்டைத் தவிர மற்ற உறுப்புகள் அனைத்தும் காணாமல் போயிருந்தது. உடல் கண்டெடுக்கப்பட்ட இடத்துக்கு ஆசிரமத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான பக்தர்கள் ஆயுதங்களோடு வந்து இறங்குகிறார்கள்.

காவல்துறையினரிடம், ஆசிரமத்துக்கு எதிராக வழக்கு பதிவு செய்யச் சொல்லி கோரிக்கை விடுத்த பெற்றோர்களை மிரட்டுகிறார்கள். பயந்து போன பெற்றோர்கள் அந்த இடத்திலிருந்து தப்பிச் செல்கின்றனர். மர்மமான முறையில் இறந்து போன குழந்தைகளைப் பற்றி ஊடகங்கள் செய்தி வெளியிடுகின்றன. செய்தி வெளியிட்ட செய்தியாளர்கள் தாக்கப்படுகிறார்கள். திவ்ய பாஸ்கர் என்ற ஊடகத்தின் செய்தியாளர் ஆசிரமத்திற்குள்ளாகவே கட்டி வைத்து அடிக்கப்படுகிறார். ஆசாராம் நடத்திய மற்றொரு ஆசிரமத்தில் ராமகிருஷ்ண யாதவ் மற்றும் வேதாந்த் மோரயா என்ற இரண்டு சிறுவர்கள் மர்மமான முறையில் இறந்து போகிறார்கள்.

பொதுமக்களிடையே எழுந்த கடும் எதிர்ப்பைக் கண்ட உத்தம சீலர் நரேந்திர மோடி ஒரு ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் விசாரணை ஆயைத்தை அமைக்கிறார். ஓய்வு பெற்ற நீதிபதிகள், ஆட்சியாளர்களின் கைப்பாவையாகத்தானே இருப்பார்கள் ? அதே போல அந்த நீதிபதியும், ஆசிரமத்தைச் சேர்ந்தவர்களையோ, ஆசாராமையோ விசாரிக்காமலேயே விசாரணையை நடத்துகிறது. இறுதியாக ஆசாராமுக்கு விசாரணை ஆணையம் அனுப்பிய சம்மனுக்கு எதிராக உயர்நீதிமன்றம் சென்ற ஆசாராமுக்கும், விசாரணை ஆணையத்துக்கும் கடும் கண்டனத்தை தெரிவிக்கிறது குஜராத் உயர்நீதிமன்றம்.

உயர்நீதிமன்றம் தனது தீர்ப்பில் "இந்த விசாரணையில், விசாரணை ஆணையம், ஆசாராம் மற்றும் அவர் மகன் முன்பாக மண்டியிட்டு, எப்படியாவது ஒரு முறை வந்து எங்கள் முன்பாக சாட்சி சொல்லுங்கள் என்று இறைஞ்சியிருப்பதைக் காண முடிகிறது. இது கடந்த ஒன்றரை ஆண்டுகளாக நடந்து கொண்டிருப்பது தெரிகிறது" என்று கடுமையான கண்டனங்களை உயர்நீதிமன்றம் தெரிவித்த பிறகே, விசாரணை ஆணையத்தின் முன் ஆசாராம் ஆஜரானார்.

இந்த ஆசாராமுக்கு சற்றும் குறைந்தவர் இல்லை ஜக்கி வாசுதேவ். ஆசாராமின் ஆசிரமத்தில் நடத்தப்படும் பால கேந்திரா போலவே, ஜக்கி வாசுதேவின் ஆசிரமத்திற்குள்ளாகவும், ஈஷா சம்ஸ்கிருதி என்றொரு பள்ளி நடத்தப்பட்டு வருகிறது. இந்தப் பள்ளி, மாநில கல்வித்திட்டம், சிபிஎஸ்இ கல்வித்திட்டம், மெட்ரிகுலேஷன் கல்வித் திட்டம் ஐசிஎஸ்இ கல்வித்திட்டம் ஆகிய எந்த திட்டத்திலும் சேராது. அடிப்படை ஆங்கிலம், தமிழ் மற்றும் கணிதத்தைத் தவிர வேறு எந்தப் படிப்புகளும் குழந்தைகளுக்கு சொல்லித் தரப்பட மாட்டாது.

இந்தக் குழந்தைகள் மற்ற குழந்தைகளைப் போல முறையான கல்வித் திட்டத்தின் கீழ் கல்லாமல் இந்த திருட்டுச் சாமியார் சொல்லித்தரும் விஷயங்களைக் கற்றுக் கொண்டு விலங்குகள் போலத் திரிய இருக்கிறார்கள். ஈஷா தொடர்பாக சவுக்கில் கட்டுரை எழுதப்பட்டதற்குப் பிறகு, பல வயதானவர்கள் தொடர்பு கொண்டு பேசுகிறார்கள். அவர்கள் அவ்வளவு பேரும் தவறாமல் சொல்லும் விஷயம், எங்கள் பேரக்குழந்தைகள் ஈஷா சம்ஸ்கிருதியில் படிக்கிறார்கள். அந்தப்



பிள்ளையின் எதிர்காலம் பாழாகப் போய்க் கொண்டு இருக்கிறதுஞ் இது தொடர்பாக தொடர்ந்த வழக்குகளில் விரைவாகத் தீர்ப்பு வர ஏற்பாடு செய்யுங்கள் என்பதேஞ் குழந்தைகளின் பெற்றோர்கள் என்ன செய்கிறார்கள் என்றால், தாய் தந்தை இருவரும், இந்தத் திருட்டுச் சாமியாருக்கு அடிமைகளாக இருக்கிறார்கள். நாங்கள் வயதானவர்களாக இருப்பதால், எங்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. எப்படியாவது எங்கள் பேரக்குழந்தைகளைக் காப்பாற்றுங்கள் என்று பலர் தொடர்ந்து பேசி வருகிறார்கள். இவர்கள் எந்த அளவுக்கு நெருக்கடியில் இருக்கிறார்கள் என்றால், இவர்களின் பிள்ளைகள், அதாவது குழந்தைகளின் பெற்றோர்கள், இந்தத் திருட்டுச் சாமியாருக்காக, தங்கள் பெற்றோர்களைக் கூட தூக்கி எறியத் தயங்காத அளவுக்கு அவர்களை மூளைச் சலவை செய்து வைத்திருக்கிறார் இந்த திருட்டுச் சாமியார்.




இந்த சம்ஸ்கிருதி பள்ளி, எவ்வித அங்கீகாரமும் இன்றி தொடர்ந்து நடைபெற ஜெயலலிதாவும் உடந்தையாக உள்ளார் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை.

இந்தப் பள்ளியை இழுத்து மூட வேண்டும் என்று வழக்கறிஞர் வெற்றிச் செல்வன் தொடர்ந்த பொது நல வழக்கில், தமிழக அரசுக்கும் சென்ன உயர்நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பி யுள்ளது.

ஆனால் இது வரைக்கும் பள்ளிக் கல்வித் துறை அதிகாரிகள் ஒருவர் கூட, இந்த ஈஷா சம்ஸ்கிருதி பள்ளியை ஆய்வு செய்யவில்லை. இந்த திருட்டுச் சாமியாரின் செல்வாக்கு அந்த அளவுக்கு இந்தியா முழுவதும் பரவியுள்ளது.

இந்த திருட்டுச் சாமியாரின் செல்வாக்குக்கு மற்றொரு உதாரணம். தமிழ் இந்தியா டுடேவில் ஈஷா ஆசிரமம் எப்படியெல்லாம் விதிகளை மீறி கட்டப்பட்டுள்ளது, இதனால் எத்தனை வன விலங்குகள் இறந்துள்ளன என்பது குறித்து கவின்மலர் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். இந்தக் கட்டுரைக்குப் பிறகு, டெல்லியில் உள்ள இந்தியா டுடே நிர்வாகத்தோடு தொடர்ந்து லாபி செய்து திருட்டுச் சாமியார் தனது நிகழ்ச்சியை ஒவ்வொரு வாரமும், இந்தியா டுடே குழுமத் தொலைக்காட்சியான ஹெட்லைன்ஸ் டுடேவில் ஒளிபரப்பச் செய்துள்ளார். ஒளிரப்பச் செய்ததோடு மட்டுமல்லாமல், இந்தியா டுடேவில் இந்தக் கட்டுரை வெளி வர உதவியாக இருந்தவர்களிடம், ஹெட்லைன்ஸ் டுடே நிகழ்ச்சியைப் பற்றிப் பேசி எள்ளி நகையாடி யிருக்கிறார்கள் ஈஷா நிர்வாகத்தைச் சேர்ந்தவர்கள்.



திருட்டுச் சாமியார் ஜக்கி வாசுதேவ் வெள்ளியங்கிரி மலை அடிவாரத்துக்கு செல்வதற்கு முன்னால், அந்த இடத்தில் பழங்குடியின மக்களும், விலங்குகளும் சாதாரணமாக வாழ்ந்து வந்திருக்கின்றனர். விலங்குகளுக்கும் மனிதர் களுக்கும் எவ்விதமான மோதலும் இல்லை. ஆனால் ஜக்கி வாசுதேவ் அந்த வனப்பகுதியில் தொடர்ந்து சட்டவிரோதமாக பல்வேறு கட்டிடங்களை கட்டிக் கொண்டே செல்லவும், விலங்குகளுக்கும் மனிதர்களுக்கு மான உறவு சிதைந்து, விலங்குகள் இறப்பதும், மனிதர்கள் இறப்பதும் சர்வ

சாதாரணமாக நடந்து வருகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில் ஈஷா மையத்தைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள மின்வேலிகளால் தாக்கப்பட்டு இறந்த யானைகளின் எண்ணிக்கை மட்டும் பத்துக்கும் மேல். ஈஷா யோக மையத்தைச் சுற்றி அமைந்துள்ள வெள்ளி மலைப்பட்டினம், ஜாகிர்நாயக்கன் பாளையம், நரசிபுரம் மற்றும் செம்மேடு பகுதியில் மட்டும் 2006ம் ஆண்டு முதல் 60க்கும் மேற்பட்ட பொதுமக்கள் யானை தாக்கி இறந்துள்ளனர்.

ஈஷா மையத்தைச் சுற்றியுள்ள பகுதியில் மட்டும் 30க்கும் மேற்பட்டோர் யானை தாக்கி இறந்துள்ளனர். 2006ம் ஆண்டு முதல் 60க்கும் மேற்பட்ட யானைகள் இறந்துள்ளன. இறந்த மனிதர்களில் பெரும்பாலானோர், தாணிக்கண்டி என்ற மலைவாழ் இனத்தைச் சேர்ந்த மக்கள். அத்தனைக்கும் ஆசைப்படாதே என்ற கட்டுரையில் விரிவாக எழுதியிருந்தது போல, தாணிக்கண்டி பழங்குடி மக்களுக்கும், விலங்குகளுக்கும் மிக மிக நெருக்கமான உறவு காலங்காலமாக இருந்து வருகிறது. இந்த திருட்டுச் சாமியார் அந்த மலைப்பகுதிக்குச் சென்றதிலிருந்துதான், இது போன்ற தொடர்ந்த சாவுகள் நிகழ்ந்து வருகின்றன. கடந்த ஆகஸ்ட் 23 அன்று கூட, ஈஷா மையத்திற்கு வெகு அருகில் உள்ள முல்லங்காடு என்ற இடத்தில் சுப்பாத்தாள் என்ற 67 வயது பழங்குடியினப் பெண், யானையால் தாக்கப்பட்டு இறந்தார். சுப்பாத்தாள் இறந்தது, ஈஷா மையத்தின் மகா முத்ரா என்ற கட்டிடத்துக்கு வெகு அருகில் என்பது குறிப்பிடத் தக்கது. ஈஷா மையத்தின் மின்வேலியைத் தொட்டு தாக்கப்பட்ட யானை, கடுங்கோபத்தில் எதிரில் வந்த சுப்பாத்தாளை தூக்கி வீசியது என்கின்றனர் அப்பகுதி மக்கள்.

இது போன்ற தொடர்ச்சியான மனித மற்றும் யானைகளின் மரணத்துக்கு ஈஷா மையம் காரணமாக இருந்து வருகிறது. இந்த ஈஷா மையத்தின் அத்தனை கட்டிடங்களுக்கும் உள்ளாட்சி அமைப்பு, வனத்துறை, நகர்ப்புற மற்றும் ஊரக வளர்ச்சித்துறை ஆகிய எந்த அமைப்புகளிடமும் அனுமதி பெறாத கட்டிடங்களின் பரப்பளவு 4 லட்சத்து 27 ஆயிரத்து 700 சதுர மீட்டர்கள். இந்த கட்டிடங்களின் பரப்பளவு ஆகஸ்ட் 2012 அன்று உள்ளபடி. கடைசியாக மார்ச் 2013 அன்று ஈஷா மையத்தை நேரில் ஆய்வு செய்தபோது, பல்வேறு கட்டிடப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வந்தன.

ஜனவரி 2013 அன்று நகர் ஊரமைப்புத் துறை கோவை துணை இயக்குநர் சபாபதி, சென்னையில் உள்ள நகர் ஊரமைப்புத் துறையின் இயக்குநருக்கு ஒரு கடிதம் எழுதுகிறார். அந்தக் கடிதத்தில் கட்டிடம் கட்ட வனத்துறையிடம் ஈஷா மையம் 20.07.2011 அன்று கட்டிடம் கட்ட அனுமதி கேட்டு நகர் ஊரமைப்புத் துறையிடம் விண்ணப்பித்திருந்தது. அந்த விண்ணப்பம் முறையாக இல்லை என்றும், முழுமையான விண்ணப்பத்தை சமர்ப்பிக்குமாறும், ஈஷா மையத்தில் நடக்கும் கட்டுமானப் பணிகளுக்கும், அனுமதி கேட்டு சமர்ப்பித்த விண்ணப்பத்துக்கும் முரண்பாடுகள் உள்ளன என்றும் அவற்றையெல்லாம் சரி செய்து, வனத்துறை, பொதுப்பணித்துறை மற்றும் வருவாய்த்துறையின் தடையின்மைச் சான்றோடு, முழுமையான விண்ணப்பத்தை சமர்ப்பிக்குமாறும் அறிவுறுத்தி ஈஷா மையத்துக்கு 12.10.2012 அன்று கடிதம் அனுப்பப்பட்டது.

ஆனால் 02.11.2012 அன்று நேரில் ஆய்வு செய்தபோது, கட்டுமானப் பணிகள் தொடர்ந்து நடைபெற்றதால், கட்டுமானப் பணிகளை உடனடியாக நிறுத்துமாறு அறிவுறுத்தி 05.11.2012 அன்று நோட்டீஸ் அனுப்பப்பட்டது. அப்படியும் கட்டுமானப் பணிகள் நிறுத்தப்படாததால், கட்டிடங்களுக்கு சீல் வைக்கும் நோட்டீஸ் 24.12.2012 அன்று அனுப்பப் பட்டது. ஈஷா மையம் ஏற்கனவே அளித்திருந்த விண்ணப்பம் சரி செய்யப்பட்டு, அனுப்பப்படாததால், அந்த விண்ணப்பம் 24.01.2013 அன்று ஈஷா மையத்துக்கே திருப்பி அனுப்பப்பட்டது. சட்டவிரோதமாக கட்டிய கட்டிடங்களை இடித்து விட்டு, கட்டுமானப் பணிகள் தொடங்குவதற்கு முன்பாக இருந்தது போல அந்த இடத்தை மாற்றவேண்டும் என்று வழங்கப்பட்ட சீலிங் நோட்டீஸுக்கான காலக்கெடு 26.01.2013 அன்று முடிந்து விட்டது.


இந்நிலையில், ஈஷா மையத்தின் மீது நடவடிக்கை எடுக்க தேவையான உத்தரவுகளை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன் என்று துணை இயக்குநர் அவரது கடிதத்தில் தெரிவித்திருந்தார். இந்த கடிதத்தில் கோரியுள்ளபடி நடவடிக்கை எடுக்க வேண்டியது, நகர்

ஊரமைப்புத் துறையின் இயக்குநர். தற்போது அந்தப் பதவியில் இருப்பவர் கார்த்திக் ஐஏஎஸ். ஜனவரி மாதம் முதல், இன்று வரை துணை இயக்குநரின் கடிதத்தின் மீது எவ்விதமான நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கிறார் கார்த்திக் ஐஏஎஸ்.



கார்த்திக் ஐஏஎஸ் ஏன் நடவடிக்கை எடுக்காமல் இருக்கிறார் ? இதற்குப் பின்னால் ஒரு சுவையான கதை இருக்கிறது. கார்த்திக் ஐஏஎஸ்ஸுக்கு ராஜலட்சுமி என்பவரோடு 02.02.1998 அன்று திருமணம் நடக்கிறது. இந்த ராஜலட்சுமி முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி கனகராஜின் மகள். இவர்களுக்கு ஒரு மகன் உள்ளான். இந்த கார்திக்குக்கு கிருஷ்ணகுமார் என்று ஒரு நண்பர் உண்டு. அந்த கிருஷ்ணகுமாரின் மனைவி பெயர் பிரியதர்ஷினி. கிருஷ்ணகுமாரோடு நெருக்கமான நட்பு பாராட்டிய கார்த்திக், அவர் மனைவியோடும் "நெருக்கமான" நட்பு பாராட்டுகிறார். இந்த நட்பு, நாளொரு "மேனியும்" பொழுதொரு வண்ணமுமாக வளர்கிறது. எந்த அளவு இந்த நட்பு வளர்கிறதென்றால், எம்ஏஎம் பீச் ரிசார்ட், தாஜ் கன்னிமரா, ஜேப்பியார் ரிசார்ட், மகாபலிபுரம், குயின்ஸ் லான்ட், எம்ஜிஎம் ரிசார்ட் போன்ற இடங்களில் தங்கி "முக்கிய" விவாதங்களில் ஈடுபடும் அளவுக்கு வளர்கிறது. கிருஷ்ணகுமார் ஒரு சாதாரண நபர். ஐஏஎஸ் அதிகாரியின் உறவு சாதாரண நபரின் உறவை விட சிறந்ததல்லவா ? அதனால், பிரியதர்ஷினி, கிருஷ்ணகுமார் பேச்சுக்கு "கா" விட்டு விடுகிறார். சென்னை குடும்ப நீதிமன்றத்தில் கிருஷ்ணகுமாரிடம் இருந்து விவாகரத்து கோரி வழக்கு தொடர்கிறார். இதற்கிடையே, கார்த்திக் ஐஏஎஸ்ஸும், பிரியதர்ஷியியும், தனியாக வீட்டில் வசிக்கத் தொடங்குகின்றனர்.


இந்த நிலையில் கார்த்திக் ஐஏஎஸ் பற்றி நக்கீரனில் கட்டுரை எழுதுமாறு கோரப்படுகிறது. நீதிபதி கனகராஜ், நக்கீரன் கோபால், ஜெயலலிதா அரசால் பல்வேறு வழக்குகளில் இழுத்தடிக்கப்பட்டபோது, நியாயமாக தீர்ப்பு வழங்கி காப்பாற்றியவர். உள்ளபடியே, நக்கீரன் நீதிபதி கனகராஜுக்கு கடமைப்பட்டுள்ளது. இந்தக் கட்டுரைக்காக, பல்வேறு நபர்களை சந்தித்து பேசி, கட்டுரை இறுதி செய்யப்பட்டபோது, கார்த்திக் ஐஏஎஸ்க்கு இந்த விஷயம் தெரிய வருகிறது. எப்படியாவது, இந்தக் கட்டுரையை நிறுத்த வேண்டும் என்று கார்த்திக் முயற்சி செய்கிறார். நக்கீரனில் அனைத்தும் காமராஜ்தானேஞ் ? காமராஜை எப்படி சரிக்கட்டுவது என்று கார்த்திக் ஐஏஎஸ் முயற்சி எடுக்கையில்தான், திருட்டுச் சாமியார் ஜக்கி வாசுதேவ் சொன்னால் காமராஜ் கேட்பார், ஜக்கியின் விசுவாசமான அடிமை காமராஜ் என்ற தகவல் தெரிய வருகிறது. உடனடியாக ஜக்கி மூலமாக, காமராஜை அணுகி, அந்தக் கட்டுரை நக்கீரனில் வெளிவராமல் நிறுத்தப் படுகிறது.



இப்போது கார்த்திக் ஐஏஎஸ் ஜக்கிக்கு கடமைப்பட்டவரா இல்லையா ? கார்த்திக் ஒரு ஐஏஎஸ் அதிகாரியாக தனது கடமையைச் செய்வாரா ? தன்னைப் பற்றிய கட்டுரை வெளிவராமல் தடுத்த ஜக்கி வாசுதேவுக்கு உதவ நினைப்பாரா ? இதனால்தான், கார்த்திக் ஐஏஎஸ், ஊரக நகரமைப்புத் துறையின் துணை இயக்குநர், ஈஷா மையத்தின் சட்டவிரோ தமான கட்டிடங்களை இடிக்க உத்தரவு வேண்டும் என்ற கடிதத்தின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல், கட்டி வைத் திருக்கிறார்.

இந்த திருட்டுச் சாமியார்தான் இன்று முதல், மூன்று நாட்களுக்கு நேரடியாக சென்னை

மீனம்பாக்கம் அருகே, யோகா சொல்லித் தந்து கொண்டிருக்கிறார். இந்த திருட்டுச் சாமியாரின் திருட்டுத் தனத்துக்கு இன்னொரு உதாரணம். இந்த திருட்டுச் சாமியார், ஒரு கைதேர்ந்த கார்ப்பரேட் ஆசாமி என்பதற்கு, நகரெங்கும் இந்த நேரடி யோகா பயிற்சிக்காக வைக்கப்பட்டுள்ள விளம்பரங்களே சாட்சி. இந்த நேரடி யோகா பயிற்சி தொடர்பாக சென்னையில் ஒரு பத்திரிக்கையாளர் சந்திப்பு நடத்தப்பட்டது. இந்த சந்திப்புக்கு அனைத்து ஏற்பாடுகளையும் செய்தது யார் தெரியுமா ? தமிழ்த்திரையுலகின் நம்பர் ஒன் மக்கள் தொடர்பாளர்.. இவர்தான் கமல், ரஜினி, விஜய் உள்ளிட்ட ஏறக்குறைய அனைத்து நட்சத்திரங்களுக்குமான செய்தித் தொடர்பாளர். நிகில் முருகன்.



ஒரு சாமியார் தான் நடத்தும் யோகா நிகழ்ச்சிக்கான பத்திரிக்கை யாளர் சந்திப்புக்கு திரையுலகின் நம்பர் ஒன் மக்கள் தொடர்பாளரை பயன்படுத்துகிறார் என்றால், எந்த அளவுக்கு, இந்த திருட்டுச் சாமியார் மக்களை மூளைச்சலவை செய்யும் வேலையில் இறங்கியிருக்கிறார் என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

இப்படி வெளிப்படையாக இந் நாட்டின் சட்டத்தினை மதிக்காமல், வன விலங்குகளுக்கும், மனிதர்களுக் கும் தொடர்ந்து ஆபத்து ஏற்படுத்தி வரும் இந்த திருட்டுச் சாமியார்தான் உலக சமாதானத்தைப் பற்றிப் பேசுகிறான். இப்படிப்பட்ட திருட்டுச் சாமியார் கட்டி வரும் சட்டவிரோதமான கட்டிடங்களை இந்நேரம் இடித்திருக்க வேண்டுமா வேண்டாமா ?

யானைகளின் நலன் விரும்பியாக தன்னை காண்பித்துக் கொண்டு, யானைகளுக்கான சிறப்பு முகாம் நடத்தி, குட்டி யானைக்கு கரும்பு ஊட்டும் ஜெயலலிதாவுக்கு, வெள்ளியங்கிரி மலை அடிவாரத்தில் 300க்கும் மேற்பட்ட யானைகள், மின்வேலி என்ற ஆபத்தை தினம் தினம் சந்தித்துக் கொண்டிருப்பது தெரியுமா ?

ஜோசியக்காரர்களின் அறிவுரைப்படி, குருவாயூர் கோயிலுக்கு கருணாநிதியை நள்ளிரவில் கைது செய்து விட்டு, மறுநாள் யானை தானம் செய்து, யானைகளுக்காக முகாம் நடத்தினால் இந்தியாவின் பிரதமராகலாம் என்ற கனவில் இருக்கும் ஜெயலலிதாவுக்கு, அவரது ஆட்சிக்குட்பட்ட பகுதியில், ஒரு திருட்டுச் சாமியாரின் சட்டவிரோதமான கட்டிடங்களால், தினம் தினம் யானைகள் ஆபத்துக்குள்ளாகின்றன என்பது தெரியுமா தெரியாதா ?

நக்கீரன் காமராஜோடு நெருக்கமான ஒரு நபர்தான், நக்கீரன் காமராஜின் பேச்சைக் கேட்டுக் கொண்டு, ஈஷா மையத்தின் மீது நடவடிக்கை எடுக்காமல் வாளாயிருந்து வருகிறார் என்பது ஜெயலலிதாவுக்கு தெரியுமா தெரியாதா ?

அனைத்தையும் கற்று துள்ளித் திரிய வேண்டிய பள்ளிக் குழந்தைகள் சிறு வயது முதலே சாமியார் ஆக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பது ஜெயலலிதாவுக்குத் தெரியுமா தெரியாதா ?

இவையெல்லாவற்றையும் தாண்டி, இந்த திருட்டுச் சாமியார் கருணாநிதிக்கு நெருக்கம் என்ற ஒரே காரணத்துக்காகவாவது, இந்த சாமியாரின் கட்டிடங்களை இடித்து, இந்த சாமியாரை தமிழ்நாட்டை விட்டே விரட்ட வேண்டுமா வேண்டாமா ?

இத்தனை வலுவான ஆதாரங்கள் இருந்தும், இன்னும் இது போன்ற திருட்டுச் சாமியார்களை வளர விட்டு வேடிக்கைப் பார்க்கும் ஜெயலலிதாவின் அரசு முட்டாள் அரசா இல்லையா ?

திருட்டுச் சாமியாரும், தொள்ளாயிரம் அடிமைகளும்

சவுக்கு சங்கர் - சவுக்கு இணையம் - 03/09/2014


Source : https://www.savukkuonline.com/7420/



கடந்த வருடம் மூன்று தேசியவிருது வாங்கிய " தங்கமீன்கள் " என்ற திரைப்படத்தில் நாயகன் வறுமையிலும் தனது அன்பு மகளை எப்படி பொக்கிஷமாக கருதி சிறப்பாக உருவாக்க முயற்சிக்கிறான் என்பதே கதை.


மேற்கொண்டு நம் பார்க்கப் போகும் நாயகனும் தன் மகள் மேல் உள்ள அளவு கடந்த பாசத்தை எப்படியெல்லாம் காட்டுகிறார். அதற்காக என்னவெல்லாம் செய்கிறார் என்பதை பார்க்கப் போகிறோம். இவர் ஆஸ்கார் விருதுக்கு முழு தகுதி உடையவர்.

இந்தியாவின் மிகச் சிறந்த குணசித்திர நடிகரும் சிறந்த நடிப்புக் கலை பள்ளியை நடத்தும் அனுப்பம் கேரே அசந்து பாராட்டி "நீங்கள் ஏன் நடிக்க வரக் கூடாது?" என்று இவரிடம் கெஞ்சியதுண்டு. "நான் ஏற்கனவே அதைத்தானே வாழ்கையில் செய்து கொண்டிருக்கிறேன்" என்று அவரது வேண்டுகோளை மறுத்து விட்டார்.



தெலுங்கரான இவர் மைசூரில் பிறந்து, வளர்ந்து தமிழ்நாட்டுக்கு சேவை செய்ய 1989-ம் ஆண்டு தனது காலடியை வைத்த நாள் முதல் தமிழ்நாடு சுபிக்ஷம் பெற்றுவிட்டது.

பசி, பட்டினி, கொலை, கொள்ளை, கற்பழிப்பு, லஞ்சம், பொறாமை, கோபம் போன்றவற்றை தனது *யோகா என்ற ஒரே



ஆயுதத்தால் முடிவுக்கு கொண்டு வந்தவர். தற்போது தமிழ் மக்கள் எல்லாம் "ஆனந்த அலையில்" சிக்கித் தவிக்க காரணமாய் இருப்பவர்.


தற்போது அவர் தமிழ்நாட்டின் தவிர்க்க முடியாத தலை சிறந்த சக்தி. அவருடைய வாகனம் தமிழ் நாட்டில் உள்ள எந்த toll gate இல் சென்றாலும் பணம் கூட வசூலிக்காமல் விட்டு விடுவதாகக் கூறி அவரே பெருமை பட்டுக்கொள்கிறார் என்றால் பாருங்களேன்.

அவர் வேறுயாரும் அல்லஞ் நம்மையெல்லாம் "வாருங்கள் உங்களில் மலருங்கள்" என்று அன்போடு அழைக்கும் சத்குரு என்று தனக்கு தானே பெயர் சூட்டி கொண்ட ஜக்கி வாசுதேவ் அவர்களே.


கோவை வெள்ளியங்கிரி மலை அடிவாரத்தில் சுமார் 400 ஏக்கர் நிலத்தில் யானை வழித்தடத்தில் ஆக்கிரமிப்பு செய்து விதியை மீறி அரசை ஏமாற்றி 5 லட்சம் சதுர அடியில் கட்டிடம் கட்டியுள்ளதும் அதை அரசு முழுவதும் இடிக்க உத்தரவு போட்டிருப்பதும் அனைவரும் அறிந்ததே.

சரி அவருக்கென்ன ? கருணாநிதியும் ஜெயலலிதாவும் அவர் காலடியில். அவர் ஏன் கவலைப்பட வேண்டும் ?

தனது கட்டிடத்தை காப்பாற்ற தனது அடிபொடிகளை ஏவி அதற்காக டெல்லிக்கும் சென்னைக்கும் அலறியடித்துக் கொண்டு பறந்து கொண்டிருக்கும் வேளையிலும் செப்டம்பர் 3ம் தேதி நடக்க இருக்கும் தனது மகளின் திருமணத்தை சீரும் சிறப்புமாக நடத்த தற்போது ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறார். இது ஒரு தந்தையின் கடமைதானே, இதில் என்ன தப்பு? இந்த இடத்தில பலர் அறியாத ஒரு பிளாஷ்பேக்.




ஜக்கியின் கோவை பிரவேச(ஷ)த்திற்கு முன் மைசூரைச் சேர்ந்த சமீபத்தில் மறைந்த **'ரிஷி பிரபாகர்'** என்னும் யோகா குருவிடம் ஆசிரியராக இருந்தவர்தான் ஜகஜ்ஜ்ஜால ஜக்கி. ரிஷி பிரபா கரால் கோவை - திருப்பூருக்கு வகுப்பு நடத்த அனுப்பப் பட்ட ஜக்கி அங்குள்ள செல்வ வளத்தைக் கண்டு ரிஷியின் தொடர்பை துண்டித்து கொண்டார். இவரோடு ஒன்றாக ரிஷியிடம் இருந்த



மைசூர் ராமகிருஷ்ணன் மற்றும் வித்யாகர் இன்றும் யோகா வகுப்புகள் நடத்திக்கொண்டு இருக்கிறார்கள்.

இவற்றையெல்லாம் மறைத்து விட்டு தன்னை ஒரு வாழும் enlightened குரு என்றும் இது தனது மூன்றாவது பிறவி என்றும் முதல் பிறவியில் பில்வாஸ் என்னும் தாழ்த்த ஜாதியில் பிறந்தவன் என்றும் இரண்டாவது பிறவியில் சத்குரு ஸ்ரீப்ரமா என்ற பெயரில் தேனி அருகில் பிறந்து ஊட்டியில் வாழ்ந்து வெள்ளியங்கிரி மலையில் உயிரை விட்டதாக அள்ளி அள்ளி விடுவார்.

தியானலிங்கம் கோவில் கட்டுவது தான் தனது மூன்று பிறவியின் நோக்கம் என்றும் அது முடிவடைந்த உடன் உயிரை விட்டு விடுவதாக உறுதி கொடுத்திருந்தார். ஆனால் சொன்ன சொல்லை காப்பாற்றாமல் 15 ஆண்டுகளாக பலர் உயிரை எடுத்து வருகிறார்(!) என்பதுதான் உண்மை.



ரிஷி பிரபாகரிடம் யோகா ஆசிரியராக ஜக்கி இருந்தபோது, விஜி என்ற பெண் அங்கு வந்து சேர்ந்தார். முந்தைய மணவாழ்க்கை முறிந்து மனமுடைந்த நிலையில் யோகா வகுப்பில் கலந்து கொள்ள வந்த விஜியோடு ஜக்கிக்கு தொடர்பு ஏற்பட்டு அது திருமணத்தில் முடிந்தது. இயற்கையில் மிகவும் கோபமும் உணர்ச்சிவசப்படுபவருமான விஜி, ஜக்கியோடு ஏற்பட்ட பல பிரச்சினைகளுக்கு இடையேயும் 1998-ம் ஆண்டு வரை அவரோடு தான் வாழ்ந்து வந்தார்.



கோவையில் பாரம்பரிய மிக்க ELGI குரூப்பை சேர்ந்த ELGI வரதராஜ் அவர்களின் மகன் சுதர்சன் வரதராஜ். அவர் ELGI நிறுவனத்தின் செயல் அதிகாரி (EXECUTIVE DIRECTOR). அவருடைய அறிமுகம் ஜக்கிக்கு கிடைக்கிறது. இருவரும் நல்ல நண்பர்களான உடன் தனது மனைவி **பாரதி வரதராஜை** யோகா கற்றுக்கொள்ள அறிமுகம் செய்து வைக்க விதியின் (ஜக்கியின்) விளையாட்டு சுதர்சன் வரதராஜ் வாழ்வில் ஆரம்பமாகிவிடுகிறது. இவர் நடத்திய 90 நாள் 'முழு யோகா' வகுப்பில் தனது அலுவல்களையும் விட்டு தனது மனைவியுடன் கலந்து கொள்கிறார் சுதர்சன். செல்வ சீமாட்டி பாரதி ஆந்திரா முன்னாள் எம்.பி., ஒருவரின் மகள். இரண்டு ஆண் குழந்தைகளுக்கு தாயான பாரதியை ஜகஜால ஜக்கி தனது வலையில் வீழ்த்துகிறார். அது எப்படி ?

முதல் பிறவியான பில்வாஸ் மத்திய பிரதேஷில் தாழ்த்த ஜாதியில் (பாம்பாட்டி) பிறந்து உயர்ந்த

ஜாதிப்பெண் ஒருவரால் காதலிக்க படுகிறான். காதலுக்கு எதிர்ப்பு செய்த உயர்ந்த ஜாதி மக்கள் கட்டிவைத்து அவனை விஷப்பாம்பை விட்டு கடிக்கச் செய்து சாகடிக்க, அப்போது தனது மூச்சை(மூச்சாவை அல்ல) தற்செயலாக அவன் கவனிக்க அந்த ஷணத்தில் அவனது பிறப்பின் நோக்கமும் மற்றும் தியானலிங்க கோவில் கட்டும் எண்ணமும் உருவாகி விடுகிறது. அதையடுத்து அவன் இரண்டாவது பிறவியில் ஸ்ரீ பிரம்ஹா என்ற பெயரில் பிறந்தாரம்.

இரண்டாவது பிறவியில் ஸ்ரீ பிரம்ஹா மிகுந்த கோவக்காரராம், தியானலிங்கம் கட்டுவதற்கு பல தடைகள் இருந்ததாம் (அப்போவே forest dept இருந்திருக்கு). அதனால் மிகுந்த கோபத்தில் இருந்த அவருக்கு விபூதி என்னும் பெண் பணிவிடை செய்து வந்தாராம். சரி அதற்கு இப்போது என்ன என்று நீங்கள் கேட்பது புரிகிறது. சரி இதுக்கும் பாரதிக்கும் என்ன ?

அட சாமி, இன்னுமா புரியல ? அந்த உயர்ந்த ஜாதி பணிவிடைப் பெண் தாங்க நம்ம பாரதி. அதாவது பல ஜென்ம தொடர்பாம் !


இந்த கதையை பாரதியிடம் நேரம் பார்த்து அவிழ்த்துவிட யோகாவும் சேர்ந்து வேலை பார்க்க விபூதியுடன் நெத்தியில குங்குமத்தையும் வச்சிட்டன் ஜக்கி.

(கதைக்கு அலையிற சினிமாகாரர்கள் எல்லாம் சத்குருவ எனக்கு நல்லா தெரியும்முன்னு நாளைக்கே வண்டியேறி போயிரதீங்க)


அப்போ விஜி யாரு ? அதுக்குதா இருக்கவே இருக்கே தங்கச்சி ரோல் என்னும் கேரக்டர் ரோல். விஜி முந்தைய பிறவியில் இவரின் தங்கச்சியாம். உலகம் சுற்றும் வாலிபன் எம்ஜிஆரையே விஞ்சி விடுவான் இந்தத் திருடன்.

இவர்கள் மூவரும் தியானலிங்கம் கட்டுவதற்காக பல கோவில்களை பார்த்துவர இந்திய முழுவதும் காரிலே பயணித்தார்கள். அதற்கு "கர்ம யாத்ரா" என்று பெயர். கருமம் பிடிச்ச யாத்திரை அல்ல. கர்மாஞ். கர்மாஞ் இவர்கள் நெருக்கம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர விஜிக்கு ஜக்கிமேல் சந்தேகம் வர சண்டையும் வர அது யோகா வகுப்பில் தீட்சை கொடுக்கும் இடம் வரை பரவி, விஜியின் ருத்ர தாண்டவத்தை கண்ட பலர் இன்னும் உயிரோடு உள்ளனர்.

பிறகு விஜி தனது "அணாகத்தா" சக்ராவில் இருந்து தனது உயிரை விட்டதை பார்க்கும் பாக்கியத்தை ஜக்கி யாருக்கும் கொடுக்கவில்லை. விஜியின் தந்தை காங்கன்னா தன் மகளை ஜக்கிதான் கொன்று விட்டதாகவும், ஆசிரமத்தில் ஜக்கியிக்கு வேறு ஒரு பெண்ணுடன் தொடர்பு இருப்பதாகவும் கொடுத்த புகாரில் இவர் சிக்காமல் 6 மாதம் ஓடி ஒளிந்து, ஏதோ கரூர் மற்றும் திருப்பூர் தொண்டர்களின் தயவால் தப்பி விஜிக்கு ஒரு சமாதியும் எழுப்பி விட்டார். பாரதியும் தனது கணவர் சுதர்ஷனை விவாகரத்து செய்துவிட்டு குடும்பத்தை துறந்து ஜக்கியுடேனே ஆன்மீக பணியாற்ற வந்தும் விட்டார்.



ஜக்கியின் பிடியில் பாரதி



The following is the Indian Express report as appearing on October 12, 1997 about Police registering a case of murder by Jaggi Vasudev:

Coimbatore, Oct, 11: Close on the heels of scandals relating to fake godmen getting exposed, yet another ashram from Coimbatore is in the limelight with Jaggi Vasudev aliash Jagadeesh of Isha Yoga ashram at Poondi near Coimbatore, being charged with the murder of his wife Viji alias Vijayakumari.A team of police personnel recently visited the premises of Isha Ashram at poondi and interrogated the inmates of the ashram. Godman Jaggi is away in the US.According to police, T. S. Ganganna of Bangalore (father of Viji) had preferred a complaint with the Bangalore Police suspecting foul play in the death of his daughter Viji. The complaintant had stated that his daughter left him last on June 15, 1996. He reportedly received a message on January 23, 1997, from Jaggi Vasudev, stating that Viji was no more.Ganganna said that Jaggi Vasudev had hurriedly completed the cremation on Jan.24 even before they could rush from Bangalore, raising suspicion about the nature of death. He suspected death due to poisoning or strangulation.According to him, Jaggi Vasudev could have caused the death of Viji to facilitate his illicit relationship with yet another inmate of the ashram. Based on the complaint of Ganganna to the Bangalore City Police on Aug. 12, a case was registered.The Bangalore City Police transferred it to the Coimbatore Rural Police.The Coimbatore Rural Police have registered a case against Jaggi Vasudev under Section 302 of IPC (murder) and IPC 201 (suppression of evidence).Later. Isa Yoga Foundatrion has denied reports that Jaggi Vasudev had fled to USA to avoid investigation of ashram. Authorised Signatory of Ashram Kiran stated that Guruji had gone for giving lectures . ***ENS***



விஜிக்கும் ஜக்கியிக்கும் பிறந்த குழந்தை ராதே பள்ளிப் படிப்பை ரிஷி valley *என்ற சிறந்த பள்ளியில் துவங்கினார். ஆரம்பத்தில் தனது அம்மாவின் சாவுக்கு தனது தந்தை தான் காரணம்னு இருந்த ராதேவின் மனதை மாற்றி மாமனார் குடும்பத்தோடு நெருங்காமல் பார்த்துக் கொண்டார்.*

ஆனால் தங்கமீனை பெற்ற தந்தை என்ற கடமையில் ஜக்கி சிறந்து விளங்கினர். அவளை தனது "பாஸ்" என்றே எல்லோரிடமும் கூறி மகிழ்வார்.

ராதே பள்ளி படிப்பை முடித்தவுடன் இந்தியாவின் தலைசிறந்த நாட்டியப் பள்ளிகளில் ஒன்றான சென்னையில் உள்ள கலாஷேத்திராவில் சேர்த்துவிடுகிறார் ஜக்கி.

அவள் வளர்ந்து வந்த பின்பு அவளுக்கு ஒரு தொழிலும் அமைத்து கொடுக்க திட்டமிடுகிறார் இந்த திட்ட வல்லுநர். அதற்கு கோவையில் சிறப்பாக நடந்துகொண்டிருந்த ரியல் எஸ்டேட் தொழிலையும் தேர்ந்தெடுத்தார்.

ஈஷாவின் கட்டிடம் அனைத்தும் சிறப்பாக வியக்கத்தகும் வகையில் அமைய உண்மையில் காரணமானவர்கள் கார்த்திக் மற்றும் அவர் மனைவி பாமா ருக்மணி என்ற கட்டிட கலை நிபுணர்களே. கோவையில் துரியா பர்னிச்சர்ஸ் (Thuriya furnitures) என்ற பெயரில் சிறப்பாக தங்கள் தொழிலை நடத்தி கொண்டும் எந்த பிரதி உபகாரம் பாராமல் ஈஷாவிற்கு கட்டிடம் கட்ட உதவி புரிந்து கொண்டும் இருந்தார்கள்.



2005இல் Architect கார்த்திகை அழைத்து தனது மகள் ராதேக்கு ஒரு தொழில் அமைத்து கொடுக்கும் ஆசையை தெரிவிக்க Thrishul Shelters என்னும் நிறுவனம் துவங்கப்பட்டது. அதன் பங்கு தாரர்களாக

1. பாமா ருக்மணி (Managing Director) 2. பாரதி (Director) race course coimbatore 3. V .ஜகதீஷ் (Director) mysore address என்று கோவை registrar of companies (ROC) யில் பதியப்பட்டுள்ளது.

Trishul Shelters Private Limited was registered on 06 July, 2005. Trishul Shelters Private Limited's Corporate Identification Number (CIN) is U45201TZ2005PTC 011969, Registeration Number is 011969.

Their registered address on file is 3 V K K Menon Street Velandipalayam, Coimbatore, Coimbatore - 641025, Tamil Nadu, India.

Trishul Shelters Private Limited currently have 2 Active Directors / Partners:Bharathi Varadaraj, Ruckmini Karthikeyan, and there are no other Active Directors / Partners in the company except these 2 officials.

1989இல் இருந்து கோவையில் வசிக்கும் ஜக்கி, தேர்தலுக்கு மறக்காமல் வரிசையில் நின்று ஓட்டு போடும் ஜக்கி எதற்காக கள்ளத்தனமாக மைசூர் விலாசத்தை கொடுக்க வேண்டும்? அதிலும் தனது தொழில் - வியாபாரம் என்று குறிப்பிட்டு உள்ளார். மேலும் பாரதியையும் ஒரு பங்குதாரராக சேர்த்து தங்கள் உறவை உறுதிபடுத்தியும் உள்ளார்.


அவருடைய Economic development பத்தி சொல்றாரு !! உன் எகனாமிக் டெவலப்மென்ட் பத்தி பேசு மாமு. இந்த Thrishul shelters துவங்க உனக்கு ஏது பணம் ?

கடை தேங்காயை எடுத்து வழி பிள்ளையாருக்கு உடைத்து அதை contract விடும் திறமை கொண்டவர் அல்லவா.

எப்போதும் வாங்கியே பழக்கப்பட்ட நம்ம நாயகன் பணத்திற்கு கார்த்திக்கின் சொத்துக்களையே கோவை City Union Bank, Oppanakara st branch-ல் வைக்கச் செய்து 6 கோடி கடன் பெற்று தொழில் துவங்கினர்.

ஆகாஷமல்லி போன்ற பல கட்டிடங்கள் வாஸ்து முறைப்படி(வாஸ்து பற்றிய ஜக்கியின் நக்கல் நய்யண்டிகளை ஈஷா CDகளில் காண்க) கட்டி விற்பனை செய்து வருவாயை

100Rs.



தமிழ்நாடு तमिलनाडु TAMIL NADU

R. RATTINAM,
COIMBATORE

B. Objects incidental and ancillary to the attainment of the main objects are:

1.To pay for any immovable or movable property of assets of any kind acquired by the company or for any services rendered or to be rendered to the company and generally to pay or discharge any consideration to be paid or given by the company, in money or in shares whether fully or partly paid up, debentures or debenture stock or obligations of the company or partly in another or otherwise however with power to issue any shares either as fully paid-up for such purposes.

2.To do the business on its own account or on account of the Constituents, as buyers, sellers, importers, exporters, agents of all goods and merchandise in which the company is authorized to deal.

V.The Authorised share capital of the company is Rs.2,00,000 (Rupees Two Lakhs only) divided into 20,000 (Twenty Thousand only) equity shares of Rs.10(Rupees Ten only) each with powers to increase or reduce the capital and to divide the shares in the capital into such clauses subject to the provisions of the Companies Act, 1956.

We, the several persons whose names and address are subscribed below are desirous of being formed into a company, in pursuance of the memorandum of association and we respectively agree to take the number of shares in the capital of the company set opposite to our respective names.

Sl. No.	Name of the subscriber	Addresses, Description & Occupation	No.of shares taken by each subscriber	Signature
1.	RUCKMINI KARTHIKEYAN W/o. P. KARTHIKEYAN	3, VKK MENON STREET, VELANDIPALAYAM COIMBATORE-25 BUSINESS	3334 THREE THOUSAND THREE HUNDRED AND THIRTY FOUR	
2.	BHARATHI. V D/o M.V.V.S. MURTHY	166, RACE COURSE COIMBATORE-18 BUSINESS	3333 Three thousand three hundred and thirty three only	
3	JAGADESH. V S/o, Dr.B.V. VASUDEV	2711/7, Prashant, Gokulam Road, V.V. Mohalla, MYSORE (Business) 570002	3333 Three thousand three hundred and thirty three only	
		TOTAL NO.OF SHARES TAKEN	10,000 (Ten Thousand only).	

Place : Coimbatore
Dated : 28.06.2005
Witness to the above signatures
All Signed before me at Coimbatore

S.L
(L. KAMESH)
S/o S LAKSHMINARAYANAN
"LAKSHMI"
[illegible] RENSHI ROAD
[illegible] -641 018

7

பெருக்கியது நிறுவனம். 2013ம் ஆண்டு இந்த நிறுவனத்தின் மதிப்பு சுமார் 70 கோடி. கோவை மற்றும் மைசூரிலும் சொத்துக்கள் வாங்கி போடப்பட்டுள்ளது.

இந்த நேரத்தில் தனது மகள் ராதேயும் பரதக் கலையை முழுமையாக கற்று உலகுக்கு அர்பணிக்கும் நேரம் வந்துவிட்டதால் வெறும் ராதேயாக அவளை எப்படிக் களம் இறக்குவது. ஒரு அனிதா ரத்தினம் (TVS group) போல் தன் மகளும் வளர வேண்டும் என்று யோசித்த ஜக்கி தனது மகள் ராதேவை, ராதே ஜக்கியாக ஆக்கி Thrishul Shelters-ன் Managing Director ஆக்கி விடுமாறு கார்த்திக்கிடம் கூற இவரின் தந்திரம் கார்த்திக்கிற்கு புரிய... சண்டை தொடங்குகிறது. கவுண்டர் சமுகத்தை சேர்ந்த செல்வாக்கு மிக்க கார்த்திக்கும் தனது பலத்தை காட்டஞ் விஷயம் கோவை போலீஸ் உயரதிகாரிகள் முன்னிலையில் பஞ்சாயத்துப் பேசி முடியாததால் தற்போது ஹை கோர்ட்டில் கேஸ் நடத்தப்படுகிறது.

தியானம்.. அமைதி.. .ஆனந்தம் - அதனால் என்ன, ஒரு தந்தையாய் தன் மகளுக்கு செய்யப்பட வேண்டிய கடமை தானே இது என்று கேட்கத் தோன்றும்.

" You can go through life untouched, you can play with life whichever way you want, and still life cannot leave a scratch upon you. That is the miracle that we are working to manifest in every human "

இதைப் படிபவர்களுக்கு ச்சை.. இப்படி ஒரு வாய்ப்பு யாராவது நமக்கு கொடுத்தால் அதை பயன்படுத்தாமல் விடக்கூடாது என்று தானே தோன்றும் ?

இப்படி நம்ம ஜக்கி பல பொன்மொழிகளை அவுத்துவிட்டு கூட்டத்தை கூட்டுவாரு.

http://www.ishafoundation.org/Inner-Transformation/sanyas-brahmacharya-path-of-the-divine-sadhguru-isha-foundation.isa

மேல உள்ள link ஈஷாவின் இணையதளத்தில் சன்யாசம் பற்றியது.

இவரின் வார்த்தையை உண்மையென்று நம்பி 400-க்கும் மேலானோர் இதுவரை துறவறம் எடுத்திருப்பார்கள். துறவறம் கொடுப்பதற்கும் பயங்கர பில்டப் எல்லாம் கொடுப்பாரு. அவர்களுக்கு கேள்வியே பட்டிராத வாயில் நுழையாத பெயர் மாற்றம், அவர்கள் முக்திக்கு மட்டுமல்ல அவர்கள் குடும்பத்தினர் அனைவரின் முக்திக்கும் (முக்திக்கும் மட்டும்) உத்திரவாதம், மறுபிறவி இல்லை என்ற உறுதி எல்லாம் கொடுப்பார். அவர்களை தனது அங்கங்கள்(ஈஷாங்க) என்று வர்ணிப்பார். உலகத்தின் எந்த மூலையில் இருந்தாலும் அனைவர்க்கும் தான் ஒரு கவசமாக இருந்து காப்பாற்றுவேன் என்றெல்லாம் நம்பவைப்பார்.

ஆனாலும் அனைவருக்கும் வருடம் தவறாமல் health insurance premium கட்டிவிடுவார். இந்த பிக்காளிப் பயல்களும் அவர் சொல்லுவதை ஓவரா புரிஞ்சிகிட்டு கட்டுவானுங்க.

ஆன்மீக பாதைக்கு துறவற வாழ்க்கைதான் சிறந்தது என்றும். குடும்ப வாழ்கை ஒரு சுமையோடு மலை ஏறுவது போல கடினமானது என்றெல்லாம் தமிழிலும் ஆங்கிலத்திலும் பொளந்து கட்டுவார். இதை கேட்டு, எதுக்கு சுமை என்று பலர் தங்கள் குடும்பங்களை (கணவன் / மனைவி) கூட துறந்திருக்கிறார்கள். ஆனால் அவர்களிடம் வரும்போது மறக்காமல் அவர்கள் சொத்துக்களை பிரித்து வாங்கி வந்து விடுமாறு அறிவுறுத்தப்படும்.

இந்த குற்றச்சாட்டு சற்று மிகைப்படுத்தியும் நம்ப முடியாததாகவும் தோன்றும்.

கரூரில் பிரபலமான பரமேஷ் என்பவரின் குடும்ப கதையே இதற்கு சான்று. 2006 இல் இது சன் டிவியிலும் அனைத்து பத்திரிகையிலும் வந்ததை நாம் வழக்கம் போல் மறந்து விடுவோம்.

இப்பேற்பட்ட ஆன்மீகத்தின் உச்சமானஞ்தெய்வீகத்தின் அம்சமானஞ்துறவற வாழ்கையை யாருபெத்த பிள்ளைகளுக்கோ கொடுக்கும் இவர் தான் பெத்த தங்கமீனுக்கு கொடுக்காமல் வஞ்சிக்கலாமா? எதோ வயசு கோளாறில் சனிக்கிழமையில் நண்பர்களோடு நட்சத்திர


விடுதியில் நீராடுவதெல்லாம் ஒரு தப்பா? இவருக்கு பிறந்ததனால் அவளுக்கு அந்த தகுதி இல்லையா ? இதற்கு அவர் என்ன சப்பை கட்டு கட்டுகிறார் என்று பார்போம்.



பார்ட்டி மூடில் ராதே

குடும்ப வாழ்கையில் விருப்பம் உள்ள வர்களுக்கு துறவறமோ, ஆன்மீகத்தில் விருப்பம் உள்ளவர்களுக்கு திருமணமோ செய்து வைத் தால் மிகுந்த பாதிப்பு உண்டாகும் என்று கூறுகிறார். மேலும் நான் யாரையும் துறவறத்தில் தள்ளுவ தில்லை, விருப்பப்படும் நபர்களை அவர்களின் உயிர் சக்தியை நீண்ட பரிசோதனைக்கு உட் படுத்திப் பார்த்தப் பின்னர் தான் துறவறம் வழங்கப்படுகிறது என்றும் கூறுகிறார்.


நிர்பந்தத்தில் துறவறம் கொடுக்கப்படவில்லை என்றல் ஏன் இதுவரை 150-க்கும் மேலான சாமியார்கள் இதுவரை வெளியேறினார்கள்? கோபமே வராத பல மனிதர்களை உருவாக்கி உள்ளேன் என்று பீற்றிக் கொண்டாரே.. அவர்கள் ஏன் கோபித்து கொண்டு ஓடினார்கள்?



குடும்ப வாழ்கையில் இருந்து கொண்டும் ஆன்மீக தொண்டு ஆத் தலாம் வாங்கஞ் டீ ஆத்தலாம் வாங்கஞ் என்று இவர் கூறியதை நம்பி வந்தவர்களில் வெளியே சென்றவர் களின் எண்ணிக்கை மட்டும் ஆயிரத் தை தாண்டும். இதில் தமிழ்நாட்டை சேர்ந்த **பாலமுருகன்** என்னும் பஞ்சாப் Cadre IAS ஆபிசரும் அடக்கம். 5 வருட காலம் ஈஷாவின் சிணிளி வாக சம்பளம் இல்லாமல் தொண்டு புரியும் ஆவ லோடு வந்தவருக்கு 2 வருடத்திலேயே ஒரு/பல உண்மை புரிய, ஆள உடுங்கடா சாமின்னு.. பின்னங்கால் பிடரியில் அடிக்க ஓடியே விட்டார்.

இவர் மட்டுமல்லாது ஜக்கியுடன் 20 - 25 ஆண்டுகள் மேல் மட்டத்தில் மிக முக்கிய பொறுப்பில் இருந்த பலர் இன்று வெளியேறிவிட்டார்கள். குறிப்பாக **திலிப் அண்ணா** என்று ஈஷாவாசிகளால் அன்போடு அழைக்கப்படும் திரு.திலிப் என்ற AUDITOR ராஜரத்தினம் ஈஷாவின் Managing Trusteeயாக 1999 - 2010வரை இருந்து வந்தார். விஜியின் இறப்பின் மர்மத்தில் தான் கைது செய்யபடுவோம் என்று எதிர்பார்த்து அவருக்கு பதிலாக இந்த பதவியில் திலிப்பை அமர்த்தினார். இவரின் ஆன்மீக அறிவு ரையை கேட்டு ஒரு குழந்தை கூட பெற்றுக் கொள்ளாமல் தவிர்த்து விட்டனர் திலீப் வித்யா தம்பதியினர். நிலங்கள் வாங்குவதில் ஜக்கி காட்டும் பக்கித்தனதையும், தீவிரத்தையும், குறுக்கு பாதை யையும் கண்டு Managing Trusteeயாக கையெழுத்திட பயந்து ஜக்கியை எதிர்க்க, அவரை அந்தப் பதவியில் இருந்து விடுவித்து விட்டார். ஈஷாவில் நடந்த அத்தனை தகிடுதத் தங்களுக்கும் ஒரே சாட்சியாக இருந்தவர் திலீப் ஒருவரே. ஈஷாவில் இருந்து விலகியே இருந்த திலீப் சென்ற வருடம் அக்டோபர் மாதம் கோத்தகிரி மலைப்பாதையில் ஒரு மர்மமான விபத்தில் மரணம் அடைந்தார். இதை பற்றிய ஒரு செய்தி நமது சவுக்கிலும் அப்போது வெளிவந்தது.





கட்டத்துக்குள்
திலீப்

இவரே மற்றொரு முறை நமது கலாச்சாரத்தில் 30% பேர் துறவறத்தில் இருந்ததாகவும் தற்போது உள்ள மக்கள்தொகையோடு ஒப்பிட்டால் இப்போதுள்ள துறவிகள் போதாது என்ற புள்ளிவிவர கணக்கை காட்டி பீதியை கிளப்பினார்.

ஏன் இப்படி மாத்தி மாத்தி பேசுகிறீர்கள் என்று கேட்டால் நான் கேள்வி கேட்பவனுக்கு தான் பதில் கூறுகிறேன்ஞ் கேள்விக்கு அல்லஞ் என்று கூறி குழம்பிய குட்டையில் துண்டில் போடுகிறார்.

பெத்த தாய் தந்தையை அனாதையாக விட்டு விட்டு அப்படி என்ன ஆன்மீகம். இது அவசியமா? என்று கேட்டதற்கு "உங்களுக்கு எல்லாம் பக்கத்துக்கு வீட்டு விவேகானந்தரை தான் பிடிக்கும். உங்கள் வீட்டில் உருவாக விடமாட்டீர்கள்" என்று நக்கல் அடிப்பார். உங்கள் மகளை ஏன் ஒரு பெண் விவேகானந்தராக உருவாக்காமல், பப்களில் சரக்கடிக்க வைத்துள்ளீர்கள் என்று கேட்டால் பதில் சொல்லமாட்டேன் என்கிறார்.

இயற்கைக்கு எதிராக எந்தச் செயல் செய்தலும் தவறாகத் தான் போகும் என்று கூறும் இவர், சந்நியாசத்தில் இருக்கும் போது தங்களுக்குள் இயற்கையின் தேவையால் மலர்ந்த காதலை கூறி தங்களுக்கு திருமணம் செய்து வைக்குமாறு வேண்டிய கரூர் வேலாயுதம் சோமு, புதுச்சேரி ஸ்ரீ தேவி அவர்களை தனது சுய லாபத்தை மனதில் கொண்டு மற்றவர்களும் இந்த பாதைக்கு மாறிவிடுவார்கள் என்று பயந்து காதலர்களை பிரித்து தனி அறையில் அடைத்து வைத்தார்.



இருவரும் சேர்ந்தால் சோமு இறந்துவிடுவான் என்றெல்லாம் பூச்சாண்டி காட்டி வந்தார். ஆனால் திருமணம் என்ற முடிவிலும் காதலில் தீவிரத்தோடும் இருந்த அவர்கள் உண்ணாவிரதம் இருக்கத் தொடங்க, ADMINISTRATOR சுவாமி **நிசர்கா** என்ற **ஹெப்பர்** என்பவரை வைத்து அடித்து துன்புறுத்தியும் பார்த்தார் ஜக்கி.

ஆனாலும் உண்ணாவிரதத்தை கைவிட மறுத்தார் சோமு. அவருக்கு ஏற்கனவே காசநோய் (T.B) இருந்த காரணத்தால் எதிர்ப்பு சக்தி குறைந்து மரணத்தின் தருவாயை எட்டியதும், வடநாட்டு சிகிச்சைக்கு கொண்டு செல்கிறோம் என்று சொல்லி கொண்டு சென்றார்கள். போன சோமு போனது தான். அதன் பிறகு இன்று வரை யாரும் சோமுவைப் பார்க்க வில்லை. அவர் என்ன ஆனார் என்ற விபரமும் இல்லை.

சோமுவைவிட காதலில் தீவிரமாக இருந்த பிராமண வகுப்பை சேர்ந்த ஸ்ரீ தேவி கடைசிவரை உண்ணாவிரதத்தை தொடர்ந்து மரணத்தை தழுவினாள் . அவர்கள் குடும்பத்தினரிடம் நல்ல பாம்பு கடித்தது இறந்துவிட்டதாக கூறி உடலை ஒப்படைத்து விடுமாறு கூறிவிட்டார். மேல்மட்டத்தில் உள்ள ஆசிரமவாசிகளுக்கு இந்த விஷயம் கசிய, அதை சரி செய்ய தகுந்த சந்தர்ப்பத்திற்காக காத்திருந்தார்.

பின்நாளில் இதே போல் மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தில் லோக்னேத்ரா என்ற சன்யாசி பையன் ஆசிரமத்தின் PUBLIC RELATION அதாவது பணம் யாரிடம் எல்லாம் இருக்குன்னு உளவு பாத்து அதை மொத்தமா புடுங்குற வேல பாத்துக் கொண்டு இருந்தன். இவன் ஒரு மருத்துவம் படித்த பெண்ணை டாவடிச்சு கல்யாணம் பண்ணிவைக்க ஜக்கியை கேட்டான். ஒரே கல்லில் பல மாங்காய் என்ன ஒரு மாந்தோட்டத்தையே அடிச்சி காலி பண்ணும் இவர் இதற்கு ஒப்பு கொண்டார். காரணம் "லோக்னேத்ரவின் சேவை ஆசிரமத்துக்கு தேவை." சோமு / ஸ்ரீ தேவி சாவின் ரத்தக்கறையும் கழுவியாச்சு. எப்பூடி....


சரிஞ்சரி இந்த பொழப்புக்கு வேற தொழில்ஞ்..னு நீங்க திட்றது கேட்குது. இதுக்கேவா..?

தற்போது லோக்னேத்ரா வெளி மாநிலங்களிலும் டெல்லியிலும் தனது ஆன்மீக சேவையை டாக்டர் அம்மாவோடு ஆத்திக் கொண்டு இருக்கிறார்.

இது போல இன்னும் பல ஜோடிகள் ஈஷாவில் இருந்து முக்தி கிடைத்து வெளியேறி விட்டதை ஈஷா யோகா வகுப்பில் கலந்து கொண்டவர்கள் அறிவார்கள்

"பொறுப்புக்கு எல்லை இல்லை" - "இந்த ஷணம் தவிர்க்க முடியாது" - ஒரு குழந்தையில் ஆரம்பிச்சி படிப்படியா லட்சம்.. கோடி.. குழந்தைக்கு "தாய் தந்தையா இருக்க முடியுமா.. பாருங்க..." அப்படின்னு ரகசிய குரல்ல கேப்பாரு நம்ம ஜக்கி!

சரி இப்போ இவரோட பொறுப்பு எந்த அளவுக்கு பருப்பா இருக்குன்னு பாப்போம்.



தலைவருக்கு எப்போதும் எதுலேயும் ஸ்பீடு.. ஸ்பீடு.. ஸ்பீடு.. வேணும்... மாமே!!! இவர் கார் எடுத்தால் பறப்பார்னு எல்லோருக்கும் தெரியும்.

1997ம் வருடம் அப்போது வச்சிருந்த TATA Siearra வண்டியில கோவையில் இருந்து மைசூர் நோக்கி வழக்கம்போல் பறந்து கொண்டு இருந்த போது பண்ணாரி அருகில் வண்டி ஒரு சிறுவனை அடித்து தூக்கியது. பையனை காப்பாற்ற ஆஸ்பத்திரிக்கு தூக்கிக்கொண்டும் ஓடினார். எதோ காரணத்தினால் அன்று இவரின் ஆன்மிக பவர் கம்மியாக இருந்ததினால் பையனை குருஜியால் காப்பாற்ற முடியாமல் சிறுவன் இறந்துவிட்டான்.

இது எல்லோருக்கும் நடக்கும் விபத்து தானே. பாவம் அவர் என்ன செய்வார்னு சொல்வீங்க.

ஒரு விபத்து நடந்தால் ஓட்டுனர் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டு வழக்கு தொடரப்பட்டு நடத்துவது தான் பொது நடைமுறை.

அனால் இவர் வழக்கை எதிர்கொள்ள பயந்து, நெருங்கிக்கொண்டு இருக்கும் தியானலிங்க பிரதிஷ்டை வேலை இதனால் தடைபடும்பாஞ் என்று கூறி ராமு என்ற ஒரு தீவிர பக்தனை இவருக்கு பதிலாக மாட்டிவிட்டு இவர் தப்பித்து கொண்டார். இதில் இந்தியாவில் மக்கள் குழந்தைகளை பன்னிக்குட்டி போல் பெத்துப்போடுகிறார்கள் என்று நக்கல் வேறு.

2010-ல் கோவை நிலாம்பூர் பைபாஸ் ரோட்டிலும் நடந்த விபத்திலும் இதே வழிமுறை தான்.

இதல்லாம் நம்பற மாதிரி இல்லையே. அதெப்படி இதன்னை பேர் இருக்கும் இடத்தில அத்தனை பெரும் ஏமாளிகளா என்று கேள்வி எழும் உங்களுக்கு.

அங்க தான் இருக்கு ஜக்கியின் குள்ள நரித்தனம்.

சந்யாசிகள், முழுநேர யோகா ஆசிரியர்களோடு வருடத்தில் சில மணி நேரத்தை செலவிடுவார். அப்போது தான் இப்பிறவியில் வந்த நோக்கம் முழுமையாக நிறைவேற, இப்போது செல்லும் வேகம் இன்னும் பல ஆண்டுகள் பிடிக்கும். ஆனால் என் விருப்பம் விரைவில் முடித்துக்கொண்டு விடைபெறுவதுதான். சிவன் எனக்கு கொடுத்த காலம் முடிவடைந்துவிட்டது. தற்போது பணிநீட்டிப்பில் இருக்கிறேன். இரவு நேரத்தில் எனது மர்மஸ்தானத்தை ஒரு பெரிய பாம்பு ஒன்று வந்து கடிக்குது, அதை பாரதி கூட பாத்தது, ஒரு பெண் யோகி ஆவி இங்க சுத்துது, பல ஆவிகள் இங்க டிராபிக் ஜாம் பண்ணுது, என்னுடன் வந்த யோகிகள் எல்லாம் என்னை விட்டுவிட்டு போகுது, அமெரிக்க டாக்டர் என் மூளையை பரிசோதித்து விட்டு இவர் இறந்து பலவருடம் ஆகுது என்று கூறினார்கள் என்று உருகி உருகி பல விதமான கதைகளை அள்ளி விடுவார்.

இப்ப வேல பாக்கிற வேகமும், ஆட்களும் பத்தாது. அதுக்கு உங்களால என்ன செய்ய முடியும்னு பாருங்க அப்படின்னு நாசுக்கா சொல்லிவிட்டு கும்பிடு போட்டு ரெண்டு சொட்டு கண்ணீரையும் விட்டுட்டு போயிருவாரு. இத கேக்குற நம்ம பய பக்கிங்க நாம மாட்னது பத்தாது, இன்னு எத்தன பேர மாட்ட வைக்கலாம்னு அப்போவே யோசிக்க ஆரம்பிடிச்சு விடுவாங்க. ஆனால் என்ன பண்ணவேண்டும் என்கிற திட்டத்தை மேல்மட்டத்தில் அதற்கு முன்பே கொடுத்திருப்பார் ஜக்கி. திட்டத்தை மீட்டிங் போட்டு கேட்டுவிட்டு நம்ம மொட்டைகளும் பக்கிகளும் கோவணத்தை இறுக்கி கட்டிவிட்டு விஸ்வருபம் எடுத்து வேலை பார்க்க தொடங்கிவிடுவார்கள்.

யோகா வகுப்பிற்கு வரும் துடிப்பான தன்னர்வத் தொண்டர்களிடம் மெல்ல பேசி ஆசிரமத்துக்கு வாங்கோன்னா அட... வாங்கோன்னா என்று வலை விரிக்க எலியும் வலையில் சிக்க, ஆரம்பத்தில் சற்று குறைவான வேலைகளை கொடுத்து தியானலிங்க கோவிலில் அதிக நேரம் செலவிட வைப்பார்கள்.

மெல்ல மெல்ல அவர்கள் மனம் அந்த சூழ்நிலையால் ஆக்கிரமிக்க பட்டு முடிவில் மொட்டை போட்டு சந்யாசம் எடுக்கும் எண்ணத்திற்கு வருவார்கள்.

தங்கள் பிள்ளைகள் யோகா தியானம் கத்துக்கொள்வதில் பெருமை அடையும் பெற்றோர்கள் பிள்ளைகள் பல மாதம் வருவதும் இல்லை போனும் பண்ணுவது இல்லை என்றவுடன் சந்தேகம் வந்து நேரில் பார்க்க வருபவார்கள் தலையில் இடியாய் விழும் இந்த செய்தி. கத்தியும், கூச்சல் போட்டும் பார்ப்பார்கள் பெற்றோர்கள். பிள்ளைகள் வர மறுப்பார்கள். ஊரில் உள்ள மாமன் மாச்சான்களை கூட்டி வந்து அடிதடியில் இறங்குபவர்களுக்கு பிள்ளைகளையும் கண்ணில் காட்டாமல் ரூமுக்குள் விட்டு தனி கவனிப்பு தான். அடுத்த கட்டமாக தங்கள் ஊரில் உள்ள காவல் நிலையத்தில் சொல்லி ஒரு ஏட்டுடன்

வருவார்கள் பிள்ளையை பெற்றவர்கள். தமிழ்நாட்டின் எங்கோ ஒரு மூலையில் உள்ள உத்தமபாளையத்து ஏட்டுக்கு இவர்கள் பலம் எங்கே தெரியபோகிறது. வீரமாக வரும் ஏட்டு, ஆலந்துறை ஸ்டேஷன் லிமிட்டோடு வண்டியை திருப்பிவிடுவார். இதை எல்லாம் சமாளிக்கவே பயிற்சி கொடுக்கப்பட்ட கை தேர்ந்த ஒரு குழு அங்குண்டு.

அப்போதும் மனம் தளராத பெற்றோர் இந்திய ஜனநாயகத்தின் ஒரு தூணில் சென்று மோதுவார்கள். கோவை குதிரைவண்டி கோர்ட்டில் வழக்கு வரும், ஆசிரம எஸ்கார்ட் உடன் வரும் பிள்ளை 20-22 வருஷம் வளர்த்த பெற்றோர் முகத்தை கூட பார்க்காமல் நிதிபதியின் முகத்தை பார்த்து 18 வயது பூர்த்தியான நான் எனது விருப்பபடியே இந்த சன்யாச பாதையில் செல்கிறேன். எனது குருவோ, ஈஷாவோ என்னை கட்டாயப் படுத்தவில்லை என்று வாக்குமூலம் அளிக்க வழக்கு தள்ளுபடி செய்யப்படும். கடைசியாக பார்த்து கதறும் பெற்றோரிடம் பிள்ளைகள் கூறும் சமாதனம் "நான் மிகுந்த சந்தோஷத்தில் இருக்கிறேன். என்னை தொல்லை செய்யாமல் எப்போவாது வந்து பாருங்கள்"

http://www.ishafoundation.org/component/option,com_newscomponent/Itemid,222/act,view/id,2882/

ஒரு சில வசதியான செல்வாக்கு மிக்க பெற்றோராய் இருந்தால் பிள்ளைகளை விட்டு கடைசி ஆயுதமாக "என்னை இப்படியே விட்டால் உயிரோடு இருப்பேன் இல்லை தற்கொலை செய்து கொள்வேன்" என்று மிரட்ட வைக்க கண்ணீருடன் சென்று விடுவார்கள் பெற்றோர்.

18 வயது ஆனவர்கள் எப்படி தங்கள் வாழ்கை பாதையை அமைத்து கொள்ளும் உரிமையை எந்த சட்டம் கொடுக்கிறதோ, அதே சட்டம் தான் வயதான பெற்றோர்களை கவனிக்காத பிள்ளைகளின் மேல் நடவடிக்கை எடுக்க முடியும் என்று முதியோர் நல சட்டம் கூருகிறது. ஆனால் பெற்றோர்கள் பாசத்தால் இவர்கள் மேல் புகார் கொடுக்க மாட்டார்கள் என்பது தான் இவர்களுக்கு வசதி.

சந்நியாசிகள் தங்கள் பெற்றோர்கள் உயிருடன் இருந்தாலும் கூட அவர்களுக்கு செய்ய வேண்டிய கடைசி காரியங்களை செய்துவிட்டுதான் இந்த பாதைக்கு வருவார்கள் என்று பெருமையாக கூறி கொள்வார் ஜக்கி.

சந்நியாசம் எடுத்தபின் அவர்கள் குடும்ப தொடர்பு முழுவது நிறுத்தப்படும். ADMINISTRATOR என்ற தலைமை சந்நியாசிகள் கண்காணிக்கப்படுவார்கள். கல்விச் சான்றிதழ்கள் அனைத்தும் வாங்கிவைத்துக் கொள்ளப்படும். அவர்கள் பெயரில் இருக்கும் சொத்து, வண்டி வாகனம், தங்க நகைகள் போன்றவற்றை வாங்கி வரும்படி அறிவுறுத்து வார்கள்.

கர்மா, விழிப்புணர்வு, சம்போ, சிவசம்போ, அண்ணா, அக்கா போன்ற வார்த்தைகளை மட்டுமே அதிகம் பயன்படுத்த பயிற்சி அளிக்கப்படும். அவர் வளர்க்கும் சித்தா, மல்லி, லீலா சம்சன் போன்ற பெயர் கொண்ட பல ஜாதி நாய்கள் முதல் மாடுகள் வரை மேய்க்கும் பொறுப்புகள் கொடுக்கப்படும். இவர் களுக்கு என்று கொடுக்கப்படும் சில தனிப் பட்ட பயிற்சிகள் எப்போதும் இவர்களை ஒரு அரை போதையிலே வைத்திருக்கும்.



நாள் ஒன்றுக்கு 18 மணிநேரம் வேலை வாங்கப்படும். தங்கள் கர்மாவை வேகமாக கழிக்க பல மணிநேரம் வேலை செய்ய வேண்டும் என்று ஜக்கி அறிவுறுத் துவார். அதாவது ஒரு ஆள் ஒரு நாளைக்கு ஒரு மணி நேரம் வேலை செய்தால் கழியும் கர்மா வை 18 மணி நேரம் செய்து 18 நாள்



கர்மாவை ஒரே நாளில் கழிக்க முடியும் என்று 1-ஆம் கிளாஸ் கணக்கு பாடம் சொல்லித்தருவர்.

ஆனால் அவர் கணக்கோ வேறு. "Ideal mind is devils kitchen" இதுகளை சும்மா திரியவிட்டா பல விதமான பசி எடுக்கும். ஒரு ஆளுக்கு 3 ஆள் வேலை கொடுத்து விரட்டுவார். காலை 5மணி முதல் இரவு 12 - 1 மணி வரை வேலை. இரண்டு வேலை உணவு, தீவிர ஹட யோகா என்று உடலை பிழிந்து எடுத்து இரவு படுத்தால் பிணம் போல் கிடப்பார்கள். ஓய்வு என்று கொடுக்கும் காலத்தில் கூட மௌனத்தில் (Silence) இருக்க செய்து விடுவார். இப்படியாக அவர்கள் கவனத்தை சிதற விடாமல் ஒரே திசையில் வைத்திருப்பார்.

இதுபோல சுமார் 10 - 20 வருடம் வேலை செய்தும் கர்மாவை முழுவதும் கழிக்க முடியாமல் பலர் வயதாகி திணறிக்கொண்டு இருக்கிறார்கள். யாராவது எனக்கு கைவலி கால்வலி என்று ஜக்கியிடம் கேள்வி கேட்டால் தொலைந்தது. உன் கர்மா மூட்டை வெயிட் அதிகம். உனது முக்திக்கு இன்னும் பல ஆண்டுகள் ஆகும் என்பார். இதைக்கேட்கும் மற்றவர்கள் அடுத்து யாரும் அப்படி கேட்க மாட்டார்கள் இல்லையா.

சந்நியாசிகளுக்குள் பிணக்கு ஏற்படும்போது அவரிடம் முறையிடும் நபரை நீ ஏன் அவன் கர்மாவை சுமக்கிறாய்? போச்சு போ உன் அக்கௌண்டில் புது கர்மாவும் சேர்த்துவிட்டது. கோட்டை அழி மொதல்ல இருந்து புரோட்டா தின்னு என்று கூறி விடுவார். இனி அடுத்து எவனாவது இதுபோல சண்டை போடுவான் ?

இத்தனைக்கு பிறகும் இயற்கையின் தேவையால் வருடத்திற்கு சந்நியாசிகளுக்குள் ஜோடிகள் உருவாகி விடுவதாலும், பலர் தனியாகவும் வெளியே பறந்து விடுவதாலும் தனது சூப்பர் மூளையை கசக்கி ஒரு தீர்வை கண்டு பிடித்தார். வெளி உலக சுகத்தை அனுபவித்து வருவதால் தானே மீண்டும் அதைத்தேடி ஓடிவிடுகிறார்கள். குழந்தை பருவத்தில் இருந்தே வெளி உலக/குடும்ப தொடர்பில்லாமல் வளர்த்தால் ? அதனால் உருவாகிவிட்டது சம்ஸ்கிருதி என்னும் குருகுல பள்ளி!

6-10 வயதுக்கு மேல் உள்ள குழந்தைகளுக்கு மட்டும் ரூ.7,00,000 கட்டி சேர்க்கை. எந்த பாடத்திட்டத்திலும் வராத குருகுல கல்வி, இரண்டு வேலை மட்டும் உணவு, அதிகாலை 5 மணிக்கு எழுந்து தீர்த்த குண்டம் என்னும் குளத்தில் 10-12 டிகிரி குளிர்ந்த நீர் குளியல், கடும் யோகா பயிற்சி, களரி பயிற்சி இதன் இருப்பிடங்கள் ஒவ்வொன்றையும் அடைய சுமார் 2-3 கீ.மீட்டர் நடை,இவை அனைத்தும் முடிய காலை மணி 8.15. மீண்டும் ஒரு குளியல்.

இந்நிலையில் அந்த குழந்தையின் வயிற்றில் நெருப்பு எரிவது போல் பசி எடுக்கும். காலை/ மாலை உணவு இவர்களுக்காக பிரத்யோகமாக தயாரிக்கபடும் பழம் காய்கறி உணவு. அதாவது எளிதில் செரிமானம் ஆககூடிய உணவு. பால் தயிர் கிடையாது. மீண்டும் மாலை 7 மணிக்கு தான் அடுத்தவேளை உணவு. இடையில் ஒன்றும் கிடையாது.



வளரும் குழந்தைக்கு இத்தனை பயிற்சிக்கு பிறகு 10 மணி நேர உணவு இடைவேளை இருந்தால் அந்த பிஞ்சுகள் எப்படி பசியை பொறுத்துக் கொள்ளும்,அதனால் குழந்தைகளின் வளர்ச்சி பாதிக்கப்படும் என்னும் உண்மையை அடுத்தவர் உழைப்பில் வயிறு வளர்க்கும் இந்த பரதேசிப்பயலுக்கு தெரியாதா?


பல குழந்தைகளுக்கு இதனால் வயிற்றுப்புண் வந்து பெற்றோர்களால் திருப்பி எடுக்கப்பட்டு விட்டார்கள்.அவர்களின் 7 லட்ச ரூபாய் பணத்தை திருப்பி தாராமல் ஆட்டையை போட்டுவிட்டான் இந்த மர்மயோகி.

இந்த குழந்தைகளுக்கு 11ம் வயதில் பிரமச்சரியம் வழங்கப்படும்.19 வயது வரை ஆசிரமத்தில் எந்த படிப்பும் இல்லாமல் பாட்டு, தாளவாத்தியம் களரி மட்டுமே பயிற்றுவிக்கப்படும். அதன் பின் அவர்களாக விருப்பப்பட்டால் சன்னியாசத்தை தொடரலாம். வேண்டாம் என்றால் பெற்றோருடன் செல்லலாம். வெளி உலகத்தில் கோடி வாய்ப்பு காத்திருக்க இவர்களுக்கு மட்டும் இரண்டே வாய்ப்பு என்பது கொடுமையிலும் கொடுமை அல்லவா? இது அந்த குழந்தைகளுக்கு பெற்றோர்கள் செய்யும் துரோகம் அல்லவா?

வருடத்தில் 6 மாதத்திற்கு ஒரு முறை தான் பெற்றோர்களுடன் இருக்க அனுமதி, இடையில் பார்க்க அனுமதி இல்லை. வீட்டிலும் சாக்லேட் போன்ற தின் பண்டங்கள் கொடுக்க கூடாது. ஜிகூஷி காட்டக்கூடாது. முக்கியமான கட்டுப்பாடு குழந்தையை பெற்றோர் உட்பட யாரும் கொஞ்சவோ, முத்தம் கொடுக்கவோ கூடாது. வேற்று நபர்கள் யாரும் அவர்களுடன் பேசக்கூடாது.


இதையெல்லாம் செய்தால் குழந்தையின் "ஆரா" கலைந்து விடுமாம். ஆனால் உண்மையான காரணம் அவர்களை பந்த பாசங்களை அறுத்து சன்னியாசப் பாதைக்கு தயார் செய்வதே.

இவர்
"ஆரா"
கலையாதா ?



தன் பிள்ளையை சகல வசதியும் செல்வாக்கோடும் வளர்க்கும் இவனுக்கு இவனை நம்பி தங்கள் செல்வங்களை அர்ப்பணித்திருக்கும் அடிமைகளுக்கு எப்படி தான் துரோகம் செய்ய மனம் வருகிறதோ?

"குழந்தைகள் உங்கள் மூலம் இந்த உலகிற்கு வந்த ஒரு உயிர் மட்டுமே. அதை தாண்டி அவர்களிடம் உங்களுக்கு எந்த உரிமையும் கிடையாது. அவர்களுக்கு நீங்கள் எதையும் கற்றுக்கொடுக்க முயற்சிக்காதீர்கள்,அவர்களை நீங்கள் அதிகாரம் பண்ண முயற்சிக்காதீர்கள்" என்றெல்லாம் பத்தி பத்தியாக ஜக்கி எழுதி கிழித்து தள்ளியுள்ளார்.



கலாச்சார
முறைப்படி
வளர்க்கப்பட்ட
மகள் ராதே

அப்படி என்றால் அறியாத வயதில் அவர்கள் வாழ்கை பாதையை தீர்மானிக்க இவரோ அல்லது பெற்றோர்களோ யார்? பிற்காலத்தில் அந்தக் குழந்தை ஏதோவொரு காரணத்தினால் வெளியே வர நேர்ந்தால் அவர்களின் நிலை என்ன? ரோட்டை கூட கடக்க தெரியாமல் ஒரு காட்டுவாசி போல் உணர்வார்கள் .

குழந்தை நல சட்டம் மற்றும் RIGHT TO EDUCATION (RTE) சட்டம் என்ன சொல்கிறது என்றால் 8ம் வகுப்பு வரை குழந்தைகளுக்கு ஏதோ ஒரு பாட திட்டப்படி கண்டிப்பாக இலவச மாகப் பாடம் கற்றுக்கொடுக்க வேண்டியது அந்தந்த மாநில அரசின் கடமை. (free and compulsory education up to 8th std) இதை ஹிழிமிசிணிதி அமைப்பும் கண்காணிக்கும். ஆகவே இந்த பள்ளி நடத்துவதே சட்டப்படி குற்றம் .

இது சம்பந்தமாக ஒரு பொது நல வழக்கு பூவுலகின் நண்பர்களின் அமைப்பு மூலம் போடப் பட்டது. அதை விசாரணை செய்ய வந்த கோவை CWC (CHILD WELFARE COMMITTE) ஆபீசரிடம் தந்திரமாக இந்த சம்ஸ்கிருதி பள்ளிக் குழந்தை களை காட்டாமல் மற்றொரு பள்ளியான ஈஷா ஹோம் ஸ்கூல் என்ற International School ICSE

syllabus-ஐக் காட்டி யாரோ பொய்யான தகவல் கொடுத்து வழக்கு தொடர்ந்து விட்டார்கள் என்று கூறி கோவில் பிரசாதத்தையும் கையில் கொடுத்து அனுப்பி விட்டார்கள்.

நாம் இதுவரை கண்ட குற்றச்சாட்டுகள் ஈஷாவில் நடக்கும் அநியாயத்தின் மிகைப்படுத்தாத ஒரு சிறு அத்தியாயமே. இன்னும் எழுத ஒரு சவுக்கு பத்தாது, தண்டிக்க எமலோகத்தில் உள்ள உபகரணங்களும் பத்தாது.



தற்போது இந்த அயோக்கியன் தனது ஆசை மகளுக்கு அவள் காதலித்த மணாளனையே கைபிடிச்சுக் கொடுக்கப் போகிறான். மாப்பிளை கர்நாடக இசைப்பாடகன் சந்தீப் நாராயண். அமெரிக்காவில் பிறந்து வளர்ந்து இந்தியாவில் தற்போது கச்சேரிகள் நடத்திக்கொண்டு இருக்கிறான். மிகுந்த ஆச்சாரமான பிரமாண குடும்பத்தைச் சேர்ந்தவன்.

சிவன் பார்வதியின் தெய்வீக திரு மணத்தை கைலாயத்தில் காணும் வாய்ப்பு நமக்கு கிடைக்கவில்லையே என்று ஏங்கும் சிவ பக்தர்கள் இனி கவலைப்பட வேண்டாம். தென் கை லாயத்தில் நடக்கப்போகும் இந்த "ராதே சந்தீப் " கல்யாணத்தை வந்து நேரில் கண்டு பிறவிப்பயனை அடையுங்கள்.

தேவர்களும் (பணம் கொட்டுபவர்கள்) அசுரர்களும் (உடல் உழைப்பை கொடுக்கும் தன்னார்வத்தொண்டர்கள்) வந்து வாழ்த்தப்போகும் இந்த கும்பாபி ஷேகத்திற்கும் (consecration) ஜக்கிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. (திருமண பத்திரிகையில் அப்படித்தானே போட்டிருக்கிறது) வெறும் வாழ்த்து மட்டுந்தான். என்னா ஒரு வில்லத்தனம் ?

இந்நிகழ்வுக்காகவே உயிரை பிடித்துக் கொண்டிருக்கும் ஜக்கியின் தந்தை தான் ராதேவிற்கு கன்னிகா தானம் செய்ய போகிறார்.

சந்யாசிகள் யாரும் முக்திக்கு இனி எங்கும் பொய் குத்த வச்சு முக்க வேண்டாம். இந்த திருமண முஹுர்த்தம் மற்றும் சாந்தி முஹுர்த்தம் போன்ற நிகழ்ச்சிக்காக 24 மணி நேரம் உழைக்கப் போவதால் கண்டிப்பாக முக்தி உறுதி செய்யப்படும்


இந்த திருட்டுசாமியரிடம் கேட்க தோன்றும் கேள்வி

எத்தனை பெற்றோர்கள் தங்கள் ரத்தமும், வேர்வையும் சிந்தி தங்கள் குழந்தைகளை ஒரு டாக்டராகவோ என்ஜினியராகவோ உருவாக்க ஆசைப்பட்டிருப்பார்கள்? உன்னை போல் தானே அவர்களும் தங்கள் பிள்ளைகளுக்கு திருமணம் செய்து வைக்க கனவு கண்டிருப்பார்கள். பேரன் பேத்திகளோடு வாழ்ந்து தாங்கள் குலம் தழைத்து அதை பார்த்து கண்மூட வேண்டும் என்று ஏங்கி இருப்பார்கள். வயதான காலத்தில் தங்கள் பிள்ளைகள் தங்களை பார்த்து கொள்வார்கள் என்று நம்பி கொண்டிருந்திருப்பார்கள்.


இவை அத்தனையையும் உன் சுய லாபத்திற்காக சூறையாடி சூன்யம் ஆக்கி விட்டு நீ மட்டும் உன் மகளுக்கு தெய்வீக கல்யாணம் நடத்தியுள்ளாய். குழந்தை பெற்றுக் கொள்வதே ஒரு பாவச்செயல் போல் சித்தரித்து விட்டு நீ மட்டும் உன் மகள் வழியாக உன் குலம் தழைப்பதை பார்க்கப் போகிறாயா ?

கடைசியாக சந்தீப்பின் பெற்றோர்களுக்கு நாம் கூறிக் கொள்வதெல்லாம் இந்த அயோக்கியனின் மகளை மருமகளாக அடைவதால் உங்கள் குடும்பம் நிம்மதி இழந்து தவிக்க போகிறீர்கள். இவனால் நாதியற்று இருக்கும் பெற்றோர்களின் வயிற்றெரிச்சல் உங்களையும் உங்கள் சந்ததியையும் நாசம் செய்யும். இவனால் மரணம் அடைந்த அத்தனை ஆத்மாக்களுக்கும் நீங்களும் பதில் சொல்ல வேண்டும்









Vivaha
Sadhguru
Ultimate Union






கோடியில் புரளும் கேடி

சவுக்கு சங்கர் - சவுக்கு இணையம் - 17/02/2015

Source : https://www.savukkuonline.com/9401/



சமீபத்தில் வெளியான "சதுரங்க வேட்டை" என்ற திரைப்படம் உலகளவில் நடக்கும் பல போலி வியாபார தந்திரங்களை வெளிச்சத்திற்கு கொண்டுவந்தது. அதில் கதாநாயகன் பேசும் ஒரு வசனம்

"நாம சொல்லுர ஒவ்வொரு பொய்யிலும் ஒரு உண்மை இருக்கனும்".

இது தான் "தன்னை உணர்ந்த ஞானி" என்று சொல்லித்திரியும் திருட்டுச் சாமியார் சத்குரு ஜக்கி வாசுதேவ் அவர்களின் தாரக மந்திரம். ?

இவரின் அத்தனை வார்த்தைகளிலும் இருக்கும் ஒரே உண்மை "யோகா". இந்த யோகா என்ற ஒற்றை வார்தையை வைத்துத்தான், இன்று ஜக்கி பல ஆயிரக்கணக்கான கோடிகளை அபகரித்துள்ளார்.

எண்பதுகளில், சத்குரு என்று தன்னைத்தானே அழைத்துக் கொள்ளும் ஜக்கி, மைசூர் அருகில் உள்ள கொம்மட்டகிரி என்ற இடத்தில் அமைந்துள்ள ரிஷி சம்ஸ்க்ருதி வித்யா கேந்திரா என்ற யோகா பயிற்சி மையத்தில் ரிஷி பிரபாகர் என்ற குருவிடம்தான் யோகா பயிலுகிறார். பின்னாளில் அவரது குரு ரிஷி பிரபாகர், கோவைப் பகுதியில் ஆசிரமம் அமைக்குமாறு அனுப்பி வைக்கப்பட்டவர்தான் ஜக்கி. ஆனால் எந்தப் பணிக்காக அனுப்பி வைக்கப்பட்டாரோ, அந்தப் பணியை மறந்து, தனி ஆவர்த்தனம் செய்யத் தொடங்கியவர்தான் ஜக்கி. சில நாட்களில் தன்னைத்தானே சத்குரு என்றும் அறிவித்துக் கொண்டார். சரி. சத்குரு என்றால் என்ன என்று விசாரித்தால், ஒரு படிக்காத குருநாதன் என்று அதற்கு விளக்கம்

கொடுத்தார் ஜக்கி. சத்குரு என்றால் படிக்காத குருஜி என்பதற்கு எந்த சொற்களஞ்சியங்களில் தேடினாலும் விடையில்லை.

யோகா கற்றுக்கொள்ள வரும் அனைவரையும் அடிமைப்படுத்தி தனக்கு அவர்கள் தங்கள் சொத்து சுகங்களை அப்படியே துறந்து, தன்னுடைய நிரந்தர அடிமையாகும் வண்ணம் பல்வேறு தந்திரங்களை கையாண்டு வருகிறார்.

1988ம் ஆண்டு கோவைக்கு வந்த ஜக்கி வாசுதேவுக்கு, இது போன்றதொரு பெரிய ஆசிரமம் அமைத்து, வசூல் செய்யும் திட்டமெல்லாம் கிடையாது. இந்த ஆசிரிம பிசினெஸ் இப்படி பணத்தை அள்ளி அள்ளிக் கொட்டும் என்பதை அவர் நினைத்தே பார்த்திருக்கவில்லை. பாரா க்ளைடிங் (Para Gliding) எனப்படும் விளையாட்டு பயிற்சி மையத்தை தொடங்குவதே இவரது திட்டம். இவரது ஜாவா பைக்கில் அமர்ந்துகொண்டு, இந்த பயிற்சி மையத்துக்கு மலை உச்சிதான் பொருத்தமாக இருக்கும் என்பதா, கோவையில் உள்ள மருதமலை, கணுவாய் அனுவாவி சுப்ரமணியர் கோவில் மலை, மேற்கு தொடர்ச்சி மலை போன்ற இடங்களில் பயிற்சி மையத்துக்கான இடத்தை தேடி அலைந்து கொண்டிருந்தார். அப்போது இவர் சிறிய அளவில் தொடங்கியிருந்த யோகா வகுப்புகள், படித்த மேல்தட்டு வர்க்கத்தினரிடையே பிரபலமாகத் தொடங்கியிருந்தது. இதன் பிரபலத்தை நன்றாக உணர்ந்த ஜக்கி யோகா பயிற்சியை வணிகமயமாக்கினால் கோடிக்கணக்கில் பணம் கொட்டும் என்பதை உணர்ந்தார். 1989ம் ஆண்டு முதல், ஜக்கியின் யோகா வகுப்புகள் பிரபலமாகத் தொடங்கின.

செல்வந்தர்கள் அதிகம் வசிக்கக்கூடிய கோவை, திருப்பூர், கரூர் போன்ற பகுதிகளில், மன உளைச்சலில் இருந்த தொழில் அதிபர்கள் ஜக்கியை நோக்கி படையெடுக்கத் தொடங்கினர். என்னுடைய சரிபாதி என்று ஜக்கியால் அறிமுகப்படுத்தப்பட்டு, பின்னாளில் ஜக்கியின் கையாலேயே உயிரை இழந்த பாரதியின் முன்னாள் கணவர் சுதர்சன் வரதராஜ் நாயுடு, அவரது சமூகத்தைச் சேர்ந்த செல்வச் செழிப்பு மிக்க கம்மவார் நாயுடு சமூகத்தைச் சேர்ந்த பல தொழில் அதிபர்களை ஜக்கிக்கு அறிமுகப்படுத்தினார். இவர்களின் அறிமுகம், ஜக்கியை ஜாவா மோட்டார் சைக்கிளில் இருந்து மாருதி காருக்கு உயர்த்தியது.


யோகா வகுப்புக்கு வந்தவர்களில் பலர், ஜக்கியின் அடிமையாக மாறியதையும், பணத்தை அள்ளி அள்ளி தந்ததையும் கண்ட ஜக்கி, இதை பல்வேறு இடங்களில் செய்து கொண்டிருப்பதை விட, நிரந்தரமாக ஒரு இடத்தில் ஆசிரமம் அமைத்து செய்தால் உரிய பயனை அளிக்கும் என்று உணர்ந்தார். பயிற்சிக்கு வரும் பணக்கார அமைகளிடம்,

"இந்த அற்புதமான யோகாவை நாம் அடுத்த தலைமுறையினருக்கு விட்டுச் செல்ல வேண்டும். அதற்கான நமக்கென ஒரு சொந்த இடம் இருந்தால்தான், நாம் நெடுநாள் இந்த யோக கலையை வாழவைக்க முடியும்"

என்று அடித்த உருக்கமான சொற்பொழிவைக் கேட்டு, பணக்கார ஜக்கி அடிமைகள், நன்கொடையை கொட்டித் தீர்த்தன.

ஜக்கியிடம் உள்ள மிக மிக முக்கியமான திறன் அவரது வசீகரிக்கும் பேச்சுத் திறன். உண்மையில் கடவுள் நேராக வந்து, நம்மிடம் பேசினால் எப்படி கருணையோடு பேசுவார் என்று நாம் கற்பனை செய்து வைதிருக்கிறோமாஞ் அதே போல பேசும் கைதேர்ந்த கேடிதான் ஜக்கி. முதலில் மக்களின் இறுக்க உணர்வை தளர்த்த ஒரு நகைச்சுவையை கூறுவார். இது போன்ற நகைச்சுவை ஜோக்குகளை இவருக்கு எடுத்துத் தர ஒரு தனி டீமே பணியாற்றுகிறது.

ஜோக்கை கேட்டு கெக்கே கெக்கே என்று சிரிக்கும் மக்களிடம் பெற்றோர், உறவு, நாடு மக்கள், ஏழ்மை என்று உணர்ச்சி மயமாக பேசுவார். குருவின் பேச்சைக் கேட்டு நெகிழ்ந்திருக்கும் மக்களை எழுச்சியூட்டுவார். தவறாக நினைத்துக் கொள்ளாதீர்கள். இதயம் அதிரும் வகையில் ஒலியோடு இறுதியாக நடனமாட வைப்பார். இப்படி உங்கள் மன நிலை பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகி நெகிழ்ந்திருக்கும் நிலையில், நன்கொடை விவகாரத்தை எழுப்புவார். இப்போதெல்லாம், ஜக்கி நேரடியாக எந்த நன்கொடையும் கேட்பதில்லை.



அவர் வளர்த்து வைத்துள்ள ஆயிரக்கணக்கான அடிமைகள் அந்தப் பணியை கச்சிதமாக செய்கின்றனர்.

ஆசிரமம் அமைப்பது என்று முடிவானதும், கோவையைச் சுற்றியுள்ள மேற்குத் தொடர்ச்சி மலையில்உள்ள ஆனைக்கட்டி, பொள்ளாச்சி, வெள்ளியங்கிரி ஆகிய இடங்கள் பரிசீலிக்கப் பட்டு இறுதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட இடம்தான் வெள்ளியங்கிரி மலை. ஆனைக்கட்டிக்கு செல்ல மலைப்பாதை வழியாக வர வேண்டும் என்பதால், விலை உயர்ந்த கார்களில் வரும் பெரும் செல்வந்தர்கள் வருவது கடினம் என்பதால் ஆனைக்கட்டி நிராகரிக்கப்பட்டது. பொள்ளாச்சியில் நிலத்தின் விலை அதிகம். ஆகையால் அதுவும் நிராகரிக்கப்பட்டு வெள்ளியங்கிரி மலை தேர்ந்தெடுக்கப்பட்டது. ஆனால், வெள்ளியங்கிரியை தேர்ந்தெடுத் ததற்கு இந்த ஆள் விட்டான் பாருங்கள் ஒரு கதை...

சிறு வயது முதலே இவரது கண்களில் திரை போல ஒரு மலை தெரியுமாம். இது போலத்தான் மற்றவர்களுக்கும் தெரியும் என்று இவர் நினைத்துக் கொண்டிருந்தாராம். தன்னோடு இருந்த மற்ற சிறுவர்ளிடம் கண்களில் தெரியும் இந்த மலை எங்கே இருக்கிறது என்று கேட்டாராம். மற்ற சிறுவர்கள் கேலி பேசவும், இவர் அவமானமாக உணர்ந்து அது குறித்து பேசுவதை தவிர்த்து விட்டாராம். இவர் தந்தை ஒரு கண் மருத்துவர். எல்லா குழந்தைகளையும் போல "அப்பா கண்ணு சரியா தெரியலை" என்று கூறியிருந்தால் அப்போதே விஷயம் முடிந்திருக்கும். ஆனால் ஜக்கி அப்படி செய்யவில்லை.

இந்த கண்ணில் தெரிந்த மலையோடே வளர்ந்தார் ஜக்கி. தனது முதல் வயதில் நடந்த சம்பவங்களை கூட துல்லியமாக நினைவில் வைத்திருந்ததாகவும், சுறுசுறுப்பும் புத்திசாலித்தனமும் நிறைந்த ஒரு குழந்தையாக தான் வளர்ந்ததாக அவரே கூறிக்கொள்வார். ஜக்கியின் சுயசரிதையில் தனது ஆசிரியையின் உள்ளாடையின் நிறத்தை தனது ஞானதிருஷ்டியால் கூறி அவரை வியப்படைய வைத்தாக பெருமையாக கூறிக்கொள்கிறார் ஜக்கி. இவரை ஜட்டி வாசுதேவ் என்று அழைப்பது பொருத்தம்தானே ?

சரி. விஷயத்துக்கு வருவோம். இப்போது ஆசிரமம் அமைக்க இடம் வேண்டும். காற்றில் கயிறு திரிக்கும் ஜக்கிக்கா தெரியாது ?

சிலர் வெறும் கையில் முழம் போடுவார்கள். ஆனால் கை கூட இல்லாமல் காற்றிலேயே முழம் போடுபவர் யாரரென்றால் அது ஜக்கிதான். கோவை லட்சுமி மில்ஸ் அதிபரான காலம் சென்ற கரிவரதனுக்கு சொந்தமான 14 ஏக்கர் இடம் வெள்ளியங்கிரி மலை அடிவாரத்தில் இருந்தது. பாரதியின் கணவர் சுதர்சன் மூலமாக கரிவரதனின் அறிமுகம் கிடைக்க, மடியில்

உள்ள பிள்ளை நழுவி விழும் வகையில் கரிவரதனிடம் பேசினார் ஜக்கி. ஜக்கியின் பேச்சில் மயங்கிய கரிவரதன் தனது 14 ஏக்கர் நிலங்களையும் இலவசமாகவே ஜக்கிக்கு கொடுத்தார். அன்று முதல் இன்று வரை, ஜக்கி வாசுதேவ் ஈஷா மையத்தில் உள்ள கழிவறை சுத்தம் செய்யும் பிரஷ் முதல் பளிங்கு கற்கள் வரை, அத்தனை வேலைகளையும் இது போன்ற உதவிகள் மூலமாகவே முடித்துள்ளார்.

என்று போட்டார் பாருங்கள் ஒரு போடு.. பக்த சிகாமணிகளுக்கு கேட்க வேண்டுமா ? நிதி உதவியை அள்ளி அள்ளி கொட்டினார்கள். சரி. இத்தனை விபரங்களும் புட்டு புட்டு வைக்கிறீர்களேஞ் உங்களுக்கு எப்படி இவை அனைத்தும் தெரியும் என்று கேட்கலாம். இந்த அத்தனை விபரங்களும், ஜக்கியின் பல்வேறு ஒலி நாடாக்கள், ஒலி, ஒளி நாடாக்கள் மற்றும் அருளுரைகளில் இடம் பெற்றுள்ளன. விளையும் பயிர் முளையிலேயே தெரியும் என்பதற்கு ஏற்ப, ஜக்கியின் தோற்றம் முதல் பொய் புரட்டு, பித்தலாட்டம் இவையே ஜக்கி. இன்று மிகப்பெரிய சாம்ராஜ்யமாக உருவாகி, வனத்தை அழித்து, ஒரு அரசாங்கத்தையே நடத்தி வரும் ஜக்கி வாசுதேவின் மறுபெயரே பொய் பித்தலாட்டம் ஆகியவையே. ஜக்கியின் வாழ்க்கை சம்பவங்களை முழுமையாக தொகுத்து ஒப்பிட்டுப் பார்த்தால், இந்த உண்மைகள் அனைவருக்குமே தெரியும். ஆனால் பலர் இவ்வாறு ஒப்பிட்டுப் பார்க்க மெனக்கெடுவதில்லை.

சவுக்கு முதன் முதலாக ஜக்கியின் முகத்திரையை கிழித்த பிறகே, சாதாரண மக்களுக்கு லேசாக விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. ஆனால் தனது அடிமையாக உள்ள நூற்றுக்கணக்கான அதிகாரிகள் மற்றும் அமைச்சர்கள் மற்றும் கோடிக்கணக்கான பணத்தின் உதவியோடு, தனது பித்தலாட்டத்தை தங்கு தடையின்றி அரங்கேற்றி வருகிறார் ஜக்கி.

ஈஷா வகுப்புகளில் ஜக்கியின் சிடி ஒன்று காட்டப்படும். அந்த சிடியில் ஒருவருக்கு வரும் சிரமங்களை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற போதிப்பார் ஜக்கி. இதற்கு உதாரணமாக ஒரு சம்பவத்தை குறிப்பிடுவார். அதாவது அவர் யோகா வகுப்புகள் எடுப்பதற்காக ஜாவா பைக்கில் செல்கையில் விபத்து ஏற்பட்டு கணுக்காலில் காயம் ஏற்பட்டு விட்டதாம். அருகில் இருந்த கிராம மருத்துவரிடம் சென்று சிகிச்சை அளிக்குமாறு ஜக்கி கேட்டுள்ளார்.

தன்னிடம் மரத்துப் போகச் செய்யும் ஊசி இல்லை. ஆகையால் நகர மருத்துவமனைக்கு செல்லுமாறு அந்த மருத்துவர் கூறினாராம். ஆனால் ரத்தம் அதிகமாக வெளியேறுவதால், ஊசி இல்லாமலேயே தையல் போடுங்கள் என்று கூறினாராம். மருத்துவர் ஒன்பது தையல் போடும்போது, மருத்துவரிடம் சகஜமாக பேசிக்கொண்டே இருந்தாராம். ஆச்சர்யப்பட்ட மருத்துவர், எப்படி உங்களால் இதை செய்ய முடிகிறது என்று கேட்டாராம். உடனே ஜக்கி "வலி நிஜம். ஆனால் பாதிப்பு நீங்கள் உண்டாக்கியது" என்று கூறினாராம் இதை கேட்கும் ஜக்கி அடிமைகள் ஜக்கிக்கு எப்படி இத்தனை வலி தாங்கும் சக்தி, அவர் பிறக்கும்போதே சத்குருவாக பிறந்தார் என்று வாயைப் பிளப்பார்கள். முதல் விஷயம், ஜக்கிக்கு நடந்தது இருதய அறுவை சிகிச்சை கிடையாது. சாதாரண காயத்துக்கு ஏற்படும் தையல். மரத்துப் போகும் ஊசி இல்லாமல்தான் இப்போது பல காயங்களுக்கு தையல் போடுகிறார்கள். சரி. ஜக்கி சொன்னது உண்மை என்றே வைத்துக் கொள்வோம். ஒன்பது தையல் போட்ட இடத்தில் தழும்பு இருக்க வேண்டுமா இல்லையா ? ஜக்கியை தழும்பை காட்டச் சொல்லுங்கள். காட்ட மாட்டார். ஏன் தெரியுமா ? அப்படி ஒரு சம்பவம் ஜக்கிக்கு நடக்கவேயில்லை. ஜக்கியோடு இருந்த மற்றொருவருக்கு நடந்தது. இதை தனக்கு நடந்ததாக சொல்லி ஜக்கி அல்வாவை கிண்டி பக்தர்களுக்குத் தருவார்.

இப்படி பொய்யிலும் பித்தலாட்டத்திலும் நடந்து வரும் ஈஷா யோக மையத்தின் மொத்த சொத்து எவ்வளவு தெரியுமா ? ஈஷா மையத்தின் பெயரில் 200 ஏக்கர் நிலங்களும், பினாமி பெயரில் 270 ஏக்கர் நிலங்களும் உள்ளன. ஈஷா மையம் அமைந்துள்ள பகுதியில் ஒரே ஒரு ஏக்கர் நிலத்தைக் கூட இவர்களுக்குத் தெரியாமல் யாரும் வாங்கவோ விற்கவோ முடியாது.


ஈஷா பெயரில் பதிவு செய்யப்படும் பத்திரங்கள் அனைத்திலும் தொண்டாமுத்தூர் ராஜேந்திரன் என்பவர் சாட்சிக் கையெழுத்து போட்டிருப்பார். இவர்தான், பத்திரப் பதிவு

அலுவலகத்தில் பதிவு செய்யப்படும் நிலங்களின் விபரத்தை ஈஷாவுக்கு தெரிவித்து, அந்த பதிவை தடுத்து நிறுத்தி, ஈஷா மையத்தினருக்கு விபரத்தை சொல்லுவார். ஈஷா மையத்தினர் உடனடியாக தலையிட்டு, அந்த விற்பனையை தடுத்து நிறுத்தி நிலத்தை அவர்கள் வாங்கிக் கொள்வார்கள்.

சென்ற ஆண்டு மட்டும் ஈஷாவின் மொத்த வருமானம் 243 கோடிகள். ஆண்டு வருமானமாக ஜக்கி நியமித்த இலக்கு 400 கோடிகள். தன்னுடைய உள் வட்டாரத்தில் உள்ளவர்களை, இலக்கை அடையத் தவறியதற்காக ஜக்கி கடுமையாக கடிந்து கொண்டதாக கூறப்படுகிறது.

சாதாரணமாக யோகா வகுப்பு நடத்தினால், வசூல் தேவையான அளவில் கிடைக்காது என்பதை ஜக்கி மிகத் தாமதமாகவே உணர்ந்தார். தொடக்க காலத்தில், அதாவது தொண்ணூறுகளின் தொடக்கம் வரை, யோகம், ஞானம் என்றெல்லாம் பேசிக் கொண்டிருந்தார். இந்த அவசர உலகத்தில் இவர்களுக்கு யோகம் ஞானமெல்லாம் அடைவதற்கு பொறுமை இல்லை, குறுகிய காலத்தில் ஞானத்தை டப்பாவில் அடைத்துத் தருகிறேன் என்று தந்திரத்தை மாற்றத் தொடங்கினார்.

தொண்ணூறுகளின் இறுதியில் பக்தி, ஞானம், சக்தி, க்ரியா ஆகியவற்றை கலந்து ஒரு காக்டெயிலாக தருகிறேன் (I AM GIVING YOU THE RIGHT COCKTAIL FOR THIS GENERATION) என்று முதன் முதலாக இந்த தந்திரத்தை "ஞானியின் சந்நிதியில்" என்ற புத்தகத்தின் வாயிலாக அறிமுகப்படுத்தினார். இவருக்கு இந்த காலக்கட்டத்தில் பெரும் உதவி புரிந்தது ஆனந்த விகடன். ஆனந்த விகடன் புத்தகத்தில் இவர் எழுதிய "அத்தனைக்கும் ஆசைப்படு" என்ற தொடர், இவரை மிக மிக பிரபலமாக்கியது. ஒரு வகையில் ஜக்கி வாசுதேவ் போன்ற மிகப்பெரிய சமூக விரோதியை பூதாகரமாக வளர்த்து விட்டதற்கு விகடன் நிர்வாகம் ஒரு வகையில் பொறுப்பாகும். பொறுப்புணர்ச்சி இல்லாமல், வியாபார நோக்கத்துக்காக விகடன், குமுதம் போன்ற ஊடகங்கள், ஜக்கி வாசுதேவ் மற்றும் நித்யானந்தா போன்றவர்களை வளர்த்து விட்டதன் காரணமாகவே, இன்று மிக மிக பிரம்மாண்டமான சாம்ராஜ்யங்களை இவர்கள் நடத்தி வருகிறார்கள். பகுத்தறிவுவாதி என்று தன்னை அறிவித்துக் கொள்ளும், தொல் திருமாவளவன் போன்றவர்களும், ஜக்கியின் வியாபாரத்திற்கு உதவியவர்களே என்பதுதான் வேதனை.



வெறுமனே ஆன்மீகத்தை போதித்துக் கொண்டிருந்தால் வளர்ச்சியும் குறைவாக இருக்கும், வசூலும் மேம்படாது என்பதை ஜக்கி உணர்ந்தார். அந்த அடிப்படையில் ஜக்கி கையாண்ட தந்திரம்தான் "பசுமைக் கரங்கள்". 2007ம் ஆண்டு முதன் முதலாக இந்த பசுமைக் கரங்கள் திட்டத்தை தொடங்கினார். இன்னும் பத்தே வருடங்களில் தமிழ்நாடு பாலைவனமாகி விடும். உடனடியாக மரங்களை நட வேண்டும். வெள்ளியங்கிரி மலை நான் போன பிறகுதான் பசுமையானது என்று அள்ளி அள்ளி விடுவார். எனது பசுமை கரங்கள் திட்டத்துக்காக நிதி உதவியை அள்ளித் தாருங்கள் என்று கேட்பார். கார்ப்பரேட் சோசியல் ரெஸ்பான்சிபிலிட்டி என்ற திட்டத்தின் கீழ் பல்வேறு கார்ப்பரேட் நிறுவனங்களும் இணைந்தன.

இந்தத் திட்டத்தை பிரபலமாக்கும் நோக்கோடு, மிக மிக தந்திரமாக, கருணாநிதியை வைத்து மரம் நட வைத்து, அதன் மூலமாக பல சலுகைகளை பெற்றதை, சவுக்கு ஏற்கனவே அம்பலப்படுத்தியுள்ளது. இந்தத் திட்டம் ஓரளவு நிதியை அள்ளித்தந்ததும், அடுத்த கட்டத்துக்கு நகர்ந்தார் ஜக்கி. "ஞானியின் சன்னதியில்" என்ற அவரது நூல் அளித்த வெற்றியின் அடிப்படையில், "ஞானத்தின் பிரம்மாண்டம்" என்ற தலைப்பில் லிங்க பைரவி குறித்து ஒரு


கட்டுரை எழுதினார். தியானலிங்கம் கோவிலில் பிரம்மாண்டமான சக்தி இருக்கிறது. அந்த சக்தி வீணடையக்கூடாது. வருங்கால சந்ததியினருக்கு அதை விட்டுச் செல்ல வேண்டும் என்று கூறி, அந்த தியானலிங்கக் கோவிலை பிரம்மாண்டமாக கட்ட வேண்டும் என்று அடுத்த திட்டத்தை செயல்படுத்தினார். ?


ஞானத்தை அடைவதற்கான ஒரே வழி பக்தி மார்க்கமே என்று பல்வேறு விளக்கத்தை கூறினார். பரவசமளித்து, தையை சுருக்கும் பக்தி என்று ஒரு புதிய விளக்கத்தை அளித்தார். இணைப்பு. லிங்க பைரவியை உங்கள் வீட்டில் வைத்திருந்தால் உங்களுக்கும் உங்கள் வீட்டுக்கும் அருள் கூரையை பிய்த்துக் கொண்டு கொட்டும் என்றார். அதை நம்பிய பக்தி அடிமைகள், பணத்தை அள்ளி அள்ளி கொட்டினர். கடவுள் உருவாவதைக் காண வாருங்கள் என்று ஒரு விழாவை அறிவித்தார். அந்த விழாவுக்கு கட்டணமாக, 50 ஆயிரம் முதல் 7 ஆயிரம் வரை நிர்ணயம் செய்தார். 50 ஆயிரம் கொடுத்தால் ஜக்கியின் அருகிலேயே அமர்ந்து கொள்ளலாம்.

இந்த விழா மூன்று நாள் நடைபெற்றது. சுமார் ஆயிரம் பேர் 50 ஆயிரம் கட்டணம் செலுத்தினர். 2 ஆயிரம் பேர் 25 ஆயிரம் கட்டணம் செலுத்தினர். 10 ஆயிரம் செலுத்தியவர்கள் நாலாயிரம் பேர். மூவாயிரம் பேர் 7000 செலுத்தி இவ்விழாவில் பங்கு கொண்டனர். இதைத்தவிர்த்து, வெளிநாட்டினரின் சொத்துக்களை மொத்தமாக கபளீகரம் செய்ய, கோவில் உருவாகும் பிரகாரத்தினுள்ளேயே அமர்ந்து, நேரடியாக காண்பதற்கு ஒரு நபருக்கு 10 லட்சம் என்று அறிவித்தார். மொத்தம் 42 பேர் இவ்வாறு கட்டணம் செலுத்தினர்.

இந்த இந்த விழாவில் பங்கேற்ற முக்கிய பிரமுகர்கள், நக்கீரன் காமராஜ், சுதா ரகுநாதன், மற்றும் நடிகர் விஜய்யின் தாயார் ஷோபா சந்திரசேகர் ஆகியோர்.

இந்த லிங்க பைரவி கோவிலை, கடவுளுடன் நேரடி தொடர்புள்ள கோவில் என்றே பிரச்சாரம் செய்தார் ஜக்கி. இந்த கோவில் கட்ட திட்டமிடப்பட்டபோதே, நன்கொடை வசூல் தொடங்கியது. மூன்று கோடியில் திட்டமிடப்பட்டு 4.5 கோடி செலவில் இந்தக் கோவில் கட்டி முடிக்கப்பட்டது. ஆனால் இந்த கோவிலை பிரதிஷ்டை செய்கிறேன் பேர்விழி என்று நடத்தப்பட்ட அந்த விழாவின் வசூல் தொகை மட்டும் 20 கோடி. கோவிலுக்கு இவ்வளவு வசூல் என்றால், இதனுள் இருக்கும் லிங்க பைரவி சிலையின் பெயரால் தனி வசூல் நடத்தப்பட்டது. லிங்க பைரவியின் மூன்று கண்கள் வைரத்தில் செய்யப்பட வேண்டும் என்று, அதன் பெயரால் ஜக்கி வசூல் செய்த தொகை 80 லட்சம். லிங்க பைரவிக்கு ஒட்டியாணம் செய்ய வேண்டும் என்று அறிவித்து, அதற்கு நகையாக மட்டுமே நன்கொடை பெறப்படும் என்று கூறி, தங்கமாக வசூலை நடத்தினார். இந்த தங்க வசூலுக்கு எவ்விதமான





ரசீதுகளும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. பக்தர்களிடமிருந்து பெறப்பட்ட நகைகள் உருக்கப்பட்டு, எங்கே சென்றன என்பது யாருக்குமே தெரியாது.

இந்தக் கோவிலின் பெயரால் இத்தனை கோடி வசூல் நடந்தது. ஆனால் இக்கோவிலுக்கான கட்டுமானப் பொருட்கள் அனைத்தும் முழுக்க முழுக்க இலவசமாக கிடைத்தன என்பது உங்களுக்கெல்லாம் ஆச்சர்யமாக இருக்கும்.

இந்த கட்டுமானத்துக்கு விலை உயர்ந்த க்ரானைட் கற்களை முழுக்க முழுக்க இலவசமாக கொடுத்து உதவியது, காலஞ்சென்ற கே.என்.நேருவின் தம்பி ராமஜெயம். இவர் ட்ரூ வேல்யு ஹோம்ஸ் என்ற கட்டுமான நிறுவனம் நடத்தி வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது. ?

ராமஜெயத்துக்கும், ஜக்கி வாசுதேவுக்கும் எப்படி தொடர்பு ஏற்பட்டது என்பது ஒரு சுவையான கதை. ராமஜெயமும், அவர் குடும்ப உறுப்பினர்களும், ஜக்கியின் யோகா வகுப்புகளில் கலந்து கொண்டு, உடல்ரீதியாக சில பலன்களை அடைந்தனர். இதனால் ராமஜெயம் ஜக்கியோடு நெருக்கமடைந்தார். இந்த அடிப்படையில், தனது கோயில் கட்டுமானத்துக்கான பல பொருட்களை இலவசமாகவே பெற்றார் ஜக்கி.

2011ம் ஆண்டு தேர்தலில் திமுக வெற்றி பெறும் என்று உறுதியாக நம்பினார் ஜக்கி. தனக்கு நெருக்கமானவர்களிடம் பேசுகையில், She is very arrogant. She should not come back to power என்று கருத்து தெரிவித்துள்ளார். பயணிகளுக்கான வனத்துறையின் சுங்கக் கட்டணம் ரத்து, தனிப்பட்ட முறையில் மின் இணைப்பு உள்ளிட்ட பல்வேறு சலுகைகளை அடைந்ததன் காரணமாகவே இந்த விருப்பம்.

அதிமுக அரசு அமைந்ததும் உள்ளபடியே ஜக்கி நடுங்கித்தான் போனார். ஜெயலலிதாவின் கோபத்துக்கு ஆளாக நேரிடுமோ நமது தொழிலுக்கு ஆபத்து வருமோ என்று அஞ்சினார். அதிமுக நாடாளுமன்ற உறுப்பினர் தம்பிதுரை மூலமாக தூது அனுப்பினார். ஆனால் இவரது தூது எடுபடவில்லை. இந்த நேரத்தில்தான், நில அபகரிப்பு வழக்கில் சிக்கிய ராமஜெயம் தலைமறைவாக இருந்தார். அப்போது தனக்கு அடைக்கலம் தருமாறு ராமஜெயம் ஜக்கியிடம் கோரியபோது, ஜக்கியின் ஈஷா ஆசிரமத்தினுள் இருக்கும் டைம்ஸ் ஆப் இந்தியா கட்டிய கட்டிடத்தினுள் தாங்க வைத்தார். ஆனால் தற்போது, மன்னார்குடி மாஃபியாவோடு தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு, தனது சட்டவிரோத கட்டிடங்களை ஒழுங்குமுறைப் படுத்தும் முயற்சியில் ஜக்கி ஈடுபட்டு வருகிறார் என்பதுதான் வேதனையான செய்தி.

இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் மகாசிவராத்திரி விழாவில் கலந்து கொள்வதற்கு எத்தனை கட்டணம் என்று ஈஷா ஆசிரமத்தில் தொலைபேசி செய்து கேட்கப்பட்டபோது அவர்கள் கூறியது. மொத்தம் மூன்று பிரிவுகள் உள்ளன. முதல்பிரிவு 1.25 லட்சம். அடுத்த பிரிவு 1 லட்சம். மூன்றாவது பிரிவு 50 ஆயிரம். 15 நாட்களுக்கு முன்னதாகவே இது குறித்து விசாரித்தபோது, 50 ஆயிரம் பிரிவு முடிந்து விட்டதாகவும் 1 லட்சம் மற்றும் 1.25 லட்சம் மட்டுமே எஞ்சியுள்ளதாக தெரிவித்தனர்.

இப்படி நடத்தப்படும் வசூல் அனைத்தும், நன்கொடை என்ற பெயரில் வரவு வைக்கப்பட்டு வருமானவரி விலக்கு பெறப்பட்டு வருகிறது. விரைவில் இந்த நன்கொடை சலுகையை ரத்து செய்ய, சவுக்கு சார்பாக நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.


சவுக்கில் கட்டுரை வெளிவருவதற்கு முன்பாக, ஜக்கி வாசுதேவை எதிர்த்துக் கேள்வி கேட்க ஆளே கிடையாது. ஜக்கி வாசுதேவிடமிருந்து விலகி, அவரைப்பற்றி நன்றாக புரிந்து கொண்டுள்ள முன்னாள் பக்தர்கள் கூட, அவரைப்பற்றி வெளிப்படையாக பேச அஞ்சி நடுங்கிய சூழல் இருந்தது. ஆனால், இன்று நம்மிடம் தொடர்பு கொண்டு, பல்வேறு தகவல்களை பகிர்ந்து கொள்கிறார்கள். ஜக்கியின் சாம்ராஜ்யத்தை லேசாக ஆட்டம் காண வைத்திருக்கிறோம்.

ஜக்கியின் பக்தர்களில் வெறும் 10 பேர், நம் கட்டுரைகளை படித்த பிறகு, விழிப்புணர்வு பெற்றார்கள் என்றாலே நாம் வெற்றியடைந்துள்ளோம் என்பதே பொருள்.

ஜக்கி வாசுதேவ் என்ற சமூக விரோதி

சவுக்கு சங்கர் - சவுக்கு இணையம் - 05/01/2015

Source : https://www.savukkuonline.com/9223



ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கரை மிஞ்சும் அளவுக்கு, ஆன்மீக வியாபாரம் செய்து வருபவர்தான் ஜக்கி வாசுதேவ். இந்த ஆன்மீக வியாபாரியின் முகத்திரையை முதன் முதலில் கிழித்தது சவுக்குதான். மூன்று கட்டுரைகள் மூலமாக, ஜக்கி யார் என்பது விரிவாக அம்பலப்படுத்தப்பட்டது.

இது தொடர்பாக நான்கு பொது நல வழக்குகள் தொடரப்பட்டும், அரசு ஈஷா மையங்களின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் மவுனம் காத்து வருகிறது.

ஜக்கி வாசுதேவ் போன்ற சாமியார்கள் இந்த சமூகத் திலிருந்து அழித்து ஒழிக்கப்பட வேண்டிய தீய சக்திகள் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இருக்க முடியாது. இவர்கள் ஏன் தீய சக்திகள் தெரியுமா ?

முதன் முதலாக ஈஷா குறித்து கட்டுரை எழுதிய பிறகு, ஈஷா குறித்து பல்வேறு தகவல்கள் வந்து குவிந்தவண்ணம் இருக்கின்றன. முதல் கட்டுரை எழுதுவதற்காக கோவை ஈஷா மையம் சென்று களமாடியபோது பல்வேறு உண்மைகள் தெரிய வந்தன. ஏதோ மர்மமாக நடக்கிறது என்பதை உணர்த்தவது போலவே, ஏகப்பட்ட கெடுபிடிகள். வெளியே பதிவு செய்து, பாஸ் வாங்கி, அதை கழுத்தில் மாட்டிக் கொண்டால்தான் உள்ளே செல்ல முடியும். உள்ளே சென்றால் இருபது அடிக்கு ஒரு முறை பாஸை பார்த்து செக் பண்ணுவார்கள்.

அப்படியே இடுப்பை வளைத்து, வணங்கி அண்ணா வணக்கம் அண்ணா என்று கூறுவார்கள். வெள்ளை குர்தாவும் பேண்டும் அணிந்த ஏராளமான அழகுப் பெண்களை காண முடியும். எந்தப் பெண்ணாக இருந்தாலும், ஒரு ஆண் தன்னை கவனிக்கிறான் என்னும் பொழுது சிறிது மாற்றத்துக்கு உள்ளாவாள். ஆனால், இந்த ஈஷா மையத்தில் நீங்கள் பார்க்கும் எந்த பெண்ணுக்கும் எந்தவொரு மாற்றமும் ஏற்படாது.

ஒரு கம்ப்யூட்டர் மானிட்டரை பார்ப்பது போல உங்களைப் பார்த்து வணக்கம் வைப்பார். ஆனால், காவி சீருடை அணிந்திருக்கும் ஆண் சீடர்களிடம் சிறிது முரட்டுத்தனம்

காணப்படுகிறது. உள்ளை நுழையும் முன், உங்கள் செல்போன் உள்ளிட்ட அனைத்து உபகரணங்களையும் வாங்கி வைத்துக் கொள்கிறார்கள். புகைப்படம் எடுக்க அனுமதி கிடையாது. ஒவ்வொரு நூறு மீட்டரிலும் உங்களது பாஸ் சோதிக்கப்படும்.

உள்ளே சென்றால், கண்ணை மூடிக்கொண்டு மொட்டை அடித்துக் கொண்டு, ஆழ்ந்த தியானத்தில் பல இடங்களில் அமர்ந்திருப்பார்கள். பாதாள அறை போல இருக்கும் ஒரு அறைக்குள் லிங்கம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கும். அந்த லிங்கத்தை தியானலிங்கம் என்று கூறுகிறார்கள். அந்த தியானலிங்கத்தை சுற்றி பலர் அமர்ந்து தியானம் செய்து கொண்டிருப்பார்கள்.


அந்த தியானலிங்கத்தின் அருகில் சென்றாலே தியானம் செய்தது போல மன அமைதி கிடைக்கும் என்று கூறுகிறார் ஜக்கி வாசுதேவ். தியானலிங்கம் பற்றி ஜக்கி கூறுவது


"Dhyanalinga is the distilled essence of yogic science. It does not ascribe to any particular belief or faith. It does not require any pooja or worship. Just sitting silently for few minutes within the sphere of Dhyanalinga is enough to make even those unaware of meditation experience a state of deep meditativeness and feel the divine energy that overflows from this glorious form.

Dhyanalinga was consecrated by Sadhguru Jaggi Vasudev, a realized master, mystic and yogi, after three years of intense process of prana prathista. Measuring 13' 9", Dhyanalinga is the largest mercury based live linga in the world. In the metaphysical sense, Dhyanalinga is a guru, an energy center of tremendous proportions. All the aspects of life are enshrined in the form of seven chakras energized to the very peak and locked. A doorway to enlightenment and spiritual liberation, Dhyanalinga offers a sadhaka [2] the opportunity to perform sadhana [3] in utmost intimacy with a live guru, - an opportunity which is traditionally available to a select few.

Situated at the foothills of the Velliangiri Mountains, Dhyanalinga is a colossal entity of eternal vibrations. The earth colors, the natural granite, and the fusion of irregular surfaces and shapes creates an ethereal ambiance and an apt atmosphere to receive the grace of the Dhyanalinga."

அதன் உள்ளே சென்று ஜக்கி சொன்னது போல 20 நிமிடம் அமர்ந்திருந்தும் எந்த மன அமைதியும் தோன்றவில்லை. அந்த லிங்கம் மெர்குரியால் செய்யப்பட்டது என்று சத்குருவே அறிவிக்கிறார்.





மெர்குரி என்பது ஒரு விஷப்பொருள். சுற்றுச்சூழலுக்கு பெரும் ஆபத்தானது. மெர்குரியை சுவாசித்தாலோ, வாய் மூலம் உட்கொண்டாலோ, மூளை பாதிக்கப்படும் என்கிறது, ஐக்கிய நாடுகளின் சுற்றுச் சூழல் அமைப்பு. அறையில் தட்பவெட்பத்தில் அறைக்குள் இருக்கும் மெர்குறி சிறிய அளவே வெப்பம் உயர்ந்தாலும் மெர்குரி ஆவியாகிவிடும். மிக எளிதாக மனித உடலில் நுழைந்து விடும். மெர்குரி எவ்விதமான மணமும் இல்லாத காரணத்தால், மெர்குரியை சுவாசிக்கிறோம் என்பதே ஒருவருக்கு தெரியாது. கனடாவைச் சேர்ந்த கால்கரி பல்கலைக்கழகம் மெர்குரி எந்த வகையில் மூளையை பாதிக்கும் என்பதை ஆராய்ந்து அறிக்கை வெளியிட்டள்ளது.

இந்தியாவில் மெர்குரி பயன்பாட்டை கட்டுப்படுத்துவதற்கு எவ்விதமான சட்ட திட்டங்களும் இல்லாத காரணத்தால், இத்தகைய கடுமையான சுற்றுச்சூழல் பாதிப்பை ஏற்படுத்தும் மெர்குரியால் நான் ஒரு சிலையை உருவாக்கியிருக்கிறேன் என்று வெளிப் படையாக அறிவிக்கிறார் ஜக்கி.

இத்தகைய கடும் பாதிப்பை ஏற்படுத்தும் மெர்குரியால் செய்யப்பட்ட லிங்கம் அடங்கிய குளத்தில் குளித்தால், தீராத வினையெல்லாம் தீரும் என்று அறிவிக்கிறார் ஜக்கி.

ஈஷா மையத்தினர் வெளியிட்டுள்ள வீடியோவிலேயே மெர்குரியை அவர்கள் கையால் கையாள்வது வெளிப்படையாக தெரிகிறது. இணைப்பு. ஏற்கனவே இருக்கும் மெர்குரியால் அமைக்கப்பட்ட தீர்த்தகுண்டம் பத்தாது என்று, புதிதாக சூர்யகுண்டம் என்று மற்றொரு மெர்குரி சிலை அடங்கிய குளத்தை உருவாக்கியிருக்கிறார் ஜக்கி. இணைப்பு. மெர்குரி பயன்பாட்டில் உள்ள ஆபத்துகளையும், அதை தவிர்ப்பதற்கான வழிமுறைகளையும், பயன்படுத்துவதற்கான விதிமுறைகளையும் மத்திய மாசு கட்டுப்பாட்டுத் துறை உருவாக்கியிருக்கிறது. அந்த அறிக்கையில் கூறியுள்ளபடி

3.0 EFFECTS OF MERCURY ON HUMAN HEALTH

Mercury is very toxic and linked with a wide range of healtheffects including irreversible damage to the human nervous system. The severity of health effects from mercury exposures is influenced by the following factors:

(i) Chemical form of mercury i.e. inorganic or organic mercury,

(ii) Dose,

(iii) Age of the person exposed (the foetus is the most susceptible),

(iv) Duration of exposure,

(v) Route of exposure i.e. inhalation, ingestion, dermal contacts, and

(vi) Health of the person exposed

Inhalation:

Mercury vapor is highly toxic via inhalation. It can cause severe respiratory tract damage. Symptoms of mercury toxicity include sore throat, coughing, pain, tightness in chest, breathing difficulties, shortness of breath, headache, muscle weakness, anorexia, and gastrointestinal disturbance, ringing in the ear, liver changes, fever, bronchitis and pneumonitis. Mercury can be absorbed through inhalation with symptoms similar to those appearing after ingestion.

Ingestion:

Ingestion (through mouth) of mercury may cause burning of the mouth and pharynx, abdominal pain, vomiting, corrosive ulceration, bloody diarrhea. Ingestion may be followed by a rapid and weak pulse, shallow breathing, paleness, exhaustion, tremors and collapse.

Skin Contact:

Contact of mercury with skin causes irritation and burns to skin. Symptoms include redness and pain. It May cause skin allergy and sensitization. Mercury can be absorbed through the skin with symptoms parallel to ingestion.

Eye Contact:


Contact of mercury with eye causes irritation and burns to eyes. Symptoms include redness, pain, blurred vision; may cause serious and permanent eye damage, also depending upon exposure.

Chronic Exposure:

Chronic exposure of mercury through any route can produce central nervous system disorders. It may cause muscle tremors, personality and behavior changes, memory loss, metallic taste, loosening of the teeth, digestive disorders, skin rashes, brain damage and kidney damage. Mercury can cause skin allergies and accumulate in the body. Repeated skin contact with mercury can cause the skin to turn gray in color. Mercury is a suspected reproductive hazard; may damage the developing foetus and decrease fertility in males and females.

மெர்குரியோடு நெருங்குவது ஆண்மைக் குறைவை ஏற்படுத்தும் என்று மத்திய அரசின் மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் அறிக்கையே தெரிவிக்கிறது இணைப்பு. ஆனால், இதையறியாத பல்வேறு பக்தர்கள் தாங்கள் கூவாத சேவலாகப் போகிறோம் என்பதையே அறியாமல், ஜக்கி வாசுதேவ் கூறியபடி மெர்குரி சிலை இருக்கும் குளத்தில் நீராடி மகிழ்கின்றனர்.

கோவையில் உள்ள ஈஷா மையத்தில் நீங்கள் நுழைந்தால், அங்கே ஜக்கியின் படங்கள், அவர் படம் பொறித்த பனியன்கள், வேட்டிகள், மாலைகள், நகைகள், லிங்கங்கள் உள்ளிட்ட ஏராளமானவை விற்பனை செய்யப்படும். இது ஒரு புறம் என்றால், மறுபுறம், பிஸ்கட், மூலிகை தேயிலை, ஊறுகாய் என்று உணவுப் பொருட்கள் ஒரு புறம் விற்பனை செய்யப்படும். பைரவி என்று வெறும் இரண்டு கண்கள் படம் மட்டுமே இருக்கும். அதன் விலையைக் கேட்டால் ஆயிரக்கணக்கில் சொல்வார்கள். இது போக உத்திராட்ச மாலை, ஸ்படிக லிங்கம் என்று பல்வேறு பொருட்கள் ஒரே நேரத்தில் விற்பனை செய்யப்படும். இவற்றில் நீங்கள் எதை வாங்கினாலும் ரசீது தரப்படாது. மீறி ரசீது கேட்டீர்கள் என்றால், நன்கொடைக்கான ஒரு ரசீது தரப்படும். அந்த ரசீதில், ஈஷா என்ற ட்ரஸ்டுக்கு நீங்கள் நன்கொடை



வழங்கியுள்ளீர்கள் என்றும், அந்த நன்கொடை, இந்திய வருமான வரித்துறை சட்டம் பிரிவு 80Gன் படி, வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டிருக்கும்.

80G இந்திய வருமானவரிச் சட்டத்தின் கீழ் விதிவிலக்கு பெற வேண்டுமென்றால் முக்கியமான ஒரு நிபந்தனை, எந்த ஒரு குறிப்பிட்ட மதத்தின் நலனையும் பிரதிபலிக்கக்கூடிய வகையில் சலுகை பெறும் நிறுவனம் செயல்படக்கூடாது என்பதே. லிங்கமும், ருத்திராட்சமும் கிறித்துவர்களும், இஸ்லாமியர்களும் பயன்படுத்துகிறார்களா என்ன ? அப்பட்டமாக இந்து மதத்தின் நலனைப் பாதுகாத்து ஈஷா மையம் நடத்தி வரும் ஜக்கி என்ற அயோக்கியனுக்கு, இந்த நாள் வரை வருமானவரிச் சலுகை அளித்து வருகிறது வருமானவரித்துறை.

சமீபத்தில் கோவை மாவட்டம் ஆலந்துறை காவல் நிலையத்தில், ஈஷா மையத்துக்கு எதிரான ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது. அவர் தனது புகாரில் பின் வருமாறு தெரிவிக்கிறார்.

ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த ஜெயபால் என்ற பெண்மணி தனது புகாரில், நான் 16 டிசம்பர் 2014ல் இந்தியா வந்தேன். நான் இந்தியா வந்தது, வெள்ளியங்கரி மலைப்பகுதியில் அமைந்துள்ள ஈஷா மையத்தின் யோகா மற்றும் யந்த்ரா நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக வந்தேன். அந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக ஈஷா மையம் என்னை நாலரை லட்சம் கட்டச் சொன்னார்கள். அதன்படியே நானும் நாலரை லட்சம் கட்டினேன். நான் கட்டிய நாலரை லட்சத்தை நன்கொடையாக பதிவு செய்வார்கள் என்பது எனக்குத் தெரியாது. நன்கொடை என்பது விரும்பி, தாமாக முன்வந்து தர வேண்டும்.

யந்த்ரா என்ற அந்த நிகழ்ச்சி 21 டிசம்பர் 2014 அன்று நள்ளிரவில் நடைபெற்றது. அந்த நிகழ்ச்சி முடிவுற்ற பிறகு மேலும் 50 ஆயிரம் கேட்டார்கள். அந்த 50 ஆயிரம் அந்த யந்த்ராவை விமானம் மூலமாக ஸ்வீடன் அனுப்புவதற்காக என்று தெரிவித்தார்கள். எனக்கு அந்த யந்த்ராவே வேண்டாம் என்று நான் கூறியபோதும், 50 ஆயிரம் கட்டியே தீர வேண்டும் என்று வற்புறுத்தினார்கள். ஏற்கனவே நாலரை லட்சம் கட்டிய என்னை மேலும் 50 ஆயிரம் கட்ட வேண்டும் என்று அவர்கள் வற்புறுத்தியது என்னை கடும் அதிர்ச்சியடையச் செய்தது. அந்த யந்த்ராவை எடுத்துப் பார்த்தபோது, அது 165 கிலோ எடை இருந்தது என்பதும், அது உடைந்திருந்தது என்பதையும் கண்டு பிடித்தேன்.



இதுதான்
மதச்சார்பற்ற
அமைப்பாம்

மேலும் மேலும் என்னிடம் பணம் கேட்டு வற்புறுத்தியபோதுதான் நான் இவர்கள் ஏமாற்றுப் பேர்வழிகள் என்பதை உணர்ந்தேன். உணர்ந்ததும் வருத்தத்தோடு நான் கட்டிய நாலரை லட்சம் பணத்தை திருப்பித் தாருங்கள் என்று அவர்களிடம் கேட்டேன். பணம் திருப்பித் தர முடியாது என்று என்னோடு வாதத்தில் இறங்கியதோடு, மேலும் 50 ஆயிரம் தர வேண்டும் என்று தொடர்ந்து வற்புறுத்தினார்கள்.

என்னுடைய நாலரை லட்சத்தை பெற்றுத் தருவதோடு, ஈஷா மையத்தின் மேல் நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக் கொள்கிறேன் என்று அவர் தனது புகாரில் தெரிவித்துள்ளார்.

இந்தப் புகாரையடுத்து, குற்ற எண் 1/2015 என்ற எண்ணில், ஆலந்துறை காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. இதற்குப் பின் என்ன நடக்கும் ? வழக்கம் போலவே, புகாரளித்தவருக்கு பணத்தை திருப்பி அளித்து, சமாதானம் செய்து கொண்டனர் ஈஷா மையத்தினர்.


இதில் கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால், வெளிநாட்டில் வாழும் ஒருவரை வசியம் செய்து, அவரது சேமிப்புகளை வந்து ஈஷா மையத்தில் கொட்டம் அளவுக்கு மனமாற்றம் செய்யும் வலிமையை ஜக்கி பெற்றிருக்கிறார் என்பதே. கடந்த வருடம், சென்னை மாம்பலத்தில் ஈஷா மையத்தின் ஒரு வார யோகா வகுப்புக்கு சென்றிருந்தபோது, யோகா கற்றுக்கொடுத்த, ஒரு பெண் வகுப்பு நடக்கையில் தன்னைப் பற்றி அறிமுகப்படுத்திக் கொண்டார். "நான் இன்போசிஸ் நிறுவனத்தில் மிக உயர்ந்த சம்பளத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தேன். டீம் லீடர் அளவுக்கு வளர்ந்தேன். ஆனால், அப்போது இல்லாத நிம்மதியை ஈஷா மையத்தில் சேர்ந்ததும் அடைந்திருக்கிறேன். " என்று கூறினார்.

செக்ஸ் போன்ற இயல்பான உணர்ச்சிகளை கட்டுப்படுத்தி பிரம்மச்சர்யத்தை கடைபிடிப்பதே உண்மையான ஞானம் என்று என்று ஜக்கி கூறுவதன் அடிப்படையில் தங்கள் வேலை, குடும்பம், மனைவி என்று அனைத்தையும் துறந்து, ஜக்கியின் ஆசிரமத்தில் முழு நேர தொண்டர்களாக மாறுகிறார்கள். ஜக்கியின் ஆசிரமத்தில் சேர்ந்ததால் நாசமான குடும்பங்கள் ஏராளம்.

சக்ஸ் போன்ற உணர்வுகள், மிக மிக இயல்பானவை. அந்த உணர்ச்சிகளை கட்டுப்படுத்தி, இயற்கைக்கு முரணான பிரம்மச்சர்யத்தை கடைபிடித்தால், மனச்சிதைவுக்கு ஆளாகி, ஒரு சாடிஸ்டாக மட்டுமே மாற முடியும். மன நிம்மதி கிடைக்காது.

ஜக்கி வாசுதேவ் கட்டுரை எழுதிய பிறகு, வழக்கறிஞர் ராதாகிருஷ்ணனின் அலுவலகத்துக்கு ஒரு வயதான பெண்மணி வந்தார். அவருடைய மகளும், மருமகனும், வேலையை ராஜினாமா

செய்து விட்டு, தங்கள் சேமிப்பு அனைத்தையும் ஜக்கி நிறுனத்தில் செலுத்தி விட்டு, தங்கள் குழந்தையை சன்னி யாசிகளை உருவாக்கும் சம்ஸ்கிருதி பள்ளி யில் சேர்த்திருப்பதாகவும் தெரிவித்தார். என் மகளிடம் எவ்வளவோ மன்றாடிப் பார்த்தேன். ஆனால் அவள் என்னிடம் கோபப்படுகிறாள். என்னை அடிக்கிறாள். ஜக்கியைப் பற்றி பேசாதே என்று சண்டை போடுகிறாள். ஒரு நாள் முழுக்க ஒரே ஒரு வாழைப்பழத்தை மட்டுமே உணவாக உண்ணுகிறாள். என்னால் என் மரு



மகனையோ, மகளையோ கட்டுப்படுத்த முடியும் என்று தோன்றவில்லை. என் பேத்தியின் வாழ்வை நாசமாக்கி விடுவார்களோ என்று அச்சமாக இருக்கிறது. தயவு செய்து, அந்த சம்ஸ்கிருதி பள்ளியை மூடுவதற்கான வழக்கை துரிதமாக நடத்துங்கள் என்று கூறினார். இதற்காக எவ்வளவு கட்டணம் ஆனாலும் நான் தருகிறேன் என்று கூறினார். அவரிடம் பணம் எதுவும் வேண்டாம் என்று கூறி அனுப்பி விட்டு, வழக்கை நாங்கள் நடத்திக் கொள்கிறோம் என்று கூறி அனுப்பி வைத்தோம். பிறகு இவரைப்போலவே மற்றொரு வயதான பெண்மணி, தொலைபேசியில் இதே போன்ற ஒரு கதையை கூறினார்.

அந்தப் பெண்மணிகளின் கண்ணீர் வேதனையை வரவழைத்ததோடு உணர்த்திய மற்றொரு விஷயம், இந்தப் பெண்மணிகளைப் போல ஆயிரக்கணக்கான குடும்பங்கள், ஜக்கி என்ற பொறுக்கியால் சீரழிந்ததுள்ளன என்பதே.

ஊருக்கெல்லாம் பிரம்மச்சர்யத்தை உபதேசம் செய்யும், ஜக்கி வாசுதேவால், தன்னுடைய சொந்த மகளுக்கு பிரம்மச்சர்யத்தின் தாத்பர்யங் களை கடைபிடிக்கும்படி அவரை நம்பவைக்க முடியவில்லை என்பது குறிப்பிடத்தகுந்த விஷயம்.

இதைத்தவிர்த்து, உரிய விசா பெறாமல், பல வெளிநாட்டு நபர்களும், ஈஷா மையத்துக்குள் தங்கி வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தகுந்த மற்றொரு விஷயம்.

ஒட்டுமொத்தமாக பார்த்தால், ஈஷா மையம் செய்து வரும் காரியங்கள் அனைத்தும் சட்டவிரோதமானவையே..

ஆனால், இந்த அரசு அமைப்புகள் அனைத்தும், ஜக்கி வாசுதேவ் போன்ற சமூக விரோதியை பாதுகாத்து கொள்ளையடிக்க அனுமதிப்பதோடு, பல்வேறு குடும்பங்களை சீரழிக்க அனுமதித்து வருகின்றன.

முதன் முறையாக ஜக்கி வாசுதேவை அம்பலப்படுத்தியதோடு மட்டுமல்லாமல், தொடர்ச்சியாக மூன்று பொது நல வழக்குகள் தொடுப்பதற்கும் நாம் காரணமாக இருந்தோம். அடுத்த கட்ட நடவடிக்கையாக, ஜக்கி வாசுதேவின் ஈஷா மையத்துக்கு வருமானவரித்துறை வழங்கியுள்ள கீழ்கண்ட சலுகைகளை ரத்து செய்யவும், புகார் அளிக்க விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு அறிவித்துக் கொள்கிறோம்.

Legal Status and Registrations

Public Charitable Trust registered vide Trust Deed no. 102 of 2005 book 4 vol 30, dated 8-4-2005.

Registration under sec 12A(a) of IT Act: C.No.327(398)/2005-06/CIT-III/CBE dated 7-10-2005

Section 80G of IT Act: C.No.327(398)/2008-09/CIT-III/CBE


PAN (Permanent Account Number): AAATI4764K

FCRA Registration: No. 075850261 dated 12th November 2009

வில்லா கட்டும் வில்லன்

சவுக்கு சங்கர் - சவுக்கு இணையம் - 01/03/2017

Source : https://www.savukkuonline.com/12198/



ஜக்கி வாசுதேவ் கோவை வெள்ளியங்கிரி மலை அடிவாரத்தில் 122 அடி உயர சிவன் சிலையை நிறுவி அதை திறப்பதற்கு பிரதமர் மோடியை வரவழைத்ததும், எதிர்ப்புகளை மீறி அதில் பிரதமர் கலந்து கொண்டதும் பல்வேறு மட்டங்களில் கடும் விமர்சனங்களை ஏற்படுத்தி உள்ளது.

ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னால் ஈஷா மையம் குறித்தோ, ஜக்கி வாசுதேவ் குறித்தோ எவ்விதமான விமர்சனங்களையும் எழுப்ப முடியாது. அந்த அளவுக்கு அவரது ஆதரவாளர்கள் பரவலாக பெருகி இருந்தனர். ஆனால், இன்று ஈஷா மையத்தின் சுற்றுச் சூழல் மாசுபடுத்தலுக்கு எதிராக பலத்த குரல்கள் எழுந்துள்ளதை பார்க்க முடிகிறது. ஈஷா மையத்துக்கு வரும் அனைவரையும் மூளைச்சலவை செய்து, அவர்களை அடிமைகளாக மாற்றும் வல்லமை பெற்ற ஜக்கி வாசுதேவுக்கு எதிராக இத்தனை குரல்கள் எழுந்திருப்பதே ஒரு வியப்பான விஷயம்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னதாக நண்பரின் அறிவுரையின்படி, ஈஷா மையத்தின் ஒரு வார கால யோகா பயிற்சி வகுப்புக்கு செல்ல நேர்ந்தது. முக்கிய நபர்கள் பலர், அந்த பயிற்சி நன்மை பயக்கும் என்றனர். பயிற்சிக்கான கட்டணமாக 750 ரூபாய் பெற்றனர் என்று நினைவு. அந்த கட்டணம் விருப்பக் கட்டணம் அல்ல. கட்டணம் செலுத்தினால்தான் பயிற்சியில் பங்கு கொள்ள முடியும். கட்டணம் செலுத்தியவுடன் அவர்கள் அளித்த ரசீதில், நன்கொடை என்று இருந்தது. வருமான வரிச் சட்டம் பிரிவு 80Gயின் கீழ் விலக்கு அளிக்கப்பட்டது என்றும் இருந்தது. இதுவே பெரும் நெருடலாக இருந்தது. நன்கொடை என்பது நாமாக விரும்பி அளிப்பது. கட்டாயமாக வசூலித்து விட்டு அதற்கு நன்கொடை என்று ரசீது அளித்தால் அது மோசடி இல்லையா ? இப்படிப்பட்ட மோசடியை தெரிந்தே அரங்கேற்றி வரும் ஜக்கி வாசுதேவைத்தான் இவ்வுலகை வாழவைக்க வந்த வள்ளல் என்று புகழ்கின்றனர். ஈஷா யோக மையம் தங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள 80ஜி வரி விலக்கை துஷ்பிரயோகம் செய்து, அரசுக்கு நஷ்டம் ஏற்படுத்தி வருவதால், அவர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் இந்த சலுகையை ரத்து

செய்ய வருமான வரித் துறை அதிகாரிகளுக்கு முறையிடும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அவர்கள் சொல்லிக் கொடுத்த யோகா பயிற்சிகள் பயனுள்ளவைதான். ஆனால், பயிற்சியின் கடைசி நாளில் அவர்கள் தங்கள் உண்மை முகத்தை காட்டத் தொடங்கினர். உருத்திராட்ச மாலை அணிந்தால் அது மனதை ஒருமுகப்படுத்தும் என்றனர். ஒரு உருத்திராட்ச மாலையின் விலை 1500 ரூபாய் என்றனர். அதன் பிறகு ஜக்கியின் உரைகள் அடங்கிய டிவிடிக்கள், அவர் படங்கள், கடவுள் படங்கள் போன்றவை பல நூறு ரூபாய்க்கு விற்கப்பட்டன. அத்தனை விற்பனைக்கும் நன்கொடை என்றே ரசீது அளிக்கப்பட்டது.

இதன் பிறகே ஜக்கி குறித்து விசாரணை செய்ய வேண்டும் என்று தோன்றியது. உடனடியாக கோவை சென்று, வெள்ளியங்கிரி மலைப்பகுதியில் அமைந்துள்ள ஜக்கி ஆசிரமத்துக்கு சென்றேன். ஆசிரமத்தினுள்ளே தியான லிங்கம் என்ற குடில் இருந்தது. அதனுள் பலரும் அமர்ந்து தியானம் செய்து கொண்டிருந்தனர். அங்கே கண்ட பலரும், மொட்டை அடித்துக் கொண்டு சன்னியாசம் ஏற்றவர்களாக இருந்தனர்.

பல லட்ச ரூபாய் சம்பளம் தரும் பதவிகளை துறந்து குடும்பத்தை துறந்து சன்னியாசம் ஏற்பது அவரவர் விருப்பம். அதில் நாம் தலையிட முடியாது. ஆனால், வயதான பெற்றோரை, கணவரை, மனைவியை, குழந்தைகளை நட்டாற்றில் விட்டு விட்டு, இருக்கும் பணத்தையெல்லாம் ஜக்கியிடம் அளித்து விட்டு சன்னியாசம் என்று ஒரு ஆசிரமத்தில் குடியிருப்பது சரியான காரியமாகப் படவில்லை. தன் மகளும், மகனும் துறவறம் பூண்டு சென்று விட்டனர். அவர்களை பார்த்தே வருடக் கணக்காக ஆகிறது என்று பெற்றோர்கள் கண்ணீரோடு பேசுவதை பார்க்கையில், அவர்களின் துறவறம் எப்படி அறம் சார்ந்த காரியமாகும் ?



இப்படிப்பட்ட அயோக்கியத்தனமான துறவறங்களை ஊக்குவித்து விட்டு, தன் மகளுக்கு மட்டும் சிறப்பாக திருமணம் செய்து வைக்கும் ஜக்கியின் நடத்தை விமர்சனத்துக்கு உட்பட்டதா இல்லையா ?

ஜக்கியின் தந்திரங்கள் எளிமையானவை, ஆனால் வலிமையானவை. சமுதாயத்தில் பிரபலமாக உள்ள அரசியல் தலைவர்கள், திரைப்பட நட்சத்திரங்கள் போன்றவர்களுக்கு நேர்முகம் கொடுத்து, அதை ஊடகங்களில் பிரபலமாக்கி, அதன் மூலம் சாமான்ய மக்களை தன் பக்கம் இழுத்து அடிமையாக்குவதே இவரது தந்திரம்.

சில ஆண்டுகளுக்கு முன்னால், திமுக ஆட்சியில் இருந்தபோது, முதல்வர் கருணாநிதி தலைமையில் அண்ணா பல்கலைக்கழகத்தில் மரம் நடும் விழா நடைபெற்றது. கருணாநிதியிடம் ஜக்கி வாசுதேவை அறிமுகப்படுத்தியவர் நக்கீரன் இணை ஆசிரியர் காமராஜ். அந்த நெருக்கத்தின் அடிப்படையில், திமுக ஆட்சியில் பல சலுகைகளை பெற்றுள்ளார் ஜக்கி. அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட நண்பர் ஒருவர், அதில் ஈர்க்கப்பட்டு, ஜக்கியின் மவுண்ட் கைலாஷ் யாத்திரைக்கு பணம் கட்டினார். அதற்கான கட்டணம் 1.5 லட்சம் ரூபாய். அந்த யாத்திரையில் அவரோடு பயணித்தவர்கள் மொத்தம் 600 பேர். யாத்திரை சென்று வந்த பிறகு ஒரு ட்ராவல் ஏஜென்சியில் கைலாஷ் யாத்திரைக்கு எவ்வளவு ஆகும் என்று விசாரித்தபோது, வெறும் 42 ஆயிரம் என்று தெரிவித்திருக்கிறார்கள். 600 பேருக்கு எவ்வளவு ஆகும் என்பதை நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்.

இது மட்டும் அல்ல. ஈஷா யோக பயிற்சி வகுப்புகளுக்கு சென்று வந்த தாக்கத்தில் அந்த நண்பர், ஈஷாவில் சொல்லிக் கொடுக்கும் யோகா பயிற்சிகளை வீடியோ வடிவில் உருவாக்கி ஒரு இணையதளத்தில் ஏற்றியிருக்கிறார். அந்த வீடியோவை உடனடியாக நீக்குங்கள் என்று

ஈஷா தரப்பிலிருந்து கடுமையான எதிர்ப்பு வந்துள்ளது. நண்பர் மறுத்ததும், அவர்களே புகார் அனுப்பி அந்த இணையதளத்தையே முடக்கியுள்ளனர்.


யோகா பயிற்சியை சொல்லிக் கொடுக்கிறோம் என்றால், அதை இப்படி ரகசியமாக மறைத்து வைக்க வேண்டிய அவசியம் என்ன ? ஈஷா மையத்துக்கு பணம் கட்டித்தான் யோகா கலையை கற்றுக் கொள்ள வேண்டுமென்றால் அது வியாபாரம் இல்லாமல் வேறு என்ன ?

ஈஷா நிறுவனத்தால் 12 நிறுவனங்கள், கம்பெனி பதிவாளரிடம் பதிவு செய்யப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் பல கட்டுமான நிறுவனங்கள். இந்த 12 நிறுவனங்களில் 7 நிறுவனங்கள் ஈஷாவின் பதிவு செய்யப்பட்ட முகவரியில் செயல்பட்டு வருகின்றன.

ஈஷாவில் இந்தியாவைச் சேர்ந்த பெரும் பெரும் செல்வந்தர்கள் மற்றும் வெளிநாடுகளில் இருந்து வரும் முக்கிய பிரமுகர்களை தங்க வைக்க தற்போது உள்ள ஈஷா மையத்திற்கு உள்ளாகவே குளிர்சாதன வசதியோடு கூடிய குடில்கள் அமைந்துள்ளன. ஆனால் ஈஷா மையத்துக்கு வரும் பிரமுகர்களை வசதியோடு தங்கவைத்து, அவர்களிடமிருந்து டாலர்களை உருவுவதற்கு தற்போது உள்ள இடங்கள் போதுமானதாக இல்லை.

இதனால்தான் வில்லா போன்ற வீடுகளை ஈஷா மையத்துக்கு அருகாமையிலேயே கட்டவதற்கு திட்டமிடப்பட்டது. ஏற்கனவே ஈஷா மையக் கட்டிடங்கள் அனைத்துக்கும் அனுமதி இல்லை என்று சென்னை உயர்நீதிமன்றத்தில் நான்கு வழக்குகள் நிலுவையில் உள்ளன. இந்த மனு தவிர, கடந்த வாரம் தாக்கல் செய்யப்பட்ட மற்றொரு பொதுநல வழக்கில் தமிழக அரசு பதில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த பதில் மனுவில், ஈஷா மையத்தில் கட்டப்பட்டுள்ள அனைத்து கட்டிடங்களும் இன்று வரை எவ்வித அனுமதியும் இல்லாமல்தான் கட்டப்பட்டுள்ளன என்பதை அரசே ஒப்புக் கொண்டுள்ளது. இந்த நிலையில் புதிதாக வில்லாக்கள் கட்டுவதற்கு விவசாய விளை நிலைங்களை அழித்து, யானைகள் வழித்தடத்தில் புதிய கட்டுமானங்களை செய்தால், அதற்கு அனுமதி கிடைப்பதில் சிக்கல் ஏற்படும் என்பது ஜக்கிக்கு நன்றாகவே தெரியும்.



அதனால்தான், க்ருஷி லேண்ட் ஃபார்ம் டெவலப்பர்ஸ் ப்ரைவேட் லிமிட்டெட் என்ற கட்டுமான நிறுவனத்தை உருவாக்கி, அதனை வழக்கம் போல கோவையில் பதிவு செய்யாமல், டெல்லி பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்துள்ளார் ஜக்கி. இதன் இயக்குநர்களாக உலகளவில் பிரபலமான சத்தியபால் டிசைனர்ஸ் என்ற ஆடை வடிவமைப்பு நிறுவனத்தின் உரிமையாளரான புனீத் நந்தா என்பவரும், ஏபிஎன் மற்றும் இராயல் பேங்க் ஆப் ஸ்காட்லாண்ட் வங்கிகளின் முன்னால் துணைத்தலைவரான மௌமித சென் சர்மா என்ற பெண்மணியும் உள்ளனர்.

க்ருஷி கட்டுமான நிறுவனத்துக்கும் ஈஷா நிறுவனத்துக்கும் தொடர்பு இல்லை என்பது போல நிரூபிக்கவே தனியாக வேறு பெயரில் கட்டுமான நிறுவனம் தொடங்கப்பட்டாலும், க்ருஷி நிறுவனத்தின் இயக்குநர்களாக இருப்பவர்கள் இருவரும் கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக ஈஷாவின் தீவிர ஆதரவாளர்கள். இதில் மௌமித சென் சர்மா தனது வேலையினை உதறிவிட்டு தற்போது ஈஷா யோகா மையத்திலேயே வசித்து வருகின்றார். இவருக்கு தொண்டாமுத்தூர் சட்ட மன்ற தொகுதியில் வாக்காளர் அடையாள அட்டையும் உள்ளது. புனீத் நந்தா தனது முகநூல் மற்றும் வலைப்பக்கத்தில் தன்னை ஈஷா மையத்தில் 2006 முதல் தன்னார்வலராக பணியாற்றி வருவதாக தெரிவித்துள்ளார்.

மேலும் கிருஷி லேண்ட் பார்ம் டெவலப்பர்ஸ் பிரைவேட் லிமிட் நிறுவனம் டெல்லியில் பதிவு செய்யப்பட்டாலும் இதனை பதிவு செய்தவர்கள் திருப்பூர் வேலம்பளையம் சுவர்ணபுரி

Company Master Data http://www.mca.gov.in/mcafoportal/companyLLPMasterData.do#

Company Master Data

CIN	U70200DL2012PTC246539
Company Name	KRISHI LAND FARM DEVELOPERS PRIVATE LIMITED
ROC Code	RoC-Delhi
Registration Number	246539
Company Category	Company limited by Shares
Company SubCategory	Non-govt company
Class of Company	Private
Authorised Capital(Rs)	500000.0
Paid up Capital(Rs)	100000.0
Number of Members(Applicable in case of company without Share Capital)	0
Date of Incorporation	20/12/2012
Registered Address	7, Osho Drive, Gadaipur, Mehrauli New Delhi New Delhi DL 110030 IN
Email Id	puneetski@gmail.com
Whether Listed or not	Unlisted
Date of last AGM	30/09/2015
Date of Balance Sheet	31/03/2015
Company Status(for efiling)	Active

Charges

Assets under charge	Charge Amount	Date of Creation	Date of Modification	Status
No Charges Exists for Company/LLP				

Directors/Signatory Details

DIN/PAN	Name	Begin date	End date
00333621	PUNEET NANDA	20/12/2012	-
00481775	MOUMITA SARMA SOUGATA SEN	28/12/2013	-

FORM NO. ADT-1

[Pursuant to section 139 (1) of the Companies Act, 2013 and Rule 4(2) of the Companies (Audit and Auditors) Rules, 2014]

सत्यमेव जयते

Information to the Registrar by company for appointment of auditor

Form language (●) English ( ) Hindi

Refer the instruction kit for filing the form.

1.(a) *Corporate identity number (CIN) of company: U70200DL2012PTC246539 [Pre-Fill]

(b) Global location number (GLN) of company

2.(a) Name of the company: Krishi Land Farm Developers Private Limited

(b) Address of the registered office of the company:
7, Osho Drive, Gadaipur, Mehrauli
New Delhi
Delhi
INDIA
110030

(c) *email id of the company: puneetski@gmail.com

3. *Whether company is falling under any class of companies as per section 139(2) (●) Yes ( ) No

4. *Whether joint auditors have been appointed ( ) Yes (●) No

*Number of auditor(s) appointed: 1

(a) *Category of auditor ( ) Individual (●) Auditor's firm

(b) *Income-tax permanent account number of auditor or auditor's firm: ABAFS0228F

(c) *Name of the auditor or auditor's firm: SENTHIL & LOGANATHAN & CO

(d) *Membership number of auditor or auditor's firm's registration number: 009206S

(e) *Address of the auditor or auditor's firm
Line I: SITE NO.58 SADHGURU ILLAM, MAIN STREET
Line II: SWARNAPURI AVENUE, 15 VELAMPALAYAM

*City: TIRUPUR

*State: Tamil Nadu-TN

Country: IN

*Pin code: 641652

*e-mail ID of the auditor or auditor's firm: rnsfca@gmail.com

(f) *Period of accounts for which appointed
From 01/04/2015 (DD/MM/YYYY)
To 31/03/2016 (DD/MM/YYYY)

(g) *Number of financial year(s) to which appointment relates: 1

(h) *Whether the appointment of auditor is within the limit of twenty companies as specified in sub section 3(g) of section 141 (●) Yes ( ) No



119-தொண்டாமுத்தூர் சட்டமன்ற தொகுதி

வாக்காளர் பட்டியல் - 2017

பாகம் எண் 46
தொடர்ச்சி

பிரிவு: 1-இக்கரைபோளுவாம்பட்டி (வ.கி.)மற்றும் (ஊ) செம்மேடு பழங்குடியினர் வீதி வா.எண்.5 , பின்கோடு : 641109

1 RIV0166736 வாக்காளர் பெயர்: சகாயமேரி கணவர் பெயர்: பிரான்சிஸ் புதிய/பழைய வீட்டு எண்: A-248 / NA வயது: 53 இனம்: ஆண்	2 RIV0166728 வாக்காளர் பெயர்: பிரான்சிஸ் தந்தை பெயர்: ஆரேக்கியசாமி புதிய/பழைய வீட்டு எண்: A-248 / NA வயது: 35 இனம்: ஆண	3 RIV1674662 வாக்காளர் பெயர்: சரோஜினி கணவர் பெயர்: துரைசாமி புதிய/பழைய வீட்டு எண்: 1 / NA வயது: 32 இனம்: பெண்
4 RIV1674589 வாக்காளர் பெயர்: சூர்யா கணவர் பெயர்: துரைசாமி புதிய/பழைய வீட்டு எண்: 1 / NA வயது: 19 இனம்: பெண்	5 MPR3242351 வாககாளர் பெயர்: வெள்ளையம்மாள் கணவர் பெயர்: வெள்ளி புதிய/பழைய வீட்டு எண்: 1 / NA வயது: 71 இனம்: பெண	6 RIV0691121 வாக்காளர் பெயர்: ரங்கசாமி தந்தை பெயர்: ஜயாசாமி புதிய/பழைய வீட்டு எண்: 1-16 / - வயது: 25 இனம்: ஆண்
7 RIV0369983 வாக்காளர் பெயர்: ரத்தினம் தாய் பெயர்: ருக்மணி புதிய/பழைய வீட்டு எண்: 1-44 / Na வயது: 34 இனம்: ஆண்	8 RIV1674639 வாக்காளர் பெயர்: மௌமிதா சென் சர்மா கணவர் பெயர்: சௌகதா சென்குப்தா புதிய/பழைய வீட்டு எண்: 1-157 / NA வயது: 49 இனம்: பெண்	9 RIV0693747 வாக்காளர் பெயர்: தங்கள் கணவர் பெயர்: நடராஜ் புதிய/பழைய வீட்டு எண்: 1x / Na வயது: 34 இனம்: பெண்
10 RIV0692939 வாக்காளர் பெயர்: பொன்னுச்சாமி தந்தை பெயர்: மாயன்	11 RIV0693689 வாக்காளர் பெயர்: ரங்கசாமி மற்றவர் பெயர்: ரங்கசாமி	12 RIV0692921 வாக்காளர் பெயர்: ஜெயமணி கணவர் பெயர்: முத்துகுமார்




அவன்யூ வில் உள்ள சத்குரு இல்லத்தில் இயங்கிவரும் ஒரு கணக்கு தணிக்கையாளரால் பதிவு செய்யப் பட்டது.

இந்த வில்லா வகையிலான வீடுகளை கட்டு வதற்கு அனுமதி கேட்டபோது, வனப்பகுதி மற்றும் மலைத்தள பாதுகாப்புக் குழு அனுமதி வேண்டும் என்று அனுமதி தராமல் நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது. ஆனால் இந்த நிறுவனம், சென்னை உயர்நீதி மன்றத்தை அணுகி, வீடு கட்டுவதற்கான உரிமையை வழங்க வேண்டும் என்று மனுத்தாக்கல் செய்துள்ளது. அந்த வழக்கில் பதில் மனு தாக்கல் செய்த வனத்துறை, இவர்கள் கட்டு மானத்துக்கு அனுமதி கோரும் இடம், யானை களின் வழித்தடம் என்று பதில் கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது. அவர்கள் கட்டுமானம் செய்ய அனுமதி கோரும் இடத்துக்கு வெகு அருகில்தான் ஆதியோகி சிவன் சிலை அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

ஈஷா நிறுவனம் 3 லட்சம் சதுர அடிக்கும் மேற்பட்ட கட்டிடங்களை நகர் ஊரமைப்புத் துறையிடமோ, மலைத்தள பாதுகாப்புக் குழுமத் திடமோ அனுமதி பெறாமல் கட்டு வந்தது குறித்து, சென்னை உயர்நீதிமன்றத்தில் பொதுநல வழக்குகள் நிலுவையில் உள்ள நிலையில், சட்டத்தை ஏமாற்றவே க்ருஷி என்ற பெயரில் இந்த கட்டுமானங்களை செய்து வருகிறது.

ஈஷா நிறுவனம் மீதான முக்கிய குற்றச்சாட்டே யானைகள் வழித்தடத்தை அடைத்து, கட்டுமானம் செய்து வருகிறார்கள் என்பதுதான். இந்த நிலையில் தற்போது அதே பகுதியில் விவசாய நிலங்களை அழித்து, அடுக்குமாடி வீடுகள் மற்றும் வில்லாக்களை கட்ட இவர்கள் முயற்சி செய்து வருகிறார்கள்.



ஈஷா நிறுவனம், சட்டத்தை மதிக்காமல், இயற்கையை அழித்து கட்டுமானம் செய்து வருவதும், அரசு அதிகாரிகள் துணையோடு, இக்கட்டுமானங்கள் தங்கு தடையில்லாமல் நடைபெற்று வருவதும் ஆவணங்களோடு நீதிமன்றத்தில் அம்பலப்படுத்தப்பட்டுள்ளன. இந்நிலையில், வேறு பெயரில் இதே போன்ற சட்டவிரோத கட்டுமானத்தை நடத்துவதற்கு ஈஷா நிறுவனம் முயற்சி செய்து வருகிறது.

இது தவிர, டீசர்ட் முதல் ஊறுகாய் வரை, நேரடியாகவும் இணையம் மூலமாகவும் லட்சக்கணக்கில் வியாபாரம் செய்து வருகிறது ஈஷா. இந்த வியாபாரத்தின் மூலம் வரும் அனைத்து வருமானமும் நன்கொடை என்று வரவு வைக்கப்பட்டு, வாட் வரி, வருமான வரி என்று கோடிக்கணக்கில் வரி ஏய்ப்பும் நடைபெற்று வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

ஒட்டுமொத்தமாக மோசடியின் மொத்த உருவமாக ஈஷா நிறுவனம் திகழ்ந்து வருகிறது என்பதே பட்டவர்த்தனமான உண்மை.

2013ல் இது தொடர்பாக வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தின் முன் தாக்கல் செய்யப்பட்டது.

நீதிமன்றம் அப்போதே உரிய நடவடிக்கை எடுத்திருந்தால் இன்று 112 அடி உயர சிலை உருவாகியிருக்காது. சட்டத்தை மதிக்காமல் மதத்தின் பெயரால் சாமியார் ஒருவன் அயோக்கியத்தனம் செய்து வருகிறான். ஆனால் அதை தடுத்து நிறுத்த வேண்டிய நீதிமன்றமோ மீளா உறக்கத்தில் ஆழ்ந்திருக்கிறது. இந்த ஆழ்ந்த உறக்கத்தினால்தான், ஜக்கி வாசுதேவ் போன்ற பலப்பல மோசடி சாமியார்கள் மேலும் மேலும் உருவாகி வருகின்றனர்.

இப்போதாவது நீதிமன்றம் தலையிட்டு, ஈஷா நிறுவனத்தின் சட்டவிரோத செயல்களை தடுத்து நிறுத்தத் தவறினால், நீதிமன்றமும், ஈஷாவுக்கு துணை போவதாகவே கருத முடியும்.

கிழிந்த ஜக்கியின் முகமூடி

சவுக்கு சங்கர் – சவுக்கு இணையம் - 12/07/2018

Source : https://www.savukkuonline.com/14901/



2013ம் ஆண்டு. அந்த ஆண்டின் தொடக்கமே எனக்கு மிகுந்த மனச்சோர்வாக இருந்தது. தனிப்பட்ட முறையில் பல்வேறு சிக்கல்கள். எனது நிலையைப் பார்த்த எனது நண்பர், உடனடியாக ஈஷா யோகாவில் சேர் என்றார். எனக்கு இந்த சாமியார்களை கண்டாலே அலர்ஜி என்பது அவருக்கு நன்றாகத் தெரியும். இருந்தாலும் போய் சேர் என்றார். எனக்கு எரிச்சல். இருந்தாலும் அவர் பேச்சை தட்ட முடியவில்லை. யோகா வகுப்புக்கு கட்டணம் 500 ரூபாய் என்றார்.

நானும் சரியாக 500 ரூபாய் எடுத்துக் கொண்டு மாம்பலத்தில் நடந்த ஒரு ஈஷா யோகா வகுப்புக்கு சென்றேன். அவர்கள் கட்டணம் 750 ரூபாய் என்றார்கள். எனக்கு எரிச்சல் இன்னும் அதிகமானது. நாளை தருகிறேன் என்று சொன்னதற்கு, இல்லை அண்ணா உடனே கட்ட வேண்டும் அண்ணா என்றார் அந்த ஆன்ட்டி.

உடனே நண்பரை அழைத்து, கட்டணம் 750 ரூபாய். என்னிடம் 500 ரூபாய்தான் இருக்கிறது என்றேன். அவர், சங்கர், கோவிச்சுக்காம ஏடிஎம் போய் எடுத்து அந்த க்ளாஸ்ல ஜாயின் பண்ணு என்றார். எரிச்சலோடு பணம் எடுத்து வந்து யோகா வகுப்புக்கு கட்டணம் செலுத்தினால், நீங்கள் அளித்த நன்கொடைக்கு வருமான வரிச் சட்டம் பிரிவு 80 நியின் கீழ் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது என்று இருந்தது. எனக்கு இது திருட்டுத்தனம் என்று உடனே தோன்றியது. இருப்பினும் நண்பர் திட்டுவாரே என்று, வகுப்பில் சேர்ந்தேன்.

எனக்கு வகுப்பு எடுத்தவர் ஒரு இளம் பெண். அழகாக இருந்தார். அவர் தான் டிசிஎஸ் நிறுவனத்தில் மூத்த அதிகாரியாக பணியாற்றியதாகவும், பின்னர் அதை ராஜினாமா செய்து விட்டு முழுநேர ஜக்கி சன்னியாசியாக மாறி விட்டதாகவும் கூறினார். இத்தனை அழகான பெண், எதற்காக சாமியாராக வேண்டும் என்று எனக்கு புரியவே இல்லை. வகுப்பு தொடங்கும் முன் ஒரு மணி நேரம் பூஜை செய்தார்கள். அந்த பூஜையை இன்னொரு அழகான பெண் செய்தார். அந்த பூஜையை செய்வதற்கு தனியாக வகுப்பு இருக்கிறது. அந்த வகுப்பு ஒரு மாதம் எடுக்கப்படும் என்றார். வாயில நுழையாத மந்திரத்தை சொல்லிக்கிட்டே மணியாட்றதுக்கு எதுக்கு ஒரு மாதம் என்றுதான் எனக்கு தோன்றியது.

ஒரு வாரத்துக்கு வகுப்பு. யோகாசனம் நன்றாகத்தான் இருந்தது. ஜக்கி வீடியோ போடுவார்கள். அதில் அவர் உலக வியாக்கியானங்களை பேசுவார். வகுப்பின் இறுதி நாளில், ஜக்கியின் படம், ருத்திராட்ச மாலை போன்றவற்றை விற்பனைக்கு வைத்திருந்தார்கள். ருத்திராட்ச மாலை எவ்வளவு என்று கேட்டதற்கு 1500 ரூபாய் என்றார்கள். இதில் என்ன விசேசம் என்று கேட்டதற்கு, தமிழகத்தில் இருக்கும் உத்திராட்ச மாலைகள் போலியானவை, இலந்தை கொட்டையில் செய்பவை. ஈஷா மையத்தில் விற்பனை செய்யப்படும் ருத்திராட்ச மாலைகள், நேரடியாக உத்திராகாண்ட் மாநிலத்திலிருந்து தருவிக்கப்பட்டவை என்றார்கள். அதையும் சில பைத்தியங்கள் 1500 ரூபாய் கொடுத்து வாங்கினார்கள். அவர்கள் வாங்கியதற்கு தந்த ரசீதை வாங்கிப் பார்த்தால், அதுவும் நன்கொடை ரசீது.

இதில் பெரும் ஊழல் உள்ளது என்பதை உணர்ந்தேன். உடனடியாக வகுப்பு முடிந்த மூன்றாவது நாள் கோவை வெள்ளியங்கிரி பகுதிக்கு நேரடியாக சென்றேன். ஆசிரமத்தின் உள்ளே சென்றால், உள்ளே செல்ல கடும் கட்டுப்பாடுகள். செல்போன் எடுத்துச் செல்லக் கூடாது. செல்போனை நுழைவாயிலில் உள்ள இடத்தில் கொடுத்து விட வேண்டும்.

அந்த இடத்தில் தியான மண்டபம் என்று ஒன்றை வைத்திருந்தார்கள். அதன் உள்ளே சென்றால், கண்ணை மூடிக் கொண்டு பல பேர் அமர்ந்திருந்தார்கள். நீங்களும் உட்காருங்கள், மனது அமைதியாகும் என்றார்கள். உட்கார்ந்தால் என்னால் கண்ணை மூட முடியவில்லை. மற்றவர்கள் என்ன செய்கிறார்கள் என்று பார்க்கவே தோன்றியது. வேடிக்கை பார்த்து விட்டு வந்து விட்டேன். பின்னர் ஆசிரமத்தின் வெளியே சென்று, அதன் மொத்த சுற்றளவையும் பார்த்தேன். அருகே இருந்த பழங்குடியின குடியிருப்புக்கு சென்று, அந்த பழங்குடி மக்களிடம் பேசினேன். இந்த ஆசிரமம் வந்ததால் தங்கள் வாழ்க்கையே எப்படி பாதிக்கப்பட்டது என்பதை விளக்கினார்கள். ஆசிரமத்துக்காக நூற்றுக் கணக்கான மரங்களை எப்படி வெட்டி வீழ்த்தினார்கள் என்பதை விளக்கினார்கள்.

அருகே இருந்த கிராமங்களில் சென்று பேச்சு கொடுத்தபோது, எப்படி ஈஷா நிறுவனம், தங்கள் நிலங்களையெல்லாம் வாங்கியது என்பதை கூறினார்கள். நிலத்தை விற்பனை செய்ய மறுப்பவர்களின் நிலத்தை சுற்றி உள்ள நிலத்தை வாங்கி வேலி அமைத்து, நிலத்துக்கு பாதையில்லாமல் நெருக்கடி உண்டாக்கி, எப்படி அந்த மொத்த இடத்தையும் கபளீகரம் செய்தார்கள் என்று விவரித்தனர்.

ஆசிரமத்தின் உள்ளே மிகப் பிரம்மாண்டமான கட்டுமானங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. பளிங்கு கற்கள் உடைக்கப்பட்டுக் கொண்டிருந்தன.



விசாரித்தபோது ஈஷா மையத்தில் ஒரே ஒரு சதுர அடிக்கு கூட உரிய அனுமதி பெறவில்லை என்று தெரிந்தது. அனைத்து ஆவணங்களையும் சேகரித்து, அத்தனைக்கும் ஆசைப்படாதே என்று முதல் கட்டுரையை 10 மார்ச் 2013 அன்று எழுதினேன்.

அந்த கட்டுரையை எழுதும் வரையில், ஜக்கி வாசுதேவுக்கு எதிராக இந்தியா முழுமையிலும் ஒரே ஒரு குரல் கூட எழுந்ததில்லை. ஏறக்குறைய அவர் கடவுளாகவே வணங்கப்பட்டு வந்தார். அந்த முதல் கல்லை எரிந்தபோது, அதனால் விளைவுகள் ஏற்படுமா இல்லயா என்பதைப் பற்றி நான் கவலைப்படவில்லை.

கோவையிலிருந்து திரும்பியதும், இருந்த ஆவணங் களை வைத்து, அனுமதி இல்லாமல் கட்டப்பட்டுள்ள ஈஷா யோக மையத்தின் கட்டிடங்களை இடிக்க வேண்டுமென்று, பூவுலகின் நண்பர்கள் அமைப்பின் சார்பில் வழக்கு தொடுக்க ஏற்பாடு செய்தேன். அதன் பின், ஈஷாவுக்கு மின் இணைப்பை துண்டிக்க வேண்டும்.

அனுமதி இல்லாமல் நடைபெறும் ஈஷா பள்ளியை மூட வேண்டும் என்று நான்கு பொது நல வழக்குகள் தொடுக்கப்பட்டன.

அப்போது ஈஷா மையத்தில் சிவராத்திரி விழா நடைபெற இருந்தது. வனப் பகுதியில் ஒலி பெருக்கிகளை வைத்து விழா நடத்துவதால், வன விலங்குகள் பாதிக்கப்படும் என்பதால் விழாவை தடை செய்ய வேண்டும் என்று இடைக்கால உத்தரவுக்காக ஒரு வழக்கு தொடுக்கப்பட்டது. நீதிமன்றம், அனுமதிக்கப்பட்ட அளவை விட கூடுதலாக ஒலி பெருக்கி வைக்க கூடாது என்று உத்தரவு பெறப்பட்டது. வன அதிகாரிகள் நேரடியாக கண்காணிக்க வேண்டும் என்றும் உத்தரவு பிறப்பிக்கப் பட்டது. அப்போது அந்த இடத்தில் பணியில் இருந்த வனத் துறை அதிகாரியிடம் பேசினேன். அவர், போன வருசம் மாதிரி இல்ல தம்பி. இந்த வாட்டி கோர்ட் உத்தரவால, சத்தம் கம்மியா இருக்கு என்றார்.

அந்த நிகழ்ச்சி ராஜ் டிவியில் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது. அந்நிகழ்ச்சியில் பேசிய ஜக்கி வாசுதேவ், இந்த நிகழ்ச்சியை தடை செய்ய சிலர் முயற்சித்தார்கள். ஆனால் அது நடக்கவில்லை என்றார். டேய் மாமா நீ காண்டாயிட்டல்ல அது போதும்டா என்றுதான் என் மனதில் தோன்றியது.அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, ஜக்கியோடு சேர்ந்து நடனமாடியவர், அப்போது ஜக்கியின் வழக்கறிஞராக இருந்து தற்போது, உயர்நீதிமன்ற நீதிபதியாக உள்ள பிஎன்.பிரகாஷ் என்பது கூடுதல் தகவல்.

அதன் பிறகு, வழக்குகளை வாபஸ் பெறச் சொல்லி, சமாதானத் தூது வந்தனர். வாபஸ் பெறுகிறோம். ஆசிரமத்தை மூடுங்கள் என்றதும், கிளம்பிப் போனவர்கள் திரும்ப வரவேயில்லை.

அதன் பின்னர், 3 செப்டம்பர் 2014 அன்று, திருட்டுச் சாமியாரும், தொள்ளாயிரம் அடிமைகளும் என்ற இரண்டாவது கட்டுரையை எழுதினேன். ஜக்கியின் அடிமைகள் என்னை பேசாத பேச்சு இல்லை. கோடியில் புரளும் கேடி பிப்ரவரி 2015ல் வெளியானது. 5 ஜனவரி 2015 அன்று, ஜக்கி வாசுதேவ் என்ற சமூக விரோதி என்ற மூன்றாவது கட்டுரையை எழுதினேன். வில்லா கட்டும் வில்லன் என்ற கட்டுரையை 1 மார்ச் 2017 அன்று எழுதினேன்.

இந்த கட்டுரைகளுக்கெல்லாம் பின்னர், ஈஷா மீதான மாயை குறைந்தது. பொது வெளியில் ஈஷா குறித்து பல விமர்சனங்கள் வந்தன. இன்று, சிஏஜி அறிக்கையில், சவுக்கில் 10 மார்ச் 2013 அன்று எழுதிய கட்டுரையில் உள்ள அனைத்து விவகாரங்களும் உண்மை என்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

ஈஷா செய்யும் வருமான வரி ஏய்ப்பு குறித்து புகார் அளிக்கப்பட்டு, அதன் மீது விசாரணை நடைபெற்று வருகிறது. உரிய முறையில் விசாரணை நடைபெறவில்லை என்றால் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கும் தொடுக்கப்படும்.

ஜக்கி இன்று பல நூற்றுக்கணக்கான கோடிகளின் மீது அமர்ந்திருக்கிறான். மோடி அவன் ஆசிரமத்துக்கு வருகை தருகிறார். எடப்பாடி பழனிச்சாமி, எஸ்பி.வேலுமணி, தங்கமணி என்று ஜக்கியின் பாக்கெட்டில் இல்லாத அமைச்சர்களே கிடையாது. இந்தியா முழுக்க உள்ள பல உயர் அதிகாரிகள் ஜக்கியின் பக்தர்கள்.

நம்மிடம் பட்டாபட்டியைத் தவிர வேறெதுவுமில்லை. ஆனால், இத்தனை செல்வாக்கு உள்ள ஒரு நபரின் காதில் புகுந்த எறும்பாக குடைச்சல் கொடுக்கும் இன்பம் இருக்கிறதே!!! அதை வார்த்தைகளால் விவரிக்கவே முடியாது.

ஜக்கி போன்ற செல்வாக்கு மிகுந்த சாமியார்களை எதிர்ப்பது அத்தனை எளிதல்ல. ஆக்டோபஸ் போல இவர்களின் கரங்கள் நீளாத இடமே கிடையாது. ஆனால் அதையும் மீறி, அவன் கண்ணில் விரலை விட்டு ஆட்டியுள்ளோம். இதுதான் நமது வெற்றி!


மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பாரி யாங்கண்ட தில்.

உரை: குணத்தில் கயவராக இருப்பர். ஆனால், நல்லவரைப் போலக் காட்டிக் கொள்வார். மனிதர்களிடம் மட்டும்தான் இப்படி இருவகையான நிலைகளை ஒரே உருவத்தில் காண முடியும்.

யோக்கியன் வர்றான்...

சவுக்கு சங்கர் - சவுக்கு இணையம் - 08/09/2017

Source : https://www.savukkuonline.com/12481/



இந்த கட்டுரை விகடன் இணையதளத்தில் வந்திருந்தது. என்ன காரணமென்றே தெரியாமல், திடீரென்று அந்த கட்டுரை விகடன் தளத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளது. ஜக்கி என்ற திருட்டுப் பயலின் நீண்ட ஆக்டோபஸ் கரங்கள் விகடன் வரை நீளக் கூடியதுதான். ஜக்கியை இந்த அளவுக்கு வளர்த்து விட்டதே விகடன்தானே. அந்த கட்டுரையை வாசகர்களுக்காக சவுக்கில் பதிப்பிக்கிறேன்.

லிட்டருக்கு 5 கி.மீ மைலேஜ் தரும் காரில், நதிகளை மீட்க பயணிக்கும் ஜக்கி வாசுதேவ்!

'ரமணா' படத்தில் ஒரு காட்சி. ஆபாச சுவரொட்டிகளை அழிக்கும் இளம்பெண்களைக் கூட்டம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும். இது தெரியாமல் முழிக்கும் அந்தப் பெண்களுக்கு விஜயகாந்த் விளக்கம் சொல்வார், "அந்த போஸ்டர்ல இருக்குற ஆபாசத்தை விட, நீங்க போட்டிருக்கிற டிரஸ்தான் ஆபாசமா இருக்கு!". அப்படித்தான் இருக்கிறது, 'நதிகளை மீட்போம்ஞ் பாரதம் காப்போம்' என்ற பெயரில், ஈஷா யோகா மையத்தின் நிறுவனர் ஜக்கி வாசுதேவ் மேற்கொள்ளும் விழிப்புஉணர்வு பயணம்.

ஆம், நதிகளை மீட்கக் கோரி, கோவை - டெல்லி வரை சாலை மார்க்கமாக, 7,000 கி.மீ தூரம் பயணித்து விழிப்புஉணர்வு பிரசாரம் செய்கிறார் ஜக்கி வாசுதேவ். அவர் பிரசாரம் செய்வதில் பிரச்னை இல்லை. அவர் செல்லும் கார்தான் மேட்டர்.

W463 என்ற அடையாள எண்ணைக் கொண்ட நி-க்ளாஸ் எஸ்யூவியின் AMG வெர்ஷன்தான் G63. 1980-களில் அறிமுகமான இந்த ஆஃப்ரோடிங் பெர்ஃபாமென்ஸ் எஸ்யூவி, 37 வருடங்களாகத் தயாரிக்கப்படுவது கவனிக்கத்தக்கது. எனவே ஜக்கி வாசுதேவ் பயன்படுத்தும் இந்த எஸ்யூவியின் அடிப்படை டிசைனில் அதிக மாற்றங்கள் இல்லாவிட்டாலும், தொழில்நுட்ப ரீதியில் அதிரடியான முன்னேற்றம் தெரிகிறது. ஆனால் வழக்கமான நி-க்ளாஸ் மாடலில் இருந்து கிவிநி மாடலை வித்தியாசப்படுத்திக் காட்டுவதற்காக, மெர்சிடீஸ் லோகோவுடன் கூடிய அகலமான க்ரில், Bi-Xenon ஹெட்லைட், பெரிய ஏர் இன்டேக் உடன் கூடிய முன்பக்க பம்பர், சிவப்பு நிற டிஸ்க் பிரேக் காலிப்பர், 20 இன்ச் 5 ஸ்போக் அலாய்

வீல்கள், காரின் பக்கவாட்டுப் பகுதியில் இருக்கும் ஸ்டெயின்லெஸ் எக்ஸாஸ்ட் பைப்கள், எலெக்ட்ரிக் சன்ரூஃப், ஸ்டீல்லால் ஆன ஸ்பேர் வீல் கவர் மற்றும் ரன்னிங் போர்டு எனச்சில தனித்தன்மையான டிசைன் அம்சங்கள் இடம்பெற்றிருக்கின்றன.

Nappa லெதரால் சூழப்பட்டிருக்கும் கேபினிலும், கிவிநி ஸ்பெஷல் கார்பன் ஃபைபர் வேலைப்பாடுகள் - AMG ஸ்போர்ட் ஸ்ட்ரிப் - ஸ்டீல்லால் ஆன AMG Door Sill - AMG ஸ்பெஷல் ஸ்டீயரிங் வீல் - THERMATIC கிளைமேட் கன்ட்ரோல் ஏஸி மற்றும் சீட்கள் - Harman Kardon ஆடியோ சிஸ்டம் - COMAND இன்ஃபோடெயின்மென்ட் சிஸ்டம் என இன்டீரியரிலும் இது தொடர்கிறது.

இப்படி சிறப்பான வரலாற்றுப் பின்னணியைக் கொண்டிருக்கும் ஜி63 எஸ்யூவியில் இருப்பது, 572bhp பவர் - 76kgm டார்க்கை வெளிப்படுத்தக்கூடிய 5.5 லிட்டர் V8 Bi-Turbo பெட்ரோல் இன்ஜின். இவ்வளவு பவர் இருப்பதால், 2.5 டன் எடை கொண்ட ஜி63 எஸ்யூவி, 0 - 100 கிமீ வேகத்தை வெறும் 5.4 விநாடிகளிலேயே எட்டிப்பிடித்து, அதிகபட்சமாக 210கிமீ வேகம் வரை (Electronically Limited) செல்லக்கூடிய திறனைப் பெற்றிருக்கிறது. இந்த இன்ஜின், இதற்கென ஸ்பெஷலாகத் தயாரிக்கப்பட்ட AMG Speedshift-Plus 7G-Tronic ஆட்டோமேட்டிக் கியர்பாக்ஸ் உடன் இணைக்கப்பட்டிருக்கிறது.

ஆக இன்ஜினின் அதிரடியான செயல்திறனை, நான்கு வீல்களுக்கும் பகிர்ந்தளிக்கும் வேலையை, இது கச்சிதமாகச் செய்கிறது. எக்ஸாஸ்ட் சத்தமும், காரின் பெர்ஃபாமென்ஸைப் போல படுமிரட்டலாக இருக்கிறது. Body On Frame, அதாவது லேடர் ஃப்ரேம் வடிவமைப்பைக் கொண்டிருக்கும் G63 எஸ்யூவி, 4 வீல் டிரைவ் - 3 Differential Lock (Front,Center,Rear) - ஆஃப் ரோடு Reduction கியர் - 220மிமீ கிரவுண்ட் கிளியரன்ஸ் போன்ற ஆஃப்ரோடு அம்சங்களைக் கொண்டிருக்கிறது. இவ்வளவு பவர்ஃபுல்லான எஸ்யூவியில் மைலேஜ் முக்கியம் இல்லை என்றாலும், அதனை அதிகரிக்கும் பொருட்டு, ஸ்டார்ட் - ஸ்டாப் சிஸ்டம், Brake Energy Recuperation போன்ற வசதிகள் இடம்பெற்றிருப்பது ப்ளஸ். சிறப்பம்சங்களைப் பொறுத்தவரை, ரேடாரை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் க்ரூஸ் கன்ட்ரோல் சிஸ்டம் - Blind Spot Assist - ரிவர்ஸ் கேமரா உடனான Partktronic சிஸ்டம், Hill Hold ÜCv†, Tyre Pressure Monitoring சிஸ்டம், NECK-PRO ஹெட்ரெஸ்ட் - பல காற்றுப்பைகள், எலெக்ட்ரானிக் ட்ராக்ஷன் கன்ட்ரோல் சிஸ்டம் (4ETS), எலெக்ட்ரானிக் ஸ்டெபிலிட்டி ப்ரோகிராம் (ESP) எனப் பட்டியல் நீள்கிறது.

ஆனால் இந்த G63 AMG எஸ்யூவியை ஒருவர் வாங்க விரும்பினால், அதற்கு 2.17 கோடி ரூபாய் (டெல்லி எக்ஸ் ஷோரூம் விலை) செலவழிக்க வேண்டும் என்பதுதான் மயக்கத்தை வரவழைக்கிறது. சாலை வரி, இன்சூரன்ஸ், பதிவுத்தொகை தனி. இந்த எஸ்யூவி, ஒரு லிட்டர் பெட்ரோலுக்கு 5 கி.மீ மைலேஜ் மட்டுமே தரவல்லது. மேலும், ஒரு கிமீ தூரம் செல்லும்போது, 322 கிராம் கரிம வாயுவை (CO_2) இது உமிழ்கிறது. அப்படியெனில், அவரது பயணத்தின்போது இந்தக் கார் வெளியிடும் புகை சுற்றுச்சூழலை எந்தளவு மாசுபடுத்தும் என்பதையும் இது எவ்வளவு லிட்டர் பெட்ரோலை எரியூட்டும் என்பதையும் உங்கள் கணக்குக்கே விட்டு விடுகிறோம். அவரது பயணத்துக்கு உதவியாக வரும் கார்கள் வெளியிடும் மாசு மற்றும் அவை எரியூட்டும் டீசல் (லிட்டர்கள்) கணக்கு தனி. ஆக, இப்படித்தான், ஜக்கி வாசுதேவ், "நதிகளை மீட்போம்.. பாரதம் காப்போம்" என்ற உயர்ந்த நோக்கத்துடன், 7,000 கிமீ தூரம் பயணம் விழிப்புஉணர்வு மேற்கொண்டுள்ளார்.



வாழ்க ஜனநாயகம்!

நன்றி **விகடன் இணையதளம்.**

காடு முழுக்க ஆக்கிரமித்த ஈஷா! ஒரு திகில் பயணம்!

2018 செப்டம்பர் நக்கீரன் வார இதழில் தாமோதரன் பிரகாஷ் – அருள்குமார்


Source : https://www.nakkheeran.in/nakkheeran/isha-occupy-forest-horror-trip/isha-occupy-forest-horror-trip

யானைகளின் வழித் தடங்களை மறித்து நிற்கும் ஆடம்பர விடுதிகளுக்கு சீல் வைப்பதோடு, இடிக்கவும் உத்தரவிட்டுள்ளது உச்சநீதிமன்றம். "இந்த உத்தரவு, ஜக்கி வாசுதேவின் ஈஷாவுக்கும் பொருந்தும்' என்கிற சூழலியல் ஆர்வலர்கள், "ஆனால் அரசாங்கம் அதை ஏன் கண்டு கொள்ளவில்லை என்கிற கேள்வியை முன்வைக்கிறார்கள். அந்தக் கேள்வியில் உண்மை உள்ளதா என அறிய "நக்கீரன்' டீமின் பயணம் தொடங்கியது.

7 மலைதாண்டி வெள்ளியங்கிரி சிவனை வழிபட்டு வந்த பாரம்பரியமிக்க பக்தர்களை, அடிவாரத்திலேயே பரவசத்தில் ஆழ்த்தி, பன்னாட்டு பக்தர்களின் நிதியை அள்ளும் திட்டத்துடன் கோவை மாவட்டத்தில் அமைக்கப்பட்டதுதான் காட்டை ஆக்கிரமித்த ஜக்கி வாசுதேவின் ஈஷா யோகா மையம்.

அதனைப் புலனாய்வு மையமாகக் கொண்டு நமது கார் பயணித்தது. பூண்டி என்கிற பகுதியிலிருந்து ஈஷாவுக்கு செல்லும் சாலையே வனத்துறைக்கு சொந்தமானதுதான் என்பதை வனத்துறையின்






எச்சரிக்கைப் பலகைகள் காட்டுகின்றன. நத்தை போல ஊர்ந்து செல்லவேண்டிய பாதை. முட்டத்துவயல் என்னும் ஊரை ஒட்டியுள்ள குளத்துஏரியில் வசிக்கும் வெள்ளியங்கிரி மலைவாழ் மக்கள் பாதுகாப்பு சங்கத்தினர் ஈஷா ஜக்கியின் மீது வழக்கு தொடுத்துள்ளதால் சங்கத்தின் ரங்கநாயகி, முருகம்மாள் ஆகியோரைக் கண்டோம்..

"54 ஏக்கர் நெலமுங்க சாமி. அத்தனையும் இந்த ஜக்கி வாசுதேவ் எங்க கிட்ட இருந்து பறிச்சு வச்சிருக்காருங்கறது எங்க யாருக்கும் தெரியாது, பழங் குடியின மக்களான எங்களுக்கு உதவி செய்ய வந்த ஒரு மகராசன் சொல்லித்தான் எங்களுக்கே அது தெரியும். எங்க நிலத்தை யாராலும் வாங்க முடியாதாமே. அமெரிக்க கவுண்டர்னு ஒரு மகராசன் எங்க இருளர் சனத்துக்கு எழுதி வச்சுட்டு போன நெலமாம். இதைய எல்லாம் சொல்லித்தான் கோர்ட்ல வழக்கு போட்டோம். ஆனா, எங்க நெலத்துல பெரிய பெரிய கட்டடங்க கட்ட ஆரம்பிச்சு நைட்டும் பகலுமா 20 வண்டிகள்ல மண்ணு, கல்லுன்னு கொண்டு போனாங்க.

அதை எதிர்த்து, முள்ளங்காடு செக்போஸ்ட் பக்கத்துல இருக்கற எங்க நிலத்துக்குள்ள ராத்திரியோட ராத்திரியா குழந்தை, குட்டிகளோட பொம்பளைக நாங்க நின்ன போது,






ஆதி யோகி சிலை



நுழை வாயிலில் பிரமாண்ட பாம்பு வடிவ கல்வெட்டு



ரயிலில் அடிபட்டு இறந்து போன யானை

கத்தி கம்புகளோடு இருட்டுல மறைஞ்சிருந்த ஜக்கி ஆசிரம சாமியார்கள் எங்களைத் தாக்க வந்துட்டாங்க. நாங்க பயப்படலை. குட்டி, குஞ்சுகளோடு அங்கியே ராத்திரி படுத்து கிட்டோம். அடுத்த நாளூ பிரச்சனை பெரிசாகறதை பார்த்துட்டு பஞ் சாயத்து ஆட்கள் எல்லாம் வந்தாங்க. "ஈஷாக்காரங்க யாரும் உங்க நெலத்துல எந்த வேலையும் செய்ய மாட்டாங்க'ன்னு சொல்லி எங்களை சமாதானப்படுத்தி அனுப் பினாங்க. யானைகளோட வழிய மறைச்சு நெறைய கட்டடங்களை ஈஷா கட்டுறதால இங்கே எல்லாம் யானைகள் வந்துருதுங்க. விடியக் காலையில வர்ற யானைக, எங்க வீட்டை இடிச்சிடுது. ஞ்குழந்தைகளை வச்சுக்கிட்டு இருக்கிற நாங்க, "சாமீ.. போயிரு. வயிறார சாப்பிட்டு போ யிரு'ன்னு யானைகிட்ட வேண்டிக்கு வோம்" என்ற அவர்களின் பயமும் பதற்றமும் அப்பட்டமாய் தெரிந்தது. வனத்துறையிடம் முறையிட்டும் பல னில்லை என்பதை உணர்ந்துள்ள மலை கிராமத்தினர், வழக்கின் தீர்ப்பை மட்டுமே நம்பியுள்ளனர்.

தொடர்ந்து நாம் சென்ற பயணத்தில், ஈஷாவின் ஆதி யோகி சிலை மலைகளை விழுங்கி நின்று கொண்டிருப்பது தெரிந்தது. பாறைகளை வெட்டி சாலை போட்டிருந்தார்கள். பயணிகள்- வாகனங்கள் என அந்த இடமே சுற்றுலாத் தலமாக மாறி விட்டது. அங்கிருந்து நாம், ஈஷா அமைந்துள்ள தியான மண்டபத்தை கடந்து தாணிக்கண்டி ஆதிவாசி கிராமத்திற்குப் போக வேண்டிய சூழல் இருந்தது. வழியை மறைத்துவிட்டதால், இப்படித்தான் கிராம மக்களும் கடந்து செல்கிறார்கள்.

கைகளில் கேமராக்களுடன் நாம் ஈஷாவின் தியான லிங்கத்திற்கு முன் இறங்கியபோது அங்குள்ள வனத்துறையினரால் நாம் தடுத்து நிறுத்தப்பட்டு, "படம் பிடிக்கக்கூடாது' என்ற வனவர் ராஜாவிடம், வீரப்பன் காட்டுக்குள்ளேயே பயணித்த "நக்கீரன்' என்பதை எடுத்துச் சொல்லி, பிறகு மாவட்ட வன அதிகாரி வெங்கடேசனைத் தொடர்புகொண்டு வலியுறுத்தி னோம். வனத் துறையைச் சேர்ந்த இரண்டு பேரை துணைக்கு அனுப்புவதாக சொன்னார்.

அப்போது, நமக்கு எதிரே ஒரு பெரிய குழி வெட்டப்பட்டிருப்பதை பார்த்தோம். "யானைகள் ஈஷா கட்டடங்களுக்குள் வராமல் இருக்க வெட்டியது..' என வனத்துறையினரே சொல்ல, ஜக்கியின் கட்டடங்களுக்கு எந்த பாதிப்பும் வராதபடி, யானைகளை வழிமாற்றி திசை திருப்ப வெட்டப்பட்டிருக்கும் அகழியை படம் பிடித்துக் கொண்டோம். பின்னர்

வனத்துறையினர் இருவரின் துணையுடன் நாம் அந்த வழியில் பயணமானபோது வழியில், மலைகளைப் பெயர்த்து வந்து ஏழு அடிக்கும் மேலாக சுற்றுச்சுவர் எழுப்பியிருந்ததைக் கண்டோம்.

யானைகள் வருகையைத் தடுப்பதற்காகப் பெரும் செலவு செய்து, சுற்றுச் சுவர்களில் எல்லாம் மின் கம்பிகள் பொருத்தி வைத்து இருந்தார்கள். கட்டடங்கள் கட்டக் கூடாதென எத்தனையோ முறை நகர ஊரமைப்பு துறையினரால், வன அதிகாரிகளால் சொல்லப்பட்ட போதும் ஜக்கியை எந்த உத்தரவுகளும் கட்டுப் படுத்தாது என்பதை நிரூபணம் செய்யும் படி அங்கே ஆட்கள் வேலை செய்து கொண்டிருந்ததை நாம் படம் பிடித்துக் கொண்டே கடந்தோம்.

தாணிக்கண்டி கிராமத்தில் நுழைந்த துமே ஊர்த்தலைவரான நஞ்சனிடமும், சின்னான் என்ற இன்னொருவரிடமும் நாம் பேசினோம்... "ஈஷாக்காரங்க யானை பாதையை மூடிட்டதால, ஊருக்குள்ள யானை வந்திடுது" என நம் கைகளைப் பிடித்துக் கொண்டு, இறக்கப் பாதைக்கு கூட்டிக் கொண்டு போனவர்கள்.. அங்குள்ள சிற்றாருக்குள் நம்மை இறக்கினார்கள். பனிக்கட்டி உருகி ஓடுவதுபோல ஜில்லிட்டது தண்ணீர்.

""சார் இங்க ஒரு யானை நின்னுக்கிட்டு இருந்துச்சு.. அவ்வளவு ஓசரம். ரெண்டு தந்தத்தாலேயும் இந்த மேட்டுப்பகுதியை கோபமா குத்தி இருக்கு பாருங்க" என்றார் ஒருவர். வழித்தடம் மறிக்கப்பட்ட கோபத்தில், தண்ணீர் பருக வந்த யானை கோபத்தை வெளிப்படுத்தி யிருப்பதைக் காண முடிந்தது.

ஈஷாவில் தியான லிங்கம் அமைந்துள்ள, பாம்பு படம் வரைந்திருக்கும் அந்த இமாலய கல் சுவர் கடந்து உள்ளே போனோம். இளைஞர் களும், இளைஞிகளும் மொட்டைத்தலைகளுடன் ஏதோ நேர்ந்துவிடப் பட்ட பலி ஆடுகளை போல மந்திரம் சொல்லிய படியே செல்ல, உள்ளே வரும் மனிதர்களை யாரும் கண்டுகொள்ளவில்லை. செல்போன் உள்பட எதுவும் அனுமதிக்கப் படுவதில்லை. எல்லாவற்றையும் நம் கேமராவின் கண்கள் பதிவு செய்துகொண்டன.



ரிசர்வ் வனப்பகுதி என குறிக்கும் பச்சை நிற அடையாள கல் அருகே மின்வேலி

காட்டை அழித்து ஜக்கி அமைத்துள்ள ஈஷாவின் விதிமீறல்களின் உச்சமாக வி.ஐ.பி.களை ஏற்றிக் கொண்டு ஜக்கியின் த222 ரக ஹெலிகாப்டர் ஒன்று காட்டிற்குள் அமைக்கப் பட்டிருக்கும் ஹெலிபேடில் விலங்குகளை அச்சுறுத்தும் சப்தத்தோடு வானிலிருந்து இறங்கி கொண்டிருந்தது. நாம் அங்கிருந்து வெளியேறிக் கொண்டிருந்தோம்.



தங்கன்



முருகம்மாள்



ரங்கநாயகி



வழக்கறிஞர் பன்னீர்செல்வம்

ஈஷாவுக்கு எதிராக போராடி வருபவர்களில் ஒருவரான வழக்கறிஞர் பன்னீர் செல்வத்தை சந்தித்தோம்... ""இந்த பழங்குடியின மக்களின் நிலத்தை அபகரித்த வழக்கு நடந்து கொண் டிருக்கும் நிலையில், ஜக்கியோ.. "எனது பட்டா நிலத்தில் நான் கட்டடங்கள் கட்டுவதில் என்ன தவறு இருக்கிறது' எனக் கேட்கிறார்.

நான் எனது பெயரில் நிலம் வைத் திருக்கிறேன் என்பதற்காக நான் வெடி மருந்து தொழிற்சாலை அமைத் தால் நீங்கள் ஒத்துக் கொள்வீர்களா..? வெடி மருந்து தொழிற்சாலை, சாய ஆலையை விடவும் நூறு மடங்கு கொடூரமானது யானைகளின் வாழ்விடங்களில் பெரிய பெரிய கட்டடங்கள் கட்டியிருப்பது.

வெள்ளியங்காடு மலைவாழ் மக்கள் பாதுகாப்பு சங்கம் சென்னை ஹைகோர்ட்டில் தொடர்ந்த வழக்கில்... "ஐஆஈஆ எனச் சொல்லப் படுகிற மலைவழித் தள பாதுகாப்புக்குழுவிடமும், வனத்துறையிடமும் இருந்தும், ஏன் பஞ்சாயத்து போர்டிடம் இருந்தும் கூட ஈஷா யோகா மையம் எந்தவிதமான அனுமதியும் வாங்காமல்தான் கட்டடங்கள் கட்டி இருக்கிறது' என வனத்துறையே கோர்ட்டில் ஒப்புதல் அளித்திருக்கிறது. ஆனாலும் ஜக்கி வாசுதேவின் அதிகாரக் கரங்கள் எங்கும் செல்பவை.. என காலம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. ஆனாலும் எங்கள் கரங்களில் தொடர் போராட்டம் இருக்கிறது" என்கிறார் உணர்ச்சியாய்.

ஈஷா மையம் என்னும் பெயரில் ஜக்கி வாசுதேவின் அட்டூழியங்களை தொடர்ந்து எதிர்த்து வரும் இயற்கை ஆர்வலர் சிவாவிடம் பேசினோம்.

"நீலகிரி மாவட்டம் கூடலூரில் யானை வழித்தடத்தில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை இடிப்பதற்கு சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டிருப்பது வரவேற்கத்தக்கது. யானைகள் வழித் தடத்தில்தான் உள்ளது ஜக்கி வாசுதேவின் ஈஷா மையமும், காருண்யா கல்வி நிறுவனமும் அமைந்துள்ள கோவை வனப்பகுதி. இந்தப் பகுதியை போளுவாம்பட்டி வனப்பகுதி என்று வனத்துறை ரெக்கார்டுகள் தெரிவிக்கின்றன. மொத்தம் 482 சதுர கிலோமீட்டர் காப்புக் காடுகளைக் கொண்ட இந்த பரப்பில் 329 யானைகள் இருப்பதாக வனத்துறை வெளியிட்ட சர்வே சொல்கிறது.

மக்களையும் விலங்குகளையும் வதைச்சுக்கிட்டு என்ன ஆன்மிகத்த சொல்லித் தர்றாங்களோ...



கன்னியாகுமரியில் இருந்து குஜராத் வரை நீண்டு நிற்கும் மேற்குத் தொடர்ச்சி மலையின் சமதள வனப்பகுதி இது. பாலக்காடு கணவாய் என்று பெயர். இந்தப் பகுதியில்தான் இந்தியா முழுதும் சுற்றித் திரிந்து இரை தேடும் யானைகள் தங்கி ஓய்வெடுத்து செல்லும். அந்த இடத்தை ஆக்கிரமித்துதான் ஈஷா, காருண்யா உள்ளிட்ட 32 நிறுவனங்கள் கட்டடங்கள் கட்டியுள்ளன.

கடந்த 3 வருடங்களில் ஈஷா மையத்திற்கு அருகே யானைகள் தாக்கி ஈஷாவில் வேலை செய்பவர் உட்பட 5 பழங்குடியினர் இறந்து போயிருக்கிறார்கள்.



ஆராய்ச்சியாளர் சிவா

1991-96 ஜெயலலிதா ஆட்சியில் கொடைக் கானலில் விதி முறைகளை மீறி பிளசண்ட் ஸ்டே கட்டடம் கட்டப்பட்டது போல, யானைகளின் வாழ்விடத்தையும், வழித்தடத்தை யும் ஆக்கிரமித்து தி.மு.க. ஆட்சியில் 40-க்கும் மேற்பட்ட கட்டடங்களை கட்டியுள்ளார் ஜக்கி வாசுதேவ்.

பிரதமர் மோடி இங்கே ஈஷாவுக்கு வந்து போனதும் மத்திய வனத்துறையிடம் இருந்து பெயரளவுக்கு ஒரு சிறப்பு அனுமதியை பெற்றி ருக்கிறார் ஜக்கி. இவர்களின் விதிமீறல்களுக்கு சாதகமாக அரசு தரப்பும் இதனை யானைகளின் சரணாலயமாக அறிவிக்க வில்லை. அறிவிக்கப்பட்டி ருந்தால் 10 கி.மீ. சுற்றளவுக்கு எந்தக் கட்டடமும், யாராலும் கட்ட முடியாது.

யானைகளுக்கு ஆதரவாக சுப்ரீம் கோர்ட் அளித்த தீர்ப்பால், ஈஷாவுக்கு எதிராக பழங்குடி மக்கள் தொடுத்த வழக்கு, நிச்சயமாக வெற்றி பெறும். நீலகிரியில் விதி மீறிய தனியார் விடுதிகள் போல ஜக்கியின் ஈஷா ஆசிரம கட்டடங்களும் மற்றவையும் அகற்றப்படும் என நம்புகிறோம்" என்றார்.

இயற்கை அளித்த கொடைகளை, இறைவன் பெயரைச் சொல்லி சுயநலமாக அனுபவிக்கும் கூட்டத்தாரையும், அவர்களுக்கு ஆதரவாக இருக்கும் அதிகாரத்தையும் தகர்க்க நீதிதேவன் கரங்களுக்கு வலு உண்டு என இப்போதும் நம்பு கிறார்கள் பழங்குடி மக்கள்.


படங்கள் : அசோக்

THE HINDU

'Govt's move to allot 400 acres to Isha Foundation against rules'

THE HINDU - __SPECIAL CORRESPONDENT__ – VIJAYAWADA, APRIL 23, 2015

Source :https://www.thehindu.com/news/cities/Vijayawada/govts-move-to-allot-400-acres-to-isha-foundation-against-rules/article7132989.ece



The government's plans to allot 400 acres of land for development of an international school and other spiritual-oriented institutions in association with Isha Foundation is snowballing into a controversy, with political parties, especially the Congress, strongly opposing the move.

The government is said to have earmarked 400 acres at Mulapadu, 25 km from the city, to Isha Foundation. "Just because the spiritual guru conducted three days yoga sessions for MLAs, MPs and others, TDP Chief N. Chandrababu Naidu is allotting 400 acres of prime land to the foundation as Guru dakshina. This is against the rules and we will oppose it," APCC president N. Raghuveera Reddy said here on Wednesday.

"There is nothing wrong in allotting five acres for such foundations, but 400 acres are way too much. In 2011, the Congres, in association with other parties, had issued orders on the quantum of lands to be allotted for setting up a hospitals and education institutions. On the one hand, Mr. Naidu takes over 33,000 acres fertile lands for capital construction, and he allots 400 acres to Isha Foundation on the other. It is public property and the government cannot take unilateral decisions," said Mr. Reddy.

Party to launch agitation

The State unit of the Congress will launch an agitation against the government for its "failure" to fulfil its poll promises.

Initially it was the BJP government, which had betrayed the State by its failure to grant special category status to the State, but now even the TDP leaders were following suit and this was evident at the party's MPs meeting held on Tuesday, he said.


"The 'true colours' of the BJP-TDP alliance were exposed as both the parties were deceiving the people over Polavaram project. While the Central government alloted meagre Rs.100 crore for a project of its magnitude, the State wanted to put in cold storage by taking up the Pattiseema project, which serves no purpose as far as the State is concerned," he said.

Scroll.in

Jaggi Vasudev's rivers campaign meant for fame, power, money, says India's 'Waterman' Rajendra Singh

SCROLL STAFF - DEC 19, 2017 · 07:03 PM

Source : https://scroll.in/latest/862029/jaggi-vasudevs-rivers-campaign-meant-for-fame-power-money-says-indias-waterman-rajendra-singh



Fame, power and money - and not the revival of Indian rivers - are what the Isha Foundation's "Rally for Rivers" campaign aims to achieve, water activist Rajendra Singh said on Monday. He also warned against the nexus between politicians and religious leaders over such matters for their own gains, The News Minute reported.

The Isha Foundation is run by yoga guru Jaggi Vasudev.

"I have rejuvenated nine rivers in my lifetime," said Singh, who is called the "Waterman of India". "I haven't seen any of them rejuvenate with a missed call."

He made the statement referring to the missed call campaign that is part of "Rally for Rivers", which asks people to show their support for the cause by leaving a missed call on a number. The campaign aims to "create a roadmap to rejuvenate depleting rivers and save our country's lifelines".

On Monday, Assam became the sixth state to sign a memorandum of understanding with Isha Foundation to be part of the drive.

'I told him strictly, but baba is baba'

Singh said he had met Vasudev and his team and expressed his scepticism about the campaign, but it fell on deaf ears. He said he had tried to explain to Vasudev that a "godman" like him should hold a moral compass for the government and citizens when they start exploiting and destroying rivers.

"Nothing will happen with missed calls and slogans to revive rivers," he said. "I told him strictly. But Baba is Baba. Baba will revive rivers with a missed call."

7 ஈஷாவை அரசுடைமையாக்க வேண்டும்!

- பல்வேறு முறைகேடுகள், மோசடிகள், கொலைகள், நில அபகரிப்பு எனச் செயல்பட்டு வரும் ஈஷா மையத்தை, தமிழ்நாடு அரசின் இந்து அறநிலையத்துறை தன் பொறுப்பில் ஏற்று நடத்துவதுடன், இம்முறைகேடுகள் குறித்த முழுமையான விசாரணை ஆணையத்தை அமைத்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.


- இந்தியாவின் தலைமையமைச்சரே நேரில் வந்து ஜக்கி வாசுதேவ்வுடன் நிற்கும் நிலையில், ஈஷா மையத்தின் மீது புகார் தெரிவிக்க கணிசமான மக்கள் அஞ்சி நிற்கின்றனர். ஈஷாவின் நடவடிக்கைகள் குறித்து அறிவதற்கான எமது பயணத்தில், இதை நேரில் கண்டோம்.


- எனவே, ஈஷா மையத்தை அரசுடைமையாக்கி மக்களின் அச்சத்தைப் போக்கி, ஈஷா மையத்திற்குள் நடக்கும் முறைகேடுகள், கொலைகள், நிப அபகரிப்பு, ஆள் கடத்தல் குற்றச்சாட்டுகள் ஆகியவை குறித்து வெளிப்படையான விசாரணை செய்திட தமிழ்நாடு அரசு முன் வர வேண்டும்.

- தமிழ்நாடு இந்து அறநிலையத்துறைச் சட்டம் 1959இன் பிரிவு 3இன்படி, இதற்கான உரிமை தமிழ்நாடு அரசுக்கு உள்ளது. ஈஷா மையம் தொடங்கும்போது, அரசிடம் பதிவு செய்வதற்காக அவர்கள் அறிவித்த நோக்கங்களுக்கு எதிராகவே அவர்கள் செயல்படுவதை விசாரணையின்படி உறுதி செய்து, ஈஷா மையத்தை அரசுடைமை ஆக்கலாம்.

- தமிழ்நாடு அரசு இக்கோரிக்கையை ஏற்றுச் செயல்படுத்த வேண்டுமென தமிழ்த்தேசியப் பேரியக்கம் கேட்டுக் கொள்கிறது! தமிழ்நாட்டின் ஆன்மிகச் சான்றோர்களும், பக்தர்களும் ஈஷாவை அரசுடைமையாக்க வேண்டுமென்ற கோரிக்கையை உயர்த்திப் பிடித்து, தமிழர் ஆன்மிகத்தைக் காக்க முன் வர வேண்டுமென அன்புடன் வேண்டுகிறது!

நன்றி!










ஆன்மிகக் கள்ள வாணிகத்தை, அரசியலார் ஆதரிப்பதும் – அரசியலார் கள்ள வாணிகத்தை, ஆன்மிகப் பெருங்குழுமங்கள் ஆதரிப்பதும் உடன் பிறப்பு உதவிகள்! எல்லாப் பெருங்குழும வேட்டைகளுக்கும் வாய்ப்பளிப்பது – வாசல் திறப்பது வெகுமக்களின் மனவியல் பலவீனமே! மக்களிடையே உள்ள "மந்தை" மனப் பான்மையே!

தமிழ்நாட்டில் மிகப்பெரிய ஆன்மிகப் பெருங்குழும வேட்டை நிறுவனம் சக்கி வாசுதேவின் "ஈஷா யோகா மையம்"! ஆசையைத் துறந்த ஆன்மிகர் அல்லர் சக்கி! அனைத்திற்கும் ஆசைப்படுபவர்; மக்களையும் அனைத் திற்கும் ஆசைப்படு என்று வழிகாட்டியவர்!

சக்கி வாசுதேவின் ஆக்கிரமிப்புகளை அத்துமீறல்களை நேரில் சென்று கள ஆய்வு செய்துள்ளார் தோழர் அருணபாரதி. அப்பகுதி மக்களும், சக்கியால் பாதிக்கப்பட்டவர்களும் ஈஷா யோகா மையத்தை இந்து சமய அறநிலையத்துறையில் சேர்த்து, சக்கியின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோருவதை பதிவு செய்துள்ளார். அவற்றின் தொகுப்புதான் "ஈஷாவின் மறுபக்கம்" என்ற இந்நூல்!

● பெ. மணியரசன்

தலைவர், தமிழ்த் தேசியப் பேரியக்கம்



தமிழர் மரபின் வள்ளுவரும் வள்ளலாரும் முன்வைக்கும் "ஆசையை சுருக்கு அறத்தைப் பெருக்கு!" என்ற அறமுழக்கம் இந்த புதிய நடுத்தர வர்க்கத்தினருக்கு ஏற்பாக இல்லை! அவர்களது நுகர்வுவாதத்தோடு இணங்கிப் போகிற இந்தப் பெருங்குழும சாமியார்கள் அவர்களுக்கு ஏற்பாக இருக்கின்றனர். இதன்பிறகு, இந்த சாமியார்கள் செய்கிற எந்த சமூகவிரோதச் செயல்களும் ஆட்சியாளர்களின் துணையோடு அமுக்கப் படுகின்றன. இந்த வகையான பெருங்குழும சாமியார்களில் ஒருவர்தான் – ஜக்கி வாசுதேவ்!

அவரது ஈஷா மையத்தில் நிறுவப்பட்டிருக்கிற தியானலிங்கம் கோயிலும், ஆதியோகி சிலையும் சைவநெறிக்குப் புறம்பானவை. ஆன்மிக நெறிகளுக்கும் பொருந்தாதவை. அவருடைய ஈஷா மையத்தின் மிகப்பெரும் பகுதி பழங்குடி மக்களின் நிலங்களையும், யானைகள் வாழிடத்தையும் வழித்தடத்தையும் ஆக்கிரமித்துக் கட்டப்பட்டவை. எவ்வளவு சட்டமீறல்களிலும், மர்ம நடவடிக்கைகளிலும் ஜக்கி வாசுதேவ் ஈடுபட்டு வந்த போதிலும், அவருக்கு இருக்கிற அதிகார உறவு அவரைப் பாதுகாத்து வருகிறது.

● கி. வெங்கட்ராமன்

பொதுச்செயலாளர், தமிழ்த் தேசியப் பேரியக்கம்

வெளியீடு

தமிழ்த்தேசியப் பேரியக்கம்

ரூ.250/-